144/3-71

R.R. NO. 1/55879

211.8
N75

211

# ஒரு என். ஜி. ஓவின் எண்ணங்கள்

சிவ. இளங்கோ
( தலைவர், தமிழ்நாடு என். ஜி. ஓ. யூனியன் )

தமிழ்நாடு அரசிதழ்ப் பதிவிலா அலுவலர் ஒன்றியம்
எண் 31, நீலி வீராச்சாமி செட்டித் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.

முதற்பதிப்பு—ஆகஸ்ட் 1975

TAMIL NADU ARCHIVES LIBRARY
ACC. 4216.
17 FEB 1979
EGMORE, MADRAS

விலை ரூ. 6-00

4716

V211,8
N75

லாயல் அச்சகம், திருவல்லிக்கேணி, சென்னை - 600005

## முன்னுரை

# நிகழ்ச்சிகள்! இலக்கியங்கள்! மனிதர்கள்!

இந்த நூல் உருவாக வேண்டிய அவசியம் அல்லது அவசரம் என்ன? எண்ணிப்பார்க்கிறேன்.

தமிழ்நாடு அரசிதழ் பதிவிலா அலுவலர் ஒன்றியத்துக்கு ஒரு வரலாறு எழுதவேண்டும் என்பது பல தோழர்களின் விருப்பம்! வேண்டுகோள்! அவசியமான ஒன்று என்ற எண்ணத்தில் ஆதாரங்களை வரிசைப்படுத்த முற்பட்டேன் அந்த நேரத்தில் 1959 62ம் ஆண்டுகளில் மாநில என் ஜீ ஓ யூனியன்' முன்னாள் துணைத்தலைவர், சிவகெங்கையில் இப்போது வேளாண்மை வருமானவரி அதிகாரியாகப் பணியாற்றும் திரு கே, சி. வேலாயுதம் அவர்கள் இந்த முயற்சியை தொடக்கி ஏறக்குறைய 25 ஆண்டுகால வரலாற்றை எழுதியது என் நினைவுக்கு வந்தது: அவரிடம் தொடர்பு கொண்டேன்: தருவதாகச் சொல்லியுள்ளார். அதனைப் பெற்றபின் 1920 முதல் 1947வரை உள்ள ஒன்றிப்பின் வரலாற்றை முதல் பாகமாகவும், அதற்குப்பின் உள்ள வரலாற்றை இரண்டாம் பாகமாகவும் வெளியிட ஏற்பாடுகள் செய்துவருகிறோம்;

இதற்கு இடைப்பட்ட காலத்தில் 1955முதல் 1965 வரை நான் பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுதிய, கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடலாமா என்று ஒரு எண்ணம் பிறந்தது இந்த 20 ஆண்டு காலத்தில் ஏறக்குறைய 1000 கட்டுரைகளை யாவது எழுதியிருக்கிறேன், பல்வேறு எடுகளில். வெவ்வேறு ஊர்களுக்கு மாற்றுதலாகும் சந்தர்ப்பங்களில் ஒரே- ஊரிலேயே பல வீடுகளை மாற்றக்கூடிய நேரங்களில் எல்லாம் சில கட்டுரைகள் காணுமல் போய்விட்டன. வேறுசில கட்டுரைகள் வெளிவந்த ஏடுகள் கரையானுக்கு உணவாகியிருக்கின்றன,

படித்துத் தருகிறேன் என்று வாங்கிக்கொண்டுச் சென்ற நண்பர்கள் தொலைத்துவிட்டேன் என்று பதைபதைப்புடன் கூறிய நிகழ்ச்சிகளையும் சந்தித்திருக்கிறேன். எஞ்சியிருப்ப வற்றையாவது ஒரு தொகுப்பாக வெளியிடலாமா என்ற எண்ணம் இந்தநூல் வடிவாக நிறைவேறியிருக்கிறது.

இதைப் படிக்கும்போதே என் ஜீ ஒ இயக்க வரலாற் றிடையே பல முக்கியமான நினைவுகள் கண்முன்பு வருகின் றன. கடலூர் மாநாடும், சேலம் மாநாடும், சென்னை மாநாடும் குறிப்பிட்டு விவரிக்கப் பட்டுள்ளன. இதுபோன்ற நிகழ்ச்சி களை நினைவுபடுத்தும் கட்டுரைகள் சில இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

மிக அண்மையில் வெளியான அகவிலைப்படிக் குழு அறிக்கையில் கூறப்பட்டிருக்கிற கருத்துக்களை கண்ணோட்ட மிட்டு ஒரு நீண்ட கட்டுரை எழுதியுள்ளேன் அது இந்தத் தொகுப்பில் முக்கியமான ஒரு கட்டுரையாக உங்களால் கருதப் படும் என்று நம்புகிறேன், அதுபோல பிற மாநிலங்களில் அரசு ஊழியர் இயக்கங்கள் எப்படி இயங்குகின்றன என்பதை யும் சில நிகழ்ச்சிகளின் மூலம் கூறியுள்ளேன். இந்த இரண்டு கட்டுரைகளைப் போலவே மின்வாரிய ஊழியர்கள் நிலை, என் ஜீ ஒ இயக்கத்தில் பெண்கள் பங்கு ஆகிய கட்டுரைகள் இந்த நூலுக்கெனத் தனியே எழுதப்பட்டவையாகும்.

நிகழ்ச்சிகளை நினைவுபடுத்தும் கட்டுரைகளைத் தவிர நல்ல இலக்கியங்களைப்பற்றிக் குறிப்பிட்டுப் பாராட்டி எழுதப் பட்ட சில கட்டுரைகளையும் இந்தத் தொகுப்பில் இணைத்துள் ளேன். என் ஜீ ஒ என்றால் அதுவும் யூனியன் பொறுப்பாளர் என்றால் இலக்கியங்களைப் படிக்க நேரமோ, நினைப்போ இல் லாதவன் என்கிற கருத்தை மாற்ற இது துணைபுரியலாம். இக்கட்டுரைகள் எல்லாம் பெரும்பாலும் 1960-62 ஆண்டுகளில் எழுதப்பட்டவை. 13 ஆண்டுகளுக்கு முன்னைய என்னுடைய எண்ண ஓட்டங்களை இதில் புலப்படுத்தப் பட்டுள்ளன. இன்றைய சூழ்நிலையில் கணித்துப் பார்க்க வேண்டியது உங்கள் பொறுப்பு.

அண்ணுவின் இலக்கியத்தையும், ஆனந்தத்தின் கவிதை களையும் ஆய்வுசெய்த கட்டுரைகளை இதில் வெளிட்டுள்ளேன் என்ருலும் என் ஜி ஓக்களிடையேகூட மணிமணியான எழுத் தாளர்கள் ஏராளம் இருப்பதை என்ளுல் இந்த நேரத்தில் நினைத்துப் பார்க்க முடிகிறது. நம்முடைய என் ஜி ஓ இயக் கத்தின் இன்றைய பொதுச் செயலாளர் ஜி எபநேசர் எழுதிய கவிதைகள் பலப்பல உண்டு. காஞ்சீபுரம் நில அளவு அலுவ லகத்தில் பணிபுரியும் என் எஸ் வரதன், செங்கை மாவட்ட என் ஜி ஓ யூனியன் செயலர் ஆர். கே. காந்திராசன், சேலம் மருத்துவத்துறையைச் சேர்ந்த திருநாவுக்கரசு, மதுரை மாவட்ட என் ஜி ஓ யூனியன் முன்ளுள் துணைத்தலைவர் ஜெகளுதன்—ஆகியோரெல்லாம் சிறந்த கவிஞர்கள். இவர் களுடைய கவிதைகள் எல்லாம் புத்தக வடிவில் வரவேண்டு மென்பது என்னுடைய விருப்பம்

கவிஞர் காவிரிநாடன் என்ற அரசிதழ் பதிவிலா அலுவலர் செங்கனி, மனவிழுதுகள் காட்சியும், கற்பனையும். நர்மதை, ஞானவயல், நெருப்பில் புழுத்த புழுக்கள், அக்கினி சாட்சி யாக முதலிய புத்தகங்களை வெளியிட்டிருக்கிருர். கதையா, கவிதையா. நாடகமாக—அனைத்திலும் தேர்ந்தவர் அந்த நண்பர் ‘‘எழுத்துலகம்’’ என்ற அமைப்பையும் நடத்திக் கொண்டு இத்தனை படைப்புகளையும் எழுதி வெளியிடவும் அவர் எத்தனை சிரமங்கள் பட்டிருப்பார் என்று எண்ணும் போது என். ஜீ. ஓக்கள் மத்தியிலும் எண்ணங்களை யாள்ப வர்கள் மட்டுமல்ல—எழுத்தையாள்பவர்கள் உண்டு என்று பெருமைப்படத் தோன்றும்.

‘‘மனிதன் மறக்கக் கூடியவன்
அதளுல் ஆசைகள் பிறக்கின்றன !
மனிதன் இறக்கக் கூடியவன்
அதளுல் நல்லவை உலவுகின்றன ’
மனிதன் சிந்திக்கத் தெரிந்தவன்
அதளுல் துயர்கள் நிகழ்கின்றன !’’

என்ற காவிரிநாடனின் கருத்துரைகள் இரண்டாண்டு களாக நான் மறக்க முடியாதவை அவற்றை எண்ணிப்பார்க்கி

றேன். அதில் அடங்கியிருக்கிற தத்துவங்கள் அலைஅலையாய் நினைவுக்கு வருகின்றன. இத்தகைய பெருமைமிக்க இலக்கிய வேந்தர்கள் என். ஜீ, ஓக்களிடையில் பலர் உண்டு. அவர்கள் எல்லாம் தன் பதிவேட்டையும், நினைவூட்டுக் கடிதங்களையும் வீட்டுக் கவலைகளையும் மறக்க நேரம் கிடைக்கும் விடுமுறை நாட்களிலாவது உருவான இலக்கியப் பணியைச் செய்து புகழும், பயனும் பெறவேண்டுமென்பது என்னுடைய விருப்பம்.

என். ஜீ. ஓக்கள் இலக்கியம் எழுதவேண்டும் என்று விரும்புகிற நேரத்தில் என் ஜீ ஓக்களைப்பற்றி எழுதப்பட்ட நாவல்கள் ஒன்றிரண்டையும் இந்த முன்னுரையில் நினைத்துப் பார்க்கிறேன். டாக்டர் மு. வரதராசனுர் எழுதிய 'கயமை" என் ஜீ ஓக்கள் வாழ்க்கையை அழகாக—அற்புதமாக—ஆழமாகப் படம் எடுத்துக்காட்டியது. அந்த அளவுக்கு இல்லையெனினும் நீல பத்மநபன் எழுதிய "பைல்கள்" என்ற நாவல் ஒரு என் ஜீ ஓவின் ஒழுநாள் வாழ்வில் (10-30 முதல் 5-00-க்குள்) நிகழ்கிற நிகழ்ச்சிகளை ஏற்படுகிற மாறுதல்களை உருவாகும் எண்ணங்களைத் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டியது, இதுபோன்ற இலக்கியங்களையெல்லாம் படைக்க நேரமில்லாத என் ஜீ ஓக்கள்—படைக்கப்பட்ட இலக்கியங்களைத் திறனாய்வு முறையில் விமர்சித்தால் நல்ல இலக்கியங்கள் சமுதாயத்தில் உருவாக்கப்பட வாய்ப்புண்டு

இலக்கியங்களை உருவாக்க இலக்கணங்கள் தேவை. அதுபோல இலக்கணமாகத் திகழும் தனிமனிதர்களைப் பற்றியும் நான் எழுதிய கட்டுரைகள், குறிப்புகள் இதில் இருக்கின்றன. காரல் மார்க்ஸ்—பெர்னட்ஷாவிடமிருந்து கலைஞர், நாவலர் ஆகியோரைப் பற்றியும் நம்முடைய என் ஜி ஓ இயக்க முன்னணி வீரர்களைப் பற்றியும் இதில் எழுதியிருக்கிறேன். கார்ல்மார்க்ஸ் இன்றி பொது உடமைத் தத்துவம் இல்லை, கலைஞர் இன்றி புதுமைத் திட்டங்கள் இல்லை அதுபோல முன்னணி வீரர்கள் இன்றி என் ஜி ஓ யூனியன் இல்லை.

ஒருசில முன்னணி வீரர்களைப்பற்றித்தான் இதில் குறிப்பிட்டுள்ளேன். மற்றவர்களைப்பற்றி அடுத்து வெளிவரும் நூலில் தகவல்கள் தரப்படும்.

ஒரு ஐ ஏ எஸ் அதிகாரியின் எண்ணங்கள்—அல்லது ஒரு அயல்நாட்டுத் தூதுவரின் கருத்துக்கள்—அல்லது ஒரு அமைச்சருடைய அனுபவங்கள்—இவையெல்லாம்தான் இது வரை புத்தகங்களாக வெளிவந்திருக்கின்றன: அந்த சம்பிரதாயங்களை, நடைமுறைகளை மீறி சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கும் ஒரு சாதாரண என் ஜி ஓவின் எண்ணங்கள் இப்பொழுது நூல் வடிவில் உங்கள் முன்பு தரப்படுகிறது:

அச்சத்திற்கும் ஆசைக்கும் இடையில் ஊசலாடும் வர்க்கம் என்று என் ஜி ஓக்களைச் சொல்லுவார்கள். அதைப் போல இந்த நூலிலே இருக்கிற பல கருத்துக்களைப் படித்தால் சில இடங்களில் முரண்பாடுகள் இருப்பதுபோலத் தெரியும். முரண்பாடுகள் இருப்பதுபோலத் தெரியும் என்று குறிப்பிட்டேனே தவிர அவை முழுக்க முழுக்க முரண்பாடுகள் அல்ல என்று வாதிக்கும் தகுதி—வெற்றிபெறும் உரிமை எந்த எழுத்தாளனுக்கும் உண்டு, அது எனக்கும் உண்டு: ஏனெனில் இது பட்டி மன்றங்களின் யுகமல்லவா ?

ஆனால் மொத்தத்தில் மனிதனே முரண்பாடுகளின் தொகுப்பு எனத்தான் அறிஞர்கள் கூறியுள்ளார்கள்: ஒருசில இடங்களில் ஐ ஏ எஸ் அதிகார வர்க்கத்தைச் சாடுவதும், வேறுசில இடங்களில் அவர்களின் அணுகும் முறையைப் பாராட்டுவதும் தவறில்லை என்றே நான் கருதுகிறேன். காரணம் அந்த முரண்பாட்டுத்தன்மை ஐ ஏ எஸ் வர்க்கத்திற்கும் உரித்தானதுதானே ?

அதேபோல'த்தான் நாடாள்வோரையும்—நாட்டையாண்ட அல்லது நாடாள விரும்புகின்ற அரசியல் கட்சியினரையும் பாராட்டவோ, குறைகாணவோ எனக்கு சந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருக்குமானால், ஒரு நடுத்தர மக்கள் இயக்கத்தை நடத்திக்கொண்டு செல்லுகிறவன் என்கிற முறையில் எனது பொறுப்புகளின் ஒரு அம்சமாக—கடமையில் ஒரு பிரதிபலிப்பாகத்தான் அந்த எண்ணங்கள் ஏற்பட்டிருக்கும்.

அதையெல்லாம் இந்த நூலின்மூலம் உணர்ந்துகொள்ள—எதிர்காலத்தில் நடக்க வேண்டிய பாதையை சீராக்கிக்

கொள்ள எழுதுபவனுக்கும்—படிப்பவனுக்கும் சேர்த்தே இந்த எண்ணங்கள் துணைபுரியுமென்று எண்ணுகிறேன்.

> "எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் எண்ணியர்
> திண்ணியராகப் பெறின்"

என்றார் தென்னாடு போற்றும் பொன்னேடு படைத்த திருவள்ளுவர் என் ஜி ஓ சமுதாயத்தை திண்ணியராக வளர்க்க-வாழவைக்க இந்த நூல் நூற்றில் ஒரு பங்கு பயன்படுமானால் நான் மகிழ்ச்சி அடைவேன்:

இந்த நூல் வெளிவரத் துணைநின்ற எல்லா நண்பர்கட்கும் அச்சகங்களின் உரிமையாளர்கட்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல இந்த நூலினை வாங்கிப் படிக்கும் தோழர் கட்கும், என் ஜி ஓ இயக்க உறுப்பினர்கட்கும், இணைப்புச் சங்க — தோழமைச் சங்கங்களைச் சார்ந்தவர்களுக்கும் என்னுடைய நன்றி.

இந்நூல் ஒரு குறுகியகாலத் தயாரிப்பு: எனவே எழுத்துப் பிழைகள் சில இருக்கும், அதனைப் பொறுத்தருள வேண்டு கிறேன்:

இந்நூலுக்கு நீங்கள் தரும் ஆதரவு—உங்கள் நண்பர் களிடம் சொல்லி நீங்கள் அளிக்கின்ற உற்சாகம்தான் எதிர் காலத்தில் இதுபோன்ற நூற்கள் வெளிவரத் தூண்டுதல் புரியும்;

சென்னை-5
1—8—75

அன்பன்

சிவ. இளங்கோ

# தமிழ்நாடு அரசு

# அகவிலைப்படிக் குழு அறிக்கை 1975

## ஒரு கண்ணோட்டம்

2—5—74ல் தஞ்சையில் நடைபெற்ற தமிழ்நாடு என். ஜி. ஓ, யூனியன் மாநில மாநாட்டில் அகவிலைப்படி, ஊதியம் ஆகியவற்றைப்பற்றி பரிசீலிப்பதற்காக குழு ஒன்று அமைக்கப் படும் என்று தமிழ் நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தெரிவித்தார்கள். இந்தக் குழு சற்றேறக்குறைய ஊதியக் குழு அளவில் அமையும் என்பதையும் முதலமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக மாநாட்டில் குறிப்பிட்டார்கள். ஆனால் 17—7—74ல் நிதித்துறை அரசாணை 1009ன்படி அமைக்கப் பட்ட குழுவானது பெரும்பாலான என். ஜி. ஓக்கள் எதிர் பார்த்தபடி அமையவில்லை. திரு கே. எஸ். சிவசுப்பிர மணியம் ஐ. ஏ. எஸ். அவர்களைத் தலைவராகவும், பேராசிரியர் ஜி. சிதம்பரம் அவர்களை உறுப்பினராகவும், திரு எஸ். நர சிம்மன் ஐ. ஏ. எஸ் அவர்களை செயலாளராகவும் கொண்டு இந்தக் குழு அமைக்கப்பட்டது.

மாநில அரசின் ஆளுகைக்குட்பட்ட ஊழியர்கள் பெற்றுவரும் அகவிலைப்படியை பரிசீலித்து எந்தக் கொள்கை யின் அடிப்படையில் இனி எதிர்காலத்தில் அகவிலைப்படி வழங்கப்பட வேண்டுமென்பதையும் இக்குழு நிர்ணயிக்கும் என்று கூறப்பட்டது. அரசினுடைய நிதிநிலை இருப்பின் எதிர்காலத்தையும் பொதுத்துறை நிர்வாகங்கள், ஸ்தல ஸ்தாபனங்கள் ஆகியவற்றை இது எவ்வாறு பாதிக்கும் என் பதையும் கருத்தில்கொண்டு பரிசீலனைகள் செய்யுமாறு குழு விற்கு கூறப்பட்டது. அகவிலைப்படியை எந்த அளவுக்கு அடிப்படை சம்பளத்தோடு இணைப்பதென்றும், இணைப்பதின் மூலம் ஓய்வு. ஊதிய சலுகைகள், வீட்டு வாடகைப்படி, நகர

ஈட்டுப்படி, பயணப்படி ஆகியவற்றில் உயர்வு கிடைக்கும் என்பதையும் பரிந்துரைசெய்ய அதிகாரம் அளிக்கப்பட்டது ஊதிய உயர்வுகளினுல் விலைவாசிகள் அதிகரிப்பதையும் பின்னர் பணவீக்கம் ஏற்படுவதையும் தொடர்பு படுத்திப் பணியாற்றவும் குழு கேட்டுக் கொள்ளப்பட்டது. அரசால் பரிசீலிக்கப்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிற வேறு பொருள் பற்றியும் குழு பரிந்துரைகூறும் என்று கூறப்பட்டது. இந்தக் குழு சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி ஆகிய இடங்களுக்கு சென்று பல்வேறு சங்கங்களுடைய பிரதிநிதிகளைச் சந்தித்து கருத்துக்களை கேட்டு அறிந்தனர்.

## அகவிலைப்படியின் தோற்றம்

அகவிலைப்படி அளிப்பது என்பது இந்தியா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய மூன்று நாடுகளில் மாத்திரம்தான் இருந்து வருகிறது. மற்ற நாடுகளில் எல்லாம் விலைவாசி உயர்வை ஈடுகட்ட அவ்வப்போது ஊதிய விகிதங்களிலேயே—அடிப்படை சம்பளத்திலேயே மாற்றம் செய்யப்பட்டு விடுகிறது. 1939-45ல் நடைபெற்ற இரண்டாவது உலகப் பெரும் போரின்போது விலைவாசிகள் முன் எப்போதையும்விட அதிகமாக இருந்தன. 1941ல் மாநில அரசு விலைவாசிகள் உயர்வுக்குத்தக்க நிவாரணம் அளிக்க வேண்டுமென முடிவு செய்தது. அதை அகவிலைப்படி வடிவத்தில் தரவும் முடிவு எடுத்தது, அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி என்ற வார்த்தை உபயோகப் படுத்தப்பட்டதே இந்தச் சமயத்தில் தான். சென்னை நகரத்தில் உள்ளவர்களுக்கு 40 ரூபாய்க்கு மேல் சம்பளம் பெறுபவர்களுக்கும் வெளி ஊர்களில் உள்ளவர்களுக்கு 30 ரூபாய்க்குமேல் சம்பளம் பெறுபவர்களுக்கும் மாதம் ஒரு ரூபாய் என்ற அடிப்படையில் 1941 ஆகஸ்டு மாதம் அகவிலைப்படி அளிக்க முதன் முதல் உத்தரவு போடப்பட்டது அப்போது விலைவாசிப் புள்ளி 110 ஆக இருந்தது.

1939ல் இந்த விலைவாசி புள்ளி 110 என்று கணக்கு எடுக்கப்பட்டது. இந்த ஒரு ரூபாய் பஞ்சப்படி என்பது 1944

ஆகஸ்டில் ஒரு ரூபாய் எட்டு அணு என்று மாற்றி அமைக்கப் பட்டது. அந்தச் சமயத்தில் மத்திய அரசு இந்தியாவை மூன்று பகுதிகளாகப் பிரித்து விலேவாசிகளின் அடிப்படையில் இந்த மூன்று மண்டலங்களுக்கு ஏற்ப அகவிலேப்படி வழங்க வேண்டுமென கூறியது அத்தோடு மத்திய அரசு எந்த அடிப்படையில் அகவிலேப்படி உயர்வு வழங்குகிறதோ அதே அடிப்படையில் மாநில அரசுகளும் வழங்க வேண்டுமென வற்புறுத்தியது. அப்போது இருந்த சென்னே அரசு சில திருத்தங்களே, சில பகுதிகளே, சில ஊதிய வரம்புகளே தன்னுடைய வசதிக்கு ஏற்ப மாற்றிக்கொண்டது

ஒரு கட்டத்தில் விலேவாசி உயர்வுக்கு ஏற்ப பஞ்சப்படி உயர்வு இல்லாததை உணர்ந்த மத்திய அரசு வேறு மாற்றங்களே செய்யக் கருதியது அந்த அடிப்படையில் 1944 ஜுலே மாதம் அடிப்படைச் சம்பளத்தில் $17\frac{1}{2}$ சதவீதத்தை யுத்தப்படி என்ற பெயரில் எல்லா என் ஜி. ஒக்களுக்கும் வழங்கப் பட்டது. இது 2000 ரூபாய் வரையிலும் சம்பளம் பெறும் அரசிதழ் பதிவுபெற்ற அதிகாரிகளுக்கு (திருமணம் ஆனவர் களுக்கு மட்டும்) வழங்கப்பட்டது. இந்த யுத்தப்படி என்பது குறைந்தபட்சம் ரூபாய் 50 என்பதும் அதிகபட்சம் ரூபாய் 263 என்றும் நிர்ணயிக்கப்பட்டது. மத்திய அரசின் இந்த அடிப்படையை மாநில அரசு முழுதுமாக பின்பற்றியது. 1946 மார்ச் மாதம் வரையிலும் சென்னே மாநில அரசு மத்திய அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட அகவிலேப்படி உயர்வு அனேத்தையும் அப்படியே வழங்கியது என்பது குறிப்பிடத் தகுந்தது.

1946ல் புதிதாக அமைக்கப்பட்ட சென்னே ராஜ்ய மந்திரி சபை அப்போதைய ரெவின்யூ அமைச்சர் திரு கே. ஆர். கரந்ந் தலேமையில் ஒரு கமிட்டி அமைத்தார்கள். இந்தக் கமிட்டி ஊதிய மாற்ற மந்திரிசபை கமிட்டி என்று அழைக்கப் பட்டது. இந்தக் கமிட்டி அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் ஸ்தலஸ்தாபன சிப்பந்திகள் ஆகிய பல்வேறு தரப்பட்ட ஊழியர்

களின் சம்பளத்தை பரிசீலனை செய்து தேவையான திருத்தங்களை சொல்லுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். விலைவாசி உயர்வை முன்னிட்டு உடனடியாக அகவிலைப்படியில் உயர்வு அளிக்க வேண்டுமா என்பதைப் பற்றியும் இந்தக் கமிட்டி முதலிலேயே பரிசீலித்தது. ஆனால் உடனடியாக அகவிலைப்படி உயர்வு அதிகரிக்கப்படவில்லை என்றாலும் 1946 ஜனவரியில் ஊதிய மாற்றங்கள் அமுலுக்குக் கொண்டுவரப் பட்டன.

## முதல் மத்திய ஊதியக்குழு

இதற்கிடையில் மத்திய அரசு திரு எஸ். வரதாச்சாரியார் அவர்களை தலைவராகக் கொண்டு விரிந்த அளவில் ஒரு ஊதியக் குழுவை நியமித்தார்கள். இந்த ஊதியக்குழு சம்பள விகிதங்களையும், அகவிலைப்படியையும் ஒன்றை ஒன்றுக்குடன் இணைத்தும் அதே நேரத்தில் வேறுபடுத்திப் பார்த்தும் தன்னுடைய பணியை மேற்கொண்டது. அந்த நேரத்தில் முதலாவது ஊதியக்குழு அப்போது ஏற்பட்டிருந்த விலைவாசி உயர்வுதான் உச்சகட்டமானது என்றும் பின்னால் அந்த விலைவாசி உயர்வு சரியத்தான் போகிறது என்றும் கருதியது; கூறியது. ஆனால் அந்த ஊதியக் குழுவினுடைய எண்ணம் அல்லது விருப்பம் பிற்காலத்தில் பலிக்கவில்லை முதலாவது மத்திய ஊதியக்குழு ஆறு மாதத்திற்கு ஒருமுறை அகவிலைப்படியைப்பற்றி பரிசீலனை மேற்கொள்ளலாம் என்று கூறியது. அப்படி பரிசீலனை செய்யும்போது அதற்கு முந்திய மூன்று மாதங்களின் விலைவாசிகள் உயர்ந்திருந்தால் அந்த அடிப்படையில் அகவிலைப்படி உயர்வு தரலாம் என்று கூறியது

1956ம் ஆண்டில் சென்னை அரசு, தலைமைச் செயலாளரையும், வருவாய்த்துறை உறுப்பினரையும், நிதித்துறை செயலாளரையும் கொண்ட ஒரு குழுவை நியமித்து நிதி நிலைமைக்கு ஏற்ப அகவிலைப்படியில் என்ன மாறுதல்களை செய்யலாம் என்று பரிந்துரை செய்யுமாறு கேட்டுக்

கொண்டது மத்திய அரசில் சமநிலையில் இருக்கும் ஊழியர்களுக்கு தரப்படுகின்ற அகவிலைப்படி மாநில அரசு ஊழியர்களுக்கும் தருவதற்கு நிதிக் கமிஷன் தக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்தக் கமிட்டி கூறியது. விலைவாசிப் புள்ளி 200 ஆகிவிட்ட பின்னரும்கூட நிதிக் கமிஷன் அறிக்கையை பார்த்த பிறகே ஊதிய மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்றும் இந்தக் கமிட்டி கூறியது. இடைக்கால நிவாரணம் ஆக மாதம் ரூபாய் 5 தரலாம் என்றும் இது 400 ரூபாய் வரையிலும் சம்பளம் உள்ளவர்களுக்கு மட்டும் அளிக்கப்படலாம் என்றும் கமிட்டி கூறியது. 100 ரூபாய் வரையிலும் பென்ஷன் பெறுபவர்களுக்கு ரூபாய் 4 அகவிலைப்படி வழங்கலாம் என்றும் இந்தக் குழு கூறியது.

1959ல் ஓய்வுபெற்ற தலைமைச் செயலாளர் திரு கே. ராமுண்ணி மேனன் தலைமையில் ஒரு ஊதியக் குழுவை நியமித்தார்கள். அகவிலைப்படியின் பெரும் பகுதியை அடிப்படைச் சம்பளத்துடன் இணைத்த இந்த ஊதியக்குழு விலைவாசிப் புள்ளி அடிப்படையில் *100* என்று கணக்கிட்டு அடிப்படை ஊதியத்தை நிர்ணயித்தது: கடந்த 12 ஆண்டுகளாக மத்திய அரசு ஊழியர்களுக்கு சமமாக அகவிலைப்படி அளிக்க வேண்டுமென்று மாநில அரசு ஊழியர்கள் வற்புறுத்தி வருவதை குறிப்பிட்டு முதலாவது ஊதியக் குழுவின் அறிக்கை அந்தக் கோரிக்கையை தாங்கள் ஏற்றுக் கொள்வதாகக் கூறினார்கள்: இனி எப்போது மத்திய அரசு ஊழியர்களுக்கான அகவிலைப்படி உயர்ந்தாலும் மாநில அரசு தன்னுடைய ஊழியர்களுக்கும் அகவிலைப்படியை உயர்த்தியாக வேண்டும் என்பதையும் அவர்கள் வலியுறுத்தினார்கள்.

## இரண்டாவது மத்திய ஊதியக்குழு

1957ல் மத்திய அரசு நீதிபதி ஜகன்னாததாசை தலைவராகக் கொண்டு இரண்டாவது ஊதியக்குழு நியமித்தார்கள் விலைவாசி புள்ளியை அடிப்படையாகக் கொண்டு அதை உடனடியாக ஈடுசெய்யும் வகையில் எந்த ஏற்பாடு செய்யப்

படவேண்டும் என்பதையும் அந்தக் கமிஷன் வலியுறுத்தியது மத்திய அரசினுடைய இஷ்டத்திற்கு அகவிலைப்படி உயர்வுப் பிரச்னையை விடுவதை அவர்கள் விரும்பவில்லை. கீழ் நிலையிலுள்ள ஊழியர்கள் அதிக நலன் பெறத்தக்க ஒரு ஏற்பாட்டை செய்ய வேண்டுமென்றும் அவர்கள் விரும்பினார்கள். ரூபாய் 300க்குக்கீழ் மாதச் சம்பளம் பெறுபவர்களுக்கு ரூபாய் 10 அல்லது 20 அகவிலைப்படியாக வழங்கவேண்டுமென்று அவர்கள் நிர்ணயித்தார்கள். எதிர்காலத்தில் அப்போது இருந்த விலைவாசிப் புள்ளி 115க்குமேல் 10 புள்ளி உயர்ந்தால் அரசு பிரச்சினையைப் பரிசீலித்து அவ்வப்போது அகவிலைப்படி உயர்வு அளிக்க வேண்டும் என்று கூறப்பட்டது 12 மாதங்களுக்கு ஒருமுறை, 10 புள்ளி அடிப்படை ஆகியவற்றைப் பார்த்து பட்ஜெட் அடிப்படையில் இந்தப் பரிந்துரை செய்யப் படுவதாகத் தெரிகிறது. அரசு ஊழியர்களுடைய ஊதியம் அடிக்கடி மாற்றி அமைக்கப்படக் கூடாது என்றும் இடைக் காலத்தில் ஏற்படும் சிறு விளைவுகளை, உயர்வுகளை வேலை நிரந்தர தன்மை என்கிற அடிப்படையில் அரசு ஊழியர்கள் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும் கருத்து கூறப்பட்டது. மத்திய அரசின் இரண்டாவது ஊதியக் குழுவின் முடிவுகள் 1—7—59 முதல் அமுலுக்கு வந்தன.

ஆனால் ஊழியர்கள் அந்த பரிந்துரையை ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால் திருப்தி அடையவில்லை. அதற்கிடையில் மத்திய அரசு 160 ரூபாய் வரையிலும் அடிப்படை சம்பளம் பெறுகிற தன்னுடைய ஊழியர்களுக்கு 5 ரூபாய் என்றும் 150லிருந்து 400 ரூபாய் வரையில் அடிப்படைச் சம்பளம் பெறுபவர்களுக்கு 10 ரூபாய் என்றும் அகவிலைப்படி உயர்வு அளித்தது. 1—7—63லும் ஒரு உயர்வு தரப்பட்டது. அந்தச் சமயத்தில் மத்திய அரசு எஸ். கே. தாஸ் தலைமையில் தனிநபர் குழு ஒன்றை 1964 ஆகஸ்டில் நியமித்தது

அப்போதைக்கப்போது விலைவாசி உயர்வை அரசு ஈடு செய்கிறவிதம் போதுமானதுதானா? மேலும் மாறுதல்கள் தேவையா என்பதை பரிசீலிக்குமாறு இக்குழு கேட்டுக்

கொள்ளப்பட்டது. திரு தாஸ் 1200 வரையிலும் அடிப்படை சம்பளம் பெறுபவர்களுக்கு பஞ்சப்படி உயர்வு வழங்க வேண்டும் என்றும் வேறுபட்ட ஊதிய நிலைகொண்டு இருப்பவர்களுக்கு வேறுபட்ட பஞ்சப்படி உயர்வுகள் வழங்கப்பட வேண்டுமென்றும் பரிந்துரை செய்தார். ஆனால் அரசு 600 ரூபாய் வரையிலும் அடிப்படை சம்பளம் பெறுபவர்களுக்கு தாஸ் கூறிய யோசனையை ஏற்றுக்கொண்டது.

## கஜேந்திர கட்கர் கமிஷன்

1966 ஜூலை மாதத்தில் நீதிபதி கஜேந்திர கட்கர் தலைவராகக் கொண்டு மத்திய அரசு இன்னொரு குழுவை நியமித்தது. இதுவும் பஞ்சப்படிபற்றி பரிசீலிக்கத்தான். விலைவாசி உயர்வை கருத்தில்கொண்டு கூடுதல் அகவிலைப்படி என்கிற பெயரில் நிவாரணம் அளிக்கப்பட வேண்டும் என்றும் அனைத்திந்திய உழைக்கும் மக்களின் வாங்கும் புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்பட வேண்டும் என்றும் 12 மாத சராசரி கணக்கில் 10 புள்ளி உயர்ந்தால் ரூபாய் 110 வரையிலும் அடிப்படை சம்பளம் வாங்குபவர்களுக்கு 90 சதவீதம் நிவாரணம் அளிக்கப்பட வேண்டும் என்றும் இக்குழு கூறியது. 405லிருந்து 450 வரையிலும் சம்பளம் பெறுபவர்களுக்கு 25 சதவீதம் நிவாரணம் அளிக்கலாம் என்றும் இது இரண்டு வருஷங்களுக்கு-அல்லது 240புள்ளி விலைவாசி உயர்வு, எது முன்போ அந்த அடிப்படையில் வழங்கலாம் என்றும் கருத்துக் கூறியது. அந்த எல்லை கடந்த பின்பு அடிப்படைச் சம்பள விகிதங்களிலேயே மாறுதல் செய்யப்பட வேண்டுமென்று கஜேந்திரகட்கர் கமிஷன் கூறியது.

தமிழ்நாடு அரசு 1969ல் ஒரு ஊதியக் குழுவை நிறுவி விரிவாக ஊதிய விகிதங்கள், பஞ்சப்படி ஆகியவற்றினைப் பற்றி பரிந்துரை செய்யுமாறு கேட்டுக் கொண்டது. பஞ்சப்படியில் பெரும்பகுதியை அடிப்படை ஊதியத்துடன் இணைத்தது மட்டுமல்லாமல் இணைந்த தொகையில் 10முதல் 11 சத

வீதத்தை பஞ்சப்படியாக வழங்கலாம் என பரிந்துரை செய்தது விலைவாசி புள்ளியின் அடிப்படையாக இரண்டாவது ஊதியக் குழு 172 என்று கணக்கில் கொண்டது. 1960ல் 100 என்ற அடிப்படையும், பரிந்துரை செய்யும்போது 188 என்ற புள்ளியையும் நிர்ணயிக்கப்பட்டது. மத்திய அரசு ஊழியர் களுக்கும் மாநில அரசு ஊழியர்களுக்கும் சமமான அக விலைப்படி இருக்க வேண்டும் என்று பரிந்துரை செய்த அவர்கள் மாநில அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி அளிப்பதில் ஏற்படுகிற காலதாமதத்தையும் தவிர்க்க வேண்டுமென்று கூறினார்கள்.

கொள்கை அடிப்படையில் இரண்டாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்ட தமிழ்நாடு அரசு 2—10—70 முதல் அவற்றை அமல் நடத்தினர்.

தமிழ்நாடு அரசினுடைய இரண்டாவது ஊதியக்குழு முடிவுகள் செயலாக்கப் பட்டுக்கொண்டிருந்த அதே வேளை யில் மத்திய அரசு மூன்றுவது ஊதியக் குழுவினை நியமித்தது ரகுபாஸ்தயா அவர்கள் தலைவராக நியமிக்கப்பட்டார். இந்தக் குழு அகவிலைப்படி அளிப்பதைபற்றி விரிவாக விவாதம் நடத் தியது. கீழ்க்கண்ட முடிவுகளுக்கு வந்தது

(1) விலைவாசிப் புள்ளி அடிப்படையில் அதை ஈடு செய்யும் முறையில் சம்பளம் வாங்குவோருக்கு அகவிலைப்படி அளித்தே தீரவேண்டும்.

(2) 1—1—73ல் 200 புள்ளி என்பது கணக்கில் கொள்ளப் படவேண்டும்.

(3) 12 மாத சராசரி அடிப்படையில் 8 புள்ளி உயர்ந்தால் 300 ரூபாய் வரையிலும் அடிப்படை சம்பளம் பெறுபவர் களுக்கு சம்பளத்தில் 3½ சதவீதமும் 300க்குமேல் அடிப்படை சம்பளம் பெறுபவர்களுக்கு 2 சதவீதமும் குறைந்தபட்சம் ரூ. 20ம் உயர்வு அளிக்கப்பட வேண்டும்.

(4) 272 புள்ளிக்குமேல் உயர்ந்துவிட்ட பிறகு அரசு இந்த நிலைமையை மறுபரிசீலனை செய்யவும் ஊதிய விகிதங்களை மாற்றவும் செய்யலாம்.

- மத்திய அரசு இந்த பரிந்துரைகளில் சில மாறுதல்களை செய்தது. 300 வரையில் 4 சதவீதமாகவும், 300க்குமேல் 3 சதவீதமாகவும் நிர்ணயித்தது. இந்த அடிப்படையில் 1—5—73, 1—8—73, 1—10—73, 1—1—74, 1—2—74, 1—4—74 ஆகிய சமயங்களில் அகவிலைப்படி உயர்வு மத்திய அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்பட்டது. 74 ஜூன், ஜூலை, செப்டம்பர் ஆக மூன்று தவணைகளில் அளிப்பதற்கான நிலைமையும் ஏற்பட்டுவிட்டது. இதற்கிடையில் மத்திய அரசு ஊதிய முடக்க சட்டம் ஒன்றையும் பிறப்பித்தது அடிப்படை ஊதியத்தில் மாற்றம் ஏற்பட்டால் அந்த மாற்றத்தின் விளைவாக கிடைக்கும் முழுத் தொகையையும், பஞ்சப்படியில் உயர்வு அளிக்கப்பட்டால் அந்த உயர்வில் 60 சதவீதமும் 2 ஆண்டுகளுக்கு (6—7—74 முதல்) கட்டாய சேமிப்பாக ஆக்கப்படும் என கூறப்பட்டது.

1974 ஆகஸ்டில் 321 புள்ளி ஆக இருந்த விலைவாசி உயர்வு செப்டம்பரில் 334 ஆக உயர்ந்து இருக்கிறது. 1974 ஜூனில் 256 ஆக இருந்தது. ஜூலையில் கூடுதலாக 8 புள்ளிகள் உயர்ந்து இருக்கிறது ஒவ்வொரு முறையும் மத்திய அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி உயர்த்தும்போது அவர்களுக்கு 60 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஆகிறது.

1948 பிப்ரவரியில் மத்திய அரசு முதலாவது மத்தியக் குழுவின் சிபாரிசுகளை பின்பற்ற முடியாது என்று மறுத்துவிட்டது. 5, 10 என்றுதான் அவ்வப்போது அளிக்கப்பட்டு வந்தது. இரண்டாவது ஊதியக்குழு முடிவுகளுக்குப் பிறகு கூட மத்திய அரசு அகவிலைப்படியில் தெளிவான உறுதியான கொள்கையைப் பின்பற்றவில்லை. மூன்ருவது ஊதியக் குழு பரிந்துரைகூட 74 பிப்ரவரி வரையில்தான் பின்பற்றப்பட்டு

இருக்கிறது. இதைத்தான் தமிழ்நாடு அரசின் 1975ம் ஆண்டு அகவிலைப்படி குழு அறிக்கையின் முதல் 22 பக்கங்களில் விரிவாக கூறப்பட்டுள்ளது.

## பயன் பெறுவோர் எவ்வளவு பேர்?

தமிழ்நாட்டில் மாநில அரசு ஊழியர்கள் மாத்திரம் 3,43,691 பேர் இருக்கிறார்கள். குற்றேவலர்களாக முழுநேர ஊழியர்களாக 13,014 பேர் இருக்கிறார்கள். இரண்டாவது ஊதியக் குழுவின் முடிவுகளுக்குப் பிறகும் தமிழ்நாட்டில் இவர்கள் பழைய அகவிலைப்படி கணக்கிலேயே பெற்று வருகிறார்கள். இவர்களைத் தவிர வேலை நிதி ஊதியம் பெறுபவர்கள் இருக்கிறார்கள். அதில் 12,555 பேர் பணிவரன் முறைபடுத்தப் பட்டவர்களாகவும், 6465 பேர் பணிவரன்முறை படுத்தப்படாதவர்களாகவும் இருக்கிறார்கள். இவர்கள் அனைவருமே சர்க்கார் ஊழியர்கள் போல அகவிலைப்படியைப் பெற்று வருபவர்கள் தான்.

5 ஆண்டுகாலம் சர்விஸ் உள்ளவர்கள் அனைவரும் கொஞ்சம் கொஞ்சமாக முறையான அரசு ஊழியர்கள் ஆவதற்கு கொண்டு வரப்படுவதால் இவர்கள் எண்ணிக்கை குறைந்து வருகிறது

தமிழ்நாட்டிலுள்ள 32,500 தொடக்க பள்ளிகளில் 22,000 பள்ளிக்கூடங்கள் ஊராட்சி ஒன்றியங்களில் நடத்தப்படுகின்றன. இவற்றில் 1,26,700 ஆசிரியர்களும், 3,200 ஆசிரியர் அல்லாதவர்களும் (Non Teaching Staff) இருக்கிறார்கள். நகர சபைப் பள்ளிகளில் 12,237பேர் பணியாற்றுகிறார்கள் கார்ப்பரேஷன் பள்ளிகளில் 8,068 பேர் பணியாற்றுகிறார்கள். தனியார் பள்ளிகளில் 51,854பேர் பணியாற்றுகிறார்கள். உதவிபெறும் கல்லூரிகளில் 10,200பேர் பணியாற்றுகிறார்கள். பென்ஷனர்கள் இப்போதைக்கு 62,025பேர் இருப்பதாக கணக்கிடப்பட்டு இருக்கிறது. 2—10—70க்குப்பின் ரூ 5. என

4 முறை பென்ஷனர்களுக்கு அளிக்கப்பட்ட அகவிலைப்படியில் வருஷத்துக்கு ரூ. 148.81 லட்சம் செலவாகிறது,

1—2—75க்குமுன் மொத்த அரசு ஊழியர்களுக்கும் பென்ஷனர்களுக்கும் அளிக்கப்பட்ட அகவிலைப்படிக்கான ஆண்டுச் செலவு 4381 லட்சங்கள் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் அகவிலைப்படி குழு அளித்து இருக்கிற புள்ளி விவரங்கள் ஆகும்.

## நிதி வசதி

அகவிலைப்படிக் குழுவின் மூன்றுவது அத்தியாயம் பக்கம் 33முதல் 41வரையில் அரசின் நிதிநிலை இருப்பையும், வருவாய் வசதியையும் எடுத்துக் கூறுகிறது 1960 61ல் மாநில அரசின் வருமானம் 91·09 கோடியாக இருந்து 1967-68ல் 260 94 கோடியாகி 19 4-75ல் 483·25 கோடியாக மாறியுள்ளது.

இந்த ஆண்டுகளில் முறையே ஊழியர்களுக்கான செலவு ரூ. 25·56 கோடியாகவும், ரூ- 58.09 கோடியாகவும், ரூ. 128 70 கோடியாகவும் உயர்ந்துள்ளது.

மொத்த வருவாயில் மாநில அரசு ஊழியர்களுக்கான செலவு எத்தனை சதவீதம் என்பதை நாம் ஒருமுறை பார்ப்போம். (ஆசிரியர்கட்கும் சேர்த்து)

1960—61 — 41.87 %
61—62 — 43.48%
62—63 — 39.76%
63—64 — 38.71%
64—65— 39.47%
65—66— 40.67%
66—67— 41.71%
67—68— 41.15%

1968—69 — 40 94 %
69 - 70 — 35.90%
70—71 — 37.54%
71—72 — 40 44%
72—73 — 38 00%
73—74 — 37.86%
74—75 — 38.25%

இந்தப் புள்ளி விவரங்களைப் பார்க்கும்போது அரசு ஊழியர்களுக்கும். ஆசிரியர்களுக்கும் ஆகும். மொத்த செலவு குறைந்து வந்திருக்கிறதே தவிர அதிகப்படவில்லை என்பது தெளிவாகப் புலப்படும் சில வடஇந்திய மாநிலங்களைப் பார்க்கும்போது அங்கே வருவாயில் 60 சதவீதம் அரசு ஊழியர்களுக்கு—செலவு செய்யப்படுவதை நன்ருக கவனிக்கலாம்.

மதுவிலக்குக் கொள்கையால் ஏற்படுகிற இழப்பு, வரட்சி நிவாரணப் பணிகளில் ஏற்பட்டுள்ள, புதிய செலவு இவற்றைப் பற்றியெல்லாம் அகவிலைப்படிக் குழு விளக்குகிறது. இவையெல்லாம் நமக்குத் தெரியாதவையல்ல. ஆனால் ஒரு அரசு சில கொள்கைகளை உருவாக்குவதனுல், அல்லது ஒரு அரசு சில திட்டங்களைக் கொண்டுவருவதனுல் அரசு ஊழியர்களுக்குக் கிடைக்கவேண்டிய உரிமைகள் நிறுத்தப்பட க்கூடாது பள்ளியிறுதி வரையில் இலவசக் கல்வி என்பதனுல் ஆசிரியர்கட்கு அளிக்க வேண்டிய சலுகைகளைப் பறிப்பதுகூடாது. அதேபோல் புன்செய் நிலங்களுக்கு வரி கிடையாது என்று உத்தரவுபோடுவதனுல் வருவாய்த்துறை ஊழியர்கட்குப் பாதகம் வரக்கூடாது

அரசு ஊழியர்களுக்கு செய்யப்படுகிற விகிதாசார செலவுகள் குறைவதை நாம் பொறுத்துக் கொண்டிருக்க முடியுமா? புதிய திட்டங்கள் போடட்டும்; வரவேற்போம். அதனை வெற்றிகரமாக நிறைவேற்றத்துணை செய்வோம்; பணியாற்றுவோம்; அதுவேறு விஷயம்

ஆனல் "மாதா பிச்சையெடுக்க—மகன் கோதானம் செய்வதை" சமுதாயம் எவ்வாறு சரியானதாக அங்கீகரிக்காதோ அதேபோல அரசின் ஊழியர்கள் இல்லாமையினுல், போதாமையினுல் இன்னலுறுகிறபோது—அரசு எத்தகைய சீரிய திட்டங்களைப் போட்டாலும் முழுமையாக அந்தத் திட்டங்களின் நிறைவு காணமுடியாது.

இதை மாநில அரசுகள் நியமிக்கும் குழுவினர் ஏன் உணரவில்லை? அதற்குக் காரணம் அவர்கள் மேல் மட்ட நிர்வாக அமைப்பைச் சேர்ந்த அதிகாரிகளாயிருக்கின்றனர். மத்திய அரசின் ஊதியக்குழுக்கள் சில அம்சங்களில் தாராள மனப்பான்மையுடன் ஓரளவாவது நியாய நோக்குடன் பரிந்துரை செய்வதற்குக் காரணம் அங்கே நீதிபதிகள் நியமிக்கப்படுகிறார்கள் என்பதுதான். இங்கே அமைக்கப்படுகிற குழுக்களும் அப்படி நீதிபதிகளைத் தலைவர்களாகக்கொண்டு அமைக்கப்படுமானால் இன்னும் சிறிது தெளிவான நியாயங்கள் உருவாக வழியமைக்கப்படலாம்

இல்லையென்றால் ஊதியக்குழு, அகவிலைப்படிக்குழு என்ற பெரிய பெயர்களைக் கொடுத்துவிட்டு—அவர்கள் சுயேச்சையாக செயல்பட முடியாமல் நிதித்துறையின் ஆளுகைக்குட்பட்டு, ஒருவரம்புக்குள் செயல்படுவதனால் எந்தவிதமான நீதியும் கிடைப்பதில்லை. இந்த நிலையில் எந்தக் குழுவும் தேவையில்லை; குழுவுக்கு விளம்பரம் தேவையில்லை; செலவு தேவையில்லை; அவர்கள் ஊர் ஊராகச் செல்லத் தேவையில்லை; நிதி இலாக்காவே முடிவு கட்டலாமே!

"While it is admittedly true that the plight of Govt. Employees, whose real income has been significantly eroded by the unprecedented dose of inflation is serious——(பக்கம் 40) என்று கூறுகிற அகவிலைப்படிக் குழு, முடிவினை மாத்திரம் தெளிவாக—நியாயமாகக் கூறாதது வருந்துதற்குரியது.

## பென்ஷன் சலுகைகள்

அகவிலைப்படியில் எந்த அளவுக்கு பென்ஷன் முதலிய சலுகைகளுக்காக அகவிலை ஊதியம் என்று கணக்கிடலாம் என்று தமிழ்நாடு அரசின் அகவிலைப்படிக் குழு அறிக்கை பரிசீலித்தது. இது புதுமையானதல்ல. 1952ல் மத்திய அரசு இந்த வகையான திட்டத்தை நடைமுறையில் கொண்டு வந்தது

டாக்டர் காட்கில் தலைமையில் அப்போது நியமிக்கப்பட்ட அகவிலைப்படிக்குழு 50 சதவீத அகவிலைப்படியை பென்ஷனுக்காக சம்பளம் என்று கொள்ளலாம் என்று கூறியதை மத்திய அரசு ஏற்றுக்கொண்டது.

அதை சுட்டிக் காட்டிய இப்போதைய நமது சிவசுப்பிரமணியம் கமிட்டி கடைசியாக இங்கு மாநில அரசு ஊழியர்கள் அகவிலைப்படி உயர்வு பெற்றது 1—4—74ல் என்பதை கவனத்தில் கொண்டுவந்தார்கள். 30 ஆண்டுகால விலைவாசி உயர்வைப் பின்னணியாகக் கொண்டு பார்க்கும்போது 1—4—74ல் இருக்கக்கூடிய விலைவாசியின் நிலையானது குறையாது என்ற முடிவுக்குக் கமிட்டி வந்தது.

எனவே 1—4—74ல் ஒவ்வொரு அரசு ஊழியரும் பெற்று வந்த அகவிலைப்படி (அதாவது ரூ. 299ம் அதற்குக்குறைந்தும் ஊதியம் பெற்றவர்கட்கு 55; ரூ. 300ம் அதற்கு மேலும் ஊதியம் பெற்றவர்கட்கு ரூ. 70) பென்ஷன், பணிகொடை, மற்றும் பயணப்படி ஆகியவற்றுக்குக் கணக்கில் கொள்ளப்படும் என்றும் கமிட்டி கூறியது. இந்த ஒரு பரிந்துரையில் தான் "சற்றுெப்ப ஊதியக்குழு" என்று முதலமைச்சர் கலைஞர் தஞ்சை மாநில மாநாட்டில் கூறினரே, அது சற்று நிறைவேறியது.

பயணப்படிக்காகக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும் என்று கூறும்போது "The effect——would not be substantial" என்றும் "Small Benefit" என்றும் கூறியுள்ளது. ஆக இங்கு நிதிதான் அளவு கோலாக இருக்கிறதே தவிர நீதி கருதி செய்யப்படவில்லை என்பதை அறிக்கை வெட்ட வெளிச்சமாக்குகிறது.

"நகர ஈட்டுப்படி, வீட்டு வாடகைப்படி ஆகியவற்றுக்கும் Existing D. A.யை ஊதியமாகக் கணக்கில் கொள்ளலாம் என்று கூறுவதற்கு அகவிலைப்படிக் குழுவின் ஆணையில்

4716 TAMIL NADU ARCHIVES LIBRARY EGMORE, MADRAS-600 008 17 FEB 1979

உள்ள Terms of Reference இடம் கொடுத்தும்கூட அதை குழுவினர் செய்யத் தவறியது வருந்துதற்குரியதே. இதற்கு குழுவின் அறிக்கை கூறுகிற காரணங்களும் பொருத்த மில்லாதவை. 'மதுரை—கோவையைப் போல சேலமும் திருச்சியும் C.C.A. கேட்கிறது. வீட்டு வாடகைப்படி' எல்லா இடங்களுக்கும் தேவை என வலியுறுத்தப்படுகிறது.'. ஆகையால் இதை நாங்கள் பரிசீலிக்கவில்லை என்பது சொத்தை வாதமே தவிர வேறில்லை.

இன்னும் விசித்திரமான வாதம் ஒன்று குழு அறிக்கை 53ம் பக்கத்தில் 12வது பாராவில் சொல்லப் பட்டிருக்கிறது. வீட்டு வசதி வாரிய வீடுகளிலும், மற்றைய அரசு வீடுகளிலும் அடிப்படைச் சம்பளத்தில் 10% வீட்டு வாடகையாகப் பிடிக் கப்படுகிறது. எனவே H.R.A. purposeக்கு தற்போதுள்ள D.A.யைக் கணக்கிலெடுத்துக் கொண்டால் அவர்கள் எல்லாம் மேலும் எதிர்ப்பு தெரிவிப்பார்களாம்! எவ்வளவு நகைப்புக்கிடமான வாதத்தை ஒரு பெரியகுழு நம்முன்பு,—நம்முன்புமட்டுமல்ல—அரசின் முன்பு வைத்திருக்கிறது பாருங்கள்!

ஆக ஓய்வூதியத்திலும், பணிக்கொடையிலும் அகவிலைப் படிக்குழு செய்த பரிந்துரைகளால் ஓராண்டுக்குக் கூடுதலாக ஆகும் செலவு ரூ. 88.10 லட்சங்களாகும்

## எதை நிர்ணயிப்பது?

ஐந்தாவது பாகத்தில்தான் அகவிப்படி யை எப்படி நிர்ண யிப்பது என்று விவாதிக்கத் தொடங்கியது "Automatic Linking of D.A. to the cost of living index"—இதுதான் அவசியமான முடிவு, எளிமையான முடிவு, இயல்பான முடிவு, அடிக்கடி பரப்பரப்பினை ஏற்படுத்தப் பத்திரிகைகளால்) இயலாத முடிவு என்று ஊழியர் சங்கங்கள் தெரிவித்த கருத்தினையெல்லாம் அகவிலைப்படிக் குழு மறுக்கவில்லை இதை அரசு ஏற்றுக் கொண்டால்தான் அரசு ஊழியனின் உண்மையான ஊதியம்

—விலைவாசி உயர்விஞல் பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்படும் என்பதையும் அகவிலைப்படிக் குழு மறுக்கவில்லை.

பல தொழிற்சாலைகளில், வியாபார நிறுவனங்களில் இந்த வழியை ஏற்றுக்கொண்டிருக்கின்ருர்கள் என்பதனையும் அக விலைப்படிக் குழு மறுக்கவில்லை 'Ideal one' என்று பாராட்டு கிறது

ஆனல்

என்ன, ஆனலுக்கு ?

அங்கேதான் அதிகாரவர்க்கம் தன்னுடைய சட்டையை தோலுரித்துக் காட்டுகிறது. "வியாபார நிறுவனங்களுக்கு இது ஏற்றதாக இருக்கலாம் அரசாங்கத்தால் முடியாது."— தன்னுடைய முத்திரையை ஐ.ஏ.எஸ் வர்க்கம் பதித்துவிட்டது

"வியாபார நிறுவனங்கள் தங்களுடைய உற்பத்தித் திறனுக்கேற்ப லாபத்திற்கேற்ப ஊழியர்களை நியமிக்கிறது. ஈட்டும் லாபத்திற்கேற்ப ஊழியர்களை வகைப்படுத்த—வேறு படுத்த—பிரிக்க முடிகிறது. ஆனல் அரசாங்க ஊழியம் என்பது பாதுகாப்புடன் கூடியது; நிரந்தரத் தன்மை வாய்ந் தது; உத்தரவாதம் பெற்றது; சூழ்நிலைகளுக்கேற்ப மாற்ற முடியாதது."

—இந்த வாதம் சரியானதுதாஞ? தொழிற்சங்கங்கள் நாளுக்குநாள், விஞடிக்கு விஞடி அதிகரித்துவரும் இந்நாளில் வியாபார நிறுவனங்கள்—தொழிற்சாலைகள் இவற்றில் பணி யாற்றும் லட்சோப லட்சம் தொழிலாளர்கள் இன்று நிரந்தரத் தன்மை இல்லாமலா இருக்கிருர்கள்? பாதுகாப்பு இல்லாமலா இருக்கிருர்கள்? இல்லவே இல்லை.

எஸ். எம். நாராயணனும், அந்தோணிப்பிள்ளையும், காட்டூர் கோபாலும், குசேலரும். வீ. பி. சிந்தனும், அங்கப்ப னும் நல்லவேளை, இதுவரை இந்த அகவிலைப்படிக் குழுவின்

அறிக்கையைப் படித்துப் பார்க்கவில்லை என்று நம்புகிறேன். இல்லையென்றால் தங்களின் தொழிற் சங்க வாழ்வுக்கு சவாலாக விடப்பட்ட இந்த வார்த்தைகளைத் தூள் தூளாக்கியிருக்கமாட்டார்களா?

அதுமட்டுமல்ல—தொழிலாளர் நல அரசின் அதிகாரிகள் தயாரித்த ஒரு அறிக்கை, தொழிற் சங்க வளர்ச்சியை உணர முடியாத அளவுக்கு பிற்போக்கான வாதத்தை வைக்கலாமா?

'நிரந்தரத் தன்மை'—அரசு ஊழியத்தில் இருப்பதாகக் கூறிக்கொள்கிறீர்களே, கூட்டுறவுத் துறையில் 10 ஆண்டுகளுக்குமேல் தொடர்ந்து பணிபுரிந்து பின் ஒரு காசுகூட நஷ்ட ஈடாகப் பெறமுடியாது வீட்டுக்கு அனுப்பப்பட்டவர்களின் பட்டியல் தேவையா?

குருதி நோய் வரும், இதய நோய் வரும் என்று தெரிந்தும் தலைமைச் செயலகத்திலேயே 7, 8 ஆண்டு காலம் டைபிஸ்டாய் இருந்து வீட்டுக்கு அனுப்பப்பட்டவர்களின் கண்ணீர்க் கதை வேண்டுமா?

சிவகங்கையிலும், சித்தூரிலும் ஜமீன்தாரி நிலங்களை சர்க்கார் நிலங்களாக மாற்ற அளந்து, ஆவணங்கள் தயாரிக்க உழைத்தபின் பத்தாண்டுக்குப்பின் சக்கையாய் வீட்டுக்கு அனுப்பப்பட்ட சர்வேயர்களின் வரலாறு தெரியுமா?

நிரந்தரத் தன்மையாம்! பாதுகாப்பாம்!.....யாருக்கு வேண்டும் இந்தப் போலிக் கௌரவ வார்த்தைகள்? எந்த நேரத்திலும் ஏதாவது ஒரு காரணத்தைக் கூறி நடவடிக்கை எடுக்கவைக்கும் Conduct Rules! வியாபார நிறுவனங்களில், தொழிற்சாலைகளில் வேலை பார்ப்பவன் இந்த இருப்பாரத்தை சுமக்காமல் அல்லவா மகிழ்ச்சியோடிருக்கிறான்?

"சூழ்நிலைகளுக்கேற்ப மாற்ற முடியாதது அரசு வேலை"—கதைக்கிறார்கள் காருண்ய பிரபுக்கள்! பத்திரப் பதிவுத் துறையில் filing system கொண்டுவரப்பட்டபோது 40 பேர் வேறு இலாக்காக்களுக்கு தூக்கி அடிக்கப்பட்டனரே, அது எந்த வகையைச் சேர்ந்தது? இன்றுகூட அரசின் வாரியக் கொள்கைகளினால் டான்சியிலும், தொழில் வணிகத் துறையிலும் 5.0க்கு மேற்பட்டோர் என்ன நேருமோ என்று கலங்கிக்கொண்டிருக்கிறார்களே, அது எந்த சூழ்நிலையில் ஏற்பட்டது?

ஒரே இலாக்காவில் ஒரே அலுவலகத்தில் ஒரே வேலை பார்ப்பவனுக்கு, வெவ்வேறு விதிமுறை, ஊதியம்—இவையெல்லாம் நில அளவுத் துறையிலும், வேளாண் துறையிலும், பொதுப்பணித் துறையிலும் இங்கேதான் காண முடியுமேதவிர தனியார் நிறுவனத்திலா?

தனியார் நிறுவனம் தாழ்வானதுபோலப் பேசுகிறார்களே அடிசன் பெயிண்ட் தொழிற்சாலையில் வேலை செய்யும் ஆயிரக் கணக்கான தொழிலாளர்களுக்கு 6 பைசாவுக்கு டீ, 25 பைசாவுக்கு பகல் உணவு, போதுமானது—திருப்தியானது தரமுடிகிறதே! அரசால் ஏன் முடியவில்லை?

நிதிநிலை இடங் கொடுக்கவில்லை என்று கூறுங்கள்! ஓரளவாவது (ஓரளவுதான்; அதுவும் இன்றுள்ள சூழ்நிலையில் தான்) ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் தனியார் நிறுவனங்கள்; விலைவாசிப்படியை வாழ்க்கைப் புள்ளியாடு இணைத்து உயர்வு தருகிறதே அவை மோசமானவை என்ற பிரமையை மாத்திரம் ஏற்படுத்தாதீர்கள்!

இவ்வளவு தூரம் நம்மை உணர்ச்சியுறச் செய்துவிட்டு இப்போதுதான் உண்மை நிலைக்கு—நிதி நிலைக்கு வருகிறார்கள். நம்முடைய தமிழ்நாடு அரசைச் சேர்ந்த மின்

வாரியத்தில் ஒரு புள்ளி உயர்வு 0·75 காசுகளினால் ஈடுசெய்யப் படுகிறது. இரண்டாவது ஊதியக் குழுவின்போது 172 என்று நிர்ணயிக்கப்பட்ட புள்ளி அடிப்படையில், 1974 அக்டோபரில் 335 புள்ளி ஆகி உள்ளது.

163 புள்ளியை ஈடுகட்ட வேண்டுமானால் இப்போதைய அகவிலைப்படி ரூ. 122·25 ஆக நிர்ணயிக்கப்பட வேண்டும், ரூ. 299 வரையிலும் ஊதியம் பெறுபவர்கட்கு கூடுதலாக ரூ. 67·25ம், அதற்குமேல் சம்பளம் பெறுபவர்கட்கு ரூ.52·25ம் வழங்க வேண்டும், இதற்கு மொத்த கூடுதல் செலவு ரூ. 4421 லட்சங்களாகும், (ரூ. 2 9க்குக் கீழ் ஊதியம் பெறுவோர் எண்ணிக்கை 4·17 லட்சம்—300க்கு மேல் ஊதியம் பெறுவோர் எண்ணிக்கை 1·71 லட்சம்)

44 கோடி ரூபாயா? எங்கே போவது? நிதி மாத்திரம் அகவிலைப்படியை நிர்ணயிக்க வேண்டுமென்றால் இந்த "simple formulla"வைக்கூட நாங்கள் பரிந்துரைக்க முடியாது என்று கூறிவிட்டனர் குழுவினர்.

அடுத்த பிரச்சனை மத்திய அரசு ஊழியர்க்குத் தருவது என்ன என்பதே! 1956ல்கூட மத்திய அரசு ஊழியருக்கு சமமான அகவிலைப்படி வேண்டுமென்பது அப்போதிருந்த தலைமைச் செயலர் கமிட்டி முன்பு கூறப்பட்டது, அந்த வித்தியாசத்தை சரிசெய்ய அப்போது தேவைப்பட்டது 7·84 கோடி ரூபாய்தான்; ஆனால் அன்றும்கூட மத்திய உதவி இதற்கென எதிர்பார்க்கப்பட்டது; கோரப்பட்டது,

1959, 1969 ஆக இருமுறை அமைக்கப்பட்ட தமிழ்நாடு அரசின் ஊதியக் குழுக்கள் எல்லாம் மத்திய அரசு ஊழியருக்கு நிகரான அகவிலைப்படிக் கொள்கை என்பதை தெளிவாக ஏற்றுக் கொண்டுள்ளன, கேரளம், கர்நாடகம், ஹரியாணா, மத்திய பிரதேஷ், இமாசலப் பிரதேசம் போன்

றவை அதே தேதியில் தராவிட்டாலும் மத்திய அரசு ஊழிய ருக்கு உள்ள அகவிலைப்படியைத் தந்தன, இவையெல்லாம் தமிழ்ந டு அரசு ஊழியர்களின் கோரிக்கைக்கு பக்கபலமாக இருந்தன,

மத்திய அரசு ஊழியர்கட்கு அகவிலைப்படியை நிர்ண யிக்கும் சூத்திரத்தை ஜஸ்டிஸ் ரகுவீர் தயாளைத் தலைவராகக் கொண்ட மூன்றாவது ஊதியக் குழு நிர்ணயித்தது, அரசு ஊழியர்களுக்கு விலைவாசி உயர்வை ஈடுகட்ட ஒரு முறை யான திட்டம் வேண்டுமென அக்குழு கருதியது, அனைத் திந்திய சராசரி உபயோகிப்போர் விலைக் குறியீட்டெண்-- 1960ல் தொழில் நிறுவன ஊழியர்களுக்கு எவ்வாறு இருந் ததோ அது பின்பற்றப்பட வேண்டுமென குழு கருத்து தெரி வித்தது, அதனுடைய அடிப்படையில் மூன்றாவது ஊதியக் குழு பரிந்துரைகளை, ஊழியர்களின் கிளர்ச்சிக்குப் பிறகு சிறிது உயர்த்தி அரசு உத்தரவிட்டது,

ரூ, 300க்குக் கீழ் இருப்பவர்களுக்கு ஒவ்வொரு முறையி லும் 4% என்றும், 300க்கு மேல் ஊதியம் வாங்குவோருக்கு 3% என்றும் மத்திய அரசு ஒத்துக்கொண்டது, குறைந்த பட்சம் அதிகபட்சம் என்பது முறையே ரூ, 12 ஆகவும், ரூ, 27 ஆகவும் உயர்த்தப்பட்டது,

'இது Automatic என்று நிர்ணயிக்காமல் அரசின் அவ்வப்போதைய நிலைக்கு உட்பட்டு நிர்ணயித்துக் கொள் ளலாம்' என்று மூன்றாவது ஊதியக் குழு விட்டுவிட்டதனால் தான் 5 அகவிலைப்படி உயர்வு பாக்கி என்று இப்போது மத்திய அரசு ஊழியர்கள் குரல் எழுப்புகிறார்கள்.

தொழிலாளர்களைப் பொறுத்த வரை ரூபாய் 700 வரையிலும் மாதச் சம்பளம் வாங்குவோர்களெல்லாம் தொழிலாளர்கள் என்றே அழைக்கப்படுகிறார்கள், மாநில

அரசு ஊழியர்களில் 90 சதவிகிதத்தினர் 700 ரூபாய்க்குள் தான் மாத ஊதியம் பெறுகிறார்கள். எனவே தொழிலாளர்களுக்கு கொடுக்கப்படுகிற அகவிலைப்படி உயர்வுகள் மாநில அரசு ஊழியர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்கிற கோரிக்கை நியாயமானதுதான் என்ற அகவிலைப்படிக் குழுவின் அறிக்கையில் பக்கம் 67ல் கூறப்பட்டிருந்தும்கூட தெளிவான முடிவுகளை இது பரிந்துரை செய்யவில்லை.

அகில இந்திய விலைவாசிப் புள்ளியை உருவாக்குகிற போது இந்தியாவிலுள்ள 50 நகரங்களை தேர்ந்தெடுத்து அங்குள்ள விலைவாசி நிலைமையை மத்திய அரசு பரிசிலனை செய்தது. சென்னை நகரம், மதுரை, கோயம்புத்தூர், கூனூர் ஆகிய நகரங்கள் இந்த 50ல்அடங்கும். ஆனால் மாநிலத்தைப் பொறுத்த வரையிலும் இந்த நகரங்களுக்கு ஆன சராசரி குறி ஈட்டுப்புள்ளி எதுவும் இல்லை. சென்னை நகரத்தில் இருக்கும் நிலவரம்தான் மாநிலம் முழுவதிலுமுள்ள நிலவரம் என்று குறிப்பிட முடியாது. இதுப்போல பல குழப்பங்கள் இருப்பதனல் மத்திய அரசு தன்னுடைய ஊழியர்களுக்கு பின்பற்றுகிற முறைதான் மாநில அரசுக்கும் ஏற்றது என்பதை அகவிலைப்படிக்குழு ஒரு கட்டத்திலே தெளிவாக்கியிருக்கிறது.

12 மாத சராசரிப்புள்ளி, 8 புள்ளி விலைவாசி உயர்வு ஆகியவற்றிலும்கூட மத்திய அரசின் முடிவை, மூன்றுவது மத்திய ஊதியக் குழுவின் பரிந்துரையை தமிழ்நாடு அரசின் அகவிலைப்படிக்குழு தெளிவாக ஏற்றிருக்கிறது. ஓர் இடத்தில் நமது தமிழ்நாடு அரசு அகவிலைப்படிக் குழு, மத்திய அரசை கேலியும் கிண்டலும் செய்திருக்கிறது. முதலாவது மத்திய ஊதியக் குழு, இரண்டாவது மத்திய ஊதியக் குழு ஆகியவற்றின் முடிவுகளை, அகவிலைப்படி பற்றிய பரிந்துரைகளை ஒரு கட்டத்தில் அமுல் நடத்திவிட்டு வேறு கட்டத்தில் சில

மாதங்களிலேயே அதை மாற்றி அமைத்த நிலையை பரிகசித்திருக்கிறது, மூன்றாவது ஊதியக் குழு அகவிலைப்படியைப் பற்றி உருவாக்கிய திட்டமும் ஒரு கட்டத்தில் கைவிடப் படலாம் மத்திய அரசால் என்பதை குழு எடுத்துக் கூறியிருக்கிறது,

எனவே மாநில அரசின் நிதி நிலைமை கருதி கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளுங்கள், நடைமுறையில் எச்சரிக்கையோடு கஜானாவில் இருப்பதை பார்த்தவாறு அவ்வப்போது முடிவு செய்யுங்கள் என்று தான் குழு கூறியிருக்கிறது.

"It is our great regret that though we feel sympathetic with the aspirations of the State Government Employees to be equated with the Central Government Employees atleast in the matter of Dear-ness Allowance, We are not able to suggest a blind adoption of that formula by the State Government" என்று பக்கம் 72ல் இந்த குழு கூறியிருப்பதானது விசித்திரத்திற்கும் வேடிக்கைக் குரியதாகும்

மூன்று மத்திய ஊதியக் குழு அறிக்கைகளையும் கண்ணோட்டமிட்ட ஒரு குழு கஜேந்திரக் கட்கர் கமிஷன், காட்கில் கமிஷன் ஆகியவைப்பற்றியெல்லாம் ஆராய்ந்த ஒரு குழு இவ்வாறு இறுதி முடிவு எடுத்து இருப்பது துர்ப்பாக்கியமானது. பிறகு விலைவாசி உயர்வுபற்றியெல்லாம், மாத சராசரிப்படி கணக்கையெல்லாம், நகரங்களின் எண்ணிக்கைப்பற்றியெல்லாம் இவர்கள் ஆராய்ச்சி செய்திருக்க வேண்டிய அவசியமென்ன?

"Such a situation would be possible only if the Central Government comes forward to meet the budgetary deficiency that the State might face in the execu-

tion of this scheme'' என்று சொல்வதற்கு இரண்டு ஐ. ஏ. எஸ் அதிகாரிகளும் ஒரு பொருளாதார நிபுணரும் தேவை இல்லை.

இதேக் கருத்தை மத்திய மாநில அரசு உறவுகுறித்த ராஜமன்னார் கமிட்டியிலிருந்து முரசொலி மாறன் எழுதிய மாநில சுயாட்சி புத்தகம் வரை பலபேர் பல முறை சொல்லி விட்டார்கள். நம்முடைய முதலமைச்சர்கூட ஐந்தாறு முறை தேசிய அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலேயே இதைச் சொல்லியிருக்கிறார். தமிழ் நாடு என் ஜி ஓ யூனியன் மட்டு மல்ல, அகில இந்திய மாநில அரசு ஊழியர்கள் கூட் டமைப்பும் இத்தக் கருத்தை பலமுறை எடுத்துச் சொல்லி யிருக்கிறது, ஆறுவது நிதிக் குழுவில்கூட 1972ல் அறிக்கை சமர்பிக்கும்போது இதை மிக தெளிவாகக் குறிப்பிட்டிருக் கிறார்கள்.

ராணுவம், ரயில், தபால், தந்தி, துறைமுகங்கள், வரு மானவரி, தனிக்கைத்துறை போன்ற மத்திய அரசு அலுவ லகங்களிலே இருப்பவர்களுக்கு மாத்திரம் ஒரு விதமான சம்பளமும் மாநில அரசில் இருப்பவர்களுக்கு வேறுவிதமான ஊதியமும் இருப்பதும் தவறானது, மேலே கூறிய மத்திய இலாக்காக்களிலெல்லாம் தங்கள் பணியை செம்மையாக வும், திற படவும் முறைப்படியும் செய்வதற்கு மாநில அரசின் மின்சாரம், கல்வி, சட்டஒழுங்கு. சுகாதாரம் முதலிய பல இலாக்காக்கள் துணை செய்கிறது, எனவே மாநில அரசு ஊழியர்களுக்கும் மத்திய அரசு ஊழியர்களுக்கும் ஒரே பொது நிதியை ஏற்படுத்தி அவற்றிலிருந்து இருவருக்கும் சம ஊதியம் தருவதற்கான ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இன்றைய உள்துறை அமைச்சர் பிரம்மானந்த ரெட்டியின் தலைமையில் அமைக்கப்பட்ட ஆறுவது நிதிக்குழு செய்த பரிந்துரையை மத்திய அரசு புறக்கணித்தது சரியானதல்ல,

"மாநில அரசு ஊழியர்களுக்கான அகவிலைப்படியை முழுமையாகத் தருவதற்கு மத்திய அரசிடம் மேலும் மேலும் வலியுறுத்த வேண்டுமென்பதை மாநில அரசுக்கு இந்த அகவிலைப்படிக்குழு மிகத்தெளிவாக வலியுறுத்துகிறது. இந்த விஷயத்தில் நம்முடைய தமிழக அரசும், ஆளும் கட்சியும் இன்னும் கொஞ்சம் அதிக சிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென் துதான் பொதுவான கருத்து. பம்பாயிலிருந்து வெளிவரும் ஜனதா என்ற ஆங்கிலவார ஏடு கூட இதைமிகத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறது.

சேலம் இரும்பாலைக்காக, நாகர்கோயில் ரயில் பாதைக் காக எழுச்சி நாள் நடத்துகிற ஆளும் கட்சி மாநில அரசு ஊழியர்களுக்கு சமவேலைக்கு சம ஊதியம் தருவதற்காக மத்திய அரசை பெரியஅளவில்இது வரை நிர்ப்பந்திக்கவில்லை என்பது சிந்திக்கத் தக்கதே. மாநில அரசு ஊழியர்களில் 80 சதவிகிதத்தினர் 500க்குக் குறைவாகத் தான் சம்பளம் பெறுகிறார்கள், அத்தகைய ஊழியர்களுக்கு ஏதோ சலுகை காட்டுவது போல அகவிலைப்படிக் குழு பக்கம் 7', முதல் 81 ஆகியவற்றில் செய்திருக்கிற வ தங்கள் எல்லாம் நிதித் துறையை திருப்தி டுத்தவே தவிர நீதியானதல்ல. அதை நிலையானதல்ல என்பதையும் என். ஜி. ஓ யூனியனும் அதனுடைய தோழமைச் சங்கங்களும் தங்களுடைய போராட்டத்தின் மூலம் அடியோடு மாற்றி விட்டன. எனவே இதைப்பற்றி எல்லாம் தெளிவாக விவாதிக்க வேண்டிய அவசியம் இப்போதில்லை.

2.59 லட்சம் ஊழியர்கள் மாதம் சராசரியாக ரூ. 227 தான் ஊதியம் பெறுகிறார்கள். அதேப்போல 1.8 லட்சம் ஊழியர்கள் மாதம் சராசரியாக 271 தான் ஊதியம் பெறுகிறார்கள், என்று புள்ளி விவரங்கள் தான் இந்தப் பக்கங் களில் நமக்கு கிடைத்திருக்கிற உபயோகமான குறிப்பு.

ஒவ்வொரு முறையும் மத்திய அரசு தனது ஊழியர்களுக்கு அகவிலைப்படி உயர்வை கொடுக்கும்போது குறைந்த பட்சம் ரூபாய் 12ம் அதிக பட்சம் ரூபாய் 27ம் கொடுத்தது என்பதை அகவிலைப் படிக் குழுவிலே இருக்கிறவர்கள் மறந்து விட்டார்களா அல்லது மறைக்கிறார்களா என்கிற கோபம் நமக்குப் பக்கம் 79ஐ படிக்கிற போது வருகிறது.

சென்னை, மதுரை மாநகராட்சிகளிலும், நகராட்சிகளிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும், நகரப் பஞ்சாயத்துக்களிலும் பணி ஆற்றிக் கொண்டிருக்கிற 74 ஆயிரம் ஊழியர்களுக்குக்கூட அகவிலைப்படிக் குழுவின் அறிக்கை அமுலாக்கப்படும் என்பதை இந்தக் கமிட்டி கூறியிருக்கிறது. 500 ரூபாய்க்குக்கீழ் சம்பளம் வாங்குகிற ஊழியர்களுக்கு கட்டாய சேமிப்புத் திட்டப்படி 50 சதவிகிதம் அகவிலைப் படியை பிடித்துக்கொள்ள வேண்டுமென்பதை நிறுத்தி வைக்குமாறு மத்திய அரசை இந்தக் குழு கேட்டுக்கொண்டிருக்கிறது. ஆனால் எத்தனையோ தொழிற் சங்கங்கள் திறமையாக, கட்டுப்பாடாக இயக்கங்களை, ஆர்ப்பாட்டங்களை நடத்திய பிறகும் செவிமடுக்காத மத்திய அரசு இக் குழுவினுடைய குரலையும் செவிமடுக்கவில்லை.

**விளம்பரம்;**

மாநில அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி அளிக்கிற போது பத்திரிக்கைகளில் பெரிய அளவுக்கு விளம்பரங்கள் செய்வது தவிர்க்கப்பட வேண்டுமென இக்குழு பரிந்துரை செய்தது. ஆனால் 10--.—75லும், 1—3—75லும், அகவிலைப் படி உயர்வுகள் அளிக்கப்பட்ட போதும் வழக்கமான பெரிய விளம்பரங்கள் பத்திரிக்கைகளில் வந்ததை யாரும் தடுத்து நிறுத்தவில்லை. எனவே, அந்த அம்சத்தில் குழுவினுடைய பரிந்துரை பலன் அளிக்காது போயிற்று.

அகவிலைப்படி போன்ற உத்தரவுகள் வருகிறபோது நிதித்துறை ஒரு உத்தரவை போடுவதும், பிறகு அதே உத்தரவை கல்வித் துறை போடுவதும் ஊரக வளர்ச்சித் துறை தனியே உத்தரவு போடுவதும், தவிர்க்கப்படவேண்டு மென்று பக்கம் 92 ல் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் சேலம் திருச்சிக்கு நகர ஈட்டுப்படிகள் அளிக்கப்படும் போதும் வீட்டு வாடகை உயர்வு அளிக்கப்படுகிறபோதும் பழைய முறைதான் பின்பற்றப்பட்டு வருகிறது என்பதை நாம் வருத்தத்துடன் சுட்டிக் காட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம்

ஸ்காலர்சிப்,

சமுதாயத்தில் பின்தங்கிய வகுப்பினர்களுக்கு தற்போது உபகாரச் சம்பளங்கள் வழங்குகிற போது மொத்த ஊதியத்தைக் கணக்கில் கொண்டு தான் வழங்கப்படுகிறது. இந்த ஆண்டு உதவி நிதி பெறுபவர், ஒரு அகவிலைப்படி உயர்வு பெற்று விட்டால் உடனே அடுத்த ஆண்டு பெற முடியாத சூழ்நிலைமை ஆயிரக்கணக்கான ஊழியர்களுக்கு ஏறுபட்டு இருக்கிறது. மேலும் அகவிலைப்படி என்பது ஏறிவிட்ட விலைவாசி உயர்வை ஈடுகட்ட அளிக்கப்படுகிற தொகை தான் எனவே உபகாரச் சம்பளங்களுக்கு விண்ணப்பம் அளிக்கிற போது அகவிலைப்படியை கணக்கிலே எடுத்துக் கொள்ள வேண்டாமென்று சிவசுப்ரமணியம்குழு பரிந்துரைசெய்திருக்கிறது. அரசு இதற்கான உத்தரவை மிக விரைவில் பிறப்பிக்கும் என நம்புகிறோம்,

அவசிய உணவுப் பொருள்களைத் தருதல்:

பல சங்கங்களும், பெரிய பொருளாதார நிபுணர்களும் கிராக்கி உயர்வுக்குப் பதிலாக உணவு மற்றும் அவசியமான பொருள்களை நிர்ணய விலைக்கு அளிக்கமுடியுமா என்பதைப் பற்றி யோசனை கூறி இருக்கிறார்கள். அகவிலைப்படி உயர்வு தந்து அதனால் பண வீக்கம் ஏற்படுவதைத் தடுக்கவும் இது

பயன்படும்என்றுசில நிபுணர்கள் கூறிஇருக்கிறார்கள். பார்ப்பதற்குத் திட்டம் கவர்ச்சிகர மானதாக தென்பட்டாலும் இதில் சில குறைபாடுகள் இருப்பதாக சிவசு ரமணியம் குழு கருதி இருக்கிறது.

எது அத்தியாவசிய உணவுப் பொருள்கள் என்று நிர்ணயிப்பதும் இதை வினியோகமாக்க எப்படிப்பட்ட நிருவாகத்தை உருவாக்குவது என்பதும் பிரச்சினைகள் என்று குழு கூறுகிறது, துணி தேவையான ஒன்று என அரசு நிர்ணயிக்கும் பட்சத்தில் 7 லட்சம் ஊழியர்களுடைய எண்ணங்களையும் பூர்த்தி செய்யக்கூடிய விதத்தில் ஒரே வகையான துணிகளை விநியோகிப்பது என்பது சிரமமானது என்றும் அது கூறுகிறது. உணவுப் பொருள்களை மாத்திரம் குறைந்த விலையில் விநியோகம் செய்வதென்று அரசு முடிவு எடுக்குமானால் மற்ற விலைவாசி உயர்வை ஈடுகட்ட மறுபடியும் என் ஜி ஒக்கள் அகவிலைப்படி உயர்வு கேட்பார்களே என்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. உணவுப் பொருள்களில் கூட விலை குறைவானதை விரும்புகிறவர்கள், தரம் குறைந்ததை விரும்புகிறவர்கள் என வேறுபடலாம் எனவும் எச்சரிக்கிறது, நகரங்களில் மாத்திரம் மட்டுமல்லாது கிராமங்களில் இருக்கின்ற எல்லா ஊழியர்களுக்கும் ஏற்றதொரு விநியோக முறையை எப்படி ஏற்படுத்துவது என்பதைப் பற்றியும் குழு கவலை தெரிவிக்கிறது,

இவ்வளவு குழப்பங்களையும் சரி செய்தால்கூட அரசு தன்னுடைய சொந்த ஊழியர்களுக்கு மட்டும் இப்படி ஒரு சலுகையைத் தருவது சரிதானா என்கிற கேள்வி மக்கள் மத்தியில் எழும்பாதா என்றும் அகவிலைப்படிக் குழு அங்கலாய்க்கிறது. இத்தனைக் காரணங்களையும் கூறி இந்த யோசனை இயலாதது, முடியாதது என்று குழுவால் நிராகரிக்கப்பட்டுவிட்டது.

மேலே கூறப்பட்ட குழப்பமான சூழ்நிலைகள் அரசு ஊழியர்கள் மத்தியில் உள்ளவைதான் என்றாலும் பரீட்சார்த்தமாக சில திட்டங்களை சில காலத்திற்காவது நடைமுறையில் கொண்டுவர அரசு முடிவு எடுக்க வேண்டியது தேவையான ஒன்று. பொது மக்களுக்கென தனி உணவுப் பொருள் வழங்கு கழகம் இருப்பது போல அரசு ஊழியர்களுக்கென ஒரு தனிக் கழகம் ஏற்படுத்தி செயல் முறைகளைப் பார்க்க வேண்டியது முக்கியமான ஒன்றாகும்.

## உணவுப் பொருள் வாங்க முன் பணம்

குஜராத் மாநிலத்தில் அரசு ஊழியர்கள் உணவுப் பொருள் வாங்குவதற்கு முன் பணம் தரப்படுகிறது. உணவுப் பொருள்களுடைய விலை ஏறுவதாக இருக்கும்போது அதை வாங்கி வைத்துக்கொள்ள மொத்தமாக முன் பணம் அளிப்பதன் மூலம் சில பிரச்சினைகளைத் தீர்க்க முடிகிறது. இந்தக் கோரிக்கையை தஞ்சை மாநில மாநாட்டில்கூட நம் முதல்வரிடம் வைத்தோம்.

அகவிலைப்படிக் குழு குஜராத் மாநிலத்திலிருந்து இது குறித்து சில தகவல்களைக் கோரிப் பெற்றிருக்கிறார்கள். 850 ரூபாய்க்குக் கீழ் குறைந்த சம்பளம் வாங்குகிற மாநில அரசு ஊழியர்களுக்கு 2 மாத சம்பளமோ அல்லது 500 ரூபாயோ எது குறைவோ அதை அந்த மாநில அரசு வழங்கி வருகிறது. இது 10 தவணைகளில் பிடிக்கப்படுகிறது. முன் பணம் அனுமதிக்கப்பட்டவுடன் 2 மாத காலத்திற்குள் உணவுப் பொருள் வழங்கியதற்கான ரசீது காட்டப்பட வேண்டுமென்ற நிபந்தனை அங்கே விதிக்கப்பட்டிருக்கிறது.

"This scheme is really a great help to Government employees, in that it enables them to purchase foodgrains at favourable prices" என்று அகவிலைப்படிக்குழு பரிந்துரை செய்திருக்கிறது.

அகவிலைப்படிக்குழு பரிந்துரை செய்து 4 மாதங்களுக்கு மேல் ஆகியும் இது குறித்து அரசாங்கம் தன்னுடைய முடிவை அறிவிக்கவில்லை மிக விரைவில் இந்த திட்டத்தைச் செயல்படுத்த வேண்டியது அவசியமாகும்,

**சிக்கனம் :**

முதலாவது ஊதியக் குழு பெரிய அதிகாரிகளுக்கு இருக்கின்ற கடைநிலை ஊழியர்களை குறைத்துக்கொண்டால் அவர்களுக்குத் தனி அலவன்ஸ் தரலாம் என்று பரிந்துரை செய்தது, அந்தத் திட்டம் இப்போது நடைமுறையிலே இருக்கிறது,

ஆனால் பல அதிகாரிகள் தனி அலவன்ஸையும் பெற்றுவிட்டு அலுவலங்களிலே இருக்கிற கடைநிலை ஊழியர்களையும் வீட்டு வேலைக்கு பயன்படுத்திக் கொள்கிறார்கள், எனவே நடைமுறையில் அது ஒரு மோசடித் திட்டமாக இருக்கிறது, இந்த அகவிலைப்படிக்குழு அலுவலகங்களிலே இருக்கிற கடைநிலை ஊழியர்களை குறைத்துக்கொண்டால் எந்தப் பிரிவு குறைத்துக் கொள்ளுகிறதோ அந்தப் பிரிவுக்கு மொத்தமாக மாதத்திற்கு 75 ரூபாய் வழங்கி அதை எல்லா ஊழியர்களும் பங்குப் போட்டுக் கொள்ளலாம் என்று கூறுகிறது, இந்த திட்டமும் ஒரு அர்த்தமில்லாத திட்டம் தான்,

மொத்தத்தில் அகவிலைப்படிக் குழு அறிக்கையானது எந்த லட்சியங்களை எந்த நோக்கங்களைப் பிரதிபலிக்க வேண்டுமோ அதைப் பிரதிபலிக்கவில்லை, மிக உயர்ந்த நிர்வாகப் பொறுப்பிலே இருக்கிற அதிகாரிகள் இதைவிட நல்ல பரிந்துரைகளை, தெளிவான அறிக்கையை தந்து இருக்கலாம் என்று நம்புகிறோம், விரும்புகிறோம்.

# பிற மாநிலங்களில் அரசு ஊழியர்கள் இயக்கங்கள்

தமிழ்நாட்டில் அரசு ஊழியர் இயக்கத்தை நடத்திச் செல்கிற நாம் பிற மாநிலங்களில் அரசு ஊழியர் இயக்கங்கள் எப்படிஎப்படி இயங்குகின்றன என்பதைப் புரிந்துகொள்வது அவசியம். பிற மாநிலங்களில் இருக்கிற எழுச்சி, உணர்ச்சி ஆர்வம் இவைகளை நாமும் பெற அவை துணை செய்யும் சில மாநிலங்கள் எவ்வளவு பெரிய போராட்டங்களை சந்தித்திருக்கிறது — அதிலும் சில மாநிலங்கள் போராட்ட உணர்வுகளைப் பெற்றும் — உரிமைக் குரல் கொடுத்தும் உரிய பலனைப் பெற முடியவில்லையே என்று ஏங்குகிறது.

இவைகளையெல்லாம் விமர்சனப் பார்வையுடன் நாம் அணுகுவது நல்லது. வேலை நிறுத்தம் நடத்தினால்தான் போராட்டம் என்பதில்லை. அப்படிப் பார்க்கப்போனால் 1947 ல் இந்தியாவிலேயே துணிந்து மாநில அரசுஊழியர்கள் வேலை நிறுத்தில் ஈடுபட்டது தமிழ் நாட்டில்தான். ஆனால் வேலை நிறுத்தம் நடத்துவதற்கான பலம், உரம் இவற்றை நமது சமுதாயம் பெற வேண்டும். அதற்கு இந்த கட்டுரை துணை நிற்கும் என்றும் நம்புகிறேன்.

## 1. ராஜஸ்தான்

ராஜஸ்தானில் மாநில அரசு ஊழியர் கூட்டமைப்பு மிகப்பலம் பொருந்திய அமைப்பாக செயல்படுகிறது. 1967-1970-1972ம் ஆண்டுகளில் அரசு ஊழியர் நலனுக்கென சிறப்பாகவும், அழுத்தப்பட்ட உழைக்கும் மக்கள் சமுதாயத் திறகென பொதுவாகவும் அந்த அமைப்பு செயல்பட்ட விதம் சிறப்பானது. வேலை நிறுத்தங்கள்—போராட்டங்கள் ஆள்

வோரின் மிரட்டல் அத்தனையையும் இந்த ஐந்து ஆண்டுகளில் பலமுறை ராஜஸ்தான் மாநில ஊழியர்கள் சந்தித்திருக்கின்றனர். ஆயிரத்திற்கு மேற்பட்ட என். ஜி. ஓக்கள் ஒரே சமயத்தில் சிறைச்சாலை சென்று போராடிய வரலாறும் உண்டு.

அங்கேயும் ஊதியக் குறைப்பாடுகளைக் களைய தனிநபர் முழு அமைக்கப்பட்டிருக்கிறது. முதலமைச்சர், தலைமைச் செயலாளர், நிதிக்கமிஷனர் ஒரு புறமும் யூனியன் பிரதிநிதிகள் 10 பேர் மறுபுறமுமாக விவாதித்து ஒப்பந்தத்தில் அனைவரும் கையொப்பமிட்ட விவரம் அரசு ஊழியர் இயக்கத்துக்குப் பெருமை அளிக்கிறது,

பீஷான் சிங் ஷேக்வாட் தலைவராகவும், குல்தீப் சிங் பொதுச்செயலாளராகவும் உள்ள ராஜஸ்தான் மாநில அரசு ஊழியர் கூட்டமைப்புக்கு24மாவட்டத்துக்குதிறமைசாலியான அமைப்பாளர்கள் உள்ளனர். 18 சங்கங்கள் இதனோடு இணைந்திருக்கின்றன. ஆனால் இங்கே அகவிலைப்படியை இன்னும் அடிப்படைச்சம்பளத்தோடு இணைக்காமல் இருக்கிறார்கள்.

இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை 30 நாள் ஈட்டிய விடுப்பில் சென்றால் 30 நாள் சரண் செய்து பணம் பெறும் அரசு ஆணை ராஜஸ்தானில் 12—9—74-ல் தான் அமுலுக்கு வந்தது. 1—9—63 முதல் 31—3—73 வரை நியமிக்கப்பட்ட தற்காலீக ஊழியர் அனைவரும் நிரந்தரம் செய்யப்பட்டனர்,

உதவியாளர் பதவிகளுக்கு 1974 ஆகஸ்ட் முதல் நேரடி நியமனங்கள் கிடையாது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது. அரசு ஊழியர்களுக்கென கட்டப்பட்ட வீடுகளை ஒதுக்கீடு செய்யும் கமிட்டியில் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களின் பிரதிநிதிகளுக்கு இடமளிக்கப்பட்டது. சங்க நிர்வாகிகளுக்கு 10 நாள் சிறப்பு சில்லறை விடுப்பு தரப்பட்டுள்ளது.

2. ஒரிஸா

ஒரிஸாவில் 1·50 லட்சம் அரசு ஊழியர்களும் ஒரிஸா மாநில என். ஜி. ஓ. ஒருங்கிணைப்புக்குழு'வின் கீழ் ஓரணியெனத் திரண்டு பணியாற்றுகின்றனர். 1956 ம் ஆண்டு இந்தக் குழு தோன்றுவதற்கு முன் 44 பல்வேறுபட்ட அரசு ஊழியர் சங்கங்கள் தனித்தனியே அங்கீகரிப்பட்டு இயங்கிக் கொண்டிருந்தன, பொதுக் கோரிக்கைகளுக்காகவும் சமுதாயத்தின் ஒட்டுமொத்தமான நன்மைகளுக்காகவும் அவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து பாடுபடத் தொடங்கினர். இப்போது 58 அமைப்புகள் இந்த அணியில் தீவிரமாகப் பங்கு கொள்கின்றனர்.

1961 க்குப் பிறகு ஒரிஸாவில் ஊதிய விகிதங்களில் எந்த மாறுதலும் செய்யாததையும், மத்திய அரசு ஊழியர்களுக்கிணையான அகவிலைப்படி உயர்வையும் 1966 ல் நடைபெற்ற போராட்டத்தின் மூலம் அவர்களால் பெற முடிந்தது, ஊதியக்குழு முடிவுகள் வெளிவர மூன்றாண்டுகாலம் அவர்கள் காத்திருக்க நேர்ந்தது. மூன்றாண்டுகாலம் பொறுத்திருந்த பின்னரும் சரியான நீதி பெறமுடியாத காரணத்தால் 1966 முதல் 1973 வரை மத்திய அரசு உயர்த்தும் அகவிலைப் படியைப் பெற்றனரே தவிர—அடிப்படை ஊதிய விகிதங்களை மத்திய அரசின் மூன்றாவது ஊதியக்குழு முடிவு தெரிந்த பின்னரே பெற்றுக்கொள்ளலாம் என்று ஒப்பம் தந்தனர்,

ஊழியர்களின் கோரிக்கைகளை 41 அம்சப்பிரகடனமாக எதிரொலித்து செயல்படும் ஒருங்கிணைப்புக்குழுவை அரசு தானே அங்கீகரித்திருப்பது ஒரு பெரும் செயல். வெள்ளமும், புயலும் அந்த மாநிலத்தை சீர்குலைத்தபோது கோரிக்கைகளை ஒத்திவைத்துவிட்டு கடமை உணர்வோடு செயல்பட்ட அரசு ஊழியர்களையும் மறக்கமுடியாது.

அதனால்தான் 1973 மார்ச் 28 முதல் 4 நாட்கள் 'ஒட்டு மொத்த விடுப்பு' இயக்கம் 100 க்கு 100 வெற்றியைத்

தந்தது. இங்கேயும் அகவிலைப்படி ஊதியத்துடன் இணைக்கத் படவில்லை. ஊழியர்களை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத் துக்கு அனுவசியமாக மாற்றுவதற்குக் கடுமையானத் தடைகள் இருப்பதாக நிர்வாகிகள் கூறுகிறார்கள். 'ஜாயிண்ட சர்வீஸ் கவுன்சில்' இங்கும் சிறப்பாக நடைபெறுகிறது.

## 3. அஸ்ஸாம்

1964 ல் அஸ்ஸாம் மாநிலத்தில் ஊதியக்குழு அமைக்கப் பட்டபோதுஅதில் ஏற்பட்ட குறைபாடுகளைக் கண்டுகொதித் தெழுந்த அரசு ஊழியர்கள் தொடர்ந்து 43 நாட்கள் எந்த வேலையையும் செய்யாது வேலை மறுப்பு இயக்கம் நடத் தினர் 1965-ம் ஆண்டில், அதன் பின்னர்தான் பொதுக் கோரிக்கைகளுக்காக எல்லா அரசுஊழியர்களையும் ஓரணியில் திரட்டுவது அவசியம் என்று உணரப்பட்டது. அதன் விளைவாக 1966-ம் ஆண்டில் ஒருங்கிணைப்புக்குழு ஒன்று. அஸ்ஸாம் அரசு ஊழியர்களுக்கென அமைக்கப்பட்டது 1967-லும், 1968-லும் அகவிலைப்படி உயர்வுபெற இந்த ஒருங் கிணைப்புக் குழு எடுத்த முயற்சிகள் நல்ல வெற்றி பெற்றன.

1970 ல் ஊதியக்குழு அமைக்க இந்த ஒருங்கிணைப்புக் குழு நல்ல பல முயற்சிகளை மேற்கொண்டன. 1971 ஆகஸ்ட் டில் ஊதியக்குழு அமைக்கப்பட்டது, முடிவுகள் விரைவில் எதிர்பார்க்கப்படுகின்றன.

அஸ்ஸாம் மாநில அரசு ஊழியர்கள் ஒருங்கிணைப்புக் குழுவில் 64,000 ஊழியர்களை உள்ளடக்கிய 29 சங்கங்கள் சேர்ந்திருக்கின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும், கோட்டத் திலும் இதற்குக் கிளைகள் இருக்கின்றன.

## 4. உத்திர பிரதேசம்

உத்திரபிரதேசத்தில் அரசு ஊழியர் கூட்டு கவுன்சில் 5 இலட்சத்து எண்பதினாயிரம் ஊழியர்களின் ஏகப்பிரதி

நிதியாய் செயல்படுகிறது. அங்குள்ள 54 மாவட்டங்களிலும் இதன் துணை அமைப்புகள் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றன. 1966 ம் ஆண்டு பிப்ரவரி முதல் தேதியிலிருந்து ஒரு மாதகாலம் அவர்கள் நடத்திய இயக்கம் தான் பெரிய எழுச்சியை முதன் முதலில் ஏற்படுத்தியது. முதல் தேதி சம்பளம் வாங்க மறுத்தல்–அலுவலகங்களின் முன்பு தினந்தோறும் ஊழியர் ஆர்ப்பாட்டம் – கறுப்பு பேட்ஜ்கள் அணித்து வேலைக்குச் செல்லுதல் இவ்வாறெல்லாம் நேரடி நடவடிக்கைகள் மூலம் தங்கள் கோரிக்கைகளை வற்புறுத்தத் தொடங்கினர். கடைநிலை ஊழியர்கள், ஆசிரியர்கள் - உள்ளாட்சித் துறை ஊழியர் உட்பட எல்லோரும் இந்த இயக்கத்தில் முக்கிய பங்கெடுத்துக்கொண்டது குறிப்பிடத்தக்கது

1965-ம் ஆண்டு என். ஜி. ஓ.க்கள் ஊர்வலத்தைத் தடை செய்ய உத்திரபிரதேச அரசாங்கம் 144 தடை உத்தரவைப் போட்டது. அதை மீறினர்கள் என்பதற்காக 24 ஊழியர் தலைவர்கள் கைது செய்யப்பட்டார்கள். ஆனால் அவர்களை விடுதலை செய்தால் தான் தாங்களும் கலைந்துபோவோம் என்று ஆயிரக்கணக்கான என். ஜி. ஓ. க்கள் கூறவே கைதான ஆறு மணி நேரத்திற்குள் அனைவரும் விடுதலை செய்ப் பட்டனர்.

1966 ல் உத்திரபிரதேச அரசு ஊழியர்கள் 7 நாள் வேலை நிறுத்தம் செய்தனர். ஜூலை 14 ல் ஊர்வலம் சென்ற என். ஜி. ஓ: க்கள் முரட்டுத்தனமாக போலீசாரால் தாக்கப் பட்டனர். நீதிவிசாரணை நடத்தப்படும், கோரிக்கைகளை பரிசீலிக்கப்படும், பழிவாங்கும் நடவடிக்கைகளே இருக்காது என்று அரசு உறுதியளித்ததன் பேரில் ஜூலை 23 அன்று வேலை நிறுத்தம் வாபஸ் பெறப்பட்டது. சில நாட்களுக்குள் ரூ. 5 – ம் ரூ 8 – ம் அகவிலைப்படி உயர்வு அளிக்கப்பட்டதலும், ஒப்புக்கொண்டபடி நீதி விசாரணைக்கு

அரசு உத்தரவு போடவில்லை; அதனால் ஊழியர்கள் மத்தியில் அதிருப்தி வளர்ந்தது.

உத்திரபிரதேசத்தைச் சேர்ந்த 8,000 ஊழியர்கள் பல மாவட்டங்களில் இருந்தும் திரண்டு அக்டோபர் 26ல் புது டெல்லியில் பிரதமர் அலுவலகத்தின் முன்பு கோரிக்கை முழக்கம் எழுப்பினர். பிரதமரும் வெளியே வந்து ஊழியர்களின் முன்பு பேசி கோரிக்கை மனுவை ஏற்றுக் கொண்டார்.

அதைத் தொடர்ந்து ஒருநாள் வேலை நிறுத்தம் செய்யத் தயாராகி பிரச்சாரத்தில் ஈடுபட்ட நூற்றுக்கணக்கான தலைவர்களை உத்திரப்பிரதேச அரசு கைது செய்யவே போராட்டம் மும்முரமாகியது: 7—12—66 லிருந்து 6—2 – 67 வரை 62 நாள் வேலை நிறுத்தம் நடைபெற்றது. மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக அகவிலைப்படி உயர்வு தர தனி நபர் குழு அமைத்துப் பரிசீலனை செய்யப்படும் – பழி வாங்கப்படமாட்டார் எவரும் – ஆட்குறைப்பு கிடையாது என மாநில முதல்வர் எழுத்து மூலமாக எழுதித் தந்த பிறகு தான் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது. இந்த 62 நாள் போராட்டத்தில் 10 ஆயிரம் ஊழியர்கள் கைது செய்யப் பட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

1967 பொதுத்தேர்தல் முடிந்து சி. பி. குப்தா மார்ச் 14 அன்று முதலமைச்சரானார். அன்று மாலையே மத்திய அரசு ஊழியருக்கிருப்பதுபோல் அகவிலைப்படி தரப்படும். என்று பொதுமேடையிலேயே அவர் அறிவித்தார். ஆனால் மார்ச் 30 ந் தேதி சரன் சிங் முதலமைச்சரானவுடன் குப்தா சொன்னதை ஏற்றுக்கொள்ள மறுத்தார்,

ஆயிரக்கணக்கானவர்கள் ஆட்குறைப்பும் செய்யப்பட் டனர். இதைக் கண்டித்து ஊர்வலம் நடத்தியமைக்காக

பெண் என். ஜி. ஓ. க்கள் உட்பட அனைவர் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டது. இந்த அநீதியைக் கண்டித்துத் தொடர் உண்ணுவிரதம் இருந்தமைக்காக தடுப்புக்காவல் சட்டப்படி பல என். ஜி. ஓ. க்கள் கைது செய்யப்பட்டு ஆறு மாதம் முதல் 10 மாதம் வரை சிறையில் அடைக்கப்பட்டு வேலையைவிட்டும் நீக்கப்பட்டனர்.

இதற்குப்பின் ஊழியர் இயக்கம் புதுவேகம் பெற்றது. முன்னணி வீரர்கள் 54 மாவட்டங்களிலும் தீவிர சுற்றுப் பயணம் நடத்தி அரசு ஊழியர் கூட்டமைப்பை வலுப் படுத்த முயன்றனர். இன்னொரு பக்கத்தில் பழிவாங்கும் நடவடிக்கைகளை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு தொடரப் பட்டது. பழிவாங்கப்பட்ட ஊழியர் குடும்பங்களுக்கு உதவ நிதி திரட்டப்பட்டது இதற்கிடையில் மத்திய அரசு ஊழியர் களுக்கு அவ்வப்போது அளிக்கப்படும் அகவிலைப்படி உயர்வு இம்மாநில அரசு ஊழியர்களுக்கும் அளிக்கப்பட்டது.

1969 நவம்பரில் உத்தபிரதேச முதல்வர் சி பி குப்தா வீட்டின் முன்னால் அரசு ஊழியர்கள் தொடர் உண்ணுவிரதம் இருக்கத் தொடங்கினர், அதிகாரிகள் 144 தடை உத்தரவு போட்டு முதல் பிரிவினரைக் கைது செய்தனர். மறுநாளி லிருந்து 'மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை - எமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை' என்று தடை உத்தரவை மீறி நூற்றுக் கணக்கானோர் கைதர்யினர், ஊழியர் தலைவர்களை விடுதலை செய்து அவகளோடு பேச்சுவார்த்தை நடத்த அரசு முன்வந்தது, ஊதியக் குழுவொன்று நிறுவ தலைமைச் செயலாளர் ஒப்புக்கொண்டார், ஊதியக் குழுவும் அமைக்கப் பட்டது. ஆனால் திரும்பவும் 1970 ல் சுரண் சிங் முதலமைச் சராகி கமிஷனைக் கலைத்து மாநில அரசு ஊழியர்களின் நிரந் தரவிரோதி தான் என்பதை நிரூபித்துக்கொண்டார்,

கோரிக்கைகளை வலியுறுத்தி 1 லட்சம் பேர் கையொப்ப மிட்ட விண்ணப்பத்தினை மாநில முதல்வருக்கும், இந்தியப் பிரதமருக்கும் அளித்தனர், எல்லா மாவட்டத் தலைநகரங் களிலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றது, இதற்கு சிகரம் வைத்ததுபோல் 1970 செப்டம்பரில் லக்னோவில் பிரம்மாண் டமான ஆர்ப்பாட்டம் 144 தடை உத்தரவை மீறி நடை பெற்றது, பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதில் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்,

சில நாட்களுக்குப் பிறகு சரண் சிங் மாறி டி. என். சிங் முதலமைச்சரானார். ஆனால் அவரும் ஊழியர் விரோதப் போக்கிலேயே நடந்து கொண்டார், 1971 பிப்ரவரியில் இரண்டு நாள் ஒட்டு மொத்த விடுப்பை எல்லா அரசு ஊழி யர்களும் எடுக்கவேண்டிய கட்டாயத்திற்குத் துரத்தப்பட் டனர், இரண்டாம் நாளே இடைக்கால நிவாரணமாக ரூ. 10 எல்லா ஊழியர்களுக்கும் கிடைக்குமென அறிவிக்கப்பட்டது மற்ற கோரிக்கைகளும் பரிவுடன் கவனிக்கப்படுமென உறுதி தரப்பட்டது, ஊதியக் குழுவும் நிறுவப்பட்டது,

ஆனால் உபதேர்தல் ஒன்றில் தோற்றத்தின் விளைவாக டி, என், சிங் ராஜினமா செய்தார், 4—4—71 ல் கமலபதி திரிபாதி உத்தரபிரதேச முதல்வரானார்,

4 ஆண்டுக்கு முன்பு சரண் சிங் அரசால் டிஸ்மிஸ் செய் யப்பட்டவர்களை யெல்லாம் புதிய அரசு வேலையில் அமர்த் தியது. புதியதோர் ஊதியக்குழுவையும் நிறுவியது. ஆசிரியர்-அரசு ஊழியர் ஒருங்கிணைப்புக் குழு இரண்டுநாள் ஒட்டு மொத்தமான சில்லறை விடுப்பு எடுக்க வேண்டுகோள் விடுத்தது, 12 லட்சம் ஊழியர்களை உள்ளடக்கிய இந்த ஒருங்கிணைப்புக் குழுவின் வேண்டுகோள் நல்ல பலனளித்தது இதைத் தொடர்ந்து மத்திய அரசு ஊழியர்களுக்கு சமமாக இடைக்கால நிவாரணம் உத்தரபிரதேச மாநில அரசுஊழியர் கட்கும் வழங்கப்பட்டது.

இப்பொழுது 108 வகையான சம்பள விகிதங்கள் உள்ளதை 38 வகையாகக் குறைக்க புதிய ஊதியக்குழு பரிந்துரைசெய்துள்ளது. கடைநிலை ஊழியர்களுக்குள்ள ஊதியம் 55—75 ரூபாய்களில் இருந்து ரூ 165—215 ஆக உயர்த்தப் பட்டுள்ளது, இவர்களுக்கு அகவிலைப்படி ரூ, 14 ஆக நிர்ணயிக்கப்பட்டது.

மூன்றும் வகுப்பு ஊழியர்களுள் கடைசிப் பிரிவினருக்கு ரூ, 100-180என்றிருந்த ஊதியம் ரூ, 200-300 ஆகவும் செகரட்டேரியட்டில் உள்ள உதவியாளர்களுக்கு இருந்த ரூ, 200-450 என்பது ரூ, 350-700 ஆகவும் மாற்றியமைக்கப் பட்டது, கான்பூர், வாரணசி, ஆக்ரா, அலகாபாத், லக்னோ ஆகிய இடங்களில் 5 சதவீதம் நகர ஈட்டுப்படி அளிக்கப்படும் இது அதிக பட்சம் ரூ, 25 தான் அளிக்கப்படும்,

## 5. மைசூர்

மைசூர் மாநில என் ஜி ஓ யூனியன் 1920 ம் ஆண்டில் அமைக்கப்பட்டது, இதனுடைய பொன்விழா 19—6—71 ல் சிறப்புறக் கொண்டாடப்பட்டது, மைசூரில் உள்ள 2,75 லட்சம் அரசு ஊழியர்நலன்களுக்காக இந்த யூனியன் பாடுபடுகிறது. தொழிற் சங்கத் தலைவர்களான எஸ். வெங்கட்ராவ், ஷியாம் சுந்தர் ஷராப், எம், எஸ். கிருஷ்ணன் போன்றவர்கள் மைசூர் மாநில என். ஜி. ஓ, க்களுக்காக போராடி சிறை சென்றதெல்லாம் குறிப்பிடத்தக்க ஒன்றாகும், மேரி தவசியா என்ற பெண்மணி இம்மாநில என், ஜி, ஓ, சங்கத் தலைவராக இருந்து நடத்திய வீரம் செறிந்த போராட்டம் ஓர் தியாகவரலாற்றின் சுவையான கதையாகும்.

1—11—70 முதல் மத்திய அரசு ஊழியர்களுக்கிணையாக வீட்டு வாடகைப் படியும் நகர ஈட்டுப்படியும் இவர்கள் பெற்று வருகிறார்கள், வேலை தேடித்தரும் அலுவலகங்களின்

மூலமாக பணியிலமர்த்தப்பட்ட 2000 ஊழியர்கள் இன்னும் தற்காலிகமாக இருந்து வருகிறார்கள். மைசூரில் இவர்களை நிரந்தரம் செய்ய என் ஜி ஓ யூனி ன் போராடி வருகிறது,

கேசவமூர்த்தியும் ஸ்ரீபதியும் தன்னிகரற்ற தலைவர்களாக யூனியனை அங்கே வளர்த்துவ ருகின்றனர்.

## 6. பீகார்

2. 25 லட்சம் அரசு ஊழியர்களை உள்ளடக்கிய 65 சங் கங்களின் கூட்டமைப்பாக பீகார் என். ஜி. ஓ. கூட்டமைப்பு பணியாற்றி வருகிறது, இக்கூட்டமைப்பு வங்கியில் நிலைப் பணமாக ரூ. நாற்பதினாயிரத்தை வைத்துள்ளது.

1970 ல் மூன்றாவது ஊதிய திருத்தக் குழு ஒன்றை இம் மாநில அரசு நியமித்தது, 1972 ஆகஸ்டில் பெருங்கிளர்ச்சி நடத்திய பிறகு தான் இந்தக் கமிட்டி தன்னுடைய அறிக் கையை அரசுக்குக் கொடுத்தது. 1971 பிப்ரவரி 18 — 19 தேதிகளில் அடையாள வேலைநிறுத்தம், 1972 ஜூலை 11, 12 தேதிகளில் வேலை நிறுத்தம் இவையெல்லாம் கிளர்ச்சியின் முக்கியமான அம்சங்கள். 2-11-72 ல் கமிட்டியின் அறிக் கையை பீகார் மந்திரிசபை அங்கீகரித்தது. ஆனால் அந்த அறிக்கையின் படி விடுமுறை நாட்களைக் குறைத்தல், வேலை நேரத்தை அதிகரித்தல் ஆகியவற்றுக்காகவும் நியாயமான ஊதிய விகிதங்கள் தராமைக்கும் 8-12-72 லிருந்து வேலை நிறுத்தம் தொடங்கியது.

144 தடை உத்தரவு போடப்பட்டது, 6000 என். ஜி. ஓ. க்கள் கைது செய்யப்பட்டனர். 1000 ஊழியர்கள் சஸ் பெண்ட் செய்யப்பட்டனர் இறுதியாக 27 நாள் வேலை நிறுத்தம் நடை பெற்ற பிறகு முதலமைச்சர் தலையிட்டு சம ரசம் செய்துவைத்தார். வேலைநிறுத்தத்தில் கலந்துகொண்ட ஊழியர்கள் பழி வாங்கப் பட மாட்டார்கள் என்ற உறுதி

மொழி தரப்பட்டது. எல்லோருக்கும் ஒரு மாத ஊதியம் வழங்கப்பட்டது. 3 ஆண்டுகளுக்கு மேல் சர்வீஸ் உள்ளவர்களையெல்லாம் நிரந்தரம்செய்யவும் அரசு ஒப்புக்கொண்டது, மாதம் ரூ 10 |— மருத்துவப்படி தரவும் இணங்கியது, ஆனால் ஊதியக்குழு குறைபாடுகள் நீங்க இன்னமும் சரியான வழி வகை காணப்படவில்லை என்கிறார் பொதுச் செயலாளர் யோகேஸ் ர் கோப்.

## 7. மராட்டியம்

2 லட்சம் அரசு ஊழியர்கள் உள்ள இம்மாநிலத்தில் மராட்டிய மாநில அரசு ஊழியர் கூட்டமைப்பில் 75 ஆயிரம் பேர் உறுப்பினர்கவாக உள்ளனர் என்கிறார் பொதுச் செயலாளர் ஆர். ஜி. கார்னீக். மாவட்டக் கூட்டமைப்பிலும் இலாக்கா சங்கங்கள் இணைந்திருக்கின்றன, இலாக்கா சங்கங்கள் அமைக்கப் படாத துறைகளைச் சேர்ந்தத் தனிநபர்களும் உறுப்பினர்களாயிருக்கிறார்கள்.

கடைநிலை ஊழியர் சங்கம் மகா சம்மேளனத்துடன் இணைந்துள்ளது. மகா சம்மேளனத்துடன் இணையாத சில சங்கங்களும் உண்டு: அவற்றை உறுதியாகப் பின் பற்றுவோர் எவரும் இல்லை.

1970 ல் இங்கே என், ஜி. ஓ. க்கள் வேலை நிறுத்தம் நடத்திய போது 4 ஆயிரம் நபர்கள் புதிதாக நியமனம் செய்யப்பட்டனர். இவர்களைத் தொடர்ந்து வேலையில் வைத்துக் கொண்டு இவர்களை விட் பணியால் மூப்படைந்தவர்களை, 2000 பேரை ஆட் குறைப்பு என்ற பேரால் வீட்டுக்கனுப்பத் திட்டமிட்ட அரசாங்கத்தின் முயற்சி பலமுறையும் தோற்கடிக்கப்பட்டது.

1970 நவம்பரில் நடைபெற்ற வேலை நிறுத்தத்தில் அதிகம் கலந்துகொள்ளாதவர்கள் ஓவர்சீயர்களும், அமீனுக்களும்

கிராம அதிகாரிகளும் தான். இவர்கள் எண்ணிக்கை ஏறக் குறைய 20 ஆயிரம் இருக்கும். வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ளாதவர்களுக்கு இரண்டு கூடுதல் உயர்வு அளிக்க அரசு ஆணையிட்டது. இதை எதிர்த்து உறுதியாகப் போரா டியதன் விளைவாக இந்த ஆணையை அமுல்படுத்த முடியாமல் அரசு நீண்ட நாள் தயங்கியது,

இங்கே இளநிலை உதவியாளரின்—டைபிஸ்ட்களின் ஊதியம் ரூ. 115 — 4 — 135 — 5 — 160 இ. பி 5 — 185— 6 — 215 என்று உள்ளது. உதவியாளரின் ஊதியம் 190 — 10 — 290 இ. பி 15 — 410 — 20 — 450 என்று செகரட் டேரியட்டிலும், மற்ற இடங்களில் 200 — 10 — 290 — 15— 350 என்றும் உள்ளது,

1970 ல் ஏப்ரல் மாதத்தில் எல்லா என். ஜி. ஓ. க்களும் ஒட்டு மொத்தமாக சில்லரை விடுப்பு எடுத்தனர், நவம்பரில் 12 நாள் வேலை நிறுத்தம் நடைபெற்றது. அப்போது 1500 என் ஜி. ஓக்கள் கைது செய்யப்பட்டனர்; ஜாமீனில் விடுதலை செய்ய அனுமதி மறுக்கப்பட்டது, என். ஜி. ஓ காலனிகள் எல்லாம் போலீசாரால் சூறையிடப்பட்டன, வேலை நிறுத் தத்தில் கலந்து கொண்ட நர்ஸ்கள் எல்லாம் விடுதிகளில் இருந்து கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர்,

அதற்குப் பிறகு 1974 ம் ஆண்டு ஆட்சேப தினம், கோரிக்கை தினம், தர்ணா, சத்தியாக்கிரகம் எல்லாவற்றை யும் கையாண்டு தங்களுடைய கோரிக்கைகளில் வெற்றி பெறமுடியுமா என்று மராட்டிய மாநில அரசு ஊழியர்கள் முயற்சித்தனர். முடியவில்லை, அதற்குப் பின் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ஊழியர்கள் கையெழுத்துப் போட்டு மாநில சட்டசபைக்கு கோரிக்கை மனு சமர்ப்பிக்கப்பட்டது,

1973 மே மாதம் முதல் மத்திய அரசு ஊழியர்களுக்கும், மாநில அரசு ஊழியர்களுக்கும் அகவிலைப் படியில் வித்தியா

சம் மிக மிக அதிகரித்தது, 1975 ஏப்ரல் மாதம் இந்த வேறு பாடு 37 ரூபாயில் ஆரம்பித்து 225 ரூபாய் வரை வந்தது, 50 சதவீதத்திற்கு அதிகமான மராட்டிய அரசு ஊழியர்கள் ரூ. 225 ம் அதற்குக் குறைவாகவும் தான் மொத்த ஊதியம் பெற்று வந்தனர் 80 சதவிகித ஊழியர்கள் ரூ, 50 க்குக் குறைவாகத் தான் ஊதியம் பெற்று வந்தனர்'

50 ஆயிரத்திற்கு அதிகமான மக்கட் தொகையுள்ள ஊர் களில் தான் வீட்டு வாடகைப் படி கொடுக்கப்பட்டது, அதனால் 60 சதவிகித ஊழியர்கட்கு வீட்டு வாடகைப் படி மறுக் கப்பட்டது

மராட்டியத்தில் ஊழியர்கட்கு ஊழியப் பாதுகாப்பு இல்லாத நிலை. 2 ஆண்டு முதல் 20 ஆண்டு வரை சர்வீஸ் உள்ள 35 ஆயிரம் ஊழியர்கள் 1966 முதல் 1974 வரை வேலை நீக்கம் செய்யப்பட்டனர்:

இவற்றையெல்லாம் எதிர்த்துப் போராடிய ஊழியர் களுக்கு நீதி வழங்க மறுத்த அரசு 1970 வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ளாதவர்கட்கு இரண்டு ஊதிய உயர்வுகள் அளித்ததன் மூலம் 5 கோடி ரூபாய் செலவு செய்தது.

நிர்வாக சீர்திருத்தக் குழு அரசாங்க செலவில் 33 சத விகிதம் ஊழியர் சம்பளத்திற்காக செலவு செய்யலாம் என்று கூறியும் மராட்டியத்தில் 1974 ல் 20 சதவிகிதம் தான் அரசு செலவு செய்தது.

எனவே கோரிக்கைகளில் வெற்றி பெற 18—4—75 ல் மராட்டிய மாநில அரசு ஊழியர்கள் கட்டுப் பாடான முறையில் வேலை நிறுத்தத்தைத் தொடக்கினார்கள். 37 நாட் கள் நீடித்த இந்த வேலை நிறுத்தம் மராட்டிய மாநில அரசு ஊழியர்களின் ஒன்று பட்ட உணர்வுகளைச் சிறப்பாகப் பிரதி பலித்தது.

அரசு ஊழியர்கள் மூன்றரை லட்சம் பேர் ஊராட்சி ஒன்றிய ஊழியர்கள் 80 ஆயிரம் பேர், இரு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த 10 ஆயிரம் பேர். ஆகியோர் கட்டுப்பாடாக இந்த வேலை நிறுத்தத்தில் பங்கு கொண்டனர் மாநிலத்தில் உள்ள 219 நகரசபைகளைச் சேர்ந்த ஊழியர்கள் பகுதி பகுதியாக அடையாள வேலைநிறுத்தம் செய்தனர். மொத்தம் 8·8 லட்சம் ஊழியர்களும் ஒரே அணியாகத் திரண்டனர்

பால்பண்ணைகள், ஆஸ்பத்திரிகள், தண்ணீர்சப்ளை ஆகியவற்றில் இருந்த ஊழியர்கள் கூட முதலில் வேலை நிறுத்தத்தில் பங்கு கொண்டனர், பொதுமக்கள் தொல்லைப்படக் கூடாது என்பதற்காக இரு நாட்களுக்குப்பிறகு இவர்களுக்கு விதி விலக்கு அளிக்கப்பட்டது

வேலைநிறுத்தம் வெற்றிகரமாக இருந்த காரணத்தால் அரசு பொய்ப் புள்ளி விபரங்களைக் கொடுத்துப் பத்திரிகைகளையும், பொது மக்களையும் ஏமாற்ற முடியவில்லை, இந்த வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்ட அரசு ஊழியர்களை பழிவாங்க — தண்டனை கொடுக்க அரசு மிகவும் யோசித்தது,

800 ரூபாய், 1000 ருபாய் மாத சம்பளம் வாங்குகிற பெரிய அதிகாரிகள், அரசுத் துணைச்செயலர்களெல்லாம் கூட இந்த போராட்டத்திற்கு நேரிடையான ஆதரவு கொடுத்தார்கள், அவர்கள் என், ஜி, ஓ, க்கள் போராட்டத்திற்கு ஆதரவாக ஊதியம் பெற மறுத்தார்கள், அடையாள உண்ணாவிரதம் இருந்தனர்,

இறுதியில் 15 கோடி ருபாய் நிவாரணம் தருவதாகச் சொன்ன அரசு 50 கோடி தந்தது, போராட்டம் நின்றது.

"Accustomed to the stability of a pensionable service, to the unfailing appearance of a wage packet on the

first day of a month and an assured pay scale, this particular class of employees was considered to be the meekest of the meek, who could never be expected to play a significant role in an industrial society. All these stereotype arguments of the social scientists and trade unionists of the classicial variety have been expoded by the 37 day near total strike of the state and zilla parishat employees of Maharastra" என்று பம்பாயிலிருந்து வெளி வரும் 'ஜனதா' என்ற ஆங்கில ஏடு மதிப்பிட்டிருந்தது,

வேலை நிறுத்தம் நடந்து கொண்டிருந்தபோது மட்டும் பம்பாயில் பொது மக்கள் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவாக ஒரு லட்ச ரூபாய் நன்கொடை அளித்துள்ளனர், கடைநிலை ஊழியர் குடும்பமொன்றிற்கு 5 கிலோ வீதம் உணவுப் பொருள் வழங்கத்தக்க அளவுக்கு உணவுப் பொருட்கள் நன்கொடையாக வந்தன, அதனால்தான் 27--5--75ல் இந்தியன் எக்ஸ்பிரஸ் தலையங்கம் எழுதும்போது "The strike had almost completely parrlysed the administration" என்று குறிப்பிட்ட ,

மராட்டியத்தில் மாநில அரசு ஊழியர்கள் வேலை நிறுத் தம் நடத்தியபோது அமைச்சர்களின் அந்தரங்க உதவியா ளர்கள் மற்றும் பணியாட்களில் 80 சதவீதம் பேர் வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டது குறிப்பிடத் தகுந்தது. முதலமைச்சரின் உதவியாளர்களில் 16 பேரில் 12 பேர் வேலை நிறுத்தத்தில் பங்கு கொண்டனர். அதனால்தான் "By their magnificient action has restored the faith of the Indian Working Class in the effiacy of strike as an instrument of working class struggle for social Justice" என்று இந்து மஸ்தூர் சபாவின் பொதுச் செயலாளர் மகேஷ் தேசாயால் பெருமையுடன் பாராட்ட முடிந்தது.

## 8. ஜம்மு — காஷ்மீர்

1958 ல் அகவிலைப்படி உயர்வு கோரி வேலை நிறுத்தம் நடைபெற்றபோது தான் இங்கே அரசுஊழியர் இயக்கம் ஒருமுகப்பட்ட முடிந்தது. இந்தவேலைநிறுத்தமும் எல்லா இலாக்காக்களிலும் வெற்றி பெறவில்லை. இயக்கத்திற்கு சரியான அடிப்படையில்லாத காரணத்தால் ஆயிரக்கணக்கானவர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டும், நூற்றுக்கணக்கானவர்கள் டிஸ்மிஸ் செய்யப்பட்டும் பழிவாங்கப்பட்டனர். இந்த இயக்கத்தினுல் அப்துல் மஜீத்கான்—என்ற துடிப்புள்ள தலைவன் ஜம்மு—காஷ்மீர் ஊழியர்கள் மத்தியிலே உதயமானுன்.

1964 ல் மாநில அரசு ஊழியர் கூட்டமைப்பு அங்கீகாரம் பெற்றது. 1967 டிசம்பர் 4 ல் பொது வேலை நிறுத்தம் தொடங்கியது. ஆள்வோர் அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டனர்; தடியடிதர்பார் நடத்தினர். 13—12—67 ல் வேலை நிறுத்தம் முடிவுற்றது. கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் சம்பத் பிரகாஷ் மாநிலத்தைவிட்டே வெளியேற்றப்பட்டார். சிறையிலடைக்கப்பட்ட தலைவர் அப்துல் மஜீத்கான் 20—3—68 ல் தான் விடுதலை செய்யப்பட்டார் 1968 ஜூன் மாதம் மறுபடியும் 12 என், ஜி. ஓ. தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். வெளியிலிருந்த யூனியன் தலைவர்களோ சொல்லொணுக் கொடுமைகளுக்குட்படுத்தப்பட்டனர். மற்ளுெரு பக்கம் கருங்காலிகளின் தொல்லை.

இந்த சமயத்தில்தான் 1968 மார்ச், ஆகஸ்டில் டில்லி நாடாளுமன்றம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்த அகில இந்திய என். ஜி. ஓ. சம்மேளனம் அழைப்பு விடுத்தது. ஒரு திருமணம் கோஷ்டிடிபோல மாறுவேடமணிந்து மாநிலத்தைக்கடந்து—டில்லி வந்து 115 என். ஜி. ஓ. க்கள் சிஷுபால் தலைமையில் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

சுசிபால் 1968 நவம்பரில் கைது செய்யப்பட்டு பின் எல்லாத் தலைவர்களுடனும் 1969 பிப்ரவரியில் விடுதலை செய்யப் பட்டார்.

## 9. திரிபுரா

1974 ஏப்ரல் 9ல் ஒருநாள் வேலை நிறுத்தத்தை மிகச் சிறப்பாகச் செய்தனர் திரிபுரா மாநில அரசு ஊழியர்கள். அதன் விளைவாக ஊதியக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. ஊதியக் குழு அமைக்கப்பட்டாலும் உடனடி நிவாரணம் கிடைக்கவில்லையே என்று தொடர்ந்து கிளர்ச்சிகள் மேற் கொள்ளப்பட்டது.

1—8—72லிருந்தே மத்திய அரசு ஊழியர்களுக்குக் கொடுக்கப்பட்ட அகவிலைப்படி இங்கு கொடுபடாமல் இருந்து வந்தது. இதற்காக 18—3—75 நள்ளிரவில் இருந்து தொடர் வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது. நான்காம் பிரிவு ஊழியர்களுடைய யூனியன் அலுவலகத்தை கட்டாய மாகக் கைப்பற்றினர் ஆள்வோர். டிஸ்மிஸல் – சஸ்பென் ஷன் – தேவையில்லாத மாற்றுதல்கள், இவ்வாறு பழிவாங் கும் நடவடிக்கைகள் தொடர்ந்தன, எனினும் 28—3—75ல் அகவிலைப்படி உயர்வு தருவதாக அறிவித்து ஊழியர்களை வேலைக்கு வருமாறு வேண்டினர் மாநில முதலமைச்சர்,

## 10. குஜராத்

குஜராத் மாநிலத்தில் ஜஸ்டிஸ் தேசாய் தலைமையில் அமைக்கப்பட்ட மாநில அரசு ஊழியர்களுக்கான ஊதியக் குழு 13—2—75ல் தன்னுடைய சிபாரிசுகளை அறிவித்துள்ளது, குஜராத்தில் உள்ள 120 அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களைச் சேர்ந்த 850 பிரதிநிதிகளும், அங்கீகரிக்கப்படாத 155 சங்கங் களைச் சேர்ந்த 957 பேரும் இக்குழுவின்முன்பு சாட்சியம் கூறி யிருக்கின்றனர்,

144/3-2



இந்த ஊதியக் குழு சிபாரிசுகள் 1—1—73 முதல் அமுல் படுத்தப் பெறவேண்டும் என்பதை மிகத் தெளிவாக கமிஷன் எடுத்துக் கூறியிருக்கிறது,

## EXTRACT FROM Ch. 35, p. 144, Vol. III

2...The selection of this date has a direct bearing on the question of impact on the cost of recommendations of the Commission and, therefore, the issue was discussed in threadbare details with the Chief Secretary and Secretary, Finance Department. All the demands and discussions which the Commission had with Government employee bearing on the question were brought to the notice of these two official witnesses and after ascertaining their views a *consensus emerge that the date which can be said to be just and fair both to the employees and the Government for making the recommendations effective should be 1st January* 1973. This is unquestionably very fair and reasonable and the Commission is inclined to recommend it. Incidentally it may be mentioned that the recommendations of the Third Central Pay Commission constituted way back in 1970 have been made effective from that date Thus on examination of all the relevant aspects, the Commission recomands that scales of pay recommended by the Commission should be made effective from 1st January 1973 and this date may also be adopted not only for the purpose of pay-scales but also for readjustment of other benefits specically including pensionery benefits so far as it is administratively and in principle feasible. The Commission hopes that this would meet the legitimate dispirations of the Government employees,

ஒரு நீதிபதியைத் தலைவராகப் போட்டதால்தான் இவ்வளவு தெளிவாகவும்...சிறப்பாகவும் இக்குழு பரிந்துரை செய்திருக்கிறது என்பதை நாம் உணர முடிகிறது, அதுமட்டுமல்ல, குஜராத் ஊதியக் குழு பரிந்துரை செய்துள்ள சில ஊதிய விகிதங்களையும் பார்ப்போம்,

| | | |
|---|---|---|
| 1 ) கடைநிலை ஊழியர் | Rs, | 196—3—220—EB—3—232 |
| 2 ) போலீஸ் கான்ஸ்டேபிள் | Rs, | 200—3—212—4—240—EB 5—260 |
| 3 ) தலைமை கான்ஸ்டேபிள் பிளர்க் ஸ்மிதி-பிளம்பர் | Rs | 260—6—305—EB—6—325 — 8—350 |
| 4 ] இளநிலை உதவியாளர் டிரைவர் - டைபிஸ்ட் - படி வரைவாளர் | Rs, | 260—5—308—EB—6—326 —8—350—EB —8—390— 10—400 |
| 5 ) ஒயர்மேன் - லேபட்டரி உதவியாளர் | Rs. | 260—8—308—EB—8—300 —10—360—EB —10—430 |
| 6 ) கிராம சேவக் - மருந்தாளுநர் - கால்நடை ஆய்வாளர்-வேளாண் உதவியாளர் | Rs, | 330—10—380—EB —12— 440 EB 15 560 |
| 7 ) உதவியாளர் - துணை வரைவாளர் | Rs, | 380—12—440—EB— 12 500 EB 15 560 |
| 8 ) நர்ஸ்கள் | Rs, | 425 15 500 EB 15 560 20 580 EB 20 640 |
| 9 ) கண்காணிப்பாளர்கள் | Rs, | 500 25 650 EB 25 700 EB 25 750 30 — 900 |

இந்த ஊதிய விகிதங்களை பார்க்கும்போது தமிழ் நாட்டில் உள்ள அரசு ஊழியர்கள் உடனடியாக மற்றோர் ஊதியக் குழு வேண்டுமென்று கேட்பதில் உள்ள நியாயத்தை யாரும் மறுக்க முடியாது.

வீட்டு வாடகை, நகர ஈட்டுப்படியைப் பொறுத்தவரை 16 லட்சத்திற்குமேல் மக்கள் தொகை உள்ள ஊர்களை ஏ பிரிவாகவும் 8 லட்சத்திற்கு மேல் மக்கள் தொகை உள்ள ஊர்களை பி—1 பிரிவாகவும், 4 லட்சத்திற்குமேல் மக்கள் தொகை உள்ள ஊர்களை பி—2 பிரிவாகவும், ஒரு லட்சத்திற்கு மேல் மக்கள் தொகை உள்ள ஊர்களை சி—1 பிரிவாகவும் 50 ஆயிரத்திற்குமேல் உள்ள ஊர்களை சி—2 ஆகவும் பிரித்திருக்கிறார்கள். அதற்குக் கீழ்க்கண்டவாறு ஈட்டுப்படியும்—வீட்டு வாடகைப்படியும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

| பிரிவு | ஈட்டுப்படி | வீட்டுவாடகைப்படி |
|---|---|---|
| A | அடிப்படை ஊதியம் ரூ 250க்கு குறைவானவர்களுக்கு $6\frac{1}{2}\%$ 250க்குமேல் ஊதியம் பெறுவோருக்கு 6% (உயர்ந்த அளவு 75 ரூபாய்) | ஊதியத்தில் 15% (உயர்ந்த பட்சம் 400 ரூபாய்) |
| B-1<br>B-2 | ஊதியத்தில் 5%<br>குறைந்த அளவு ரூ. 10/-<br>உயர்ந்த அளவு ரூ. 50/- | $12\frac{1}{2}\%$<br>குறைந்த அளவு ரூ. 25/-<br>உயர்ந்த அளவு ரூ. 300/- |
| C-1 | ஊதியத்தில் 5%<br>(அதிக பட்சம் ரூ. 40) | 10%<br>குறைந்த அளவு ரூ 25<br>அதிக பட்சம் ரூ. 200/- |
| C-2 | ஊதியத்தில் 5%<br>குறைவு ரூ. 10/-<br>அதிகம் ரூ 25/- | $7\frac{1}{2}\%$<br>குறைவு ரூ. 20/-<br>உயர்வு ரூ. 150/- |

(மேலே கண்ட பரிந்துரைகள் எல்லாம் இன்னமும் அமுலுக்கு வரவில்லை.)

இடைத் தேர்தல் சமயத்தில் கிளர்ச்சி நடத்துவோம் கூடுதல் அகவிலைப்படி உயர்வு கோரி என்று குஜராத் மாநில அரசு ஊழியர்கள் அறிவித்தவுடன் 26—5—75ல் இடைக்கால அகவிலைப்படி உயர்வு அறிவிக்கப்பட்டது, ரூபாய் 8-5 ல் தொடங்கி ரூபாய் 37-50வரை வேறுபட்ட அகவிலைப்படி உயர்வுகள் ஊழியர்கட்கு வழங்கப்பட்டன 1—5—75 முதல் இது அமுலுக்கு வந்தது. ஆனால் ஊழியர்கள் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை. மே 29ல் ஓட்டு மொத்தமாக சில்லறை விடுப்பு எடுத்தனர்.

பிறகு ஜூன் முதல் வாரம் தேர்தல் நடைபெறும்போது வேலை நிறுத்தம் நடத்தப்போவதாக அறிவித்தனர். ஆனால் பொது மக்கள் மத்தியில் இதற்கு வரவேற்பில்லாத சூழ்நிலை ஏற்பட்டது. வஜ்பாய் போன்ற எதிர்க் கட்சித் தலைவர்களே தேர்தல் நேரத்தில் மாநில அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்வதை விரும்பவில்லை.

மாநில அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தால்கூட தேர்தல் வாக்குப் பதிவு இடையூறின்றி நடைபெறும் என தேர்தல் கமிஷனர் அறிவித்தார்

பல்வேறு சூழ்நிலைகளையும் கருதி வேலை நிறுத்த அறிவிப்பு வாபஸ் பெறப்பட்டது தேசாய் கமிஷன் பரிந்துரைகளை புதிய முதலமைச்சர் பாபுபாய் ஜே பட்டேல் எவ்வளவு தூரம் அமுல் நடத்தப் போகிறார் என்பது பொறுத்திருந்து பார்க்கவேண்டிய காரியம்.

30—6-75 அன்று துணை பட்ஜெட் சமர்ப்பிக்கப்படும் போது ஊதியக் குழு பரிந்துரைகளை எந்த அளவு பரிசீலிக்க முடியுமென்று ஆராயப்படுகிறது என்றும் ஆனால் எந்த முடி வெடுத்தாலும் 1—1—73 முதல் அமுல் படுத்தப்படுமென்றும் முதலமைச்சர் அறிவித்துள்ளார்

TAMIL NADU ARCHIVES LIBRARY
ACC. No.
17 FEB 1979
EGMORE, MADRAS-600 008

## 11. மேற்குவங்கம்

1—4—75லிருந்து எல்லா மாநில அரசு ஊழியர்களுக்கும் மாதம் ரூபாய் 8 அகவிலைப்படி உயர்வு அளிக்கப்படுமென 3—3—75ல் சட்ட மன்றத்தில் முதலமைச்சர் ரே அறிவித்தார். இதைத்தவிர 1975 மே மாதத்தில் இருந்து 1976 ஜூன்வரை மாதம் 4 ரூபாய் முன்பணமாகக் கொடுக்கப்படும் எனவும், இது 1976 ஜூலை மாதத்தில் இருந்து 5 தவணைகளில் பிடித்தம் செய்து கொள்ளப்படும் என்றும் கூறினர். (ஊதிய முடக்க சட்டத்தினுல் பின்னுல் கூறிய இந்த ஏற்பாடு செய்யப் படுகிறது என்று யூகிக்க இடம் இருக்கிறது) 1971 அக்டோபர், 1974 ஜனவரி, ஏப்ரல் மாதங்களில் அறிவிக்கப்பட்ட அகவிலைப் படி உயர்வு அடிப்படைச் சம்பளமாகக் கருதப்படும் என்று கூறினர்

## 12: ஆந்திரா

இங்கு செக்ரடேரியட்டில் தட்டெழுத்தர் மற்றும் சுருக் கெழுத்தர்களுக்கென இணைந்து ஒரு சங்கம் 6—3—71ல் இருந்து சிறப்புற செயல் புரிகிறது 1972ல் அகவிலைப்படி முதலிய கோரிக்கைகட்காக மாநில அரசு ஊழியர்கள் 56 நாள் வேலை நிறுத்தம் நடத்தியபோது இச்சங்கமும் அதில் தீவிர பங்கு எடுத்துக்கொண்டது.

மாநில அரசு ஊழியர் இயக்கங்களின் வளர்ச்சி ஒரே நாளில்—ஒரே நேரத்தில் நிகழ்ந்து விடுவதில்லை. கட்டுப் பாடாக, ஒற்றுமையாக, பொறுமையாக, நம்பிக்கையோடு செயல்பட்டால்தான் இயக்கம் வளரும், வாழும் என்பதை நாம் உணரவேண்டும்.

# குமுதத்தின் தவருன பார்வை!

தமிழ்நாட்டில் ஏராளமாக விற்பனையாவதாகக் கூறிக் கொள்ளும் பத்திரிக்கையான குமுதம் எவ்வளவு தரம் தாழ்ந்து - நிலைகுலைந்து கேலிச் சித்திரங்கள் வரைகின்றது என்பதை சமீப காலமாக தமிழகம் உணர்ந்து வருகின்றது.

குறிப்பாக மாநில அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் பலர் தெரிந்தோ, தெரியாமலோ அதிகம் வாங்கும் ஏடாக 'குமுதம்' இருந்துவந்தது.

ஆனால், மாநில அரசு ஊழியர்களின் நியாயமான எந்தக் கோரிக்கையையாவது ஆதரித்தோ - அவர்கள் பெற்ற பலன்களைப் பாராட்டியோ 'குமுதம்' ஏடு என்றைக்காவது மனம் திறந்து - உளமார எழுதியிருக்கிறதா என்ருல், இல்லை.

அத்தோடு நிறுத்தினுல்கூடப் பரவாயில்லை—குமுதத்தில் வருகிற கதைகளில் பல அரசு அலுவலகங்களையும் அங்கே பணியாற்றுகிற ஊழியர்களைப்பற்றியும் தவருன பிரதிபலிப்புகளைத்தான் ஏற்படுத்தின.

இந்த வாரத்தில் அண்ணுமலையார் கேலிச் சித்திரம் அரசு ஊழியர் - ஆசிரியர் மனதில் வேலெனப் பாய்ந்து வேதனையை ஏற்படுத்தியிருக்கிறது.

கலைஞர் அரசு - தமிழக அரசு ஊதிய உயர்வை அதிகமாக வழங்கி, நிதி நெருக்கடியை ஏற்படுத்துவதாகவும், வரப் போகிறவர்கள் தடுமாறப்போவதாகவும் ஒரு சித்திரத்தை வரைந்துள்ளது.

இது எவ்வளவு பித்தலாட்டமான தகிடுதத்தப் பிரச்சாரம் என்பதையும், உண்மைக்கு மாருன கூற்று என்பதையும், சொல்ல வேண்டியது நம்முடைய கடமையாகிறது.

ஏதாவது நாலாந்தர மேடைப்பேச்சாளி அரசியல் லாபம் கருதி எதிர் முகாமிலிருந்து இதைக் கூறினுல் மறக்க முடியும்; மன்னிக்க முடியும்; அலட்சியப்படுத்த முடியும்.

ஆனுல் எம். ஏ. பி. எல். படித்த ஒருவரை ஆசிரியராகக் கொண்ட ஒரு பத்திரிக்கையில் மேலைநாடுகள் சென்று வந்த தாகவும் பொருளாதார ஞானம் பெற்றிருப்பதாகவும் கூறிக் கொள்கிற மேதாவிகள் நடத்துகிற ஒரு பத்திரிகையில், இத்தகைய கூற்று வந்திருப்பது கேவலமான கோமாளித்தனத் தைத்தான் சுட்டிக்காட்டுகிறது.

ஒரு நல்ல அரசு தன்னுடைய ஊழியர்களை நன்கு கவனித்துக்கொள்ள வேண்டிய கடமையைப் பெற்றிருக்கிறது. ஊழியர் நலனுக்காக முழுப் பொறுப்பையும் ஏற்பது அரசினு டைய முக்கியக் கடமை.

அந்த வகையில் தமிழ்நாடு அரசு தன்னுடைய பங்கைச் செய்து வருகிறது.

மில் தொழிலாளர்களுக்குப் போனசை முதலாளிகள் ஒழுங்காகத் தரவேண்டும் என்று வற்புறுத்துகிற அரசு, பஸ் தொழிலாளர்க்கு ஓய்வூதியம் நன்கு தரவேண்டும் என்று சட்டம் இயற்றுகிற மாநில அரசு, சிமெண்ட் தொழிலாளர் கட்கு ஊதியப் பாதுகாப்புக்கு வழிவகை காணுகிற அரசு தன் னுடைய ஊழியர்கட்கு நல்வாழ்வு தருவது முழுமுதற் கடமை யல்லவா? அந்தக் கடமையைத்தானே கலைஞர் அரசு செவ்வனே செய்கிறது!

3—4—74 காலை பத்திரிகைகளிலேகூட மராட்டிய மாநில அரசு தன்னுடைய ஊழியர்களுக்கு அகவிலைப்படி உயர்வைத் தந்திருக்கிறது. அங்குள்ள பத்திரிகைகள் எல்லாம் பாராட்டி எழுதுகின்றனவே தவிர 12 கோடி ரூபாயை அள்ளிக் கொடுத்துவிட்டார் நாயக்; பால்தாக்ரே எதிர்காலத்தில் பெரிய சிக்கலில் மாட்டிக் கொள்ளப்போகிருர் என்று கற்பனு வாதத் தில் மிதந்து காரித்துப்பக்கூடிய கார்ட்டூன்கள் போடவில்லை.

3—4—74 காலை வானொலியில்கூட கேரள அரசு தன்னுடைய ஊழியர்களுக்கான குறைந்தபட்ச ஊதியத்தை ரு. 196 ஆக்கப்போவதாக அறிவித்துள்ளது.

இதனைப் போதாது என்று கூறுவோர் வேண்டுமானால் அங்குள்ள பத்திரிக்கைகளில் இருப்பார்களே தவிர குமுதத்தைப்போல கோணங்கி புத்தியோடு எதிர்காலத்தில் வருவோருக்கு அச்சுதமேனன் நெருக்கடி தருகிறார் என்று கூறமாட்டார்கள்.

அரசாங்க பட்ஜெட் ஆண்டுக்காண்டு உயர்ந்து கொண்டே போகிறது பத்தாண்டுகட்கு முன்னால் ரூ 100 கோடியாக இருந்த நமது பட்ஜெட் இன்று ரூ 400 கோடிக்கு மேல் உயர்ந்திருக்கிறது கல்விக்காக 60 கோடி செலவிடப் பட்டதையும் நாம் பார்த்தோம்: இன்றைக்கு 110 கோடியாக உள்ளதையும் நாம் பார்க்கிறோம்.

1961–62ல் மத்திய அரசின் நேரடி வரி 2 கோடியாகவும் மறைமுக வரி 55·1 கோடியாகவும் இருந்தது.

1973-74ல் நேரடி வரி 14 கோடியாகவும் மறைமுக வரி 236 கோடியாகவும் உயர்ந்துள்ளது.

இதேபோல்தான் மாநிலங்களின் வருமானமும் உயர்ந்துள்ளது

எனவே ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு கொடுப்பதனால் எதிர்கால அரசுக்கு நெருக்கடி என்பது புரசவாக்கத்தாரின் பிரமையே தவிர—பொருளாதாரம் உணர்ந்து பேசுவோரின் பேச்சாகாது.

பாவம்! அண்ணாமலையார் ஆழம் தெரியாது—அரசியலிலே, அரசு ஊழியர் வாழ்க்கை நிலையிலே கை வைக்கிறார்!

மற்ற பல மாநிலங்கள் எல்லாம் மொத்த வருமானத்தில் எத்தனை சதவீதம் நிர்வாகச் செலவுகளுக்காக ஒதுக்குகிறது, தமிழ்நாடு எவ்வளவு ஒதுக்குகிறது என்பதனை எண்ணிப் பார்த்தால், தமிழ்நாடு முறையாக, திட்டமிட்டு, தன் வலி வறிந்து, எதிர்கால நிலையறிந்துதான் செலவிடுகிறது என்பது தெற்றென விளங்கும்,

அப்படியிருக்கும்போது வெத்துவேக்காடாய், அறை குறையாகக் கற்ற "ஆபீஸ் பையன்" போல "குமுதம்" ஆசிரியர் குழு கண்டபடி கிறுக்குவதை தமிழ்ச் சமுதாயம் தொடர்ந்து மன்னிக்காது.

அரசு ஊழியர்கட்கும்—ஆசிரியர்கட்கும் தமிழக அரசு—கலைஞர் அரசு நன்மைகள் செய்வதன்மூலம் நாட்டில் நல் லாட்சி நடைபெற–நிர்வாக இயந்திரம் செம்மைப்பட-சிறப்பான எதிர்கால சமுதாயம் உருவாக வழிவகை செய்துள்ளது. அது "கோணங்கிக் குமுதம்" விரும்பாத ஒன்று என்றால் அதைப் பச்சையாகத் தெரியப்படுத்தட்டும்; யார் இந்த அண்ணமலை யார் என்பதை ஆறுலட்சம் குடும்பங்கள் உணர்ந்து கொள்ளும்.

அதை விட்டுவிட்டு வாழைப்பழத் தோல்போன்ற மாயச் சித்திரங்கள் வரைவது மனிதப்பண்பாகாது.

தொழில்கள் வளர்கின்றன; அதன்மூலம் வருமானம் கூடுகிறது. விற்பனை வரியை செம்மையாக வசூலிக்க ஏற் பாடுகள் செய்கிறோம்; நிதி கூடுகிறது. ஏமாற்றுவோரை அடையாளம் காட்டுகிறோம்; அபராதம் வசூலிக்கப்படுகிறது

ஆக அரசு ஊழியர்கள் கடமையைச் செய்துவிட்டு உரிய உரிமைகளைப் பெறுகிறார்களே தவிர, குமுதத்தைப்போல மனித இதயத்தின் சாதாரண பலவீனங்களைத் தட்டிப் பார்த்து—சதை உணர்வுகளை வியாபாரமாக்கி 'டிரஸ்டு"கள் அமைக்கவில்லை.

"குடும்பநலத் திட்டம்" கலைஞரின் புது முயற்சி, தனி முயற்சி. ஆனல் அதிலேயும் எங்கள் பங்கு இருக்கிறது. மாதம் ரூபாய் பத்து தருகிரேம். தர்மகர்த்தாவாக தமிழக அரசு இருந்து வாழ்விழந்த குடும்பங்கட்கு ஓரளவு வசதி தருகிறது.

ஆசிரியர்கட்கு தேர்வுநிலைப் பதவிகள்! நியாயமான சலுகை! நீண்டகாலம் எந்தவிதப் பதவி உயர்வு வாய்ப்புமின்றி அல்லற்பட்டோரின் கண்ணீரைத் துடைத்த காவியம்! மற்ற துறைகளில் தொடரவேண்டிய ஒன்று!

அரசு ஊழியர், ஆசிரியர், பென்ஷனர்கள், கிராம அதிகாரிகள் ஆகிய இவர்களுக்கெல்லாம் 1—4—74முதல் தரப்படும் அகவிலைப்படி உயர்வு அவசியமான ஒன்று,

எனவே குமுதம் ஆசிரியர் இதையெல்லாம் மறந்து ஏதோ காழ்ப்புணர்ச்சியில் கேலிச் சித்திரங்கள் அர்த்தமில்லாமல் தீட்டுவது தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

எங்களுடைய கோரிக்கைகளும், அரசின் முடிவுகளும் கமாவே தவிர முற்றுப்புள்ளியல்ல.

இதைக் கலைஞரும் சொல்லி இருக்கிருர்; நாங்களும் உணர்ந்திருத்கிரேம். "குமுதம்" உணரவில்லையென்ருல் அந்த ஏட்டின் எதிர்காலத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கத் தயங்கோம்!

(5—4—74 "முரசொலி"யில் வெளியான கட்டுரை)

*

# ஒளிமயமான எதிர்காலம் !

கொட்டிவைத்த செங்கற்களாகக் காட்சியளித்த நம் சமுதாயம் இன்று கட்டி முடிக்கப்பட்ட அழகான கோபுரமாக உருவெடுத்து வருகிறது. திருப்பதி மாநில மாநாட்டிலே நாற்பது ஐம்பதுபேரே கூடியிருந்த நிலைமாறி இன்று 40, 50 பேருந்துகளிலே நாடெங்கணுமிருந்து பல்லாயிரம் நல்ல இதயம் படைத்த என். ஜி. ஓக்கள் ஒன்றுதிரண்டு தமிழகத்தின் தலைநகரில் தங்களுடைய நாற்பத்திரண்டாவது மாநில மாநாட்டை சிறப்பிக்கின்றனர்;

எத்தனையோ தொல்லைகள் ! எண்ணமுடியாத அலுவல்கள் ! இத்தனைக்கும் மத்தியிலே இந்த சங்கத்தை வளர்த்துவருகிற நல்லவர்கள்—அவர்கள் தனி வாழ்க்கையில் சாமான்யர்களாக இருந்திருக்கலாம் ஆனால், அவர்கள் மேற்கண்ட கொள்கை-போராடிய லட்சியம் சாமான்யமானதல்ல ; சக்தி வாய்ந்தது. அதனால்தான் கண்ணீர் சிந்தி வளர்த்த இந்த இயக்கம் கருகி விடாமல் ஆல்போல் தழைத்து. அற்புதமாக இயங்கிவருகிறது.

புதிதாக சர்க்கார் வேலைக்கு வந்திருப்பவர்களுக்கு வேண்டுமானால் இந்த என். ஜி. ஒ. சங்கம் சாதித்த சாதனைகள் புரியாத புதிராக இருக்கலாம். ஆனால் இருந்த பலத்தை வைத்து, கொடுத்த சந்தர்ப்பத்தைக் கொண்டு, வந்த வாய்ப்பை விடாமல் எத்தனையோ அரும் பெரும் காரியங்களை ஆற்றியிருக்கிறது என் ஜி. ஒ இயக்கம்.

இல்லையென்றால் அடக்கப்பட்டு, மிதிக்கப்பட்டு, நசுக்கப்பட்டு, துவைக்கப்பட்ட ஒரு சமுதாயமாக—மீளமுடியாத அடிமையிலே சிக்குண்டு ரட்சிப்பாரற்றுக் கிடந்த இந்த என். ஜி. ஒ. இனம் எப்படி உய்வு பெற்றிருக்க முடியும் ? அரசியல் வாதிகள் நமக்காகப் போராடினார்களா ? இல்லை ! நாம் அவர்களுக்கு ஓட்டு சேகரிக்கப் பயன்படுபவர்கள் அல்லவே ! தொழிற் சங்கத் தலைவர்கள் என்று தங்களைத்

தாங்களே அழைத்துக் கொள்பவர்கள் நமக்குக் கரம் கொடுத்தார்களா ? இல்லை—நாம் அவர்கள் அழைத்த அழைப்புக்கும் இழுத்த இழுப்புக்கும் ஈடு கொடுக்கும் ஆமாம் சாமிகள் இல்லை என்பது அவர்களுக்குப் புரியும்.

பின் யார்தான் நமக்கு உதவி ? எல்லோரும் நமக்கு தார்மீக ஆதரவு தெரிவித்தார்கள்; உண்மைதான்.—பத்திரிக்கைகள், பாராளுமன்ற—சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், நீதிபதிகள் எல்லோரும் நமக்கு அனுதாபம் தெரிவித்தார்கள், நான் மறுக்கவில்லை. ஆனல் கிணற்றிலே விழுந்தவனுக்கு பட்டுநூலைக் கொடுத்தால் அதைக்கொண்டு அவன் எப்படி மேலே வரமுடியும் ? அதேபோலத்தான் அவர்கள் காட்டிய அனுதாபம் அழகான பட்டு நூல். அதனல் நமக்குப் பிரத்தியட்சியமான பலன் எதுவும் இல்லை.

அந்தப் பட்டு பூநூலை நம்பாமல் நம்மையே நாம் நம்பினேம். நமது கோரிக்கைகளிலே இருந்த நியாயம்—நமது வாழ்வின் பின்னணியிலே இருந்த துயரம்—அதன் அடிப்படையிலே ஏற்பட்ட கொதிப்பு இவற்றை கொண்டுதான் நாம் இதுவரை பலன்களைப் பெற்ருேமே தவிர யாருடைய துணையும் பெரிய அளவுக்கு நமக்குப் பயன்படவில்லை,

இத்தனைக்கும் பிறகும் நமக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய சலுகைகள்—உண்மையாகக் கிடைக்க வேண்டிய உரிமைகள் இன்னும் கிடைத்தபாடில்லை, குமுறல் ஓய்ந்தபாடில்லை, குறைகள் தீர்ந்தபாடில்லை.

ஒரே கல்வித் தகுதி பெற்றுள்ள நம்முடைய சகோதரன் மத்திய சர்க்கார் அலுவலகத்தில் வேலை பார்ப்பதனல் அவனுடைய வாழ்க்கை மொக்குகள் நிறைந்திருக்கும் அழகான மல்லிகைக் கொடியை போன்றுள்ளது. ஒவ்வொரு மொட்டும் மணத்தை அள்ளிச் சொரிகின்றது. ஆனல் என். ஜி ஓ.வாக மாநில அரசில் பணி புரிவதால் நம்முடைய வாழ்க்கை முள் நிறைந்த ரோஜாவாகத்தான் இருக்கிறது. அழகான மலர்

தான்! ஆனால் பறிக்கும்போது கையில் முள் குத்தாமல் தப்ப முடியாது. அதேபோலத்தான் நாம் சலுகைகளைப் பெறுவதற்கு அவர்களைவிட அதிகத் துன்பப் படவேண்டியிருக்கிறது.

ரோஜாவும் மல்லிகையும் கொண்டிருக்கிற வேறுபாடுகள் இயற்கையிலேயே அமைந்தவை. ஆனால் நமக்குக் கற்பிக்கப் படுகிற வேறுபாடுகள் அவ்வாறு இயற்கைத்தந்த வரமா? அல்லது இறைவன்தந்த கட்டளையா? இல்லவே இல்லை. மனம் உள்ளவர்கள் மாற்ற நினைத்தால் இயலக்கூடிய வேறுபாடு, ஆனால் எண்ண வேண்டியவர்களுக்கு இதயம் இல்லையோ என்று ஐயப்படக்கூடிய சூழ்நிலையில் நம்மை ஆளாக்கியிருக்கிறது?

இந்த நிலை மாறுமா? இந்தக் கேள்விக்குறி இன்று மட்டுமல்ல—கடந்த சில ஆண்டு காலமாகவே ஆபத்தான உருவில் அடிக்கடி கேட்கப்படுகிறது. அமைதியாக அரசாங்க நிர்வாகத்தை நடத்திச் செல்லவேண்டியவர்கள்—கறுப்புச் சின்னம் அணிவதும், கடைத் தெருக்களிலே ஊர்வலம் வருவதும் கனல் தெறிக்கப் பேசுவதும் நாம் விரும்பாத ஒன்று. வேறு நாடுகளிலே இல்லாத ஒன்று. ஆனாலும் இந்த வேதனையான சூழ்நிலை தொடர்ந்து நீடிக்கிறது, தமிழகத்தில்!

1954-ல் தொடங்கி 1964வரை நம்முடைய போராட்டக் கொடி இறங்காமலேயே பறந்து கொண்டிருக்கிறது. இது நாமே விரும்பி ஏற்ற நிலையல்ல ஆளுகிற பீடத்திலே இருப்போர் அடிக்கடி உண்டாக்குகிற நிலை

நாம் கேட்பது என்ன? பள்ளியிலே படிக்கும்போது இன்பக் கனவுகள் பல கண்டோம் படிக்கிறோம். சிறப்பாக அரசாங்க வேலைக்குச் செல்வோம் நிறைந்த மனத்துடன், நிம்மதியாக வாழ ஒரு ஒளிமயமான எதிர்க்காலம் ஏற்படும் என்று நம்பினோம் ஆனால் வேலைக்குவந்த பின்னர் கொடுக்கப்படுகிற சம்பளத்தை, அளிக்கப்படுகிற அவஸ்தைகளை சமுதாய நிலையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது நாம் கனவுகண்ட அந்த ஒளிமயமான எதிர்காலம் எட்டாத்

தொலைவிலேயே இருக்கிறது என்பதை அறிகிறபோது அதிர்ச்சி ஏற்படுகிறது. அப்புறம் அதிருப்தி தொடர்ந்து ஆயாசம் வருகிறது. இந்த நிலை நீடிக்கவிடுவது சரியா, முறையா, தகுமா? இதுதான் இன்று நம் முன்னுள்ள கேள்வி.

காட்டுத்தீ பரவினால் வைக்கோற் போர் மாத்திரமல்ல, மாமரங்களே எரிந்துபோகும். சாதாரண தொழிலாளிக்கும், விவசாயிக்கும் ஏற்படுகிற அதிருப்தியைவிட—படித்த, நடுத்தர வர்க்கமாகிய நமக்கு ஏற்படுகிற அதிருப்தி மிகக் கெடுதல் பயக்கக்கூடியது. யாருக்கு என்பதை சம்மந்தப்பட்டவர்கள் உணரக்கூடிய காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது,

நாம் வேண்டுவதெல்லாம் என்ன? ஒளிமயமான ஒரு எதிர்காலம். சக்திக்கேற்ற உழைப்பை நாம்தரத் தயாரா யிருப்பதுபோல தேவைக்கேற்ற வசதியை எதிர்பார்க்கிறோம்; வசிப்பதற்கு நல்ல வீடுகள், வயிற்றுக்குத் தேவையான நல்ல உணவு, அரசாங்க அலுவலர் என்று சொல்லிக்கொள்ளத் தேவையான நல்ல வாழ்க்கைத்தரம் எல்லாவற்றுக்கும் மேலாக கடனில்லாத பெருவாழ்வு. இதுதான் நம்முடைய இன்றைய தேவை. இந்தத் தேவையை அரசாங்கம் பூர்த்தி செய்ய வில்லையானால் நிச்சயமாகக் குமுறல் அடங்காது இதை எச்சரிக்கையாகக் கருதி எங்களை மிரட்டுவதால் காரியம் முடிந்துவிடாது.

நாங்கள் விரும்புவது ஒளிமயமான எதிர்காலம். அது கிடைப்பதற்கு எங்களில் சிலர் இந்த இயக்கத்தை நடத்திச் செல்லுகிறவர்கள் சில பல கஷ்டநஷ்டங்களை ஏற்க வேண்டி யிருந்தால் அதற்கும் துணிந்துதான் நாங்கள் ஒரு புனிதலட்சி யத்துக்காகப் போராடுகிறோம். இதை அரசாங்கம் உணர மறுப்பதுபோலவே எங்களுடைய சகோதரர்களில் சிலரும் உணர முடியாமலிருக்கலாம்.; அவதூறு பேசலாம். ஆனால் பாவம் அவர்கள் அப்பாவிகள்; தவறு செய்கிறோம் என்று புரியாமலேயே தவறு செய்பவர்கள்!

அவர்களுக்கும் சேர்த்துத்தான் ஒளிமயமான ஒரு எதிர் காலத்தை ஏற்படுத்த தமிழ்நாடு என் ஜி. ஒ. யூனியன் முயற் சிக்கிறது.

அந்த நல்ல முயற்சிகள் வெல்க !

அதை நடத்திச்செல்கிற தலைவர்கள் வாழ்க ! !

ஒளிமயமான அந்த ஒப்பற்ற எதிர்காலம் விரைக ! விரைக ! எனக்கூறி இக்கட்டுரையை நிறைவுபெற்ற தாக்கு கிறேன்.

(13—7—64-ல் சென்னையில் நடைபெற்ற 42-வது மாநில மாநாட்டு மலரில் வெளியான கட்டுரை)

---

# என். ஜி. ஒ. இயக்கத்தில் பெண்கள்

இன்று மாநில அரசு ஊழியர்களில் பெண்கள் பெரும் பகுதியினராக இருக்கிறார்கள். ஆனால் என் ஜி ஒக்கள் இயக்க வரலாற்றில் பெண்கள் பங்கு என்ன என்று பார்க்கும் போது சிறிது சங்கடமாகத்தான் இருக்கிறது.

இந்திராகாந்தி அம்மையார் நாட்டினுடைய பிரதமர். விஜயலட்சுமி பண்டிட் ஐக்கிய நாடுகள் சபையின் தலைவராக இருந்து உலகின் கவனத்தைக் கவர்ந்தவர்.

மைசூரில் மேரிதவசியா என்ற பெண்மணி 1960-70ம் ஆண்டுகளில் மாநில என் ஜி ஒ சங்கத் தலைவியாக இருந்து எழுச்சி மிக்க பல போராட்டங்களை நடத்தியிருக்கிறார். அரசு அவரை டிஸ்மிஸ் செய்தாலும் அஞ்சாமல் போராடி இருக்கிறார். மேற்கு வங்கத்தில் என் ஜி ஒ பேரணி என்றால் ஆயிரக் கணக்கான பெண்கள் இறுதிவரை பங்கு கொள்கிறார்கள். அந்த நிலை தமிழ்நாட்டில் உருவாக வேண்டும்.

1957ல் சென்னை மாநில மாநாடு மலரில் 'A call to sister N G. Os' என்ற கட்டுரையில் ராணிமேரி கல்லூரியில் பணி யாற்றிய திருமதி H. நியூமன் எம்.ஏ, விரிவாகப் பெண் களுக்கு வேண்டுகோள்விடுத்தும் சரியான முன்னேற்றமில்லை.

1969-70ல் உத்திரமேரூர் என் ஜி ஒ சங்கத் தலைவியாக செல்வி மீனாம்பாள் பி ஏ. பி.டி பொறுப்பேற்று இரண்டாண்டு காலத்துக்குமேல் சிறப்பாகப் பாடுபட்டார். கருத்தரங்கு;

பட்டிமன்றம் அனைத்திலும் கலந்துகொண்டார். பின்னர் அவர் நன்னிலம் மாற்றலாகிப் போனவுடன் அவர் சேவை சரிவரக் கிடைக்கவில்லை.

1968ல் பெரியார் திடலில் நடைபெற்ற மாநில மாநாட்டில் செல்வி. வசுமதி (நில அளவுத்துறை) ஓர் தீர்மானத்தை வழி மொழிந்து பேசும்போது நல்ல வரவேற்பைப் பெற்றார். தொடர்ந்து இயக்க நடவடிக்கைகளில் அவரும் பங்கு கொள்ளவில்லை.



திருமதி. அனுசுயா (பத்திரப் பதிவுத்துறை) மேடைப் பேச்சில் ஆர்வம் காட்டாவிட்டாலும் 1974-75ம் ஆண்டில் இரண்டு மாதங்களுக்குமேல் விடுப் பெடுத்துக் கொண்டு போராட்ட நடவடிக்கை களுக்குத் துணை நின்றார் என்பதை மறுக்க முடி யாது

இதே கால கட்டத்தில் செவிலியர் சங்கத்தின் தலைவி ராஜமும், பொதுச் செயலாளர் ஜானகியும் என் ஜி ஓ இயக்க நட வடிக்கைகள் அனைத்தி லும் தீவிர-நேரடிப் பங்கி னைப் பெற்றனர் - தஞ்சையிலே நடைபெற்ற மாநாடாயினும் சரி கோட்டை முன் ஊர்வலமானாலும் சரி, முதலமைச்சரோடு நடந்த பேச்சுவார்த்தையானாலும் சரி இவர்கள் தீவிர பங்கெடுத்துக் கொண்டனர். அகவிலைப்படி உயர்வுப் போராட்டத்தில் ஆண்கள் சிலர் அஞ்சியபோதும் சிறைச் சாலைக் கதவுகளை சந்திக்க இவ்விரு சகோதரிகளும் தயாராக இருந்ததை மறக்க முடியாது.

முக்கிய சேவிகாக்கள் சங்கத் தலைவி அம்மாபொண்ணு, அச்சங்கத்தின் செயலர் முத்துலட்சுமி, பாரு ஆகியோரும்

அரசு ஊழியர் சமுதாய வளர்ச்சியில் நல்ல நாட்டம்கொண்டிருந்தனர் (1974-75ல்) கிருஷ்ணகிரியில் சகோதரி துளசியும் என் ஜி ஓ வளர்ச்சியில் பங்கு கொண்டிருந்தார். ஒரத்தநாடு, குடியாத்தம், உடுமலை போன்ற இடங்களில் 1971-74 ஆண்டுகளில் மத்திய சங்கத் தலைவர்கள் சுற்றுப் பயணம் போகும் போது சில பெண்கள் உற்சாகத்துடன் ஆற்றிய சொற்பொழிவு அவர்களை இயக்கத்தின் தலைவியராக மாற்றிவிடலாம் என்ற கனவைத் தூண்டிவிட்டதோடு சரி!

1969-75ல் வேளாண்துறை அமைச்சுப் பணியாளர் சங்கத்தில் சகோதரி பத்மினி ஜான்சன் தொடர்ந்து காட்டிய உற்சாகம்; தொழில் வணிகத்துறை அமைச்சுப் பணியாளர் சங்கத்தில் மாநில துணைத்தலைவராக பலத்த போட்டிக்கிடையே 1974ல் தேர்ந்தெடுக்கப்பட்ட திருமதி லலிதாபாய் ஆகியோரின் ஈடுபாடு ஆகியவை பாராட்டத்தக்கவை.

பூந்தமல்லியில் முழுதும் பெண்களாகவே சேர்ந்து பால சேவிகாக்கள் சங்கம் அமைத்த பங்கஜவல்லி போன்றோர் பொறுமையும் - அமைதியும் காதததோடு சிறப்பாக செயல்பட்டனர்.

திருமதி ராமாதேவி சென்னையில் 1974-ல் டெலிபோன் ஆப்ரேட்டர்கள் சங்கம் அமைத்து ஓராண்டிலேயே 2, 3 கோரிக்கைகளில் வெற்றிபெற்ற சிவனேஸ்வரி, கல்யாணி, ரமாதேவி ஆகியோரும் என்.ஜி.ஓ. இயக்கத்தின்பால் பற்றும் பாசமும் கொண்டவர்கள்.



துணைச் செவிலியர் மற்றும் மகப்பேறு உதவியாளர் சங்கத்தின் அமைப்புக்காகவும், அவர்தம் கோரிக்கைகட்காகவும் தூத்துக்குடி ஜானகியம்மாள், பழனி திருமதி சகுந்தலா, மதுரை திருமதி மேரி ஜயமணி ஆகியோர் 1974—75ல் எடுத்துவரும் முயற்சிகளும் பாராட்டுதற்குரியன.

1975ல் என். ஜி. ஓ. மகளிர் அணி அமைக்கப்பட்ட போது வரைவாளர் பி. அலமேலு, இளநிலை உதவியாளர் எஸ். ஜெயலட்சுமி. சி. கே சரஸ்வதி, (நில அளவுத்துறை) என். விஜயலட்சுமி (பொதுப்பணித்துறை) ஆகியோர் உற்சாகம் காட்டி ஊர்வலங்களில் பங்கு கொண்டனர். அதே போல் தேனும்பேட்டையில் திருமதி சாம்சன் (கால்நடைத் துறை) காந்தா (மீன் அளத்துறை) ஆகியோர் பெண்களை ஊர்வலங்களுககு அழைத்துவருவதில் ஆர்வம் காட்டினர்.

செங்கற்பட்டிலும் (1971—74ல்) மகளிர் அணி சிறப்பாகச் செயல்பட்டது குறிப்பிடந்தக்கது. திருமதி ராதாபாய் தலைவியாகவும், செல்வி தனலட்சுமி அமைப்புச் செயலாளராகவும், திருமதி சரஸ்வதி அலுவலகச் செயலாளராகவும், செல்வி பிரேமா திட்டச் செயலாளராகவும், செல்வி வசந்தா பிரிவுத் தளபதியாகவும் செங்கையில் சிறப்புற செயல்பட்டதை மறுக்க முடியாது.

ஆனுல் என். ஜி. ஓக்கள் இயக்கத்தில் பெண்கள் இன்னமும் தீவிரம் காட்ட வேண்டும். அப்பொழுதுதான் இந்த என். ஜி. ஓ சமுதாயம் மேலும் மேலும் வளர்ச்சிபெறும்.

1975 பெண்கள் ஆண்டு இந்த ஆண்டில் பெண் என் ஜி ஓக்கள் உறுதியோடு—ஒற்றுமையோடு, நமது இயக்கம் வாழ, வளர முன்னணியில் வரவேண்டும்; வருவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது.

# மின்வாரிய ஊழியர்கள் நிலை

பதினைந்து ஆண்டுகட்கு முன்பு எல்லாம் மின்வாரிய ஊழியர்களும், என் ஜி ஓக்களாகத்தான் கருதப்பட்டார்கள். அப்போதெல்லாம் மதுரை—கோவை ஆகிய இடங்களில் மின்துறையைச் சேர்ந்தவர்கள் என் ஜி ஓ சங்கத்தில் முக்கிய பங்கெடுத்துக் கொண்டார்கள் மதுரை மாவட்ட என் ஜி ஓ சங்கத் தலைவராக இருந்த திரு மாலிக், கோவை மாவட்டத்தில் நிர்வாகிகளாக இருந்த சான்பகதூர், பாலசுந்தரம் ஆகியோரெல்லாம் மின்துறையைச் சேர்ந்தவர்களே.

மின்துறையை வாரியமாக்கி இன்று அவர்களை நம்மிடையே இருந்து பிரித்துவைத்த நீண்ட நெடிய நெடுநாட்களை நினைத்துப் பார்க்கிறோம். அவர்கள் வளர்ச்சியை எண்ணிப் பார்க்கும்போது இதயம் பூரிக்கிறது: தொழிற்சங்கப் பாதையில் அவர்கள் பீடுநடை போட்டுச் செல்கிறார்கள். தொழிற்சங்க உரிமை மாத்திரமல்ல ஏறக்குறைய அரசியல் உரிமையையும் இன்று பெற்றிருக்கும் சூழ்நிலையில் அவர்கள் இருக்கிறார்கள், மின்கழகக் கணக்காயர் சங்கத்தின் பொதுச் செயலாளர் அருமை நண்பர் அங்கப்பன் இன்று திராவிட முன்னேற்றக் கழக தொழிற் சங்கப் பேரவையின் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். மின்வாரியத்தில் பணிபுரியும் ஊழியர்கள் நகராட்சி-ஊராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிட தமிழ்நாடு அரசு அண்மையில் வழிவகை செய்துள்ளது. மின்கழகக் கணக்காயர் சங்கம் இரண்டு லட்ச ரூபாய்க்கு சொந்த அச்சகம் வாங்கியுள்ளதோடுஏறக்குறைய 4 லட்ச ரூபாய் மதிப்புக்கு சென்னையில் கட்டிடமும் வாங்கியுள்ளது.

அந்த அளவுக்கு இந்த இயக்கம் வளர்ந்துள்ளதை எண்ணிப்பார்க்கும்போது மின்வாரிய ஊழியர்கள் பெற்ற சலுகைகளை ஒருமுறை திரும்பிப் பார்க்கவேண்டும்.

மின்வாரிய நிறுவனங்களுக்கென மத்திய அரசினுல் மத்திய ஊதிய போர்டு 1966ம் ஆண்டில் நிறுவப்பட்டது. 1969 டிசம்பரில் அந்த போர்டின் அறிக்கை வந்தது. தமிழ் நாடு அரசு 1—12—69முதல் அதன் பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டு அமுல் படுத்துவதாக 1970 மே மாதம் அறிவித்தது. மத்திய அரசே 1970 ஜூலை மாதம்தான் ஊதிய போர்டின் சிபார்சுகளை ஏற்றுக்கொண்டது. ஆனுல் நமது மாநில அரசு மார்ச் மாதத்திலேயே ஏற்றுக்கொண்டது என்ருல் அங்கே யுள்ள தொழிற்சங்க உணர்வு அளித்த வெற்றிதான் காரணம் என்பதை அறிந்துகொள்ளலாம்.

அதற்குப் பிறகு தமிழ்நாடு அரசு தனது ஊழியர்களுக்கு அளித்த சலுகைகளையொட்டி மின்வாரிய ஊழியர்களுக்கும் கீழ்க்கண்ட சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன.

(1) 5 ஆண்டுக்குக் குறையாத சர்வீஸ் உடையவர் களுக்கு ரூபாய் 2 ஆயிரம் திருமணக் கடன்.

(2) மாநில அரசு ஊழியர்கட்கு உள்ளது போல அடிப்படைச் சம்பளத்தில் எட்டு சதவீதம் நகர ஈட்டுப்படி (பஞ்சப்படியில் பாதியை நகர ஈட்டுப்படியைக் கணக்கிடுவதற் காக அடிபபடைச் சம்பளமாகக் கருதப்பட்டது)

(3) முதல் பிரிவு, இரண்டாம் பிரிவு உட்பட எல்லோ ருக்கும் மலைப்படி (இது 1—6—71முதல் அளிக்கப்பட்டது; 1000 ரூபாய் வரையில் சம்பளம் பெறுபவர்கட்கு அடிப்படைச் சம்பளத்தில் 12%ம் பஞ்சப்படியில் 50%ம் அதிக அளவு ரூபாய் 80க்கு மேற்படாமல் மலைப்படி.)

(4) 1—1—73முதல் மாநில அரசு ஊழியர்கட்கு அளிக்கப்படும் விகிதத்தில் வீட்டு வாடகைப்படி

(5) 1—4—73முதல் மறுபடியும் வீட்டு வாடகைப்படி உயர்வு (சதவீததைக் கணக்கிட அகவிலைப்படியில் 50 விழுக் காட்டினை அடிப்படை ஊதியமாகக் கணக்கிடுதல்)

(6) 1970—71ல் 4%ஆக இருந்த போனஸ் 5%ஆக வழங்கப்பட்டது.

(7) 1971—72ல் 4% ஆக இருந்த போனஸ் 8:33%ஆக உயர்த்தப்பட்டது.

(8) பட்டதாரி காசாளர்களுக்கு மூன்று முன்கூட்டிய ஊதிய உயர்வுகள் அளிக்கப்பட்டது.

(9) தலைமைப் பண்டகக் காப்பாளர் பதவிகளில் 15 சதவீதம் தேர்வு நிலையாக உயர்த்தப்பட்டன.

(10) 31—12—72ல் நான்காண்டுகாலம் தற்காலிகமாக பணியாற்றிய ஊழியர்கள் பணிவரன்முறை செய்யப்பட்டது.

(11) பண்டகசாலை ஊழியர்களுக்கு கீழ்க்கண்டவாறு மாதந்தோறும் தனிப்படி வழங்கப்பட்டது.

| | |
|---|---|
| தேர்வுநிலை பண்டகக் காப்பாளர்கள் | ரூ 75 |
| முதல்நிலைப் பண்டகக் காப்பாளர்கள் | ரூ 60 |
| இரண்டாம்நிலைப் பண்டகக் காப்பாளர்கள் | ரூ 45 |

(12) ஓய்வூதியம் 33-80 ஆகவும், பணிக்கொடை சராசரி ஊதியத்தைப்போல 16.5 மடங்காகவும் உயர்த்தப்பட்டது

(13) பணிக்கொடைக்கு இருந்த உச்சபட்ச வரம்பு நீக்கப்பட்டுள்ளது.

(14) விலைவாசிப்புள்ளி அடிப்படையில் கீழ்க்கண்டவாறு அகவிலைப்படி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1—4—70முதல் | 3 00 |
| 1—4—71முதல் | 6 75 |
| 1—4—72முதல் | 4 50 |
| ஆகமொத்தம் ரூ | 26.25 |

1—10—73 முதல் 3 மாதங்களுக்கு ஒருமுறை அகவிலைப்படியை விலைவாசிப்புள்ளி அடிப்படையில் உயர்த்து வது என்பதும் மின்வாரியத்தில் ஏற்கப்பட்டிருக்கிறது

அந்த அடிப்படையில் ரூபாய் 50க்குக்கீழ் மாத ஊதியம் பெறுகிறவர்கள் 1—10—73லிருந்து பெற்ற அகவிலைப்படி உயர்வுகளைக் கீழே பார்ப்போம்.

1—10—73ல் 33 ரூபாய் உயர்வு
1—1—74ல் 9 ரூபாய் உயர்வு
1—4—74ல் 8.25 ரூபாய் உயர்வு
1—7—74ல் ரூபாய் 18 உயர்வு
1—10—74ல் ரூபாய் 21.75 உயர்வு
1—1—75ல் ரூபாய் 6.75 உயர்வு

ஆக 16 மாதங்களில் ரூபாய் 96.75 அகவிலைப்படி உயர்வு கிடைத்துள்ளது இந்த 16 மாதங்களில் மாநில அரசு ஊழி யர்களுக்குக் கிடைத்தது ரூபாய் 20தானே. 1—2—75ல் அளிக்கப்பட்ட ரூபாய் 20முதல் ரூபாய் 30ஐ கணக்கில் சேர்த் துக்கொண்டாலும் வேறுபாடு மிகுந்திருக்கிறதே! இதை அரசு அனுமதிக்கலாமா? பக்கத்து வீட்டிலே இருக்கிற மின்வாரிய ஊழியர் பெறுகிற அகவிலைப்படி உயர்வினை எண்ணி என் ஜி ஒ கொள்கிற ஏக்கம் சாதாரணமானதாகவா இருக்கும்? இந்த நிலை மாற்றியமைக்கப்பட வேண்டாமா?

மத்திய மாநில அரசின் ஊழியர்களுக்கிடையே அக விலைப்படி உயர்வில் வேறுபாடு இருக்கக்கூடாது என்று கூறுகிறபோது மாநில அரசின் ஆளுகைக்குட்பட்ட மின்வாரி யத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கும் கொள்கை—மற்ற அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்கட்கும் ஏன் அமுல்படுத்தக் கூடாது?

என் ஜி ஒக்களுக்கு அளிக்கப்படுகிற அகவிலைப்படி உயர்வு—ஸ்தல ஸ்தாபன சிப்பந்திகட்கும் நூலக ஆணைக்குழு ஊழியர்கட்கும், டான்சி—சிட்கோ போன்ற கார்ப்பரேஷன்

களில் பணியாற்றுபவர்கட்கும் அளிக்கப்படுகிறபோது மின் வாரியக் கொள்கை—எல்லா மாநில அரசு ஊழியர்கட்கும் ஏன் ஆகக்கூடாது ?

என் ஜி ஒக்களுக்குத் தரப்படும் எல்லா சலுகைகளும் ஏறக்குறைய மின்வாரிய ஊழியர்களுக்குத் தரப்படும்போது மின்வாரிய ஊழியர்கள் பெறுகிற சலுகைகளை என் ஜி ஒக்க ளுக்கு ஏன் விரிவுபடுத்தக்கூடாது என்ற கேள்விக்கு இன்றில்லாவிட்டாலும், நாளை பதில் சொல்லியாகவேண்டும்.

—o—

# அன்றும் இன்றும் !

நாம் நாட்டின் மிகமிக முக்கியமானதொரு சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். பொருளாதாரத்திற்கும், புனரமைப்பிற்கும் பொதுவாகச் சொன்னுல் நாட்டை எதிர்நோக்கி நிற்கும் நாலாவித பிரச்சினைகளுக்கும் உயிர்நாடிகள் நாம் நமக்கென ஓர் அமைப்பைப் பெற்றிருக்கிறோம் அந்த நல்லதோர் அமைப் பைக்கடந்த முப்பத்து நான்கு ஆண்டுகளாகக் கட்டிக்காத்து வந்திருக்கும் கடமை வீரர்களுக்கு நாம் நன்றி கூறித்தான் ஆகவேண்டும்.

அன்று அவர்கள் இருந்த நிலையில், நாடிருந்த நிலையில் காலமும், கருத்தும், சமயமும், சந்தர்ப்பமும் எவ்வளவு தூரம் அவர்களுக்குச் சாதகமாக இருந்திருக்கும் என்று எண்ணினுல் அதிதீவிரக் கிளர்ச்சியாளர்களால்கூட அவர்கள் சாதித்த அளவுக்குமேல் சாதித்திருக்க முடியாது. இன்று சமயமும். சந்தர்ப்பமும் நமக்கு மிகமிகச் சாதகமாக உள்ளது. குறிக் கோளையும், கொள்கையையும் நன்ருக நினைவிலிருந்தும் எந்த ஸ்தாபனமும் இந்த நாட்களில் நல்ல வெற்றிகளைப் பெற முடியும். ஆனுல் நம்முடைய நிறுவனம் இந்த சமயத்தில் ஒரே குகையில் இரு துருவங்கள் என்ற நிலையில் இயங்கி வருகிறது. நானும்

தமிழகமெங்கும் உலாவந்து கொண்டேயிருக்கிறேன். பலப் பல மாநாடுகளிலே பங்கு கொண்டிருக்கிறேன். இந்த இரு துருவநிலை என்றுதான் நீங்கும் என்று திட்டவட்டமா என்னுல் சொல்ல முடியவில்லை இந்த நிலைக்குக் காரணம் பரஸ்பர அவநம்பிக்கையே. மத்திய சங்கம் என்ன செய்தது என்ற எண்ணம் பலர் உள்ளங்களில் பசுமரத்தாணிபோல் பதிந்துவிட்டிருக்கிறது. பொதுவாகத் தமிழகத்தில் ஒரு பழமொழி உண்டு 'தூங்குபவனை எழுப்பலாம், ஆனல் தூங்குபவனைப்போல் நடிப்பவனை எழுப்புவது கடினம்' என்று அதைப்போல மத்திய சங்கம் என்ன சாதித்திருக்கிறது. என்பதை அறிந்துகொள்ள ஆசைப்படுபவர்களாக இருந்தால் அவர்களுடைய சந்தேகத்தை நாம் திருப்திப்படுத்தவும் கூடும், ஆனல் மத்திய சங்கம் ஒன்றுமே சாதிக்கவில்லை என்ற எண்ணத்தைத் தீவிரமாகக் கடைப்பிடிப்பவர்களை மாற்ற வேண்டுமானல் ஏதாவது அதிசயம் நிகழ்ந்தால்தான் முடியும்.

மத்திய சங்கம் என்ன செய்தது என்ற கேட்பவர்களை ஒன்று கேட்கிறேன். நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்? உங்கள் மாவட்டத்தில் எத்தனை கிளைகள் உள்ளன? எத்தனை உறுப்பினர்களை சேர்த்திருக்கிறீர்கள் ? சங்க இதழான 'பப்ளிக் சர்வன்ட்' உங்கள் ஜில்லாவிற்கு எத்தனை வருகிறது? அதற் கான பணம் பூராவையும் அனுப்பி விட்டீர்களா ? என்ருல் ஒன்றுக்காவது திருப்திகரமான பதில்வராது புரட்சிகரமான மாறுதல் தேவை; எனவே மத்திய சங்கத்தை எங்கள் ஜில்லா வுக்கு மாற்றுங்கள் என்று முழக்கமிடுபவர்கள் அந்த முழக் கத்தை மாநாட்டு அளவோடு நிறுத்திக்கொள்வதுதான் என் உள்ளத்தில் வேதனை ஏற்படுத்துகிறது.

இதையெல்லாம் நான் ஏன் கூறுகிறேன் என்ருல் ஒரு சாராரைத் தாக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக அல்ல. அப்படி யாராவது எண்ணினல், நான் கூறியவை தவறு என்ரே ஒரு சிலரின் உள்ளத்தைப் புண்படுத்தக்கூடியவை என்ரே யாராவது எண்ணினல் நான் அவர்களிடம் மன்னிப்புக் கேட்கத் தயார்.

சங்கத்தின் வளர்ச்சியின்பாலுள்ள விருப்பத்தால்தான் இதையெல்லாம் நான் வெளியிடுகிறேன். நல்லதோர் வீணை செய்து அதன் நலங்கெடப் புழுதியில் எறியும் போக்கு நீக்கப் படவேண்டும் என்பதற்காகவே இதைக் கூறுகிறேன். நமது அமைப்பு சென்னை மாநிலம் முழுதும் சிறந்த முறையில் அமைக்கப்பட வேண்டும் என்ற ஆர்வத்தின் விளைவாகவே இதையெல்லாம் கூறுகிறேன்.

பூத்துவரும் புதுயுகத்தில் நமக்கு நல்லிடம் நிச்சயம் உண்டு. ஆனால் அதை அமைக்கும் முறையும், வகையும் நம் கையில்தான் இருக்கிறது. இப்பொழுதுதான் நாம் துக்க நாள் கொண்டாடினோம். பாமர மக்களில் பலருக்கு நம்முடைய கோரிக்கைகள் புரியாதிருந்த நிலையை மாற்றி ஒரு சிலருக்கு நன்றாக புரியும் முறையில் அந்த துக்கநாள் இருந்தது. பொது மக்களுக்கும் நமக்கும் இடையே இருந்துவரும் ஆழ்ந்த, அகல மான அகழியை கடக்க அமைக்கப்பட இருக்கும் பாலத்தின் ஆரம்பத்திற்கான அறிகுறி அது.

போகப்போக மற்ற நம்முடைய திட்டங்கள் அமைதி யாக, ஆனால் ஆர்வத்துடன், பொறுமையாக ஆனால் புத்தி சாலித்தனத்துடன் நடைபெற வேண்டும். அதற்கான ஏற்பாடு களை செய்வதற்கு ஆயத்தமாக சென்னையிலிருந்து திரும்பிய வுடன் உங்கள் கிளைச் சங்கத்தைப் பலப்படுத்துங்கள்.

நம்முடைய காலத்தில் ஏதாவது சாதித்தால்தான் வருங் காலத்தில் ஓரளவுக்காவது நம்மை மதிப்பார்கள். பேச்சும், ஏச்சும் காற்றோடு கலந்துவிடும். செயலும் அதன் விளைவும் தான் என்றும் புகழொளி வீசிநிற்கும். இதை எண்ணுங்கள், செயலாற்றுங்கள்.

(மாநில என். ஜி. ஓ. யூனியன் 34-வது மாநாடு 19-5-1956 அன்று சென்னையில் நடைபெற்றபோது வெளியிடப்பட்ட சிறப்பு மலரில் எழுதப்பட்ட கட்டுரை.)

# மூன்று மாநாடுகள்

அன்புள்ள நண்பன் தேசிகனுக்கு,

வணக்கம் பல, நலம், நலமறிய விருப்பம். உன்னுடைய கடிதம் கண்டேன். குளித்தலையிலிருந்து என் ஜி ஓ பிரதிநிதியாய் நீ சேலம் மாநாட்டுக்குச் செல்ல இருப்பதாக எழுதியிருந்தாய், மிக மிக மகிழ்ச்சியடைகிறேன். சேலம் மாவட்ட செயலாளர் திரு பி. குப்புசாமி அவர்கள் துணிச்சலும், மன உறுதியும் மிக்கவர் என்பதனை நீ நன்கறிவாய். அவருடைய செயல்திறமை மாநாட்டு வெற்றிக்கு மிகமிக உறுதுணையாய் இருக்கும், அதுவும் நமது சங்கம் இப்போதிருக்கும் நிலையில் ஒரு பெரும் திருப்பு கட்டம் ஏற்பட சேலம் மாநாடு உதவும். மாநிலத்திலுள்ள பல்வேறு என் ஜி ஓக்களும் எதிர்பார்க்கக் கூடிய வகையில் இந்த மாநாடு கூடுகிறது. என்னுடைய உள்ளம் எல்லாம் சேலத்திலேயே இருக்கிறது; என்னுடைய சிந்தனைகளோ கடந்த மூன்ருண்டுகளாக நாம் இருவரும் தொடர்ந்து சென்றுவந்த மாநில மாநாடுகளையும் அவற்றிற்குப் பின் நடந்த சம்பவங்களையும் நோக்கிச் செல்லுகிறது.

ஆம், 1955ம் ஆண்டு கடலூரிலே நடைபெற்ற மாநாடு தான், நாமிருவரும் முதல் முதலாகக் கலந்துகொண்ட மாநில மாநாடு அந்த மாநாடு நம்மிருவர் உள்ளங்களிலும் ஒரு எழுச்சியையும், கிளர்ச்சியையும் ஏற்படுத்தியது. அதுவரை என் ஜி ஓ சங்கம் என்ருல் ஏதோ ஒரு பொழுது போக்கு மன்றம் என்று எண்ணிக்கொண்டிருந்த இளைஞர்களாகிய நாம் புது உணர்வைப் பெற்ருேம். நமது சங்கத்தையும், அரசியல் கட்சிகளையும் சீர்தூக்கிப்பார்க்கிற வேளையிலே அவற்றிலே இருப்பவர்களைவிட ஆர்வம் மிகுந்த தலைவர்களையும், உறுதி கொண்ட தொண்டர்களையும் என் ஜி ஓ சங்கம் பெற்றிருக்கிறது என்பதை கடலூர் மாநாட்டின் மூலம் உணர்ந்தோம்.

எனக்கு நன்ருக ஞாபகமிருக்கிறது. அந்த மாநாட்டிலே நாம் சந்தித்த ஒரு உருவம், வழுக்கைத்தலை, வாலிப வயதைத் தாண்டிய பருவம் ஆகியும் இருபத்தோரு வயது இளைஞனுக்கு இருக்கும் உணர்ச்சி. காக்கி முழங்காற்சட்டையணிந்துக் கையிலே கண்ணுடியைப் பிடித்துக்கொண்டு எந்தத் தீர்மானத்தையும் முன்மொழிந்தவுடன் அதை வழிமொழிந்தோ எதிர்த்தோ நிச்சயம் பேசுவார் அவர். நமது இன்றைய தலைவர் ஆழ்வாரப்பனை அத்தகைய நிலையில்தான் சந்தித் தோம் கடலூர் மாநாட்டிலே.

அவரைமட்டுமா சந்தித்தோம் இல்லை, இல்லை. பொறி பறக்கப் பேசி, புயலென வெளியேறிய திருச்சி தோழர் தீரமுடை வீரர் வேலாயுதத்தையும் நாம் அங்கேதான் கண் டோம்- அலுவலகத் தொல்லையாலோ, அலுப்புமிகுதியாலோ இன்று சங்க செயல் முறைகளிலேயிருந்து விலகியிருப் பதுபோல் தென்பட்டாலும் அவர் ஆற்றிய பணியை நாம் நிச்சயம் மறக்க முடியாது.

அதேபோல நாம் மறக்கமுடியாத மற்ருேர் தோழர்— நம்மைவிட்டுப் பிரிந்து கேரளத்திலே பணியாற்றும் நண்பர் ராதாகிருஷ்ணனும் கடலூரிலேதான் அறிமுகமானுர் நமக்கு. கொச்சைத்தமிழ் வாயிலே தவழும்; கோட்பாட்டு நெறி முறைகள் அவருடைய நெஞ்சில் இடம் பெறும். நமது சங்கம் தொழிற்சங்கமாக வேண்டும் என்று பேச்சிலும், மூச்சிலும் எண்ணமாக இருந்தவர் அவர். கடலூரிலே நாம் அவரை சந்தித்த நேரத்திலும்கூட நம்மிடம் அதையே வலியுறுத்தினுர்.

கடலூர் மாநாடு உருவான முறையிலே தீர்மானங்களை நிறைவேற்றியதா என்பதிலே நமக்குள்ளே கருத்து வேறுபாடு இருந்தாலும், அது உயர்வான முறையிலே நடைபெற்றது என்பதை நம்மால் மறக்கமுடியாது. கடலூர் மாநாட்டுக்குப் பிறகு 1956-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் நாம் கொண்டாடிய துக்க தினம், அதன் விளைவாக அணிந்துகொண்ட கருப்புச் சின்னம், அதைத் தொடர்ந்து நடைபெற்ற பொது அணி

வகுப்பு, அப்போது அடுத்து என்ன செய்வது என்பதுபற்றி பலப்பல கிளைகள் நிறைவேற்றிய தீர்மானங்கள், இத்தனை பக்க பலத்தோடு 1956-ம்ஆண்டு மே மாதம் 19, 20 தேதிகளில் நமது மாநில மாநாடு நடைபெற்றது. அப்பொழுது இலாக்கா தேர்வுகள் எழுத நாம் தயாராகிக் கொண்டிருந்தோம். திருச்சியிலே 18-ம் தேதியும் 21-ம் தேதியும் நாம் வரைவாளர் தேர்வு எழுதவேண்டிய நிலை. அதையும் புறக்கணித்துவிட்டு ஓடோடிச் செல்கிறோம் சென்னைக்கு.

ஆனால் 19-ம்தேதி காலை மாநாட்டின் முதல் அம்சமாக நடைபெற்ற மத்திய செயற்குழுக் கூட்டத்தில் மத்திய சங்க நிர்வாகிகளுக்கும் சென்னைக் கிளை நிர்வாகிகளுக்கும் ஏற்பட்ட பலமான வாக்குவாதம் நம்மை ஓரளவு அதிர்ச்சியடைய வைத்தது. அப்பொழுது நாம் அதிர்ச்சியடைந்த காரணத்தால் தான் இந்த ஆண்டுகூட மத்திய சங்கத்திற்கும், சென்னைக் கிளைக்கும் ஏற்பட்ட மோதலும், அதனால் தலைவர் சென்னைக் கிளையின் செயற்குழுவைக் கலைத்ததும் அவ்வளவாக நம்மை தாக்கவோ, பலவீனப் படுத்தவோ இல்லை. எல்லோரும் படித்துப் பண்பட்டவர்களாக தேர்ந்து இருப்பதால் சில பல சமயங்களில் இதுபோல விவாதமும், விளக்கமும் சிக்கலும் சிரமமும் ஏற்படுவது தவிர்க்கமுடியாத ஒன்றாகிவிடுகிறது.

அதே சூழ்நிலையைத்தான் மறுநாள் மாநாட்டு நிகழ்ச்சி களிலும் நாம் கண்டோம். சர்க்கார் நம்மை புறக்கணித்து வருவதை மாற்ற என்ன செய்வது என்ற தீர்மானத்தின் பேரில் இரண்டாம் நாள் மாலை ஆறுமணிவரை நடைபெற்ற விவாதம் ஓய்வதாகவே தென்படவில்லை; மாநாடு மூன்றும் நாளும் நடக்கப்போகிறது என்ற எண்ணம் எல்லோர் உள்ளத்திலும் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. அந்த நேரத்தில் நமது மதிப் புக்குரிய கண்ணன்குட்டி மேனன்நிலைமையை சமாளித்தவிதம் இருக்கிறதே அதை நீயும் நானும் மட்டுமல்ல அன்று வந்திருந்த அத்தனைபேருமே மறக்க முடியாது. நீ என்னதான் நினைத் தாலும் சரி, ஒன்றைமட்டும் நான் உறுதியாகக் கூறிக்கொள்ள

ஆசைப்படுகிறேன். சிலர் தலைவர்களாகப் பிறக்கிறார்கள், பலர் தலைவர்களாக ஆக்கப்படுகிறார்கள் என்பதை அடிக்கடி சரித்திரம் நமக்கு காட்டிவருகிறது. திரு கண்ணன்குட்டி மேனனிடம் நாம் சில குறைகள் கண்டாலும் அவர் நிச்சயமாக நான் கூறிய முதல் ரகத்தைச் சேர்ந்தவர்.

அன்றையதினம் ஆரவாரித்துக் கொண்டிருந்த இரு சாராரையும் அடக்கி அவர் கொண்டுவந்த தீர்மானம், அந்தத் தீர்மானத்தின் விளைவாக நாம் நடத்திய டில்லிப் பயணம் இவையெல்லாம் நமது சங்க வரலாற்றில் பொன்னெழுத்துக் களால் பொறிக்கப்பட வேண்டியன மட்டுமல்ல. நாட்டிலே நமக்கு நல்லாசியையும் பல்லோர் ஆதரவையும் திரட்டித் தந்தது அந்தப் போராட்டக் கொடி உயர்த்தப்பட்டதை முன்னிட்டு உரத்த குரலுக்கு மதிப்புண்டு என்ற நடை முறையைப் பின்பற்றும் வகையில் நமக்கு ஐந்து ரூபாய் உயர்வு கிடைத்தது. ஆனால் நாம் படும் தொல்லைகளையும் துயரங்களையும் துடைக்க இது பயன்படாது; நமது போர் முழக்கம் இன்னும் தீவிரமாக வேண்டும் என்ற எண்ணத்தில் தான் வழக்கமாக ஒவ்வொரு ஆண்டும் மே மாதத்தில் நடை பெறும் மாநில மாநாடு 1957 ஜனவரியிலேயே மதுரையில் கூடியது.

அப்பப்பா, மதுரை மாநாட்டைப்பற்றி நினைக்கும்போதே பெரிய மனக்கலக்கம்தான் ஏற்படுகிறது நமக்கு. "யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே" என்பதற்கேற்ப மதுரை மாநாட்டின் முக்கியத்துவத்தை அதிகப்படுத்த சிலபல சம்பவங்கள் ஏற்பட்டன. அதன் விளைவாக நமது சங்கநிர்வாகி கள் பதவியிலிருந்து விலகவேண்டிய ஒரு நிலையும் எற்பட்டது.

மாறுபட்ட கருத்துடைய முத்தரப்பு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் பேச்சுகளை அன்று நாம் கேட்டோமேதவிர நமக் கென நாம் ஓர் தனிவழி வகுத்துக் கொண்டோம். அரசியல் கட்சிகளையும் அவற்றின் தலைவர்களையும் நாம் பயன்படுத்திக்

கொள்வோமேதவிர நம்மை அவர்கள் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் ஆகமாட்டோம் என்பதை மதுரை மாநாடு தெள்ளத்தெளிய உணர்த்துகிறது. அத்தோடு மதுரை மாநாட்டின் மற்றுமோர் சிறப்பு என்னவென்றால் இன்று பூத்துக்குலுங்கி புதுமணம் பரப்பிக்கொண்டிருக்கும் தென் ராஜ்ய என். ஜி. ஓ சம்மேளனத்துக்கு மதுரை மாநாடு அடிப்படையமைத்துதந்தது. அங்கேதான் நமது சங்கத்தை தொழிற்சங்கமாகப் பதிவுசெய்து கொள்ளவேண்டும் என்ற தீர்மானமும் நிறைவேறியது.

மதுரை மாநாட்டைத் தொடர்ந்து நாம் எழுப்பிய உரிமைக்குரல் ஆட்சியாளரை உலுக்கி வைத்ததையும், அதன் விளைவாக மற்றுமோர் ஏழு ரூபாய் பஞ்சப்படியில் உயர்த்தப் பட்டதையும் நான் உனக்கு விளக்க வேண்டிய அவசியமில்லை யென்றுதான் கருதுகிறேன். அடுத்தடுத்து நமக்கு கிடைத்த இந்த பன்னிரண்டு ரூபாய் உயர்வு நம்முடைய நீண்டநாள் கோரிக்கையான பஞ்சப்படியில் பாரபட்சம் காட்டாதே என்பதை நிறைவேற்றும் வகையில் இல்லாவிட்டாலும், அரசாங்கம் தேர்தல் காலத்தில் தன்னுடைய முழுக்கவனத்தை யும் செலுத்திக்கொண்டிருந்த காரணத்தால் இதற்குமேல் அவர்களுக்குத் தொல்லை கொடுக்க நமது உள்ளம் துணிய வில்லை.

ஆனால் நம்முடைய இந்த பெருந்தன்மையை ஆள வந்தார்கள் உணர்ந்தார்களா என்றால் இல்லையென்றே பிறகு நடந்த நிகழ்ச்சிகள் விளக்குகின்றன. மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு சென்ற ஆண்டின் பிற்பகுதியில் ஐந்து ரூபாய் பஞ்சப்படி உயர்வு அளிக்கப்பட்டது. அந்த உயர்வை நமக்கும் அளிக்கவேண்டுமென சர்க்காரால் (விட்லி கவுன்சில் முறையில்) அமைக்கப்பட்ட கூட்டு ஆலோசனைக் குழு யோசனை கூறியது. இந்த யோசனையை அமுல் நடத்த மறுத்துவிட்டனர் அரசியலார். இதேபோல நியமிக்கப்பட் டிருக்கும் மத்திய இரண்டாவது சம்பளக் கமிஷனில் எங்க

ளுடைய பிரச்சினைகளையும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளுங்கள் என்ற கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டது அல்லது எங்களுக்கென தனி சம்பளக் கமிஷனாவது அமையுங்கள் என்றால் அதற்கும் பதிலில்லை.

இத்தகைய ஒரு நிலையிலேதான் கோரிக்கை தினம் கொண்டாடி, கண்டனநாள் நடத்தி, மறுப்புதினம் அனுஷ்டித்து எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்து சர்வகட்சிக் கூட்டம் நடத்தி இத்தனை ஜனநாயக முறைகளிலும் அரசியலாருக்கு தெரியப்படுத்தியும் கேளாக்காதினராக அவர்கள் இருந்த நிலையால் 6—4—1958ல் ஈரோட்டில் கூடிய மத்திய செயற்குழுவில் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

ஆனால் கடைசி நேரத்தில் கனம் காமராஜரை சந்தித்ததன் விளைவாக வேலை நிறுத்தத்தை கைவிட்டு விட்டனர் நமது சங்கமேலிட நிர்வாகிகள். உருவாகிவந்த பெரும் சக்தியை உருக்குலைத்துவிட்டனர் என ஒரு சாரார் கருதுகின்றனர். பொறுப்புமிக்க ஊழியர்களாகிய நமது மிகப்பெரிய தியாகம் என மற்றோர் சாரார் சொல்லுகின்றனர் இனி கிளர்ச்சி நடத்த வழியே இல்லையென முதல் சாரார் கூறிகின்றனர். இனிமேல் தான் பக்கபலமும், ஆத்மபலமும் இன்னும் அதிகமாகிறதென இரண்டாம் பகுதியினர் குரல் தருகிறார்கள். இந்த இருசாராரும் ஒரு சேர சேலத்தில் கூடுகின்றனர். என்ன முடிவெடுக்கப் போகிறார்கள் என்பதை அறிய நாடு காத்திருக்கிறது தொண்டர்கள் துடிதுடித்து நிற்கின்றார்கள்; பத்திரிக்கைகள் பரப் பரப்பான செய்திகளை எதிர்பார்த்த வண்ணமிருக்கின்றன.

அதுமட்டுமல்ல மாநாடு கூடும் வேலையிலே மற்றுமோர் செய்தியையும் நம் முன் கொண்டுவந்திருக்கிறார்கள். அரசாங்க ஊழியர்கள் தொழிற்சங்கமாக இயங்குதல் கூடாதாம். விசித்திரமான உத்தரவைப் போட்டுவிட்டு வேடிக்கை பார்த்தவண்ணம் தூரத்திலே இருக்கின்றார்கள்.

பாவம் அவர்களுக்கும் ஏதாவது பதில் சொல்லியாக வேண்டும், சேலம் மாநாட்டிலே கூடும் பிரதிநிதிகளுக்கு இந்தப் பிரச்சினை யும் ஒரு சவாலாகத்தான் இருக்கப்போகிறது

நீ ஆவலொடும் எழுச்சியோடும் சேலம் அடைந்திருப்பாய், சனிக்கிழமை இரவுக்குள் என்னுடைய வேலைகளை முடித்துக் கொண்டு நிகழ்ச்சிகளைக்காண ஓடோடி வருகிறேன். எழுச்சி எப்படியும் என்னை சேலத்திற்கு அழைத்துக்கொண்டு வந்து விடும் என்பதை நான் நிச்சயமாக நம்புகிறேன்.

சந்திப்போம் சேலம் மாநாட்டில் !

சிந்திப்போம் நமது எதிர்காலம் குறித்து !

(22—6—58ல் 36-வது மாநில என்.ஜி ஓ. யூனியன் மாநாடு சேலத்தில் நடைபெற்றபோது வெளியான மலரில் எழுதப் பட்ட கட்டுரை)

---

# இலட்சியப் பாட்டை

செயல் வீரர்கள் மிகுந்த கிருஷ்ணகிரியில் அக்டோபர் பதினைந்தாம் நாள்கூடி தமிழ்நாடுஅரசிதழ் பதிவிலா அலுவலர் ஒன்றியத்தின் மத்திய செயற்குழு நிறைவேற்றிய முடிவினை ஒட்டி 1972 டிசம்பர் பதினுன்காம் நாள் தமிழ்நாடு முழுதும் இருநூற்றுக்கு மேற்பட்ட இடங்களில் கோரிக்கை நாள் கூட் டங்கள் சிறப்பாக நடைபெற்றிருக்கின்றன. இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் ஐந்தம்சக் கோரிக்கைகள் கொண்ட அட்டைகளை அணிந்துகொண்டு அலுவலகங்கள் சென்றதன் மூலம் தங்களுடைய எழுச்சியையும், உணர்ச்சியையும் வெளிப்படுத்தியிருக்கின்றனர். நம்மோடு தமிழ்நாடு அரசு கடைநிலை ஊழியர் சங்கம், அரசு ஊர்தி ஓட்டுநர் சங்கம், ஆசிரியர் மன்றம், செவிலியர் சங்கம், செவிலிய உதவியாளர்

சங்கம், வணிக வரித்துறை அலுவலர் சங்கம், போக்குவரத்துத் துறை ஊதியர் சங்கம்போன்ற பல்வேறு அமைப்புகள் இந்தக் கோரிக்கை நாளில் பங்குகொண்டு துணைநின்ற பான்மை எண்ணி மகிழத்தக்க ஒன்று

இந்தக் கோரிக்கை நாள் எழுச்சி கண்டு தீவிரவாதிகள் என்று கூறிக்கொள்ளும் தகிடுதத்தப் பேர்வழிகள் சிலர் இதன் வெற்றியை சிதைக்க எண்ணி வெற்குரவாரம் நடத்த முயன்று தோல்வியுற்ற கதை பரிகசிக்கத்தக்க ஒன்ருக அமைந்து விட்ட பரிதாபம் ஒருபுறம்! அவலை நினைத்து உரலை இடித்த கதையாக இலாக்காப் பிரச்னைகளிலே கோபதாபம் கொண்டு எதற்குக் கோரிக்கை நாள் என்று புரியாமல்—அறிக்கைவிட்டு தாண்டி குதிக்க முயன்று—தடுமாறி விழுந்த ''தாவூத்''கள் ஒருபுறம்! இவற்றையெல்லாம் மீறித்தான் கட்டுப்பாடோடு—காரிய உணர்வோடு கோரிக்கை நாள் சிறப்புற நடைபெற்றிருக்கிறது.

புதிய புதிய சிந்தனைகள்—புதிய கோணத்தில் பிறக்க இந்நாள் துணை செய்தது. போனஸ் பிரச்சனையில் மாநில அரசு ஊழியர்கள் கொண்டிருக்கும் வேகத்தையும்—இந்தியாவில் பிற மாநில அரசு ஊழியர்களுக்கு வழிகாட்டியாக புதிய முழக்கத்தை தெளிவோடு—துணிவோடு எழுப்பிய பான்மையை நல்ல தொழிற்சங்கத் தலைவர்கள் வரவேற்கின்றனர்: பாராட்டுகின்றனர். உற்பத்தியோடு தொடர்பு உடையதுதான் போனஸ்—லாபத்திலே பங்கு கேட்பதுதான் போனஸ் என்ற கருத்து நேற்றைய நிலவரமாக—கடந்தகால விமர்சனமாக மாறிவிட்டது. காலங்கழித்துக் கிடைக்கும் ஊதிய உயர்வின் மிச்சத் தொகைதான் போனஸ் என்ற கருத்து அலட்சியப்படுத்த முடியாத கருத்தல்ல. இதைவிட இன்னும் கொஞ்சம் தீவிரமாக போனஸ்—ஒரு சமுதாய நீதி என்று தமிழ் நாட்டிலிருந்து சென்ற திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் நாடாளு மன்றத்தில் குரல் எழுப்பியது நம்முடைய கரங்களுக்கு வலிவூட்டுகிறது; குரலுக்குப் புதுத் தெம்பூட்டுகிறது

"லாபமோ நஷ்டமோ எது வந்தாலும் எல்லா அமைப்புகளும் நிறுவனங்களும் குறைந்தபட்ச போனஸ் கொடுக்க வேண்டியது கட்டாயம் என்ற நிலை வந்தபிறகு இந்தப் பிடியிலிருந்து முன்மாதிரி எஜமானர்களாக நடந்துகொள்ள வேண்டிய அரசினர் தப்பித்துக்கொள்ள முடியாது என்பதைக் காலம் சில கடந்தாவது "இந்தியன் எக்ஸ்பிரஸ்" போன்ற நாளிதழ்கள், தலையங்கங்கள் மூலமாக வற்புறுத்தத் தொடங்கிவிட்டன. நம்மிலே பலர்கூட கிடைக்குமா? சாத்தியமா? கேட்கலாமா? என்றெல்லாம் அச்சத்தோடும்—ஆயாசத்தோடும் வினா எழும்பியவர்களை நாம் சந்திக்க வேண்டிய நிலை ஏற்படத்தான் செய்தது. லட்சியம் நியாயமானதாக இருக்கும் போது—கோரிக்கை தேவையான ஒன்ருக இருக்கும்போது கேட்பது நம் கடமை, பெறுவது நம் உரிமை என்ற உணர்வோடு வாதாடுவோம். இந்த மாதம் கிடைக்குமா, அடுத்த ஆண்டு கிடைக்குமா என்றெல்லாம் கேட்டால் ஆருடக்காரர்களைப்போல் பதில் சொல்ல நாம் தயாராயில்லை. ஆனல் 'ஏண்ணிய எண்ணியாங்கு எய்தவர்; எண்ணியர் திண்ணியராகப் பெறின்" என்ற குறள் வரிகளையே நாம் அவர்கட்குக் காணிக்கையாக்குவோம்,

திலகரும், கோகலேயும், வ உ. சி. பாரதியும் சுதந்தரம் வேண்டி—சுடர்முகம் தூக்கி நின்றனர். தாங்களே பயன்பெறுவோம் என்று அவர்கள் எண்ணியதில்லை. பலனில்லாத கோரிக்கை என்று அதைவிட்டு விலகிச் சென்றவரும் இல்லை. எனவே தேவையின் அடிப்படையில் பிறக்கின்ற உரிமை உணர்வுகளுக்கு கால நிர்ணயம் கிடையாது. அந்த அடிப்படையில் லட்சியப் பாட்டையில் போனஸ் புதிய கோரிக்கை—பொலிவுள்ள கோரிக்கை என்ற உள உறுதியோடு வற்புறுத்துவோம்; அதற்கு வழிவகுத்த கோரிக்கை நாள் சிறப்புற அமைந்ததை எண்ணிப் பெருமைப்படுவோம்.

(1973 ஜனவரி பொது ஊழியன் இதழில் வெளிவந்தது.)

# செய்தித்தாள்களும் நாமும் !

நம் நாட்டினுடைய பொதுக் கருத்தை உருவாக்குவதில் நாளிதழ்கள் எடுத்துக்கொள்கிற பங்கும் பணியும் மிக முக்கிய மானது என்பதை மறந்துவிடக் கூடாது அதுவும் கல்வி யின் ஆழம் தீவிரமாக உருவாக முடியாமல் - அதற்கு முன்னுலேயே மக்களாட்சித் தத்துவத்தின் கிளைகள் பரந்து நிற்கும் இந்த நாட்டில் செய்தித் தாள்களின் சிறப்பை உணர்ந்து அதனைப் பயன்படுத்திக்கொள்ள நாம் தவறிவிடக் கூடாது.

கடந்த சில ஆண்டுகளாகப் பத்திரிக்கைகளில் நமது என். ஜி ஓ. இயக்கத்தைப் பற்றிய செய்திகள்-விமர்சனங்கள் விரிவாக வரவில்லை என்பதனையும் - இக்குறை கடந்த ஆறு மாத காலமாகப் போக்கப்பட்டு என். ஜி. ஓ. ஒன்றியச் செய்திகள் மிகுதியாக வெளிவருவதையும் நம்முடைய உறுப் பினர்கள் பலர் எடுத்துக் காட்டுகிறுர்கள். மகிழ்ச்சியுறு கிறுர்கள்.

ஆனுலும் தமிழ்நாட்டில் உள்ள நாளிதழ்கள் குறைந்த சம்பளம் வாங்கும் அரசு ஊழியர்களுடைய தேவைகளையும், கோரிக்கைகளையும் செய்திகளில் மட்டுமல்லாது இப்போதைய நிலையில் தலையங்கங்கள் மூலமாகவும் வலியுறுத்த வேண்டு மென்று வற்புறுத்த நாம் கடமைப்பட்டுள்ளோம்.

''வாழ்க்கைச் செலவு பல மடங்கு அதிகரித்துவிட்டது என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வார்கள். அன்றுட தேவை களான அரிசி, பருப்பு, காய்கறி முதலிய எல்லா பொருள்களின் விலைகளும் உயர்ந்துவிட்டன. எனவே விலைவாசி உயர்வுக்குத் தக்கபடி சம்பள உயர்வு கொடுக்க வேண்டும்'' என 13-5-64ல் ''தினத்தந்தி'' இதழ் தலையங்கம் எழுதியது.

''விலேவாசிப் பிரச்சிஃனயை சமாளிக்க முடியாமல் குறைந்த வருமானக்காரர்கள் திண்டாடுகிருர்கள்- அவர்கள் அனைவருக்கும் நிவாரணம் கிடைக்கும் வழியில் இந்தப் பிரச்சிஃனக்குத் தீர்வுகாண வேண்டும். ஆனுல் இது பொதுப் படையான, பெரிய பொருளாதாரப் பிரச்சிஃன என்று வாதாடலாம். சமாதானம் கூறலாம். எப்படி இருந்தாலும் மாதச் சம்பளத்தை நம்பி வாழ்க்கை நடத்தும் சர்க்கார் ஊழியர்கட்கு ஓரளவுக்காவது நிம்மதி ஏற்படும் வகையில் கிராக்கிப்படி விகிதம் அமையவேண்டும்'' என்று 12-5-64ல் ''நவமணி தலையங்கம்'' எழுதியது,

''மத்திய சர்க்காரிடம் அதிக பணம் இருக்கிறது. அவர்கள் அதிகமாகக் கொடுக்க முடிகிறது. மாநில சர்க்கார் ஏழைகள் - அவ்வளவு கொடுக்க முடியாது என்ற வாதத்தை ஏற்றுக்கொள்வதற்கில்லை, இரண்டு தனிப்பட்ட கம்பெனி களேயோ, தொழிற்சாலைகளேயோ பொறுத்தவரை வேற்று மையை ஒப்புக்கொள்ளலாம். ஒரு கம்பெனி அதிக லாபம் சம்பாதிக்கிறது; ஆகவே அதிக ஊதியம் கொடுக்கிளுர்கள். மற்ருெரு கம்பெனிக்கு அவ்வளவாக வருமானமில்லை. ஆகவே அங்கே குறைவான ஊதியம் கொடுக்கிருர்கள் என்ருல் ஓரளவு ஒப்புக்கொள்ளலாம். ஆனுல் நமது அரசாங்கம் இதைக்கூட ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லை ஒரே தொழி வில் ஒரேவிதமான வேலைகளுக்கு ஒரே அளவான ஊதி யங்கள் கொடுக்கப்பட வேண்டும் லாப நஷ்டத்தைமட்டும் எதிர்பார்த்தால் போதாது. வேலைக்குத் தகுந்த ஊதியம் கொடுக்கப்பட வேண்டும் என்று ஊதிய போர்டுகளை நியமிக் கிறது. அவ்வாறிருக்கும்போது ஒரே நாட்டின் நிர்வாகத்தை நடத்தும் மத்திய—மாநில அரசு ஊழியர்களுக்கிடையே மட்டும் வேற்றுமை காட்டுவது நியாயமாகாது. இவை இரண்டும் நாட்டு நிர்வாகத்தின் வெவ்வேறு பகுதிதான். இரண்டையும் சேர்த்துத்தான் பொதுமக்கள் ''சர்க்கார்'' என்று அழைக்கிருர்கள், மாகாண சர்க்கார் போட்டாலும் மத்திய சர்க்கார் போட்டாலும் வரியைக் கட்டுகிருர்கள்.

ஆகவே இரு சாரார் பெறும் ஊதியத்தில் ஏற்றத்தாழ்வு இருப்பது சரியல்ல. அவ்வேற்றுமையை பாராட்டுதலால் நிர்வாக இயந்திரத்தின் திறமையே பாதிக்கப்படுகிறது.

"மத்திய சர்க்கார் ஊழியர்கள் அதே வேலையைச் செய்தும் தங்களைவிட அதிக வருமானம் பெறுகிறார்கள் என்பதைக் கவனிக்கும்போது மாநில சர்க்கார் ஊழியர்களிடையே மனக்கசப்பும். மனத்தளர்ச்சியும் ஏற்படுகிறது, உற்சாகம் குறைகிறது. சரிதான் இவர்கள் கொடுப்பதற்கு இந்த உழைப்பு போதாதா? என்ற அலட்சிய மனப்பான்மை ஏற்பட்டு கட்டுப்பாடு குறைந்து விடுகிறது" என்று 24—5—64 இதழ் ஆனந்த விகடன் தர்க்கரீதியான தலையங்கம் எழுதியிருக்கிறது.

இதேபோல் ஹிந்து, மெயில். முரசொலி, மித்திரன் போன்ற பல்வேறு இதழ்களும் அந்த நேரத்தில் எழுதியுள்ள வாசகங்களையெல்லாம் சிறிதளவில் எடுத்துக்காட்டினாலும் இங்கே இடம் போதாது. விலைவாசி உயர்வையும், அகவிலைப் படியையும்பற்றி அந்த ஏடுகள் என்ன எழுதினவோ அதே நிலைதான் இன்னமும் நீடிக்கிறது என்பதை எவரும் மறந்து விடக்கூடாது. எட்டாண்டுகள் ஓடிவிட்ட பின்னரும் விலைவாசியைக் கட்டுப்படுத்த எவராலும் முடியவில்லை. அதுவும் ஊதியக்குழு பரிந்துரைகள் அமுலாகி ஓராண்டு முடிந்துவிட்ட பின்னர் கிடைத்த உயர்வு வணிகர்களாலும் வீட்டுவசதி வாரிய வாடகைக் கொள்கையினாலும், மற்றவற்றினாலும் பறிக்கப்பட்ட பரிதாபமான நிலையில்தான் அரசு ஊழியர்கள் உள்ளனர். விலைவாசி உயர்வை ஈடுகட்ட அண்மையில் மத்திய அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள நிவாரணம் மாநில அரசு ஊழியர்களுக்கு அளிக்க வேண்டும் என்று பெரிய ஏடுகள் எதுவும் இன்று குரல் எழுப்பவில்லை.

சேலம் மாநாட்டிலே நாம் காட்டுகிற எழுச்சியின் விளைவாக அந்த ஏடுகள் நமது அவலத்தை உணர்ந்து நியாயத்தை எழுதச்செய்ய வேண்டும், செகரேட்டரியட்

ஊழியர் சங்கம், ஆசிரியர் கூட்டணி, கடைநிலை ஊழியர் சங்கம், கால்நடை உதவியாளர் சங்கம், பட்டதாரி ஆசிரியர் கழகம் என்று 120க்குமேல் உள்ள எல்லா ஊழியர் சங்கங் களும் இந்தப் பொதுக் கோரிக்கைக்காக வாதாடுவதில் இதனை வலியுறுத்துவதில் ஒன்றுபட்டு நிற்கவேண்டும்.

நியாயத்தையும் நீதியையும் காலம் கடந்து பெறுவது நமக்கு நிவாரணமாகாது என்பதை உரிய நேரத்தில், உணர்த்த நாம் தயாராக வேண்டும் எழுச்சி பெறுதல் இன்றியமையாதது. எண்ணங்கள் இதயத்திற்குள்ளேயே இருப்பதால் யாருக்கும் பயனில்லை.

பெற்றுத் தீரவேண்டிய உயர்வு - அகவிலைப்படி உயர்வு !

அடைந்து தீரவேண்டிய சலுகை-அகவிலைப்படி உயர்வு !

அதனைப்பெற நாம் எடுக்கும் நடவடிக்கைகட்கு செய்தித் தாள்களின் ஆதரவை வேண்டுவோமாக! நடக்க இருக்கும் மாநாட்டில் எடுக்க இருக்கும் முடிவுகட்கு வலிவும், பொலிவும் தர அவை துணை நிற்குமாக !

(1972 பிப்ரவரி இதழ் 'பொது ஊழிய'னில்வெளிவந்தது.)

—o—

# உரிமையும் உணர்வும்

"வீட்டு வாடகைப்படியை இப்போதைக்கு உயர்த்துவதற் கில்லையென்று கூறிவிட்டாரே நிதியமைச்சர்".

"மருத்துவ மாதாந்தர அலவன்ஸ் பிரச்சனை பரிசீலிக்கப் படும் நிலையில்தான் இருப்பதாக முதலமைச்சர் கூறியிருக் கிறாரே !"

''ஜூலை மாதத்தில் நிதிக்குழு அறிக்கை வந்த பின்தான் ஊதியக்குழு அமைப்பதைப்பற்றி ஆலோசிக்க முடியும் என்று இருவருமே சேர்ந்து கூறிவிட்டார்களே!''

—இப்படிப்பட்ட பேச்சுக்கள் இன்றையதினம் என்.ஜி.ஓ; சமுதாயத்தினரால் எங்கு பார்த்தாலும் பேசப்படுகின்றன. மண் ணெண்ணெய் வாங்க ''கியு''விலே நிற்கும் என்: ஜி ஓக்கள்— நியாயவிலைக் கடைகளிலே் அரிசி தீர்ந்துவிடப் போகிறதே என்ற அச்சத்தோடும். ஆயாசத்தோடும் கூடிநிற்கும் அரசு ஊழியர்கள்—கையிலே கொண்டுவந்த கால் வயிற்றுச் சிற் றுண்டியைச் சாப்பிட்டுவிட்டு, மரத்தடிக் காற்றையாவது உண்டு மகிழலாம் என ஓய்வெடுக்கும் என். ஜி. ஓக்கள் அனைவர் மத்தியிலும் இந்தக் குரல்—இந்த ஒலி, இதயத்தின் அடிதளத்திலிருந்து பீறிடுகிற சோக உணர்வுடன் வெளி வருகிறது.

யாரை யார் நொந்து கொள்வது ? நாம் இல்லாமையோடு, போதாமையோடு, வாழ்க்கைச் சுமையோடு. வறுமைத் தவிப் போடு போராடுகிறோம். அரசினர் அதிக வருமானம் தேவை யென்று, மாநில சுயாட்சி தேவையென்று, மத்திய வரி வசூலில் நிறைய மான்யம் தேவையென்று, ஐந்தாண்டு திட்டத்தில் அதிக ஒதுக்கீடு தேவையென்று போராடுகிறார்கள். ஒரு போராட்டத்தை தாங்கள் நடத்துவதைக் காரணம் காட்டி அரசு ஊழியர்களுக்கு அளிக்க வேண்டிய உதவிகளை-உரிமை களை மாநில அரசு மறுப்பதற்கில்லை.

நேசம் நிறைந்த நெஞ்சினர் ஏ. எல் முதலியார்—பாசம் நிறைந்த ஆளுங்கட்சி உறுப்பினர் சி. வி. ராஜகோபால் ஆகியோரெல்லாம் மேல் சபையில் எதிர்த்தும் கல்லூரிப் புதுமுக வகுப்பில் எல்லோர்க்கும் இலவசக் கல்வியை அமுல் படுத்தியிருக்கின்றனர் அரசினர், துண்டுவிழும் பட்ஜெட் எனினும்; இது மக்களுக்குச் செய்யவேண்டிய நியாயமான தேவை என்பதை அவர்கள் உணர்கின்றனர். அதேபோலத்

தான் அரசு ஊழியர்களுக்கு வீட்டு வாடகைப்படியை உயர்த்த வேண்டியது மிக நியாயமான அடிப்படைத் தேவை என்பதை நாம் வலியுறுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம்.

நிதி அதிகம் இல்லையென்றாலும்கூட நான்கு கல்லூரிகள் தொடங்கப்படுகின்றன. பல தொழில்பேட்டைகள் உருவாக்கப்படுகின்றன. மக்கள் நலனுக்கான திட்டங்கள் இன்னும் பல உருவாக்கப் பட்டுள்ளன. ஆனால் என். ஜி. ஓக்களின் நலன் என்னாயிற்று ? நாங்களும் மக்களில் ஒரு பகுதியினர் தானே ? எங்களுக்கு மருத்துவ அலவன்ஸ் அளித்திருந்தால் எவ்வளவு மகிழ்ச்சியோடு இருந்திருப்போம்'' என்று என். ஜி. ஓக்கள் வேதனையோடு கூறுவதில் நியாயம் இருக்கத் தான் செய்கிறது என்பதை யாரும் ஒப்புக்கொள்வார்கள்

விவசாயி நெல் அறுவடை முடிந்தவுடன் கடலைப் பயிரைப் போடுகிறான் ; உளுந்து பயிரிடுகிறான். இவற்றோடு ஓய்வு நேரத்தில் நிலைக்குத் தக்கபடி சிறிய கடையோ, பெரிய கடையோ வைத்து வியாபாரம் செய்கிறான். ஆனால் பரிதாபத் துக்குரிய என். ஜி. ஓ பகுதிநேர வேலை செய்ய முடியுமா ? கடைவைக்க முடியுமா ? வியாபாரம் செய்ய முடியுமா ? அவனுக்கு நேரமேது ? நினைப்பேது ? நேரமும் நினைப்பும் இருந்தாலும் சட்டம் இடம் கொடுப்பதில்லை. என். ஜி. ஓக்கள் முழுக்க முழுக்க அரசு ஊதியத்தையே நம்பியிருப்பவர்கள். எனவே மற்ற சாதாரண விவசாயியைவிட, தொழிலாளியைவிட என் ஜி ஓவை வறுமை அணுகாது பார்த்துக் கொள்ள வேண்டியது அரசின் கடமை,

ஜூலையிலே மகாவீர் தியாகியைத் தலைவராகக் கொண்ட ஐந்தாவது நிதிக்குழுவின் அறிக்கை வெளிவந்தபின் ஊதியக் குழு அமைப்பதைப்பற்றி ஆலோசிப்போம் என்று கூறப்பட்டிருக்கிறதே தவிர ஜூலையிலே சம்பளக் கமிஷன் அமைப்போம் என்று உறுதி கூறவில்லை 1959-லே நமக்கு ஊதியக் குழு அமைக்கப்பட்டது- அதற்குப் பிறகு நமது அண்டை மாநிலங்களாகிய கேரளாவிலும், மைசூரிலும் இரண்டுமுறை

அல்லவா ஊதியக்குழு அமைக்கப்பட்டது, அவர்களும் நிதிக் குழுவை எதிர்பார்ப்பவர்கள் தான். அதுவும் குறிப்பாகக் கேரள அரசு நம்மைவிடப் பொருளாதார நெருக்கடிகள் அதிகம் கொண்டது. இருப்பினும் அரசு ஊழியர்களின் அவலநிலை உணர்ந்து அங்கெல்லாம் ஊதியக்குழு அமைக்கப்பட்டது.

அரசு ஊழியர்களின் அவல நிலையை அவர்களாக உணர்ந்தார்கள் என்பதைவிட, உணர்த்துவிக்கப்பட்டார்கள் என்பதுதான் சரி. கேரளா, மைசூர் என் ஜி ஓக்கள் தங்களுடைய ஸ்தாபனத்தை நம்பினர். சங்கத்தை வளர்த்தனர், அதன்மூலம் நன்மைகள் பெற்றனர்,

ஆனல் நாம்...... மரத்தடியிலே கேள்வி கேட்பதோடு நிர்வாகிகளை சந்திக்கிற நேரத்தில் ஆயாசப்படுவதோடு விட்டு விடுகிறோம். யூனியன் அலுவலகம் எங்கேயிருக்கிறது, யூனியன் நிர்வாகிகள் எப்படிக் காரியங்களைச் செய்கிறார்கள். பொதுக்குழுக் கூட்டங்களிலே உணர்வு பூர்வமாக—தர்க்கரீதியாக நம்முடைய பிரச்சனைகள் விவாதிக்கப்பட்டு முடிவெடுக்கப்படுகிறதா என்பதிலே அக்கரை காட்டுவதில்லை.

சம்பளம் உயர்கிறதா என்று கேட்பவர்களிலே பலர் யூனியனுக்கு சந்தா கொடுக்காதவர்களாகவே இருக்கின்றனர். பஞ்சப்படி உயருமா என்று கேட்பவர்களிலே பலர் நமது பத்திரிக்கையான "பொது ஊழிய"னைப் படிக்காதவர்களாகவே இருக்கிறார்கள்.

"நாடு உனக்கு என்ன செய்தது என்று கேட்காதே! உன்னால் நாட்டுக்கு என்னசெய்ய முடிந்தது என்று எண்ணுக!" என்று கூறினான் ஜான் கென்னடி. நாம் அந்த அளவுக்குக் கூடப் போகவில்லை. "சங்கத்தினால் நாம் பெற்ற நன்மைகள் என்ன என்று கேட்ட பிறகாவது-சங்கத்திற்கு நம்மால் என்ன முடியுமோ அதைச் செயல்படுத்துங்கள்" என்றுதான் கூறுகிறோம்.

"ஆண்டு சந்தா இரண்டு ரூபாயா? யாரைக் கேட்டு அதி கரித்தார்கள்?" என்று கூறுவோர் அதிகமிருக்கும் வரையிலும் நமது தேவைகள் காலதாமதத்துடன் தான் கிடைக்குமோ என்ற ஐயம்தான், உணர்வு படைத்தவர்களுக்கு எழும்புகிறது,

கடைநிலை ஊழியர்கள் தங்கள் சங்கத்திற்கு ஆண்டு சந்தாவாக மூன்று ரூபாய் கொடுத்து வருவதை ஏன் மறந்து விடுகிறார்கள்? எல்.ஐ சி ஊழியர்களும் ரயில்வே தபால் சிப்பந்திகளும், பாங்குகளில் பணியாற்றுவோரும் தங்கள் சங்கத்தைக்கட்டிக் காப்பதிலே ஒன்றுபட்ட உணர்வோடு பாடுபட்டதனால்தான் இன்றைய தினம் பல நன்மைகளைப் பெற்றனர்.

இந்தியாவில் 50 பேருக்கு ஒருவர் அரசு ஊழியராகவோ அல்லது அரசுசார் ஊழியராகவோ இருக்கிறார்கள். மத்திய அரசு ஊழியர்கள் 26.83 லட்சம் மாநில அரசு ஊழியர்கள் 37.16 லட்சம், அரசுசார் நிறுவனங்களைச் சேர்ந்தவர் 14.28, ஸ்தல ஸ்தாபன சிப்பந்திகள் 17 55 லட்சம் பேர் உள்ளனர்.

இந்தப் பெரும்படையில் ஒரு பெரும் பிரிவினராகிய நாம் உள்ள உறுதியோடு ஒன்றுபட்டால் எத்தனையோ கோரிக்கை களில் இன்னும் நல்ல வெற்றி காணலாம். வெட்ட வெளியில் கொட்டும் பணியில் வீராவேச அரசியல் பேச்சுக்களைக் கேட் பதில் ஆர்வம் காட்டும் என்.ஜி ஓ. தன்னுடைய வாழ்க்கையின் எதிர்காலத்தைப் பற்றி நிர்ணயிக்கும் சங்கக் கூட்டங்களுக்கு வருவதற்குத் தயக்கம் காட்டினால் ஒளிமிக்க எதிர்காலம் என்பது கானல் நீராய்த்தான் போகும் சினிமாப் பத்திரிக்கை களையும், காதற்கதைப் பத்திரிக்கைகளையும் வாங்குவதற்குப் போதாமைக்கிடையே மாதம் பத்து ரூபாய்க்குமேல் செல வழிக்கும் என் ஜி ஓ தனது வாழ்க்கைப் பிரச்சனைப் போராட் டங்களைத் தெளிவுபடுத்துகின்ற 'பொது ஊழியன்' இதழ் வாங்க ஆண்டுக்கு ஆறு ரூபாய் செலவழிக்க யோசித்தால் கிடைக்கவேண்டிய பலன்கள் தள்ளிப்போடப்படுகின்றன என்றுதான் பொருள்.

யாரோ ஊருக்கு 4,5, பேர் என். ஜி.ஓ: சங்கம் என்று பாடு படுகிறுர்கள். எல்லோர்க்கும் கிடைக்கவேண்டிய பலன் நமக்கு மட்டும் வராமல் இருக்கப் போகிறதா என்ற சலிப்பு மனேபாவத்துக்கு சாவுமணி அடித்தால்தான் நமது சமுதாயம் உருப்படும்.

பாதிரிமார்கள் எதையும் பொருட்படுத்தாமல் தொடர்ந்து மதப் பிரச்சாரம் செய்து வருவதுபோல் விடாப் பிடியாக யூனி யன் கருத்துக்களை-செயல்களை ஒரு சிலர் கூறிக்கொண்டு வரு கிறோம். எனினும் பல இலாக்காக்களாகப் பிரிந்து 1(0க்கும் மேற்பட்ட வகையினராகப் பாகுபடுத்தப்பட்டுள்ள நமது சமு தாயம் உரிமைகளைப் பெற முழு உணர்வு கொள்வதென்பது இன்னமும் நனவாகாத கனவாகவே இருக்கிறது

1960ம் ஆண்டிலே 45 ரூபாயாக இருந்த கீழ்நிலை எழுத் தரின் சம்பளம் 90 ரூபாயானவுடன் இதைவிட அரசு இனி எதையும் அதிகமாக செய்துவிட முடியாது என்ற பலகீனமான, தாழ்மை உணர்ச்சி நம்மிலே பலருக்கு அரும்பிவிட்டது. அவ் வப்போது கொடுக்கப்படும் அகவிலைப்படி உயர்வு ஏதோ சம் பிரதாய விதி என்ற தவருன எண்ணம் பல தோழர்களுக்கிருக் கிறது. இவற்றிஞல் எல்லாம் ஒரு தேக்கம் ஏற்பட்டுவிட்டது தேக்கம் வியாதிக்கு அறிகுறி

நம்முடைய உணர்வு பெருக்கெடுத்தோடுமாஞல், நிதிப் பற்ருக்குறை என்ற மாய்மால மணல் திட்டுக்களையெல்லாம் அடித்துக்கொண்டு இலட்சியப் பேராழியை அடையக்கூடிய வல்லமை நமக்கு உண்டு. தங்கம் சாதிக்காததை சஙகம் சாதிக்கும் என்பதை உணரவேண்டும் சங்கம் வாழ்ந்தால், வளர்ந்தால்தான் நாம் வாழ்வோம், வளர்வோம் என எண்ணு தல் வேண்டும். 'தன் பெண்டு, தன் பிள்ளை, சோறு, வீடு, சம்பாத்யம் இவையுண்டு• தானுண்டு' என்றிராமல் சமுதாய நன்மைக்காக என்ன செய்யமுடியும் என்பதை எண்ணிப் பாருங்கள்!

உரிமை பெரிது; அந்த உரிமையை அடைவதற்கான உணர்வு அதையும் விடப் பெரிது. இதை உணர்ந்தால் இலட்சிய சித்தி என்பது மிக மிக எளிதானது.

உணர்வு கொள்வோம்!

உரிமை பெறுவோம்!!

(1969 ஏப்ரல் 'பொது ஊழியன்' இதழிலே வெளிவந்த கட்டுரை)

---

# கேள்விக் குறி?

தமிழ்நாட்டில் அரசு—அரசு ஊழியர்களுக்கென நன்மைகள் பலவற்றைச் செய்திருக்கிறதென்ருலும், மனிதாபிமானத்தோடு பரிவுணர்ச்சியோடு கோரிக்கைகளை அணுகுகிறதென்ருலும் சுற்றுப் புறத்தையும்—சூழ்நிலையையும் பார்க்கும்போது இன்னமும் சில பிரச்சனைகள் இருந்துகொண்டுத்தான் இருக்கின்றன என்பதை நாம் உணர்கிருேம், நாடாள்வோருக்கு உணர்த்தக் கடமைப் பட்டிருக்கிருேம்.

குறிப்பாகத் தமிழ்நாட்டில் இப்பொழுது எங்கு பார்த்தாலும் அமைச்சுப் பணியாளர்கள் அரசால் சரிவரக் கவனிக்கப் படவில்லை என்ற குறைபாடு பரவலாகக் கூறப்படுகிறது. இது முற்றிலும் சரியா—தவரு என்பதில் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். 1960-க்கு முன்ஞல் ஒரு இளநிலை உதவியாளரின் சம்பளம் ரூபாய் 45-3 60 2-90 என்று இருந்தது. ஊதியத்தில் சேர்ந்தவுடன் 5 ஆண்டு காலத்துக்துக்கு 3 ரூபாய் ஆண்டு ஊதிய உயர்வு, அதற்குப் பிறகு 15 ஆண்டு காலத்துக்கு 2 ரூபாய்தான் ஆண்டு ஊதிய உயர்வு என்ற—பிற்போக்குத் தன்மைதான் பத்தாண்டு காலமாக மாற்றப் படாமலேயே இருந்தது. இதை மாற்ற வேண்டும் என்று பல முறை கூறியும் கேளாக் காதராகவே இருந்தனர் அன்றைய ஆட்சியாளர்.

ஆனால் 2—10—70ல் இளநிலை உதவியாளரின் ஊதியம் ரூபாய் 200-5-250-10-300 என்று மாற்றி அமைக்கப்பட்ட போது ஓரளவு நம்முடைய குரல் மதிக்கப்பட்டது என மகிழ்ந் தாலும் ரூபாய் 45-90 ஊதிய விகிதம் பெற்றுவந்த சிலர் ரூபாய் 210–325 என்ற நிலை பேறவே இளநிலை உதவியாளர்கள் அதி ருப்தி அடைந்தனர். 1971 ஏப்ரல் முதல் இதற்கென மாநில என். ஜி, ஓ. யூனியன் நிர்வாகிகள் போர்க்குரல் கொடுத்ததன் விளைவாக 1—9—72ல் இளநிலை உதவியாளர்கள் ஊதிய விகி தத்தை ரூபாய் 210-5-245 10-325 என மாற்றியமைக்க முதல்வர் கலைஞர் ஆணையிட்டார் என்பதை யாரும் மறக்க முடியாது; மறக்கக்கூடாது.

மூன்று ரூபாய் ஆண்டு ஊதிய உயர்வை ஐந்து ரூபாயாக மாற்ற வேண்டுமென பத்தாண்டு காலம் அடிவயிறு நோக 1960முதல் 70வரை கத்தியும் பலனில்லாத நிலையையும் 200-3 0 என்பதை 210-325 என இரண்டே ஆண்டு காலத்தில் உயர்வு பெற்றதையும் சீர்தூக்கிப் பார்த்தேயாகவேண்டும்,

அதேபோலத்தான் உதவியாளர்களின் சம்பளம் ரூ 125-5-175 எனத்தான் 1960முதல் 1970ம் ஆண்டுவரை இருந்தது ஆயிரக்கணக்கான உதவியாளர்கள் 1964-65ம் ஆண்டுகளிலேயே உதவியாளர்கள் சம்பளத்தில் உச்சபட்ச மான ரூ. 175-ஐப் பெற்றுவிட்டு எந்தவித மாற்றமும் இல்லா மலேயே இருந்துவந்தனர். 10 ஆண்டு காலத்திலேயே உச் சத்தை (Maximum) அடையக்கூடிய நிலைதான் 60-70ல் இருந் தது. அதை 2—10—70ல்தான் 15 ஆண்டு காலத்திற்கு ஆண்டு ஊதிய உயர்வு (Increment) கிடைக்கும்படியாக 250—10—400 என மாற்றமுடிந்தது. இரண்டாண்டு காலத் திற்குள் இதையும் ரூ. 250-10-300-15-450 என மாற்றினோம், மாற்றவைத்தோம் என்பதையும் யாரும் மறந்துவிடக் கூடாது.

அதேபோலக் கண்காணிப்பாளர்களின் ஆண்டு ஊதிய உயர்வும் ரூ. 350-15-425-25-600 என திருத்தியமைக்கப்பட்டு விட்டது இவையெல்லாம் இன்றைக்கு சிறிய விஷயங்களாக

இருக்கலாம், சாதாரண காரியங்களாக இருக்கலாம். ஆனால் 1948முதல் 1960ம் ஆண்டுவரை 1960ம் ஆண்டுமுதல் 1970 வரையில் இத்தகைய மாற்றங்கள் வேண்டும் வேண்டும் என வானும், மண்ணும் அதிர முழக்கமிட்டபோது, 100க்கு 99 பங்கு இம்மியளவுகூட நகர மாநில அரசு முன்வரவில்லை யென்ற பின்னணியை வைத்துத்தான் நாம் இதைப் பரிசீலிக்க வேண்டும்.

இத்தகைய பின்னணியை எடுத்துக் கூறுவதனல் அமைச்சுப் பணியாளர்களுக்கு அதிருப்தியில்லை என்று நாம் கூறிவிட முடியாது; நாடாள்வோரும் தட்டிக் கழித்துவிடக் கூடாது.

அரசுக்கு எப்படி முதுகெலும்பாக என்.ஜி ஓக்கள் விளங்கு கிறார்களோ அப்படி என் ஜி ஓக்களின் கேந்திரஸ்தானமாக—மையப் புள்ளியாக—உயிர்ப்பு சக்தியாக அமைச்சுப் பணி யாளர்கள் விளங்குகிறார்கள். மருந்தாளுனர்க்கு ஊதிய உயர்வு தந்தால், ரேடியோ கிராபர்களுக்கு பதவி உயர்வு வந் தால், செவிலியர்கட்கு சீருடைப்படி உயர்த்தப்பட்டால் லேபரட்டரி டெக்னிஷியன்களுக்குத் தேர்வு நிலை வழங்கப்பட் டால் அரசு உத்தரவு போடுமே தவிர—அலுவலகங்களிலே செயற்படுத்தி அரசு ஆணைகளை அமுல் நடத்த வேண்டிய வர்கள் அமைச்சுப் பணியாளர்கள்தான். மற்ற பிரிவினர், பெறுகின்ற நியாயமான சலுகைகளை, உரிமைகளை பாதுகாப்பு களைப் பார்க்கின்ற போது தாங்கள் புறக்கணிக்கப்படுகிறோம் என்ற எண்ணம் அமைச்சுப் பணியாளர்கள் மத்தியிலே உருவாகுமானல் நிர்வாக யந்திரம் பாழ்பட்டல்லவா போய் விடும்?

பஸ் கண்டக்டர்களுக்கும், டிரைவர்களுக்கும் கலெக்ஷன் பேட்டோ போனஸ் முறையைக்கொண்டுவந்தபோது வெளி யூர் பஸ்ஸை நடத்திக்கொண்டு செல்பவர்கட்கும், பணிமனைத் தொழிலாளர்கட்கும் கூடபொருந்தும்படியாக அந்தத் திட்டம் திருத்தியமைக்கப்படவில்லையா? ஏன், அதுபோன்ற மனோ

பாவம் அமைச்சுப் பணியாளர் கோரிக்கையை நிறைவேற்ற அரசுக்கு வரக்கூடாது?

மண்வளப் பாதுகாப்பு துணை உதவியாளர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளும்போதும், கலவை உர ஆய்வாளர்களின் ஊதிய மாற்றம் செய்யும்போதும் அவர்கள் எண்ணிக்கையில் குறைந்தவர்கள் என்பதால் மட்டுமல்ல; நியாயமும் அவர்கள் பக்கம் இருக்கிறது என்று உணர்ந்துதானே அரசு செய்தது? அமைச்சுப் பணியினர் கோரிக்கையில் நியாயம் இருக்கிறது என்பதை உணர்ந்தாலும் 30 ஆயிரம்பேர் என்ற எண்ணிக்கையைப் பார்த்து மிரள்வது நடுவு நிலை கொண்டிருக்க வேண்டிய அரசுக்கு அழகல்ல.

லோகல்பண்ட் ஆடிட்டர்களுடைய கோரிக்கையை அந்த இலாக்கா தலைவர் பரிந்துரை செய்கிறார்; வேளாண்மை உதவியாளர்களுடைய ஊதிய உயர்வுக்கு இயக்குநர் பரிந்துரை செய்கிறார், ஆனால் இளநிலை உதவியாளர்கட்கும், கண்காணிப்பாளர்கட்கும்; ஊதியமாற்றம் செய்ய எந்த துறைத் தலைவரும் பரிந்துரைசெய்ய முன்வரக்காணோமே என்று கூறப்படுகிறது! அமைச்சுப் பணியாளர்களின் (Common Category) தலைவிதி அதுதான்! ஆனால் தந்தையுமில்லை—தாயுமில்லை என்பதற்காக அந்த அனாதைக்குழந்தைகளை அப்படியே விட்டு விடலாமா? புராணிகர்கள் கதைப்படி சிவன், பிரம்மா, விஷ்ணு முதலிய பெருங்கடவுள்களுக்கு ஆதியும் அந்தமும் இல்லை; தாயும் இல்லை, தந்தையும் இல்லை அவர்களைப் போன்ற நிலையில் இருக்கிற அமைச்சுப் பணியாளர்கட்கு முதலமைச்சரும், தலைமைச் செயலரும் நிதித்துறைச் செயலரும்தான் வழிவகை செய்யவேண்டும்; வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரவேண்டும்.

ஆந்திரா, கேரளா, ஒரிசா முதலிய மாநிலங்களில் அண்மைக் காலத்தில் அமைச்சுப் பணியாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட ஊதிய விகிதங்களின் அடிப்படையில் தமிழ்நாடு அரசும் இங்கேயும் தக்க மாற்றங்களைச் செய்ய உடனடியாக முன்வர வேண்டும்.

1973க்குமுன் மத்திய அரசில் இருந்த இளநிலை உதவியாளர் உதவியாளர் கண்காணிப்பாளர் ஆகியோர் அடிப்படை ஊதியத்துக்கும் மாநிலஅரசில் இருந்த அதே நிலை ஊழியர்களுக்கும் ரூ. 20-5 என்றுதான் வேறுபாடு இருந்தது. ஆனால் இன்று ரூ 50, 75 என்று வேறுபாடு பெருகிவிட்டது, இதையெல்லாம் எண்ணும்போது தமிழ்நாடு அரசு தன்னுடைய அமைச்சுப் பணியாளர்களின் ஊதிய விகிதத்தை மாற்றியமைக்கவேண்டிய—உயர்த்தித் தரவேண்டிய கால கட்டாயம் நெருங்கிவிட்டது என்பதை உணர்த்த வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

அது மட்டுமல்ல, அமைச்சுப் பணியாளர்களுடைய பொதுவான பதவி உயர்வு வாய்ப்புகள்கூட எல்லாத் துறைகளிலும் ஒரேசீராக இருக்கத் தக்க நடவடிக்கைகள் எடுத்து உத்தரவு போட்டால்தான் பொருமையும், காழ்ப்புணர்ச்சியும் சமுதாயத்தில் குறையும்!

3 இளநிலை உதவியாளர்க்கு: 1 உதவியாளர்
3 உதவியாளர்கட்கு: 1 கண்காணிப்பாளர்
3 கண்காணிப்பாளருக்கு: 1 தேர்வுநிலைக் கண்காணிப்பாளர்
3 தேர்வுநிலை கண்காணிப்பாளருக்கு: 1 நிர்வாக அதிகாரி

என்ற அடிப்படையில் பதவி உயர்வு வழங்க வேண்டியது மிக மிக இன்றியமையாததாகும்.

காவல்துறை, வேளாண்மைத்துறை, மருத்துவத்துறை முதலிய எந்தத் துறைகளை எடுத்துக்கொண்டாலும் அமைச்சுப் பணியாளர்களுடைய வேலைப்பளு மிகமிக அதிகரித்து வருகிறது. ஆயிரம் ரூபாய் வரையில் ஊதியம் பெறுவோரின் நிர்வாகத்தையும் இப்போது அந்தந்த அலுவலகங்களிலேயே கவனிக்க வேண்டியிருப்பதால் மருத்துவத்துறை முதலியவற்றில் கூடுதல் வேலை வந்திருக்கிறது. ஆனால் கூடுதல் பணியாளர்கள் தாம் தரவில்லை. இதையும் எண்ணிப்பார்த்து ஏற்றதை இன்றே, இனிதே செய்திட வேண்டும்.

உயர் பதவிகளை உடனடியாக உருவாக்கி விடுவதில் சிரமங்கள் இருக்குமானால் போக்குவரத்துத் துறையில் அமுலாக்கப்பட்டுள்ள ஜப்பான் முறையினை மாநில அரசு ஊழியர்களுக்கும் கொண்டுவரவேண்டும். ஏழாண்டு காலம் ஒருவர் ஒரே பதவியில் இருப்பாரானால் ஏழாண்டு முடிந்ததும் பதவி உயர்வு கிடைக்கவில்லையென்றால் அடுத்த கட்ட ஊதிய விகிதத்தை அவர்களுக்கு அளிக்கவேண்டும். இது ஒரு துறை—ஒரு பிரிவுக்கு மட்டுமல்லாது எல்லாத் துறையினருக்கும் எல்லாப் பிரிவினருக்கும் உரித்தானதாக்கப்பட வேண்டும்.

அமைச்சுப் பணியாளர்களுக்காக நாம் வாதாடும்போது இரண்டாம் ஊதியக் குழுவிலோ தனிநபர்க் குழுவிலோ கவனிக்கப்படாது விடுபட்ட பதிவரை எழுத்தர்கள். அமீனுக்கள், தொழிற்பயிற்சி நிலைய போதகர்கள் ஆகியோருடைய நிலையை யூனியன் மறந்துவிட்டதாகாது. அரசுக்கு அதை நினைவுபடுத்தியே வருகிறோம்

ஓட்டு மொத்தமாகப் பார்க்கும்போது அமைச்சுப் பணியாளர்கள் போன்று அவல நிலையில் இருக்கும் அரசு ஊழியர்கள் ஆச்சரியக்குறியாய் இருந்த நிலைமாறி இன்று கேள்விக் குறியாய் இருக்கின்றனர். கேள்விக் குறிக்குத் தக்க பதில் தமிழ் நாடு அரசு தந்தேயாக வேண்டும் என்று வற்புறுத்த நமக்கு உரிமை உண்டு அந்த உரிமையை மதித்து உறவை வளர்க்குமாறு கலைஞர் அமைச்சரவையைக் கேட்டுக்கொள்கிறோம்.

(1975 ஜூலை 'பொது ஊழியன்' இதழில் வெளிவந்த கட்டுரை)

—o—

# சங்கநாதம் முழங்குது

தமிழகத்தில் மலர்ந்துள்ள புதிய ஆட்சி என். ஜி. ஓ. இயக்கத்திடம் நல்லன்பும், மதிப்பும் கொண்டிருக்கும் வேளையில் நம்முடைய 44-வது மாநில மாநாடு நடைபெறுகிறது. பதவியேற்ற பதினாறு மாதங்களுக்குள் ஒருசில சலுகைகள் நமக்கு வழங்கப்பட்டிருப்பினும் நம்முடைய தொல்லைகளுக்கு நடுவு நிலையான நிவாரணம் வழங்கப்பட்டிருக்கிறது என்று

கூறமுடியாது; காரணம் நாம் சமுதாய அமைப்பில் அதல பாதாளத்தில் இருப்பதே,

இவைகளில் இருந்து விடுபட இந்த மாநாட்டைத்தான் நாம் விடிவெள்ளியென நம்பிக் கொண்டிருக்கிறோம். பக்கத்திலே உள்ள மைசூர் மாநிலத்தில் உள்ள வீட்டு வாடகைப்படி நம்மைவிட உயர்வாகவே உள்ளது.

ஆந்திராவில் ஒரு கீழ்நிலை எழுத்தரின் உச்சபட்ச சம்பளம் ரூபாய் 150 ஆகவும், உதவியாளரின் உச்சபட்ச சம்பளம் ரூபாய் 200 ஆகவும் கண்காப்பாளரின் உச்சபட்ச சம்பளம் ரூபாய் 350 ஆகவும் உள்ளது.

கேரளாவில் கண்காணிப்பாளர், உதவியாளர் ஆகியோருக்கு உச்சபட்ச சம்பளங்கள் முறையே ரூபாய் 400 ஆகவும் 225 ஆகவும் உள்ளது-

மத்தியப் பிரதேசத்தில் கண்காணிப்பாளர்களின் சம்பள விகிதங்கள் ரூபாய் 265-10-275-12½-300-20-380 என்றும் உதவியாளர்களின் சம்பளம் 160-6-190-10-230 என்றும் நிர்ணயிக்கப் பட்டுள்ளது-

மராட்டிய மாநிலத்தில் கீழ்நிலை எழுத்தர்கள் 125.3-140 4-200 என்றும் மேல்நிலை எழுத்தர்கள் 200-10-300 என்றும் தலைமை எழுத்தர்கள் 350-15-525 என்றும் சம்பளம் வாங்குகிறார்கள்.

இவைகள் சில உதாரணங்கள். விரிந்துரைத்தால் பலப் பல காணலாம். இவைகளையெல்லாம் பார்க்கும்போது 1960ல் நம்முடைய சம்பளக் கமிஷன் முடிவுகள்—நாம் பெருமளவுக்கு வஞ்சிக்கப்பட்டிருக்கிறோம்; ஏமாற்றப்பட்டிருக்கிறோம் என்பதைத்தான் உணர்த்துகிறது. உணர்வுக்கு உருவம் கொடுப்போம்; புதியதோர் ஊதியக் குழுவை நிறுவுமாறு பொறுப்பில் உள்ள முதல்வரைக் கேட்போம்; வெற்றி பெறுவோம்; அதற்குறிய சங்கநாதம்தான் இன்று முழங்குகிறது.

(13—7—68ல் சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு என் ஜி ஓ யூனியன் 44-வது மாநில மாநாட்டு சிறப்பு மலரில் வெளியான கட்டுரை.)

# வளர்கிறோம் ;
# வளர்வோம் !

நாகை மாநாடு நல்ல பல திட்டங்களைத் தர இருக்கும் பெருமை பெற்றது இந்த வேளையில் நம்முடைய நிறுவனம் வளர்ந்த விதத்தை ஓரளவுக்கு உங்கள் முன்பு கொண்டு வந்து மேலும் வளர்ச்சி காண உங்களை எண்ணவைக்கவே என்னுடைய இந்த சிறு கட்டுரை.

நம்முடைய சங்கம் 1920ம் ஆண்டில் தோன்றியது. 1920ம் ஆண்டுக்கு முன்பு சென்னை மாநிலத்தில் அரசினர் அலுவலர்களுக்காக எந்தவிதமான சங்கமும் இருந்தது கிடையாது. ஐ சி எஸ் அதிகாரிகள் மாத்திரம் தங்களுக்கென்று ஒரு சங்கம் அமைத்துக் கொண்டிருந்தனர். இது ஒன்றைத் தவிர தந்தியாளர்கள் ஒரு சங்கம் வைத்திருந்தனர் (Indian Telegraph Association) இதைத் தவிர மாகாண அரசாங்க ஊழியர்களுக்கு எந்த விதமான. சங்கமும் இல்லை.

அந்த நேரத்தில் நம்முடைய என் ஜி ஓ. வர்க்கத்தினர், ஆட்சி பொறுப்பின் அடிப்படையாளர்கள் என்று பெருமை பெற்றவர்கள், சமுதாயத்தில் பொருளாதாரத்தில் ஒதுக்கப்பட்டவர்களாகவே கருதப்பட்டனர். 1914 லிருந்து 1918 வரை நடைபெற்ற முதல் உலக யுத்தத்தின் விளைவாக ஏறிய விலைவாசிகள் நாம் நல்வாழ்வு வாழ முடியாத வகையிலிருந்தது. விடுமுறை வசதிகள் இல்லாத நிலை மேலதிகாரிகளுக்கு விண்ணப்பிக்கும் உரிமை கூட இல்லாத நிலை இதையெல்லாம் அனுபவித்தவர் பலர்; அடங்கியவர்கள் சிலர்; ஆத்திரம் கொண்டனர் சிலர்; அமைதியாக யோசித்தனர் சிலர்; அந்த யோசனையின் விளைவாக மூன்று பேர் ஒரு திட்டம்

வகுத்தனர்- அந்த திட்டத்தின் விளைவாகத்தான் 31-1-1920ல் சென்னையில் என். ஜி. ஓ. சங்கம் தொடங்கப் பட்டது. அந்த மூன்று பேர் நம் நினைவுக்குரியவர்கள். அவர்களில் ஒருவர் ஹமீது ஹாசன், சென்னை உயர்நீதி மன்றத்தில் பர்சிய மொழி பெயர்ப்பாளராக இருந்தார். மற்ருெவர் எம். எஸ். சுந்தரேசுவரர் இவர் கல்வி இலாக்காவைச் சேர்ந்தவர். மூன்ருமவர் போலீஸ் இலாகா வைச் சேர்ந்த எம். டி. சிரோமணி இந்த மூவர் தம் முயற்சியால் ஒளியூட்டக்கூடியதோர் ஸ்தாபனம் பிறந்தது

என். ஜி ஓக்களின் வாழ்க்கைப் பின்னணியாயிருந்த இல்லாமைத் தொல்லைகளும், முன்னேற்றத்துக்கான வழி வகை காண வேண்டுமென்ற முயற்சியும், எல்லா என் ஜி. ஓக்களையும் சங்கத்தில் ஈடுபட வைத்தது. இரண்டு மூன்ருண்டுகளில் ஆயிரக்கணக்கானவர்கள் உறுப்பினர்களானுர்கள். பல மாவட்டத் தலைநகரங்களில் கிளைச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. இது ஒரு மாகாண ஸ்தாபனமாயிற்று ஆங்காங்கு கூட்டங்கள் உத்வேகத் துடன் நடைபெற ஆரம்பித்தன. தாசில்தார்களும், அட்டன்டர்களும் ஒன்ருக உட்கார்ந்தார்கள். பொதுப் பிரச்சனைகளை விவாதித்தார்கள் அலுவலகத்திலுள்ள அந்தஸ்து பேதம் இங்கே தலைகாட்டவில்லை. 15-3-1920ல் சென்னை அரசாங்கம் சங்கத்தை அங்கீகரித்துப் பிறப்பித்த ஜி. ஓ. நம்பர் 181ம் சங்க மூலவர்கள் செய்த வேலை முறை களும் வளர்ச்சிக்கு நல்ல படிகளாய் அமைந்தன.

4-3-1926ல் அப்பொழுதிருந்த சென்னை மாகாணம் முழுவதும் (Non Gazetted Day) கொண்டாடப்பட்டது. வியாதியுற்ற ஏழை என். ஜி. ஓ. வினரின் குடும்பங்களுக்கு உதவி செய்ய பரஸ்பர சகாய நிதித் திட்டம் 1929ல் உரு வாக்கப்பட்டது: சென்னையில் சங்கத்திற்கென கட்டிடம்

வாங்க முயற்சிக்கப்பட்டு 11-10-1934ல் கட்டிடம் திறக்கப் பட்டது 1934 வரை சென்னை நகரமே மத்திய சங்கமாக விளங்கியது. 1934க்குப் பிறகு சட்ட திட்டம் விரிவு செய்யப் பட்டு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மத்திய கமிட்டியில் பிரதி நிதித்துவம் தரப்பட்டது.

உருவாகி வந்த இந்த சங்கத்தை உணர்ச்சிமயமாக்கி நம்மை நாம் உணரச் செய்தார் நமது மாபெரும் தலைவர் காலஞ்சென்ற ஜகதீசன் அவருடைய அனல் பறக்கும் சொற்பொழிவுகள் நம்மை ஆவேசமடைய வைத்தன. நம்மால் என்ன செய்ய முடியும் என்ற தொடை நடுங்கி மனப்பான்மை நம்மைவிட்டு ஓடத் தொடங்கியது. போர்க் குரல் கொடுத்தோம். பொது வேலை நிறுத்தம் நடத்தினோம், 1947ல் முயற்சி முழு வெற்றி அளிக்கவில்லை எனினும், முதுசெலும்புள்ளவர்கள் இவர்கள், சக்தி வாய்ந்த ஸ்தாபனத்தை உருவாக்குபவர்கள் என்ற எண்ணத்தை அந்த வேலை நிறுத்தம் நாட்டுக்குத் தந்தது.

அந்த வேலை நிறுத்தத்தின் விளைவாக மூன்ருண்டு சங்கத்தின் வளர்ச்சியில் (பிரத்யட்ச முறையில்) ஒரு தேக்கம் ஏற்பட்டது. பிறகு மறுபடியும் 1949ம் ஆண்டில் புது ஒளி தோன்றியது. இதை உண்டாக்கியவர் கண்ணன் குட்டிமேனன். ஆங்காங்கு புதுக் கிளைகள் அரும்பின. பரந்த அளவுக்கு விரிவு பெற்றன. இதற்குப் பிறகு நடந்ததை, நடப்பதை இந்தத் தலைமுறையில் நன்கறிவோம். 1956 ஏப்ரலில் நடத்திய துக்கதினம். அதே ஆண்டு மே மாதம் சென்னையிலே நடைபெற்ற மாநில மாநாட்டில் உருவான கொந்தளிப்பு அதை தொடர்ந்து பிரதமரை சந்திக்க நாம் நடத்திய டில்லிப் பயணம். பிரதமர் பேட்டி தர மறுத்ததனுல் நாடெங்கும் நமக்கு ஏற்பட்ட தார்மீக ஆதரவு, வரலாற்றுப் புகழ் பெற்ற மதுரை மாநாடு

பொதுத்தேர்தல் சமயத்தில் நாம் நடத்தத் திட்டமிட்டக் கிளர்ச்சி, அதன் விளைவாக ஆளவந்தார் கொண்ட கிலி, அதைத் தொடர்ந்து ஓரளவு பஞ்சப்படி உயர்வு இவையெல்லாம் நீங்களறிவீர்கள். 1957ல் நமது சங்க சட்ட திட்ட விதிகள் பெரும்பான்மையான அளவுக்கு மாற்றி அமைக்கப்பட்டதையும், 1958ல் சேலம் மாநாட்டில் வேலை நிறுத்த வாக்கெடுப்புத் தீர்மானத்தை நாகைக்கிளை கொண்டுவந்து நிறைவேற்றப் பட்டதையும், இதையொட்டி நம் தலைவர் ஆழ்வாரப்பன் நடத்திய சூருவளிப் பயணத்தையும், அரசியலார் இப்பொழுது நம்முடைய கோரிக்கைகளில் பெரும்பாலானவற்றை ஒப்புக்கொள்ள முன் வந்திருப்பதையும் நாமெல்லாம் நன்கறிவோம்.

இந்த நேரத்தில் நாம் நம்முடைய நிறுவனத்தை சக்தி வாய்ந்த தொன்ருக ஆக்க தீவிர முயற்சி யெடுத்துக் கொள்ளவேண்டியது அவசியம். நம்முடைய நண்பர்களில் பலர் சங்கத்தில் நம்பிக்கையில்லாதவர்களாக இருக்கிருர்கள். சிலர் சத்தம் போட்டால், சிலர் கிளர்ச்சி செய்தால் எல்லோருமே பயனடைந்து விடுவோம் என்ற நம்பிக்கையிலேயே பலர் காலத்தை ஓட்டிக்கொண்டு இருக்கிருர்கள். அவர்களை யெல்லாம் சங்கத்தில் அதிக ஈடுபாடு கொள்ள வைக்கத் தக்க அளவுக்கு நாம் பாடுபட வேண்டும் ஒவ்வொரு ஊரிலும் நம்முடைய சங்கத்திற்கென கட்டிடம் என்று இருப்பதற்கு முயற்சி யெடுக்க வேண்டும் எல்லா உறுப்பினர்களும் தொடர்ந்து சங்கப் பத்திரிகையான PUBLIC SERVANT-ஐ வாங்குபவர்களாக ஆக்க வேண்டும் நம்முடைய பத்திரிகைக்கென தனி அச்சகம் ஒன்றை ஏற்படுத்த முயலவேண்டும்.

இவையெல்லாம் மட்டுமல்லாது தனிப்பட்டோர் பிரச்சனைகளுக்குப் பரிகாரம் காண்பதில் பெருமுயற்சி

V211, 8
N75



யெடுத்தல் அவசியமானது. தொழிற் சங்கங்கள் எல்லாம் பெரும்பாலும் இந்த முறையிலேயே நல்ல வளர்ச்சி பெற்று இருக்கின்றன. நமக்குத் தொழிற் சங்க உரிமை தற்போதைக்கு மறுக்கப்பட்டாலும் சங்கத்தின் ஒரு சில சட்ட திட்ட விதிகளைத் திருத்துவதன் மூலமும், 'அப்பீல்' செய்வதின் மூலமும் பெற்று விடலாம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

எனவே நம்முடைய சங்கத் தலைவர்கள் ஒரு பக்கம் சம்பளக் கமிஷன் முன்பு நம்முடைய பிரச்சனைகளை தெளிவாக விளக்கி சாட்சியம்சொல்வதற்கு தயாராகிக் கொண்டு இருக்கும் இந்த இடைக் காலத்தில் தொண்டர்களாகிய நாம் மேலே கூறிய சிலவற்றையும் மற்றும் தேவையான ஆக்கவேலைப் பணிகளையும் கவனிப்போம் என்று ஸ்தாபன வளர்ச்சியில் கருத்துள்ள தொண்டர்களை அழைக்கிறேன். இதன் மூலமாக வளர்ச்சி பெற்றுள்ள நாம் நம்முடைய சமுதாயத்தை இன்னும் வளர்ச்சியுறச் செய்வோம். வாழ்க நமது ஒன்றிப்பு!

(8-3-59ல் நடைபெற்ற நாகை தாலுக்கா என். ஜி. ஓ. யூனியன் மாநாட்டு மலரில் வெளியான கட்டுரை)



4716

# கண்ணில்
# தெரியுமொரு தோற்றம் !

தவத்திரு குன்றக்குடி அடிகளாரிடம் நான் நிரம்ப மதிப்பு வைத்துள்ளவன் நமது மாநாடுகளில் நமது கோரிக்கைகளைத் தெளிவாக பலமுறை விமர்சனம் செய்து இருக்கிறார். ரகசியக்குறிப்பேட்டு முறை, பொய்யான லஞ்சக் குற்றச் சாட்டின் பேரில் அரசு ஊழியர்களை தொல்லைக்குள்ளாக்குதல் போன்ற பல பிரச்சனைகளில் அவர் அன்றைய அரசை இடித்துரைத்ததனை நாம் இன்றும் என்றும் நினையாமல் இருக்கமுடியாது.

ஆனால் அண்மையில் அவர் ஒரு இலக்கியவிழாவில் பேசும்போது 'சோஷியலிச அரசாங்கம் சக்திக்கேற்ற உழைப்பைப் பெற்று, தேவைக்கேற்ற வசதி –தேவைக்-கேற்ற ஊதியம் தருவது இயலாது' என்றார். 'அதை சமதர்ம அரசாங்கம் தான் தர முடியும்' என்று கூறினார்.

இது தவறான கருத்து, சோஷிலிசத்துக்கும் சமதர்மத்துக்கும் என்ன பெரிய வித்தியாசம் என்று எனக்குப் புரியவில்லை. இலக்கணவாதிகள் பெரிய பெரிய வியாக்யானங்கள் கொடுக்கலாமே தவிர, இரண்டுக்கும் அதிக வேறுபாடில்லை என்பது தான் சாதாரண மனிதனின் சராசரிக் கண்ணோட்டம்.

சக்திக்கேற்ற உழைப்பு !

தேவைக்கேற்ப வசதி !!

இது தான் சோஷிலிச வாழ்வு !

இதே தான் சமதர்ம வாழ்வு !!

இது நியாயமான நிச்சயமான உழைக்கும் சமுதாயத்தின் உணர்வு பூர்வமான கோரிக்கை. இதைத்தான் இன்று என். ஜி. ஓ. சமுதாயமும் அழுத்தம் திருத்தமாக, ஆவேசமாகக் கேட்கத் தொடங்கியுள்ளது.

—சக்திக்கேற்ற உழைப்பு ; தேவைக்கேற்ற வசதி

என்று கூறினாலே பல தோழர்கள் இது காரல் மார்க்ஸையும், லெனினையும் நினைவுபடுத்துவது போல விரண்டோடுகிறார்கள். தத்துவங்களின் மூதாதையர் அவர்களாயிருந்தாலும், இந்தத் தத்துவங்களைத் தமிழகத்தில் படித்த சமுதாயத்தில் பரப்பிய பெருமை முன்னாள் முதல்வர் அறிஞர் அண்ணாவுக்குண்டு. 1946லிருந்து 1954 வரை அவர் ஆசிரியராக இருந்து நடத்திய இதழ்களில் ஆண்டு தவறாமல் மேதினவிழா மலர்களில் இந்த தேவைக் கேற்ற வசதி என்று நியாயத்தை வலியுறுத்தி பலப் பல கட்டுரைகள் எழுதியதை நாம் இன்னமும் மறக்கவில்லை. ஆனால் அண்ணாவின் கல்லறைக்கு மாலை மட்டும் படைப்போர் மறந்தால், நாம் என்ன செய்ய முடியும்?

நாம் இவற்றையெல்லாம் மறவாததனால் தான் தேவைக்கேற்ற குறைந்தபட்ச ஊதியத்தைக் கேட்கிறோம். மத்திய அரசு தன் ஊதியக் குழு வரம்பு ஆணையை தேவைக்கேற்ற குறைந்த பட்ச ஊதிய அடிப்படையில் பரிசீலனை செய்ய திருத்தி அமைத்திருக்கிறார்கள். நம்முடைய தமிழக அரசும் செய்யுமென்று எதிர்பார்த்தோம்; ஏமாந்தோம்.

3-9-70-ல் தமிழக சட்ட மன்றத்தில் நிதியமைச்சர் பேசும்போது ஊதியக் குழுவின் சிபாரிசுகளை அமுலாக்க ரூபாய் ஐம்பது கோடி தேவையென்று குறிப்பிட்டுள்ளார்.

இது டில்லி (நடுவண்) அரசைக் கேட்பதற்கான பேச்சா? அல்லது உண்மையாகவே 50 கோடி ரூபாய் செலவில் ஊதியக் குழு சிபாரிசுகளை அமுல் நடத்தும் எண்ணம் உள்ளதா என்பதைக் காலம் தான் கணித்துச் சொல்ல வேண்டும்.

நடுவண் அரசு உதவி தரவில்லை என்பதற்காக நாம் உதாசீனம் செய்யப்பட்டாலோ, காலம் நீடிக்கப் பட்டாலோ என். ஜி. ஓக்கள் பொறுமை இழந்துவிடுவர் என்பது இன்றுள்ள நடைமுறை உண்மை.

மராட்டியமும், வங்கமும் ராஜஸ்தானும் கடந்த மூன்று மாதங்களில் கொதித்தெழுந்த என். ஜி ஓ. க்களின் நெடிய பெருமூச்சுக்களை, அதன் வேகத்தை, உஷ்ணத்தை உணர்ந்து கொண்டது. நம்பிக்கை இழக்கக் கூடிய நிலைமைக்கு தமிழக அரசும் என் ஜி. ஓ. க்களை அதிக நாட்கள் காத்திருக்க வைக்கமாட்டார்கள் என்று இதயம் சொல்கிறது. ஆனால் கண்ணில் தெரியும் தோற்றம் கானல் வெளியாகி விடாமல் நல்லன நடக்க வேண்டும்.

இடைக்கால நிவாரணம் நாம் கேட்ட அளவுக்கு கிடைக்கவில்லை. ஓராண்டு காலப் பொறுமைக்குப்பின் நியமிக்கப்பட்டுள்ள ஊதியக் குழுவும் நமது கோரிக்கை களில் உள்ள நியாயத்தைத் தெளிவாகச் சொல்ல வேண்டும்.

பணம் இல்லை என்பது எப்போதும் பாடப்படுகிற பாட்டு மனம் இருந்தால் மார்க்கமுண்டு என்பதை நாம், உணர்வோம்.

தேவைக்கேற்ற குறைந்த பட்ச ஊதியம் கொடுத்தால் தான் ஊழியரின் திறனே, ஒழுங்கை, உழைப்பைப் பரா மரிக்கவும் முடியும் என்ற நம்பிக்கை ஆள்வோருக்கு என்று ஏற்பட்டு, அதன்வழி அவர்கள் செயல்படுகிருர் களோ அன்று தான் நல்லரசின் சிந்தாந்தம் நலமுறவே பிரதிபலிக்க முடியும் அந்த நாள் அருகில் உள்ளதா? கண்ணில் தெரியும் தோற்றம் கருத்தை நிறைவு செய்யுமா? அல்லது கண்துடைப்பாகி விடுமா?

எண்ணிப் பார்ப்போம்! ஏற்றது கிடைக்கவில்லை யெனில் எழுச்சி கொள்வோம்! உணர்ச்சியும், உத்வேக மும் பெருத சமுதாயம் உருவான நலனேயோ, பலனேயோ பெறமுடியாது இதை உணர்ந்து சிந்திப்போம்! செயல் படுவோம்!

வெற்றி நமதே!

(4-10-70ல் நடைபெற்ற மதுரை மாவட்ட என். ஜி. ஓ. யூனியன் 4வது மாநாட்டு மலரில் வெளியான கட்டுரை)



# மத்திய அமைச்சருக்குக் கருப்புக் கொடி ஏன் ?

தமிழ் நாடு அரசிதழ் பதிவிலா அலுவலர் ஒன்றியமும் அதனோடு இணைந்து நிற்கும் 120க்கு மேற்பட்ட சங்கங்களும் சேர்ந்து சில போராட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

அதில் ஒரு கட்டமாக 1974ம் ஆண்டு நவம்பர் மாதம் தமிழ் நாட்டுக்கு வருகிற மத்திய அமைச்சர்களுக்குக் கருப்புக்கொடி காட்டுவதாகவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. ஏன் இந்த முடிவு? மாநில அரசு ஊழியர்கட்கும் மத்திய மந்திரிகட்கும் என்ன தொடர்பு என்று பலர் கேட்கலாம்

முக்கியமாக இந்த முடிவெடுக்கப்பட்டது மத்திய அரசின் ஊதிய முடக்கத்தைக் கண்டித்துத்தான்

'பிச்சையெடுத்தாளும் பெருமாள்; அதையும் பிடுங்கினான் அனுமான்'' என்று சில பகுதிகளில் சொல்வார்கள் அதுபோல மாநில அரசுகள் மனமிரங்கி ஊழியர்களுக்கு அகவிலைப்படி உயர்த்த முன்வருவதே அத்தி பூத்தது போல ஆறு மாதங்களுக்கு ஒரு முறைதான் வரும் அப்படியிருக்கும்போது அந்த உதவியையும் தட்டிப் பறிப்பது, தனதாக்கிக் கொள்வது அறமாகாது. அறமல்லாத அந்த மறச்செயல்களிலே தான் இன்று மத்திய அரசு ஈடுபட்டுள்ளது. அதைக் கண்டிப்பதற்காகவே கருப்புக் கொடி காட்ட இருக்கிறோம்.

இந்த நாட்டில் சணல் தொழிலாளர்களுக்காக, சர்க்கரைத் தொழிலாளர்களுக்காக, சிமெண்ட் தொழிலில் ஈடுபட்டிருப்போருக்கெல்லாம் அகில இந்திய அளவில் ஊதிய போர்டு நிர்ணயிக்கிறார்கள் மின் வாரியத்தில் பணி புரிவோருக்கெல்லாம் தேசீய மட்டத்தில் ஊதியக் கொள்கை நிர்ணயிக்கப்படுகிறது. ஆனால் மாநில அரசு ஊழியர்களைப் பொறுத்தவரையிலும் அதுபோல ஒரு கொள்கையை உருவாக்க உறுதியாகப் பின்பற்றுமாறு வற்புறுத்த மத்திய அரசுக்கு நேரமில்லையே. ஏன்? நினைப்பில்லையே என்ன காரணம்? பாராளுமன்றத்தில் பல முறை பேசப்பட்ட பிறகும் மத்திய அரசு வாளாவிருப்ப தேன்? அதை சுட்டிக் காட்டத்தான் கருப்புக்கொடி காட்டுகிறோம்

சமவேலைக்கு சம ஊதியம் என்று அம்பேத்காரும் அல்லாடியும் எழுதியதை அரசியல் சாசனத்தில் ஏற்றுக் கொண்ட மத்திய அரசு, அதைச் செயலாக்குவதற்கு என்ன முயற்சிகளை மேற்கொண்டது ஆயில் கார்ப்ப ரேஷனிலே இருப்போர் முதல் ஜாதி பாங்குகளிலும் எல். ஐ. சி யிலும் பணியாற்றுவோர் இரண்டாம் ஜாதி, மத்திய அரசு ஊழியர்கள் மூன்றும் ஜாதி, மாநில அரசு ஊழியர் கள் நான்காம் ஜாதி என்பது போல வர்ணாஸ்ரம தர்மத்தை இந்த நாட்டில் அரசு ஊழியர் மத்தியில் புகுத்தத் துணை நின்றது. துணை நிற்பது டில்லிப் பேரரசு தானே? விடுதலை பெற்று 27 ஆண்டுகள் ஆகியும் வேறு பாடு அதிகமாகிறதேயன்றி குறையக்காணோமே? அதை உணர்த்து முகமாகத்தான் மத்திய மந்திரிகட்குக் கருப்புக் கொடி காட்டுகிறோம்,

ஏக இந்தியா! இனிமையாகப் பேசப்படுகிறது.
காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை ஒரே நாடு!
ஒப்புகொள்ளப்பட்டுவிட்டது.

ஆனாலும் தபால் ஆபீஸில் வேலை பார்ப்பவருக்கும் தாலுக்கா அலுவலகத்தில் வேலை பார்ப்பவருக்கும் சம்பள வேறுபாடு! வருமானவரித் துறையில் வேலை பார்ப்பவருக்கும் வணிக வரித்துறையில் பணிபுரிபவருக்கும் வித்தியாசம். ஏன் இந்நிலைமை? சோஷலிசம் பேசுவோர் சிந்திக்க வேண்டாமா? ஒருமைப்பாட்டை உபதேசிப்போர் இந்தக் கேடு நீக்கிடப் பாடுபடவேண்டாமா? அதை எடுத்துச் சொல்வதற்காகத்தான் மத்திய மந்திரிகட்கு கருப்புக் கொடி காட்ட இருக்கிறோம்! மாநில அரசோடு வாதாடுகிறோம். தேவையான போது போராடுகிறோம். இன்று 10 ரூபாய் கொடுக்கிறார்கள். நாளை 30 ரூபாய் கொடுப்பார்கள். அதுவல்ல விஷயம். இதற்கு ஒரு நிரந்தர பரிகாரம் காண வேண்டாமா? தீமையினுடைய வேர் எங்கே இருக்கிறது, கண்டறிய வேண்டாமா? நோயினுடைய மூலம் எப்படி என்று ஆராய வேண்டாமா? அதற்காகத் தான் மத்திய அமைச்சர்கட்குக் கருப்புக்கொடி காட்டுகிறோம்.

மாநில அரசு ஊழியர்களுக்கு ஊதிய உயர்வா?

அகவிலைப்படிக் கோரிக்கையா?

பேசமறுக்கிற மத்திய அரசு, உதவி செய்ய இயலாது என்று கைவிரிக்கிற நடுவணரசு கொடுப்பதைப் பறிப்பது அதில் பங்கு வைப்பது எந்த நியாயம்? அந்த அடிப்படையிலே தான் ஊழியர்கள் உணர்வுகளைப் புலப்படுத்த புறப்பட்டிருக்கிறோம்.

ரயில்வே ஊழியர்களின் எழுச்சியை—உணர்ச்சியை மிதித்துத் துவைத்து விட்டதனால் தொழிலாளர்களை—அரசு ஊழியர்களை என்றென்றைக்கும் அச்சுறுத்தி அடிமைகளாய் வைத்திருக்கலாம் என்று எண்ணுகிற

இரும்பு மனமுடையோரை—இதயம் நிறைந்தவர்கள் கண்டிக்கவே செய்வர்.

அந்தக் கண்டனத்துக்கு அறிகுறிதான்
கறுப்புக்கொடி!

ஒடுக்கப்பட்டாலும்—உரிமை கேட்டு கிளர்ந்தெழுவோம் என்பதை நாடாள்வோருக்கு உணர்த்தவே கறுப்புக் கொடி!

ஒன்றுபடுவோம்! உரிமை பெறுவோம்

('என். ஜி. ஓ. குரல்' 1974 செப்டம்பர் இதழில் வெளியான கட்டுரை)



# குடும்ப நல திட்டம்
# ஒரு சமுதாய கடமை

குடும்பநல முனைப்பு இயக்கம் நாடு முழுதும் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த வேகத்தில் அதனை ஒரு அலுவலகப்பணி என்று மாத்திரம் கொள்ளாது அரசு ஊழியர்கள் சமுதாயக் கடமை என்ற கண்ணோட்டத்திலும் செயற்பட வேண்டும் என்பதற்காகத் தான் இந்தக் கருத்தரங்கினை மாநில என். ஜி ஓ. யூனியன் நடத்துகிறது.

1973 ஆகஸ்ட் வரை செங்கற்பட்டு மாவட்டத்தில் மட்டும் 32, 420 அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன என்பதை எண்ணிப் பார்க்கும்போது 29 லட்சம் மக்கள் தொகை கொண்ட இந்த சிறிய மாவட்டத்தில் இதனை ஒரு மகத்தான சாதனையாகவே எண்ண வேண்டியிருக்கிறது இதனையும் இதனைப்போன்ற சாதனைகளையும் செய்து முடிக்கப் பெரும் பங்கு எடுத்துக் கொண்டவர்கள் அரசு ஊழியர்கள் என்பதனை எவரும் மறந்து விடக்கூடாது

'எண்ணிப் பெறுக பிள்ளை பெற்றபின்
எண்ணுவம் என்பது இழுக்கு'

என்ற புதிய தத்துவத்தைப் பற்றி எவ்வளவு தான் பேசினாலும் படிப்பறிவில்லாதவர்கள் மிகுந்திருக்கும் ஒரு சமுதாயத்தில் குடும்பக்கட்டுப்பாட்டை கடமை உணர்ச்சியுடன் மதிப்போர் குறைவு. ஒருகாலத்தில் ரயிலைப் பார்த்துப் பயந்தவர்கள், ஓடியவர்கள் – அதைப் பிசாசெனக் கருதியவர்கள் இந்த நாட்டில் உண்டு அதே போல மின் விளக்கை ரேடியோவைப் பயன்படுத்துதல் ஏன்? குடையை உபயோகித்தல் கூட பாவமென்று கருதியவர்கள் நம்மிடையே இருந்திருக்கிறார்கள்.

மாறுதலை ஏற்றுக்கொள்ளுதல் மரபாக இருந்ததில்லை; புதிய பழக்கங்கள் எல்லாம்—புரட்சிகரமான நடைமுறைகள் எல்லாம் போராட்டத்திற்குப் பிறகு தான் அமுலாகியிருக்கின்றன. குடும்பக் கட்டுப்பாட்டு இயக்கமும் இந்த சிக்கல்களுக்கு விதிவிலக்காய் அமைந்து விட முடியுமா ?

ஒரு பொருளை 4 பேருக்கு பங்கிட்டு வழங்குவதை விடுத்து -எட்டு பேருக்குப் பங்கிட்டால் அளவு குறையத் தான் செய்யும் அதே போல் இருக்கின்ற சமுதாய வசதிகளைப் பெருகி வரும் மக்கள் தொகைப் பிரித்துக் கொள்ளமுற்படும் போது தான் சிரமும், சிக்கலும் ஏற்படும்; இதை உணர்த்துவது தான் நமது சமுதாயக் கடமை.

பல பேர் கேட்கிறார்கள். குடும்பக்கட்டுப் பாட்டு இயக்கத்தைப் பற்றி இவ்வளவு விரிவாக விளம்பரமும்—பிரச்சாரமும் செய்ய வேண்டுமா, என்று! ஒரு காலகட்டம் வரையில் மக்கள் இதனை சமுதாயக் கடமையாகக் கருதுகிற வரையில் விளம்பரமும், பிரச்சாரமும் நிறையத் தேவை! தேவை தான்! ஆனால் இது சமுதாயக் கடமையாக உணரப் பட்டு விட்டதா என்றால் இன்னமும் இல்லையென்று தான் கூற வேண்டியிருக்கிறது.

நம்முடைய பேராசிரியர் அன்பழகன் ஒருமுறை சொன்னது போல் பத்தாண்டுகளுக்கு முன்னெல்லாம் பாபமென்று கருதியவர்கள்—அகன்பின் அலட்சியமாகப் பார்த்தவர்கள்—பிறகு கவனிக்க ஆரம்பித்தவர்கள் இன்று வேறு வழியில்லையென்று எண்ணத் தொடங்கி இருக்கிறார்கள், குடும்ப நலத்திட்டத்தைப் பற்றி ஆனாலும் இதை ஒரு சமுதாயக் கடமையாக அறுதியிட்டு எண்ணினால் தான் ஏற்றம் பிறக்கும் இந்த நாட்டுக்கு என்பதை எல்லோரும் உணர வேண்டும்.

இந்தியா விடுதலைப் பெற்றபோது இருந்த மக்கள் தொகை 33 கோடி—25 ஆண்டு காலத்தில் அது 55 கோடியாக வளர்ந்துள்ளது. ஆனால் இயற்கை வளம் எவ்வளவு தூரம் விரிவடைந்திருக்கிறது? இதை ஆய்ந்து பார்த்தோமானால் தான் சமுதாயக் கடமையை உணரமுடியும்.

வசதி படைத்தோர்—பணம் படைத்தோர் வீடுகளில் உள்ளதைவிட வறுமையால்-இல்லாமையால் வாடுவோர் இல்லங்களில் தான் அதிகக் குழந்தைகள் இருக்கக் காண்கிறோம். இந்த நிலை ஏன்? அரசு ஊழியர்கள் மிகுதியாகப் பங்கேற்கும் இந்த கருத்தரங்கில் இதனையும் நாம் சிந்திக்க வேண்டும்.

'அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகி தோன்றாக் கெடும்'

என்ற வள்ளுவரின் குறள் வழியை நாளும் பயின்று வரும் நற்றமிழ்ப் புலவர் இல்லங்களிலே இந்த சமுதாயக் கடமை உணர்த்து விக்கப்பட்டதா? என்ற கேள்வியையும் நாம் மனம் திறந்து கேட்டாக வேண்டும்

நாட்டுநன்மை, சமுதாயநன்மை என்பதை விட குடும்பம் பெருத்தால்—பலருக்குக் குறுக்கு வழியில் சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணம் வரும்; ஒழுக்கம், நாணயம், நேர்மை ஆகிய நற்குணங்களில் இருந்து வழுக்கி விழ வேண்டிய நிலை வரும் என்பது நடைமுறையில் பல சந்தர்ப்பங்களில் காணவேண்டியுள்ளது. 'கார்ப்பரேஷன்' மோசடியிலிருந்து 'அரங்கேற்றம்' திரைக்கதை வரை எத்தனையோ உதாரணங்களால் இதை எண்ணிப் பார்க்கலாம்.

எளிமையானதும், சிக்கலற்றதுமான கருச்சிதைவுச் சட்டத்தின் மூலம் சிறந்த குடும்பக் கட்டுப்பாட்டுத்

திட்டத்தை அமுல் நடத்த முடியும் என்று ஐக்கியநாடுகள் சபையின் மக்கள் பெருக்கம் பற்றிய இலாக்கா 1973 மார்ச் 20ல் வெளியிட்ட ஓர் அறிக்கையில் தெரிவித்திருந்தது. சிறந்த இம்முறை சட்டத்தின் மூலம் நம் நாட்டிலும் கொண்டுவரப் பெற்ருலும், எல்லா மருத்துவமனைகளுக்கும் இவ்வசதி விரிவு படுத்தப்படுதல் அவசியம் என்பதை இக் கருத்தரங்கின் மூலம் தெரிவிக்க வேண்டியவனுக இருக்கிறேன்.

ஹாலந்து, ஜெர்மனி, பிரான்ஸ், ஸ்பெயின், பெல்ஜியம், இத்தாலி, மெக்ஸிகோ ஆகிய நாடுகளில் கருத்தடைப் பிரச்சாரங்களுக்கென சுயேச்சையான மன்றங்கள் இருப்பதைக் கேள்விப் பட்டிருக்கிறேன். அரசின் தூண்டு தலின்றி அத்தகைய மன்றங்கள் இந்நாட்டில் பெருகும் நாள்எதுவோ அந்நாள் தான் சமுதாயக் கடமையை மக்கள் உணரும் நாள் என்பேன் நான்.

"குழந்தையைப் பெறுகிறவன் அதனைக் காப்பாற்றும் சக்தியைப் பெருவிடில் அந்தக் குழந்தையை பெறும் உரிமையை கிடையாது" என்ருர் ஓர் அறிஞர் புரட்சிக் கருத்தாக இருந்தாலும் சிந்திக்க வேண்டிய, ஏற்றுக் கொள்ள வேண்டிய கருத்து இது என்பதை மறுக்க முடியாது.

"சந்தனமரம் அருகியிப்பருதால் பெருமை பெருகின்றது கருவேலமரம் பெருகியிருப்பதால் சிறுமையுறுகின்றது". என்று கிருபானந்த வாரியார் ஓரிடத்தில் கூறியிருப்பதை நுணுகி ஆராய்ந்தால் அந்த வாசகத்தின் அருமை புரியும்.

போப்பாண்டவர் கூட குடும்பக்கட்டுப்பாட்டினை நன்கு ஆதரித்துள்ளார். குழந்தைகள் பெறுவதை

நிர்ணயிப்பது பெற்ருேர் பொறுப்பு; தேவைக்கேற்ப இதை வரையறுப்பதில் அரசுக்குள்ள உரிமையை வரவேற்க வேண்டும் என்று கூறியுள்ளார் போப்பாண்டவர்.

'சில ஆசனங்களைச் செய்யும் திருமணமான தம்பதி களுக்குக் குழந்தைகள் பிறக்காது' என்ெருரு செய்தியை ஒரு ஏட்டில் படித்தேன். இதை அரசு ஏற்றுக் கொண்டு உள்ளதா? ஆம் எனில் இவ்வழியில் யோகாசனப் பயிற்சி அளிக்க முயற்சிக்கக்கூடாதா என்பதையும் வலியுறுத்த இக்கருத்தரங்கினைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பு கிறேன்.

குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்தை அமுல் செய்வது சமூகப் பிரச்சனை என்ற போதிலும், அது பணத்தை மையமாகக் கொள்ளாமல் மக்கள் மனத்தை மையமாகக் கொண்டு உள்ளது. பணப்பிரச்சனையாக இருந்தாலும் அதை எவ்வாறேனும் சமாளித்து விடலாம்; மனப்பிரச்சனை என்னும் போது அதில் சிறிது சிறிதாகவே நாம் வெற்றி பெற இயலும். அதனுல் தளர்ச்சியோ—தயக்கமோ இந்த இயக்கத்தில் இருப்பவர்களிடம் வேண்டியதேயில்லை.

,,India's strength lies not in numbers but in healthier and better educated citizens. A change in human behaviour altitude valurs and beliefs has became inevitable''—இது நம் இந்தியப் பிரதமரின் கூற்று. இது வெறும் சொல்லாக இல்லாமல் கவையான நடப்பாக -நனவாக வேண்டிய கனவாக வேண்டுமெனில் குடும்பநலத்திட்டத்தை நாம் சமுதாயக் கடமையாகக் கொள்ளவேண்டும்

சென்னையில் குடிசை மாற்றும் வாரியம், வீட்டுவசதி வாரியம், போன்றவை தரும் வீடுகளுக்கு எவ்வளவு

போட்டி இருக்கிறது என்பது வெளிப்படை. குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்டவர்களுக்கே இங்கே இடம் என்ற விதியை ஏற்பாடு செய்வதில் என்ன தவறிருக்க முடியும் என்பது இந்தக் கருத்தரங்கின் மூலம் நான் எழுப்புகிற கேள்வியாகும்.

" பூப்பிளக்க வருகின்ற புற்றீசல் போலப்
புலபுலலென கலகலென புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதற்கும் வகையறியீர் கைவிடவுமாட்டீர்
கவட்டுத் தொன் மரத்துக்குட் கானுழைத்துக்
கொண்டே
ஆப்பதனைப் பிடித்தசைத்த குரங்குதனைப் போலே
அகப்பட்டீர் கிடந்துழல அகப்பட்டீரே! "

என்ற பட்டணத்தடிகள் இகழ்ச்சியாகக் கூறுவதை யெண்ணிப் பார்க்கும் திறன் சமுதாயத்துக்கு வர வேண்டாமா?

தந்தை பெரியார் அவர்கள் ஒரு விழாவிலே பேசும் போது அரசாங்க வேலைகளில் நூற்றுக்கு 50 ஐ பெண்களுக்குக் கொடுத்து விட்டால் குழந்தைகள் பிறப்பது குறையும் என்று கூறினர் என்று படித்தேன். அலுவலக வேலைச் சுமைகளினுல் குழந்தைகள் பிறப்பதைக் குறைக்க வேண்டும் என்ற எண்ணம் மிகும் என்று பெரியார் கூறுகிறுர். இந்தக் கருத்து நடைமுறையில் சரிதானு என்பதை அரசாங்க ஊழியர்கள் மிகுதியாக உள்ள இந்தக் கருத்தரங்கில் நாம் எடை போட்டுப பார்க்கலாம்

'காதலுக்கு வழி வைத்து கருப்புபாதை சாத்தக்
கதவொன்று கண்டறிவோம்; இதிலென்னக் குற்றம்?'

என்று முப்பது ஆண்டுகட்கு முன்பே கவியரசர் பாரதி தாசன் பாடியுள்ளார். ஆனால் நாட்டிலே பிரச்சாரம் இன்னும் எவ்வளவு தேவைப்படுகிறது, இந்த நல்லக் கருத்தைப் பரப்ப?

எனவே படித்தவர்களாகிய அரசு ஊழியர்கள்— விஷய ஞானம் நிறைந்தவர்களாகிய அரசு ஊழியர்கள்— குடும்பலநலத் திட்டத்தை ஒரு சமுதாயக் கடமையாகக் கருதி செயற்பட வேண்டும்.

ஏதோ மருத்துவத் துறையில் ஒரு பகுதியிலே இருப் பவர்கள் - ஊராட்சி ஒன்றியங்களிலே பணியாற்றுவோர் இவர்கட்குத் தான் இந்த இயக்கத்திலே தொடர்புண்டு என்று கருதி நம்மை நாம் ஏமாற்றிக் கொள்ளாமல்

'எல்லோர்க்கும் எல்லாமும் என்றிருப்பதான' திரு நாட்டை உருவாக்க குடும்பநலத் திட்டத்தை ஒரு சமுதாயக் கடமையாகக் கொள்வோமாக!

(கிருஷ்ணகிரியில் 1973 நவம்பர் அன்று நடைபெற்ற என். ஜி. ஓ. யூனியன் குடும்பநலக் கருத்தரங்கில் ஆற்றிய உரை)



# வெற்றிப் பாதை தெரிகிறது !

ரகசிய குறிப்பேட்டு முறையை ஒழிக்க வேண்டும் என்பதற்காக நாம் நெடுநாட்களாகக் குரல் கொடுத்து வருகிறோம். இதைப் பற்றி நாம் பேசாத மாநாடில்லை ! அடுத்தடுத்து பலமுறைகளிலே தீர்மானங்களை நிறைவேற்றினோம்! ஊர்வலங்கள்தோறும் முழக்கமிட்டோம்! இது நமக்கு உரிமைப் பிரச்சனையாக' இருக்கிறது. நம்மை அடிமைகளாக்குகிறது என்றெல்லாம் கூறி வருகிறோம்.

ஆனால் அதிகார வர்க்கம் நம்மை இந்த இரும்பு பிடியிலிருந்து விடுவிப்பதற்கு இணங்கவே இல்லை, பிரகாசம் முதல் பக்தவச்சலம் வரை முதலமைச்சர்கள் மாறினார்கள்; அவர்கள் எல்லாம் இந்தப் பிரச்சனையில் நமக்கு நன்மை செய்ய விரும்பினாலும் அதிகார வர்க்கம் வேகத்தோடும் வெறியோடும் இந்த ரகசியக் குறிப்பேட்டு முறை இருந்துதான் தீரவேண்டும் என்று எக்காளமிட்டது ரகசியக் குறிப்பேட்டு முறையை எடுத்து விட்டால் ஒழுங்கு கெட்டுவிடும் என்று ஓங்காரம் செய்தனர் மேலதிகாரிகள்

இன்று காலம் மாறி வருகின்றது கருத்துக்கள் மாறுகின்றன. இந்தக் கால கட்டத்தில் பொங்கிய புத்துணர்ச்சியின் எழுச்சிக்கு ஈடு கொடுக்க முடியாமல் உச்சாணிக் கொம்பில் இருந்து வந்த அதிகார வர்க்கம் ஒருபடி இறங்கி வந்திருக்கின்றது. ஐ ஏ. எஸ். அதிகாரிகள் பெரும்பாலோரிடம் ஒரு கருத்து மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. ஒழுங்கு—கட்டுப்பாடு என்ற பெயரால் என். ஜி. ஓக்களை அடிமைகளாக இனியும் வைத்திருக்க முடியாது என்பதை அவர்கள் உணர்ந்து விட்டனர். 1968-ம் ஆண்டின் இறுதியில் சென்னை ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற

கருத்ததரங்கில் இதை நேருக்கு நேர் காணும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

ரகசிய குறிப்பேட்டு முறையில் தீமை இருக்கிறது என்று நாம் கூறியபோதெல்லாம் நம்மை எரித்துவிடுவது போல் பார்த்தவர்கள் மத்தியிலிருந்து இன்று தெளிவான குரல்—ஒலிகள் தீர்க்கதரிசனமான முடிவுகள் கேட்கத் தொடங்கி விட்டன.

"The personal file system has fallen in to a rut by imperfect implemeniation. Some-times reports are no written up at all. Sometimes they are written up far too late for the officer to retain a proper perspective of the individuals work; adverse remarks remain uncommunicated either for a length of time or for ever. Often they are written sketchily giving no clue whatsoever to a man's performance. A vague and non—commital report of a few lines is a favourites practise with many officers who find it convenient either because lack of familiarity with the main work or because officers of being challenged. A careful comprehensive and purposeful assessment is an exception rather than a rule".

—இவ்வாறு சொல்லியிருப்பது வரதராவோ அல்லது ஆழ்வாரப்பனோ அல்ல; தமிழக அரசுத் தலைமைச் செயலகத்தில் உள்ள டிப்டி காரியதரிசிகளில் ஒருவரான திரு. கே. வெங்கட்ராமன் ஐ. ஏ. எஸ்., அவர்கள் தான்.

" Very often the persons who made entry in the personal file or who send reports, do not appreciate the importance of the job and do it perfunctorily without aking time to study and assess the man and his perfor-

mance corrcetly. Frequently snap of Judgements are made and sometimes even prejudices play a part in the assessments recorded".

—இன்னொரு ஐ. ஏ. எஸ். அதிகாரியான திரு. எஸ் எம். டயஸ் அவர்கள் வாசித்த அறிக்கையின் ஒரு பகுதி

வருவாய்க் கழக உறுப்பினராக இருக்கும் திரு. விஸ்வநாதன் ஐ. ஏ. எஸ்., அவர்களும் திரு. ஏ. பத்மனுபன் ஐ ஏ எஸ் அவர்களும் சேர்ந்து கொடுத்திருக்கும் கூட்டு ஆய்வு அறிக்கையிலும் "The existing system is not satisfactory and there is a case for arguing that the personal file system as it works to day is defective". என்று கூறியிருக்கிறுர்கள்.

10 ஆண்டுகளுக்கு முன் இத் துணை அதிகாரிகளும் இப்படிக்கூற முன் வந்திருப்பார்களா? நாம், அமைதியாக —ஆனல் அழுத்தமாக; உள்ள உறுதியுடன் அதே சமயத்தில் உரத்த குரலில் தொடர்ந்து முழக்கமிட்டதன் விளைவாகத்தான் அவர்கள் இந்த அளவுக்கு கூறத் தொடங்கியிருக்கின்றனர். ஒழுங்கு—கட்டுப்பாடு, இதையெல்லாம் காப்பாற்ற ரகசியக் குறிப்பேட்டு முறை தேவை என்று வாதாடியவர்கள் ஊழியர்களுடைய வேலைத்திறனை மதிப்பிட—தகுந்த இடத்தில் தகுந்தவர்களை வைக்க ஒரு மதிப்பீட்டு முறை வேண்டாமா என்று நம்மைப் பார்த்தே கேட்கின்றனர். ஒரு படி இறங்கி வருகின்றனர் என்பதன் அறிகுறி இது: நாம் வெற்றிப் பாதையை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறேம் என்பதன் அடையாளம் இது.

இன்னமும் சிலர் விரல்விட்டு எண்ணக்கூடியவர்கள் பழைய முறையைப் பத்திரமாகப் பிடித்துக்கொள்ள விரும்பலாம். ஆனால் அவர்களும் இதன் தீமையை உணரக்கூடிய நாள் வரத்தான் போகிறது. நம் என் ஜி ஓ. களுக்கிடையே ஒற்றுமையும் உணர்ச்சி மிகுந்து செயல் படுவோமானால் கல்லையும் கனியாக்கலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டு வருகிறது.

வாதாடுவோம்! வெற்றி பெறுவோம்!!

போராடுவோம்! புது வாழ்வு பெறுவோம்!!!

(9-3-69ல் ஸ்ரீவில்லிபுத்தூரில் நடைபெற்ற முகவை மாவட்ட என். ஜி. ஓ யூனியன் 15-வது மாநாட்டு மலரில் வெளியானது)



# அரசு ஊழியர் வேலைநிறுத்தமும் 'இந்து' நாளிதழ் தலையங்கமும்

மராட்டிய மாநில அரசு ஊழியர் வேலை நிறுத்தம் பற்றி 22-5-75 நாளிட்ட 'இந்து' ஏட்டில் தலையங்கம் எழுதப் பட்டுள்ளது. "வேலை நிறுத்தத்தினால் மராட்டிய மாநிலப் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டாலும், வேலை நிறுத்தத்தினால் எழுப்பப்பட்டுள்ள பிரச்சனைகள் நாடு முழுதும் உள்ளவர்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தக் கூடியவை" என்று தலையங்க ஆரம்பத்தில் உள்ள பீடிகை யாராலும் அலட்சியப்படுத்த முடியாத ஒன்று. மாநில அரசு ஊழியர்கள் என்றால் ஏனோதானோக்கள், எதையும் செய்ய லாயக்கற்றவர்கள் என்ற தத்துவங்களை உடைத் தெறிந்து விட்டு மராட்டிய மாநில அரசு ஊழியர்கள், புதிய அத்தியாயத்தைப் படைத்துள்ளனர். மத்திய-மாநில அரசு ஊழியர்களைப் பிரித்துப்பார்ப்பது எப்படி பேதமை யோ-அதேபோல மாநில அரசு ஊழியர்களையும் இவன் வசதிமிக்க பஞ்சாபைச் சேர்ந்தவன், அவன் வாட்டம் நிறைந்த மைசூரைச் சேர்ந்தவன்-எனவே இருவரையும் ஒப்பிட்டுப் பேசுவது ஏலாது என்று கூறுவதும் பைத்தியக் காரத்தனம். அதைத்தான் 'இந்து' தலையங்கத்தினுடைய தொடக்கம் எடுத்துக்கூறுகிறதென்று நம்புகிறோம். மராட்டிய மாநில அரசு ஊழியர் போராட்டத்தினுடைய முடிவுகளும், வெற்றி தோல்விகளும் அவர்களுடன் நின்று விடாது. அவர்கள் வெற்றி பெற்றால் அதே வழியில் ஆந்திர மாநில ஊழியர்கள் கேட்கத்தான் கேட்பார்கள்; அவர்கள் தோல்வியுற்றால் அந்தத் தோல்வியை வெற்றி யாக்க என்ன செய்வது என்பதை குஜராத் மாநில அரசு ஊழியர்கள் செய்துகாட்டுவார்கள். இன்றில்லாவிட்டா லும் நாளை, நாளை இல்லாவிட்டாலும் அடுத்த நாள் மாநில அரசு ஊழியர்களின் உரிமைக்குரல் தீவிரமடையும்

என்பதைத்தான் 'இந்து' ஏடு நாடாள்வோருக்கு உணர்த்துகிறது.

அதைத்தான் தலையங்கத்தின் இரண்டாவது பாராவில் இன்னும் தெளிவாக எழுதுகிறது. "ஏறக்குறைய சமவேலை பார்க்கும் ஊழியர்களில் ஒரு பகுதியினருக்கு உயர்ந்த ஊதியம் அளிக்கும் வேறுபாடான நிலை தான் இத்தகைய கிளர்ச்சிகளுக்குக் காரணம். தேசீய ஊதியக் கொள்கைக் கான நடைமுறைக்குறிப்புகள் இல்லாததனாலும், அவ்வப் போது சில பகுதியினர் கொடுக்கும் அழுத்தத்திற்கு இரை யாவதனாலும் கொடுமைகள் முழுமையாக நீக்கப்படாமல் குறைபாடுகள் மேலும் மேலும் வளரக் காரணமாகி விட்டது.......... இந்திய அரசு எவ்வளவு விரைவில் ஒரு தேசீய ஊதியக் கொள்கையை உருவாக்குகிறதோ— அல்லது குறைந்த பட்சம் அகவிலைப்படி அளிப்பதிலாவது பொது உடன்பாட்டை பின்பற்ற முயல்கிறதோ அவ்வளவு விரைவில் அதனைச் செய்ய வேண்டும். இல்லையேல் இத்தகைய வேலை நிறுத்தங்களும், கதவடைப் புகளும் நாட்டில் தாங்க முடியாததாகிவிடும்".

எவ்வளவு அழகாக 'இந்து' பத்திரிக்கை ஊழியர் களின் உள்ளக்குமுறலை படம் பிடித்துக்காட்டுகிறது. என்பதை உணரவேண்டும். ஆயுள் காப்பீட்டுக்கழக ஊழியர்கள் போராட்டம் நடத்துகிறார்களா-எதையாவது கொடுத்துவைப்போம், தேசீய மயமாக்கப்பட்ட வங்கி ஊழியர்கள் கிளர்ச்சிப் பாதையில் செல்கிறார்களா-30 சதவீத கோரிக்கைகளையாவது ஏற்று அவர்கள் மனதைத் திருப்ப முயல்வோம்,-என்று மத்திய அரசு நேரத்திற் கேற்ப, நினைப்பிற்கேற்ப வளைந்து கொடுப்பதையும், வணங்கிப் போவதையும் வாடிக்கையாகவைத்துக்கொண் டிருந்த காரணத்தினால் சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கின்ற

சங்கடங்கள் என்னென்ன என்பதைத்தான் 'இந்து' ஏடு கோடிட்டுக் காட்டுகிறது. சணல் தொழிலாளருக்கு ஒரு சம்பளக்குழு, சர்க்கரைத் தொழிலாளருக்கு ஒரு ஊதிய போர்டு என கண்டதே காட்சி-கொண்டதே கோலம் என அள்ளித்தெளித்து விட்ட அவசர முடிவுகளால் ஆபத்துக்கள் நிலைத்து விடுகின்றனவே தவிர—அமைதியடைவோர் யாருமில்லை. இதைத்தான் நாடாள்வோர் உணர வேண்டும். கூறுவது நாமல்ல! 99 ஆண்டுகாலமாக தொடர்ந்து பத்திரிகை உலக ஜாம்பவனாக பவனிவரும் 'இந்து'

'நாடாள்வோர்' என்று கூறுகிற போது 'இந்து' ஏடு பொறுப்பை யார் தலையிலே சுமத்துகிறது என்பதையும் கூர்ந்த மதியுடையோர் எண்ணிப்பார்க்க வேண்டும். எழுதப்பட்டது மராட்டிய மாநில அரசு ஊழியர்களின் வேலை நிறுத்தம் பற்றி என்றாலும், வேரினைக் கண்டு விதியினை உருவாக்க வேண்டும் என்பது போல—மூலம் எது என்பதனை அந்த முதிய ஏடு உணர்த்தியுள்ளது.

ஆம்! தேசீய ஊதியக் கொள்கை வகுக்க மத்திய சர்க்கார் தான் பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும். தெளிவாகக் கூறுகிறது 'இந்து' ஏடு. இதே கருத்தை இங்குள்ள யாராவது கூறினால் ''கருணாநிதியைக் காக்காய் பிடிக்கிறார்கள்'' என்றும் ''மாநில சுயாட்சிக்கு மறைமுக பீடிகைபோடுகிறான்'' என்றும் கூறக்கூடியவர்கள்தான் அதிகம் உண்டு. ஆனால் அதற்கெல்லாம் அவசியமில்லாத 'இந்து' ஏடு கூறுகிறபோது—உயர்ந்த இடத்திலிருந்து வருகிற இந்த உண்மையை ஏற்றுக்கொள்கிற மனோபாவம் எல்லோர்க்கும் வேண்டும்.

இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தின்படி இன்றுள்ள அதிகாரங்களின்படி மத்திய அரசுதான் தேசீய

ஊதியக் கொள்கையை—அல்லது தேசீய அகவிலேப்படிக் கொள்கையை உருவாக்க வேண்டும்; உருவாக்க முடியும் இந்தப் பொறுப்பை டில்லிப்பண்டிதர்கள் சிலசமயம் உபதேசிக்கிறார்கள். ஆனால் பல சமயங்களில் பொறுப்பிலிருந்து நழுவுகிறார்கள்; பொறுப்பைத் தட்டிக்கழிக்கிறார்கள்.

அறப்போராட்டம் நடத்தும் மராட்டிய ஊழியர்கள் கூட தங்கள் கோபாவேசப் பார்வையை மாநில அரசை விட மத்திய அரசிடம் தான் அதிகம் வீசுகிறார்கள். இரத்தம் தோய்ந்த புடவைகளை மராட்டிய மாநிலப்பெண் என். ஜி. ஓக்கள் இந்திரா காந்திக்குத் தான் அனுப்பி உள்ளார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். எஸ் எம். பானர்ஜி-இந்திரஜித் குப்தா-நானேன்சென்-சரோஜ் பான் டே—சி கே. சந்திரப்பன்—ஜார்கண்டேராஜ்—ராம் அவ்தார் சாஸ்திரி ஆகிய ஏழு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்துப் போட்டு இந்தியப் பிரதமரையும்—இந்திய நிதியமைச்சரையும் தான் வேண்டியுள்ளனர். வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருமாறு. எனவே "State for pay—Central for D. A." என்பதை பொருளற்ற வாதமாகப் புறக்கணிக்க முடியாது என்பதை 'இந்து' பத்திரிக்கை தலையங்கத்தைப் பார்த்தாவது எல்லோரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

(25-5-75ல் மதுரையில் நடைபெற்ற என். ஜி. ஓ. ஊழியர் பயிற்சி முகாமில் சிவ. இளங்கோ ஆற்றிய உரையின் பகுதி)

# சர்க்கார் ஊழியர்களும் சம்பளக் கமிஷனும்

"வக்கீலய்யா! ஜட்ஜுக்கு நாலு கூடை மாம்பழமும் மூன்று ஜோடி ஜரிகை வேஷ்டி பார்சலும் அனுப்பியிருக்கிறேன்" என்றானும் மகிழ்ச்சியுடன் கட்சிக்காரன். மிரட்சி அடைந்த வக்கீல் "படுபாவி! காரியத்தைக் கெடுத்து விட்டாயே! இலஞ்சம் கொடுக்க முயற்சித்தாய் என்று நினைத்து, இந்த ஜட்ஜ் உனக்குப் பாதகமாகவல்லவா தீர்ப்பளிப்பார்" என்றார். கட்சிக்காரன் "எனக்குத் தெரியாததா வக்கீல் சார்! நான் பிரதிவாதியின் பெயரில் தானே அனுப்பினேன்" என்றானும். 'அநியாய புத்திசாலி' என்று தானே இவனை அழைக்கத் தோன்றுகிறது உங்களுக்கு:

நமது மதிப்புக்குரிய நிதியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களும் இன்றையதினம் இதே நிலையில் தான் இருக்கிறார். பட்ஜெட் வரப்போகிறது, வரப்போகிறது என்று ஆவலோடு எதிர்பார்த்த அரசாங்க ஊழியர்களுக்கு இடைக்கால நிவாரணம் எதுவும் கிடைக்கவில்லை இந்த பட்ஜெட்டில், மைசூர் மாநிலத்தில் அண்மையில் இடைக்கால உயர்வு கிடைக்கிறது. தங்களுக்கும் ஏதாவது கிடைக்கும் என்று ஆவலோடு எதிர்பார்த்த தமிழ் நாட்டு என். ஜி. ஓக்.' களுக்கு ஏமாற்றம் தான் மிஞ்சுகிறது.

இந்த ஏமாற்றத்தை மாத்திரமல்ல—நிதியமைச்சரின் பட்ஜெட் பிரசங்கத்தை ஆழ்ந்து படித்துப் பார்த்தால் பல கரும்புள்ளிகள் நன்றாகத் தெரியும். முப்பத்து நான்கு லட்ச ரூபாய்க்கு பற்றாக்குறை வரவு செலவுத் திட்டத்தைக் கொண்டுவந்துவிட்டு இனி விரைவில் வெளிவர இருக்கும் சம்பளக் கமிஷன் 'அறிக்கையை அமுல்படுத்தும்போது

இன்னும் அதிகமான பற்றுக்குறை ஏற்படலாம் என்பதையும் கவனமாகக் குறிப்பிட்டுள்ளார். ஒரு பக்கம் சம்பளக் கமிஷனுக்கு இது ஒரு மறைமுக எச்சரிக்கையாக இருக்கிறது. உங்கள் சிபார்சுகளைக் கொஞ்சம் குறைத்தே செய்யுங்கள். இல்லையேல் பொருளாதார சிக்கல் நாளைய தினம் பொறுக்க முடியாததாகிவிடும் என்று கூறுவது போலக் கூறிவிட்டு அதே நேரத்தில் என். ஜி. ஓ க்களுக்கும் ஆசை வார்த்தை கூறுகிருர்.

'சம்பளக் கமிஷன் அறிக்கை வெளிவந்தவுடன் அதை பச்சாதாபத்துடன் கவனித்து அரசாங்கம் ஆவன செய்யும்' என்பதாக. நாளை சிபார்சுகள் சரிவர இல்லையென்ருல் அதற்குப் பொறுப்பாளி சம்பளக் கமிஷன் தான். எங்கள் மேல் பாயாதீர் என். ஜி. ஓக்களே ! என்று இப்பொழுதே சாடை காட்டிவிட்டார்.

என். ஜி. ஓக்கள் என்று கூறப்படுகிற சர்க்கார் ஊழியர்கள் இந்த நாட்டிலுள்ள முதுகெலும்புகளும், அச்சாணிகளும் ஆவார்கள். இதை நாம் கூறவில்லை ஆட்சிபீடத்தில் அமர்ந்திருக்கும் அமைச்சர்களே அடிக்கடி கூறிவரும் உண்மை இது. அதுவும் இந்தியாவிலேயே சென்னை ராஜ்யத்தில் இருக்கும் 'என். ஜி. ஓக்கள்' தான் செயல் திறனில் சிறந்தவர்கள். சுறுசுறுப்பு மிக்கவர்கள் என்று பலப்படப் பாராட்டப்பெற்று வருகிருர்கள்.

அப்படிப்பட்ட என் ஜி. ஓக்கள் இன்றல்ல, நேற்றல்ல 13 ஆண்டுகளாக 1947 லிருந்து உரத்த குரலில், உரிமை முழக்கத்தைத் தொடர்ந்து எழுப்பிவருகிருர்கள். ஆமாம் ! நாடு சுதந்தரமடைந்தவுடனேயே அவர்களின் நல்வாழ்வுக்குக்கும் நாசமேற்பட்டுவிட்டது, அதற்கு முன்பு

வெள்ளைக்கார அரசாங்கத்தில் மாகாண சர்க்கார் ஊழியர்களுக்கும்; மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கும், சம்பளத்தில் தான் வித்தியாசம் இருந்தது. ஆனால் கதர்க் குல்லாய்களின் ராமராஜ்யத்தில் பஞ்சப்படியிலே கூட வித்தியாசம் ஏற்பட்டது. அந்த வித்தியாசம் படிப்படியாக வளர்ந்து. இன்று உச்ச கட்டத்தில் நிற்கிறது.

இந்த கொடுமையைக் கண்டு மனம் புழுங்கி என். ஜீ, ஓக்களும் தீர்மானம் போட்டார்கள்; மாநாடுகள் நடத்தினார்கள்; தூதுகோஷ்டிகள் வந்தார்கள். உண்மையான ஜனநாயக ஆட்சியாயிருந்தால் இதற்கெல்லாம் இந்த நாட்டிலே மதிப்பிருக்கும். ஆனால் இங்கே நடப்பது பசுத் தோல் போர்த்திய புலி ஆட்சியல்லவா? பலன் கிடைகக் வில்லை இவர்களுககு!

• • அடுத்தபடி ஊர்வலங்கள் நடத்தி, தெரு வீதிகளிலே சமநீதி வேண்டும் என்று கோஷமிடத் தொடங்கியிருக்கிறார்கள். ஒரு நல்லாட்சி, தன்னுடைய ஊழியர்கள் தெருக்களிலே இவ்விதம் குரல் எழுப்பிக்கொண்டு செல்ல வேண்டிய அவசியத்தில் அவர்களை வைத்திருந்தால், அந்த ஆட்சியைப்பற்றி என்ன நினைப்பது? ஆனால் இந்த முறையும் 'தடித்த தோல'ர்களுக்கு உறைக்கவில்லை.

பொதுத் தேர்தல் 1957ல்! தேர்தலை நடத்தி வைக்க வேண்டிய பொறுப்பும், பொதுமக்கள் வரும் தேர்தல் சாவடிகளிலே அதிகாரிகளாக இருக்கவேண்டிய பெரும் பங்கும் என். ஜீ. ஓக்களுக்கு உண்டு. அந்த சமயத்தில் என். ஜீ. ஓ' சங்கத்தினர் ஒரு புது முறைத் திட்டத்தை, வகுத்தனர். தேர்தல் பணியிலே ஈடுபட்டிருக்கும்போது 'ஆட்சியாளரால் புறக்கணிக்கப்பட்ட என். ஜீ. ஓ.' என்று

அச்சிட்ட இலச்சினைகளை (பேட்ஜ்களை) அணிந்து செல்வ தென்று தீர்மானித்தனர். இப்படி அணிந்து சென்றால் என்ன நடக்கும் ?

வோட்டுச் சாவடிக்கு வருவார் வாக்காளர். அங்கே பணியாற்றும் தேர்தல் அதிகாரியிடமிருந்து வாக்குச் சீட்டைப் பெறுவார். பெறுகிற நேரத்திலே அந்தத் தேர்தல் அதிகாரி, சட்டையிலே ஒரு இலச்சினை அணிந்து இருப்பதைக் காண்பார். படித்தவராயிருந்தால் அதைப் படித்துப் பார்ப்பார். படிக்காதவராயிருந்தால் என்ன என்று கேட்பார். அதை அவர்கள் அறிகிற நேரத்திலே, தங்களிடம் பணியாற்றுகிற ஊழியர்களுக்கு ஒழுங்காக சம்பளம் தர இயலாத ஒரு அரசாங்கத்தை நடத்திச் செல்லும் இந்த காங்கிரஸ் கட்சியை, மறுபடியும் தேர்ந் தெடுப்பதில் நாம் என்ன பலன் காண முடியும் என்று நினைப்பார்கள். அதன் விளைவு..........?

காங்கிரசாருக்கு கதி கலங்கியது. நினைக்கவே முடிய வில்லை. அதன் பயனாக ஏழு ரூபாய் பஞ்சப்படி என். ஜி. ஓக்களுக்கு ஆனால் வித்தியாசம் இன்னும் நீங்கவில்லை. வித்தியாசம் இருக்கக்கூடாது என்பதை பிரதமர் நேரு விலிருந்து காங்கிரஸ் கட்சியில் நேற்றுச் சேர்ந்த 'நெடும்பாலம்' எம். எல். ஏ. வரையில் எல்லோரும் ஒப்புக் கொள்கிறார்கள். ஆனால் வழி தான் கிடைக்கவில்லையாம்; வகைதான் இல்லையாம் நிதியைப் பெருக்க.

நிதியில்லை, நிதிப் பற்றாக்குறை என்று என். ஜீ. ஓக்கள் கேட்கும்போதெல்லாம் சுட்டிக் காட்டிவரும் இந்த சர்க்காருக்கு அகில உலக அரசியல் மேதையும், மாபெரும் பொருளாதார நிபுணருமான ஆற்காடு ஏ. ராமசாமி

(முதலி)யாரின் சில வார்த்தைகளைக் கவனத்துக்குக் கொண்டு வருகிறேன் அவர் கூறுகிறார் :

"I knew that everything is a question of finance; But I know also that crores and crores of rupees have been poured down the bottless pit in various directions, by State Govts, and Central Govts; not with standing the very censorious activities of members of parliament, not with standing the estimate committees and public accounts committee and not with standing the various agencies that have been created, these wastages are going on today"

ஆழம் காணமுடியாத அடிவாரத்தில், வீணாக கொட்டி வரும் கோடிக்கணக்கான ரூபாய்களுக்கு சரியான விவரம் தரமுடியும் என்றும் எச்சரிக்கிறார் ஆற்காட்டார். அவரை திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் என்றோ, அல்லது வேறு எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர் என்று மட்டுமோ கூறிவிட முடியாது. அவருடைய உதவியை அரசியலார் கேட்டுப் பெறுகின்றனர். அவருடைய சொல் திறன் இந்தத் துணைக் கண்டத்துக்கு அத்யாவசியமான ஒன்றாக இருக்கிறது. அத்தகைய பேரறிஞர்தான் இவ் வாறு இடித்துரைக்கிறார். இதையும் கேட்காத மந்திரிகள் எதிர்காலத்தில் என்ன விளைவை அனுபவிக்கிறார்களோ பொறுத்திருந்து பார்ப்போம்.

என். ஜீ ஓக்கள் இந்த நாட்டில் ஒரு நடுத்தர மக்கள் இயக்கத்தை உருவாக்கி வருகிறார்கள். அவர்கள் அமைச் சர்களையும், ஆளுகின்ற அரசாங்கத்தையும் பற்றி அடிக் கடிப் பேசிவருவது எவ்வளவு ஆபத்தானது என்பதை இந்த அமைச்சர்கள் உணரவில்லை. பிரிட்டனிலும், ஸ்வீடனிலும், ஆஸ்ட்டிரியாவிலும், ருமேனியாவிலும்

சர்க்கார் ஊழியர்கள், ஆரம்ப ஆசிரியர்கள், ஸ்தல ஸ்தா பன சிப்பந்திகள் ஆகியோர் சேர்ந்த நடுத்தர மக்களின் கூட்டணிதான் ஆளுகின்ற கட்சிகளை அடிக்கடி மாற்றி யமைக்கக்கூடிய பெரும் வல்லமை படைத்திருக்கிறது. அத்தகைய சக்திவாய்ந்த சமுதாயத்தைப் புறக்கணிக்கா தீர் என்று இந்த நாட்டு அமைச்சர்களை எச்சரிக்கிறோம்.

சம்பளக் கமிஷன் சிபார்சுகளை எதிர்பார்த்து அதனை அமுல்படுத்துவதற்கு வரவு செலவுத் திட்டத்தில் தக்க தொகை ஒதுக்கியிருக்க வேண்டும் என்று 'தமிழ்நாடு' நாளிதழ் 11-3-60 இதழில் தலையங்கம் தீட்டியிருக்கிறது. சர்க்கார் இதனை செய்யத் தவறியிருக்கிற காரணத்தால், சம்பளக் கமிஷன் முடிவுகள் வெளியாகும் விதத்திலும், அமுலாக்கப்பட இருக்கும் முறையிலும் என். ஜி. ஓக் களுக்குப் பெருத்த சந்தேகம் ஏற்பட்டிருப்பது இயல்பே.

எனவே இத்தகைய சந்தேகங்களுக்கு இடம் கொடுக்காமல் சம்பளக் கமிஷனுடைய நல்ல முடிவை விரை வில் வெளியிட வேண்டுமெனவும், சர்க்காரும் அதனை சரி யான முறையில் அமுலாக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கிறோம். அதை விட்டு சம்பளக் கமிஷனை சாக்காகக் காட்டினும் கட்டுரையின் தொடக்கத்தில் நாம் காட்டிய 'அநியாய புத்திசாலிகள்' கதையைத்தான் அது நினைவூட் டும்! அத்தகைய 'அநியாய புத்திசாலிகள்' அதிக நாள் நிம்மதியாக வாழ முடியாது என்று எச்சரிக்கிறோம்.

('தாய்நாடு' வார இதழில் 18-3-60ல் வெளிவந்த கட்டுரை)

# பாரைக் குலுக்கிய பத்து நாட்கள்

ஏழ்மையிலே உழன்று, எண்ணற்ற தொல்லைகளுக்கிடையே, சிக்கித்தவிக்கும் என். ஜி. ஓக்களிடையே, பாரைக் குலுக்கிய பத்து நாட்கள் என்றவுடன், தேவையற்ற கதையென்றுதான் திருப்பிவிடுவீர்கள் பக்கத்தை ஆனால், நான் குறிப்பிடப்போவது ருஷ்ய நாட்டுப் புரட்சி நடந்த பத்து நாட்களைப் பற்றியல்ல. எலும்பொடிந்தவர்களாய் ஏளனத்துக்குரியவர்களாய்க் கருதப்பட்ட என். ஜி. ஓக்கள் 1300 மைல்கள் கடந்து, ஆசியாவின் ஒளிவிளக்காய், அகிலம் புகழ் மாணிக்கமாய், நமது பிரதமராய் விளங்கும் நேருஜியைச் சந்திக்கச் சென்ற அந்தப் பத்து நாட்களைத் தான் குறிப்பிடுகிறேன்.

அரசாங்க ஊழியர்கள் வரலாற்றின் எந்தப் பக்கத்தைப் புரட்டினாலும் கடந்த கால நிகழ்ச்சிகளைத் திருப்பிப் பார்த்தாலும் இதுபோன்றதொரு சாதனையைச் காணமுடியாது. 20-5-59ல் சென்னை மாநாட்டில் புது டில்லி செல்லும் தீர்மானத்தை நமது தலைவர் கண்ணன்குட்டி முன்மொழிந்தபோதுகூட டில்லி பயணம் எதிர்பாராத அளவுக்குப் பிரச்சார பலத்தைத் தரக்கூடும் என்று எண்ணியிருக்க மாட்டார்.

15—6—56, இந்த நாள்தான் வெள்ளைச்சட்டை தொழிலாளாகளான ஐம்பதினாயிரம் என். ஜி. ஓக்கள் பிரதிநிகளாக 35 பேர் சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனிலிருந்து கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரசில் புறப்பட்டோம், காலை 9 மணிக்கு நாங்கள் மத்திய சங்க கட்டிடத்திலிருந்து புறப்பட்டு சென்ட்ரல் ஸ்டேஷனை அடைந்தபோது, நூற்றுக் கணக்கான என். ஜீ. ஓ. நண்பர்கள் எங்களை வரவேற்று,

எங்கள் பயணம் வெற்றிகரமான முடிய வேண்டுமென்று வாழ்த்தினர். பத்திரிகை நிருபர்கள் ஒரு புறம் எங்கள் பெயர் விவரங்களைக் குறித்துக்கொண்டதோடல்லாமல் அருகிலிருந்த அரசாங்க அந்தரங்க உளவாளர்களும் குறித்துக்கொள்ள உதவினர்.

மலர் மாலைகள், தின்பண்டங்கள், சுவை நீர்வகைகள் குவிந்து கொண்டேயிருந்தன நண்பர்களின் அன்பு எல்லையில்லா மகிழ்ச்சியிலாழ்த்தியது. அவர்களுடைய அன்பு பிடியிலிருந்து விடுபட மனமில்லை; என்றாலும் மணி 10-10 ஆவதைக் கண்ட தலைவர் அவர்களுக்கு விடை கூறி ஒரு சிற்றுரை நிகழ்த்தினர். பொதுச்செயலாளர் நாயகம் நன்றி கூறி முடித்த போது, மணி 10-20 ஆகியது. எங்களை சுமந்து கொண்டிருந்த எக்ஸ்பிரசை "டில்லி தூது கோஷ்டி வெல்க'! என். ஜி. ஓ. சங்கம் வாழ்க! என முழக்கங்களுடன் நண்பர்கள் ஏற்றி வைத்தனர்.

சிங்காரச் சென்னை எங்கள் சிந்தையிலேயிருந்தாலும் பார்வையிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக விலகத் தொடங்கியது. சென்னை நண்பர்கள் கொண்டு வந்திருந்த உணவு வகைகள் எங்களுடைய பசியை நிறைவு செய்தது. நாங்களோ நிரந்தர அரைப்பட்டினிகளாக இருக்கும் நிலையை மாற்ற நேரு பண்டிதர் உதவமாட்டாரா என்ற எண்ணத்திலேயே இருந்தோம்.

பாபட்லா நெருங்கியதும் 'சென்னை என். ஜி ஓ. சங்கம் வாழ்க என்ற கூக்குரல் கேட்டது. ஆம்! விட்ட குறை, தொட்ட குறை என்பதற்காக அல்ல; உளம் நிறை அன்புடன் எங்களை வரவேற்றனர் பாபட்லா என். ஜீ. ஓக்கள். சென்னை சர்க்காருக்குப் பண முடிப்பு தந்து எங்களை செயலாற்ற முடியாதவர்களாக வைத்திருக்கும்

கொடுமையைக் குறைப்பீர். என்று டில்லி நோக்கி செல்லும் எங்கள் முயற்சிக்கு உறுதுணையாக இதோ ஒரு பண முடிப்பு என்று தந்தனர். ஆந்திர அன்பர்கள் தந்த அந்த அன்புக் காணிக்கைய மகிழ்வுடன் பெற்றுக் கொண்டோம்.

16-6-56: இன்று முழுவதும் ரயிலேயே பொழுதைக் கழிந்த எங்களுக்குக் குறிப்பிடத்தக்கசெய்தி இரண்டுண்டு. காலை 9-30க்கு நாக்பூரில் மத்திய பாரத் என். ஜீ ஓ. க்கள் பெருந்திரளாகக் கூடி வரவேற்று, தேனீர் விருந்து வைத்து வழியனுப்பினர். மாலை நான்கு மணிக்கு இட்ராசி ஜங்ஷனை அடைந்த எங்கள் வண்டி. அருகே எங்கள் பெட்டி நிறுத்தப்பட்ட இடத்திற்கு நேர் எதிரில் குடியரசுத் தலைவர் பாபு ராஜேந்திர பிரசாத் அவர்களின் விஷேச சலூன் வண்டியும் நிறுத்தப் பட்டிருந்தது. ஜனாதிபதியைப் பார்ப்பதற்காக கூடியிருந்த பெருந்திரளான மக்கள் கூட்டத்தின் பார்வை எங்கள் பெட்டியின்மீது திரும்பியது. கண்ணாடிக் கதவுக்கப்பால் வீற்றிருந்தாலும் கூட குடியரசுத் தலைவர் கவனமும் ஒரு சில வினாடிகள் எங்கள் பக்கம் திரும்பியது. பிறகு குடியரசுத் தலைவரின் சலூனை யும் இணைத்துக் கொண்டு எக்ஸ்பிரஸ் வேகமாக டில்லி நோக்கிப் பறந்தது.

17-6-56 பொழுது விடிந்தது. இந்தியப் பேரரசின் தலைநகர் டில்லி எங்கள் கண்களிலே தென்பட்டது. மொகலாயப் பேரரசர்கள் முடிதரித்து கொடி பறக்கக் கோலேச்சிய நகரம். அரியணையில் அமர்ந்து கொண்டே அன்பு மார்க்கத்தைப் பரப்பிய அசோகரும், அக்பரும் ஆண்ட நகரம், சிப்பாய் கலகத்தின் கேந்திரஸ்தானமாக விளங்கிய பெரு நகரம். சிம்மக் குரல் எழுப்பி பிரிட்டிஷ் சிங்கத்தை உலுக்கிய மகான் காந்தி மறைந்த டில்லியில் காலை7-30க்குக் காலடி வைத்தோம். புதுடில்லி பயணம் மிக

குறுகிய காலத்தில் ஏற்பாடு செய்யப்பட்டமையால், அங்கு உள்ள நமது சென்னை நிறுவனங்களுக்கு சரியான தகவல் கொடுக்க முடியவில்லை. தகவல் கொடுக்கப்பட்டிருந்த ஒரு அமைப்பின் நிர்வாகிகள் மிகப் பெரிய அதிகாரிகையால் எங்களை வரவேற்கப் புகைவண்டி நிலையத்திற்கு வர இயல வில்லை. எங்களை நாங்களே வரவேற்றுக் கொண்டு இடம் தேடும் படலத்தில் இறங்கினோம்.

மத்தியதர வகுப்பினரை அதே வர்க்கத்தினர் தானே கவனிக்க முடியும். அதற்கிணங்க ஒரு 'போட்டோ கிராபர்' கரோல் பாக்கில் ஒரு தங்குமிடத்தைக் காட்டினார். வசதிக் குறைவுகள் பல இருந்தாலும் கூட முதல் முதலில் வழிக் காட்டிய அவர், எங்கள் நன்றிக்குரியவர். நாற்பத்து நான்கு மணி நேரம் ரயில் பிரயாணம் செய்த களைப்புத் தீர ஒரு சிலர் ஓய்வெடுத்துக் கொண்டிருக்க, தலைவர்கள் மேற் கொண்டு நடக்க வேண்டியதை யோசிக்க ஆரம்பித்தனர்.

18-6-56 முழுவதும் நேருவைப் பார்க்க முழு முயற்சிகள் எடுத்து கொண்டோம். நாங்கள் சென்ற நேரம் மக்கள் சபையும் நடைபெறாத நேரம். மக்கள் சபை உறுப்பினர்களை ஒருவரைக் கூட தலைநகரில் காண முடிய வில்லை. நேரடியாக நாங்களே பிரதமரின் அலுவலகத் திற்குச் சென்றோம். அங்கே நேருஜியின் அந்தரங்க காரியதரிசியான திரு. கால் என்பவரை (இப்பொழுது லக்ஸம் பர்க்கில் இந்திய ஸ்தானிகராக இருக்கிறார்) பிரதம ரிடம் நாங்கள் கொடுக்கக் கொண்டிருந்த விண்ணப்பத் தைக் கொடுத்தோம். அதைப் பிரதமரின் கவனத்திற்குக் கொண்டு வருவதாகவும் ஆனால் பிரதமரை சந்திக்க இயலுமா என்பதைத் தான் கூற இயலாது என்றும் கூறிவிட்டார். ஏமாற்றம் எதிரொலிக்கப் போகிறது என்ற எண்ணத்துடன் தங்குமிடம் திரும்பினோம். ஏங்கும் உளத்தோடு.

19-6-56 இன்று காலை தாங்களே நேரடியாக நேருவின் இல்லத்திற்கு ஏழு மணிக்குச் சென்றோம். பிரதமரின் இல்லத்திற்கருகில் அமைக்கப்பட்டிருந்த புல் பச்சைகள் தான் எங்கள் ஆசனங்களாக அமைந்தது மக்களால், மக்களுக்காக ஆளப்படும். மக்கள் சர்க்காரின் மதிப்பிற்குரிய பிரதமரைக் காண 1300 மைல்கள் கடந்து ஐம்பதிஞயிரம் என். ஜி. ஓக்களின் பிரதிநிதிகளாக வந்த எங்களை வரவேற்க வேண்டாம் ஆட்சிப் பிரதமர் தன்னைத் தேடி வருவோர்க்கு அமர என்று ஒரு பகுதியையாவது ஒதுக்க வேண்டாமா என்ற எண்ண அலைகளுடன் இருந்தோம். இதற்கிடையில் நேருவின் பாதுகாப்பு செயலராம் உயர் திரு. கன்னுவைக் கண்டோம். கடிதமொன்றைக் கொடுத்தோம் பிரதமருக்கு. காத்திருப்பதை நினைவூட்டினோம்.

நினைவூட்டி வெளியே வந்த ஒரு மணியில் பிரதமரை சுமந்து கொண்டு பெரியதோர் கார் சென்றது. அதைத் தொடர்ந்து பேட்டி மறுக்கப்பட்டது என்ற செய்தியை கொண்டு வந்தார் கன்னு. ராஜ்ய விவகாரமாம்! கவனிக்க நேரமில்லையாம்.

என்ன செய்வது என்று யோசித்தோம். அங்கிருந்து கிளம்பக் கூடாது உண்ணுவிரதம் இருக்க வேண்டும் என்றனர் ஒரு சிலர். நேரடியாகக் காந்தியாரின் சமாதிக்குச் சென்று ''அருமைத் தந்தையே'' என்று முறையிடலாம் என்றனர் ஒரு சிலர். அவசரப்பட்டு எதையும் செய்யக்கூடாது என்ற தலைவர் அறிவுரையின் பேரில் திருப்பினோம் 20-6-56 அன்று எங்களை டில்லியில் பார்க்க மறுத்த பிரதமர் இந்திரா இங்கிலாந்துக்கு புறப்பட்டார்.

21-6 56 அன்று வர்த்தக அமைச்சர் (தற்போது நிதி அமைச்சர்) டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரை சந்தித்தோம்.

மிக அன்போடு எங்களை வரவேற்ருர் கோரிக்கைகளை யெல்லாம் பொறுமையுடன் கேட்டார். இந்த விஷயத்தில் தான் சென்னை வரும்போது ஏதாவது கவனிப்பதாகவும் சொன்னுர். இனிய வார்த்தைகள் தான் அவரிடமிருந்துப் பெற்ருேம். அதைத் தவிர வேறெதையும் அப்போதையை நிலையில் அவரால் செய்ய முடியாது என்பது எங்களுக்கும் தெரிந்தது தான். ஆனுல் நாங்கள் அன்று வரை சந்தித் ததின் 'விளைவு' தான் இன்று நிதியமைச்சரான பிறகு தன்னுடைய கவனத்தை, நமது பிரச்சனைகளில் அதிக அளவுக்குத் திருப்ப உதவி புரிந்துள்ளது என்ருல் அதை மறுக்க முடியாது.

டி. டி. கே.யைப் பார்த்த பிறகு அவருடைய காரி லேயே அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் தேபரை சந்திக்கச் சென்ருேம். அன்போடு வரவேற்ற அவரிடம் எங்கள் குறைகளை நீட்டினேம். இந்த விஷயத்தில் நான் செய்யக்கூடியது என்ன இருக்கிறது? என்ருர். "நாட்டை ஆள்வது காங்கிரஸ் கட்சி. அந்த கட்சியின் தலைவர் நீங்கள், எனவே ஆட்சியாளருக்கு அறிவுறுத்த உங்களுக்கு வாய்ப்பும் உண்டு; வசதியும் உண்டு என்று கூறினேம். நீங்கள் வேலை நிறுத்தம் போன்ற பயமுறுத்தல் களைக் கையாள்கிறீர்கள். எனவே, என்னுல் செய்யக் கூடியது எதுவுமிருக்காது' என்று கண்டிப்பான முறையில் கூறி எங்களை வழியனுப்பினுர் உயர் திரு. தேபர்.

இவ்வாருக டில்லியில் எங்களுடைய நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்டு 22-6-56 பிற்பகல் அங்கிருந்து புறப் பட்டு 24-6-56 சென்னை வந்தடைந்தோம். இந்த டில்லிப் பயணத்தைக் கிண்டல் செய்தோரும், கேலி பேசியவர் களும் பலருண்டு. பல்லாயிரக் கணக்கான பணத்தை வீணுக்கி விட்டனர் என்று ஆரவாரித்தோரையும் நான் அறிவேன்;

அவர்கள் எல்லாம் ஆச்சரியப்படத் தக்கவிதத்திலே இன்று சென்னை ராஜ்யத்திற்கு மட்டுமல்ல, மற்றும் ஐந்து ராஜ்ய என். ஜி. ஓ. க்களுக்கும் என். ஜி. ஓ க்கள் சம்பளத்தை உயர்த்த டில்லிசர்க்கார் இருபது கோடி ரூபாய் பணம் ஒதுக்கப் போகிறது என்ற செய்தி வருகிறது• சிந்தையிலே இன்பம் பாய்ச்சும் இந்த செய்திக்குக் காரணம் டில்லிப் பயணம் தான் என்பதை தெளிவு படைத்தோர் அனைவரும் அறிவர்.

அதுமட்டுமல்ல, 18-8-56ல் புதுக்கோட்டையில் பேசும் போது திரு. ஆதித்தன் குறிப்பிட்டார், ஜூன் மாதம் அவர் ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து கொண்டிருந்த போது என். ஜி ஓ. முதற்குழு டில்லி சென்றதையும், அங்கு பிரதமர் பேட்டியளிக்க மறுத்ததையும் ஆஸ்தி ரேலியப் பத்திரிக்கைகள் பெரிய முறையில் பிரசுரித்த தனவாம்.

ஆஸ்திரேலியவில் மட்டுமல்ல, இந்தியாவில் குறிப் பாகத் தமிழகத்தில் உள்ள எல்லாப் பத்திரிக்கைகள் தங்களுடைய கவனத்தை என். ஜி. ஓக்கள் பக்கம் திருப்பச்செய்தது நாம்செலவு செய்ததோ சில ஆயிரங்கள் தான். ஆனால் பாரைக் குலுக்கிய அந்தப் பத்து நாட்கள் மூலமாக நாம் பலலட்சக் கணக்கான ரூபாய் மதிப்பிடத் தக்க விளம்பரம் பெற்று இருக்கிறோம். என். ஜி. ஓ. க்கள் ஏமாளிகளல்ல கட்டுண்டு, பொறுத்திருந்த காலமெல்லாம் மாறி, பொங்கி யெழும் தன்மை வாய்ந்தவர்கள் என்பதை உலகுக்கு உணர்த்தியிருக்கிறது.

சங்கம் நடத்தும் எத்தகைய திட்டமானாலும் பங்கு கொண்டு பணியாற்றினால் என். ஜி சமுதாயம் தன்னு டையய லட்சியங்கள் அனைத்தையும் விரைவில் அமைந்து விடும் என்பதைத் தான் பாரைக் குலுக்கிய அந்தப் பத்து நாட்களும் உணர்த்துகின்றன.

(26-1-57 ல் மதுரையில் நடைபெற்ற என். ஜி. ஓ.
மாநில மாநாட்டு சிறப்பு மலரில் வெளியான
கட்டுரை)

# ஓய்வூதியம் பெறுவோரின் நிலை

இன்றைய என். ஜி. ஓ. க்கள் எல்லாம் நாளையதினம் பென்ஷனர்கள் என்பதை நாம் நன்கு உணர வேண்டும். அப்படி உணர்ந்தால் தான்பென்ஷன் சலுகைகள் நாளுக்கு நாள் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்பதையும் என். ஜி. ஓ. யூனியன் அவ்வப்போது உணர்த்தி வருகிறது.

ஹாலந்து, ஈரான், பெல்ஜியம், யூகோஸ்சுலோவியா, துருக்கி, இத்தாலி, மேற்கு ஜெர்மனி, பிரான்ஸ், நெதர் லாண்ட், ஸ்வீடன் முதலிய நாடுகளில் ஓய்வு பெறும் வயது 65 என்று உள்ளது, இங்கிலாந்தில் ஆண்களுக்கு 65 என்றும் பெண்களுக்கு 60 என்றும் உள்ளது. சோவியத் ருஷ்யாவில் ஆண்களுக்கு 60ம், பெண்களுக்கு 65ம் என்று ஓய்வு பெறும் வயது நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது. ஜப்பான் நாட்டிலோ அரசு ஊழியர்களுக்கு ஓய்வு பெறும் வயதே இல்லை. இதை எல்லாம் பார்க்கும் போது இந்தியா விலும் தமிழ்நாட்டிலும் இருக்கிற குழப்பமான நிலையை நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை.

ஜப்பான் நாட்டு மக்களின் உழைக்கும் திறனைப் பாருங்கள், சோவியத் ருஷ்யாவின் சோபித வாழ்க்கை யைப் பாருங்கள் என்று கூறிவிட்டு இங்கிலாந்தைப் போன்ற அரசியல் அமைப்பைக் கொண்டு வர முயற்சித்து —அதில் அமெரிக்கா நாகரீகத்தையும் புகுத்தியுள்ள ஆள்வோர், ஓய்வு பெறும் வயதைப் பொறுத்த வரையில் அந்த நாடுகளைப் பின்பற்றவில்லை என்பது கேள்விக் குறி யாக இருக்கிறது.

கடைசியாக வாங்கிய ஊதியத்தையே ஹாலந்து, ஈரான், பெல்சியம், யுகோஸ்லோவேகியா, துருக்கி ஆகிய இடங்களில் பென்ஷனாகத் தருகிறார்கள். கடைசியாக வாங்கிய ஊதியத்தில் 80 சதவீதத்தினை அமெரிக்க, ஸ்பெயின் ஆகிய நாடுகளில் தருகிறார்கள். மேற்கு ஜெர்மனி, பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகளில் 75% தருகிறார்கள். ஆனால் இங்கே 33/80 தான் ஓய்வூதியமாகத் தரப்படுகிறது கடைசியாக வாங்கிய ஊதியத்தில் 50 சதவீதத்தினையாவது பென்ஷனாகத் தரவேண்டுமென்ற கோரிக்கை இப்போது நம்மத்தியில் வலுத்துவருகிறது. இக்கனவு நனவாகும் நாள் எந்நாளோ என்று ஏக்கத்துடன் ஒவ்வொரு என்.ஜீ. ஓவும் எதிர்பார்த்தவண்ணமிருக்கிறார்கள்.

1—6—1960க்கு முன்பு ஓய்வுபெற்றோர் 1960க்குப்பின்பு கிடைத்த சலுகைகளை எண்ணி ஏக்கப் பெருமூச்சு விடுகிறார்கள். 2—10—1970க்குப் பின்பு ஓய்வு பெற்றோர் அடைந்த உரிமைகளை எண்ணி அதற்கு முன் ஓய்வு பெற்றவர்கள் கோரிக்கைகளை வைக்கிறார்கள். எந்தப் புதிய—பெரிய மாறுதல்கள் வந்தாலும் இதுபோன்ற நிலைகள்—முரன்பாடுகள் தவிர்க்க முடியாதவையே.

ஊதியக்குழுக்கள் முடிவுகளை அறிவிக்கிறபோதுகூட பணி மூப்புடையவர்கள் (Seniors) இளையோரைப் பார்த்து (Juniors) பொருமைப்படுவது இயல்பே. தவிர்க்கமுடியாத இத்தகைய காழ்ப்புணர்ச்சிகளைத் தவிர்ப்பதற்கு அரசினர் முயலவேண்டும்.

பென்ஷனர்களுக்கு விழா முன்பணம் கொடுப்பது வரவேற்கத்தக்கதே ஆனால் அதற்கு பணியில் இருப்போர் உத்தரவாதம் தரவேண்டுமென்ற கட்டாயம் தேவையில்லாதது; வருந்தத்தக்கது. இந்த நிலைமாற வேண்டும்.

ஓய்வூதியம் பெறுகிற முதியவர்களை மரியாதையுடன். மனிதாமானத்துடன் நடத்துவதற்கு இளைஞர்கள் பழகிக் கொள்ள வேண்டும்.

கொளுத்துகிற வெய்யிலில் கோட்டையை நோக்கி ஊர்வலம் நடத்திய புருஷோத்தமம் அவர்களும், குமுறு கின்ற உணர்ச்சிகளோடு புதுத் திருப்பங்களைக் கொணரத் துடிக்கின்ற ஓய்வுபெற்ற டிப்டி கலெக்டர் சிவராமன் அவர்களும்—இன்று ஓய்வுபெற்றவர்கள் சங்கத்தை உற்சாகமான முறையில் நடத்திச்செல்கிறார்கள். முன்னாள் தலைமைச் செயலர் திரு. சி. ஏ. ராமகிருஷ்ணன்—இன்று நாடாளுமன்ற உறுப்பினராக உள்ள திரு. சி. டி. நடராசன் போன்றவர்கள் இந்த இயக்கத்திற்கி நல்லாதரவு நல்குகிறார்கள்.

பென்ஷனர்கள் இயக்க வளர்ச்சியும் என். ஜீ. ஓ. இயக்க எழுச்சியும் ஒன்றுக்கொன்று தொடர்புடையது!

இதை உணர்வோம்! உறுதிபெறுவோம்!



# நெடிய துயரம்!

# கொடிய வறுமை!

காட்சிக்கு எளியவராய்—கடுஞ்சொல் அல்லாதவராய் நாள்தோறும் ஏழை மக்களைச் சந்திப்பதிலும் அவர்களுடைய பிரச்சனைகளைக் கேட்பதிலும் ஆர்வமிக்கவராய் விளங்கி இம்மாநிலத்தில் புதிய வரலாறு படைத்தவரும் ஆளுநர் திருமிகு. கே. கே. ஷா அவர்களே!

ஆன்றவிந்தடங்கிய சான்றோராம்—பெறுமையிற் கடலாகவும், பொறுப்பினில் இனியவராகவும் திகழ்ந்திடும் சட்டம்பேரவைத் தலைவர் மாண்புமிகு புலவர் கோவிந்தன் அவர்களே!

பெரியோர்களே! நண்பர்களே! மாநாட்டுப் பிரதிநிதிகளே! தோழமைத் சங்கத் தலைவர்களே!

தமிழ்நாடு என். ஜி. ஓ. யூனியன் புதிய சட்டதிட்ட விதிகள் திருத்தியமைக்கப்பட்ட ஓராண்டுக்குப்பின் இந்த மாநாடு கூடுவதும், மாநாட்டிற்கு மாநில ஒன்றிய தலைவனாகிய நான் தலைமை ஏற்பதும் புதிய திருப்புமுனையாய் நம் தலைமை ஏற்பதும் புதிய திருப்புமுனையாய் நம் ஒன்றியம் பீடுநடை நடந்துவருகிறது என்பதை உணர்த்துகிறது.

கடந்த எட்டாண்டுகளாகத் தமிழ்நாட்டில் உள்ள மாநில அரசு ஊழியர்கள், தேவைக்கேற்ற குறைந்தபட்ச ஊதியத்தையோ, தொழிற்சங்க உரிமைகளையோ பெற முடியாவிட்டாலும், எங்களுடைய சிலபல கோரிக்கைகள் அவ்வப்போது ஏற்கப்பட்டு வந்துள்ளன என்பதை கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

பாராட்டு

1967ல் சென்னைக்கு நகர ஈட்டுப்படி அளித்ததிலிருந்து 1—1—1974ல் அமுலான அரசு ஊழியர் காலமெல்லாம் நினைவில் வைக்கவேண்டிய குடும்பப் பாதுகாப்புத்திட்டம் வரையில் பல்வேறு நன்மைகளை இந்த அரசிடம் பெற்ருேம் என்பதை நன்றி உணர்வோடு பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

பல இலாக்காக்களில் பதவி உயர்வு வாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளன; சில பிரிவினருக்காவது தேர்வு நிலைக் கொண்டுவரப்பட்டுள்ளது; ஓய்வூதியம் கிடைப்பதில் இருந்துவந்த தாமதங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன; ஆயிரத்துக்கு மேற்பட்ட தற்காலிக ஊழியர்கள் நிரந்தரம் செய்யப்பட்டனர். இவையெல்லாம் கலைஞர் ஆட்சியை அரசு ஊழியர்கள் பொற்காலமாகக் கருதிட வழிவகுத்தன.

அகவிலைப்படி

ஆனல், கடந்த சில மாதங்களாக ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பிரளயம் நம்மவர் அனைவரையும் நெடிய துயரங்களில்—கொடிய வறுமையில் ஆழ்த்தி வருகின்றது என்பதை இம்மாநாட்டில் மனம்விட்டுக் கூறத்தான் வேண்டும். 1960 முதல் 1973 வரை மத்திய அரசு ஊழியர்களுக்கு எப்போதைக்கப்போது அகவிலைப்படி உயர்த்தப்பட்டதோ, அப்போதெல்லாம் மாநில அரசு ஊழியர்கட்கும் சில மாதங்கள் கழித்தாவது உயர்த்தப்பட்டு வந்தது. ஆனல் சமீபகாலமாக அவ்வாறு நமக்குத் தரவேண்டிய பாக்கி ரூ 70க்கு மேல் உள்ளது. இதனைப் பெறுவதற்காக மற்ற அரசு ஊழியர் சங்கங்களோடு—குறிப்பாக கடைநிலை ஊழியர் சங்கம், ஊர்தி ஓட்டுநர் சங்கம், நர்ஸ்கள் சங்கம்,

ஊராட்சி ஒன்றியப் பணியாளர் சங்கம் ஆகியவற்ருேடு சேர்ந்து தமிழ்நாடு என். ஜீ. ஓ. யூனியன் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை யெல்லாம் இம்மாநாட்டுப் பிரதிநிதிகளாகிய நீங்கள் நன்கறிவீர்கள்.

கோரிக்கைகள் கொடுத்தோம்; விண்ணப்பங்கள் தந்தோம்; தீர்மானங்கள் போட்டோம்; மாநாடு நடத்தி மன்ருடினேம்; நிதித்துறைச் செயலரையும், தலைமைச் செயலரையும், முதலமைச்சரையும் பலமுறை சந்தித்துப் பேசினேம். பலன் கிட்டவில்லை. நாட்டு நிர்வாகத்தில் உயர்ந்த இடத்தில் இருப்போர் இரு கண்களெனக் கூறத் தகும் ஆளுநரையும், சட்டப்பேரவைத் தலைவரையும் ஒருங்கே கூட்டி இங்கே இறுதி வேண்டுகோளாக அகவிலைப்படி உயர்வில் எங்களுக்கு நியாயம் வழங்கவேண்டுமென்று இம்மாநாட்டின் மூலமாகக் கேட்டுக்கொள்கிருேம்.

நிவாரணத்தைப் பணமாகப் பெறுவதன் மூலம் மறுபடியும் விலைவாசிகள் ஏறுமே, ஏன் குறைந்தவிலையில் அத்யாவசிய உணவுப் பொருள்களைப் பெறுவதில் நீங்கள் கவனம் செலுத்தக்கூடாதென்று அறிவுரை வழங்கும் மகானுபாவர்கள் பலரை நாங்கள் அடிக்கடி சந்திக்க நேர்கிறது. அப்படிப்பட்ட பெரியவர்களுக்கெல்லாம் நான் பணிவோடு கூறும் பதில் நாங்கள் அதற்குத் தயாரென்பதுதான்; இது குறித்து பலமுறை எங்கள் கருத்துக்களை அரசன் மேலதிகாரிகளிடம் தெரிவித்துள்ளோம்; அதை அமுல் நடத்திஞல் வரவேற்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## வீட்டு வாடகை

சென்னையைப் பொறுத்தவரை அரசு ஊழியர்கட்கு உள்ள மிகமிக முக்கியமான கோரிக்கைகள் இரண்டு.

ஒன்று வீட்டு வாடகைப்படி உயர்வுப் பிரச்சினை. அடிப் படை ஊதியத்தில் 15 சதவீதம் என நிர்ணயிக்கப்பட் டுள்ள இதனை 25 சதவீமாக உயர்த்த வேண்டுமென்று இம்மாநாடு ஒரு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. மிக முக்கியமான இந்த தீர்மானத்தினை, கால வளர்ச்சியை, நெருக்கடி நிலையை மனதிற்கொண்டு மிக விரைவில் ஏற்றுக்கொண்டு மிக விரைவில் ஏற்றுக்கொள்ளுமாறு அர சினைக் கேட்டுக்கொள்கிறேன்.

லாயிட்ஸ் காலனி, பீட்டர்ஸ் காலனி, பட்டினப்பாக் கம் போன்ற வீட்டுவசதி வாரியக்கட்டிடங்களிலுள்ள குடி யிருக்கும் அரசு ஊழியர்க்கு நிர்ணயிக்கப்படும் வாடகை குறித்து முரண்பாடான நிலை 4 ஆண்டுகளாக அப்படியே இருந்துவருகிறது. மக்கள் நலசர்க்கார் வட்டிக்கடை வியாபாரிகள்போல இந்தப் பிரச்சனையில் நடந்துகொள்ள வேண்டும் என்று சிலர் கருதி இந்தப் பிரச்சனைடய மனிதா பிமானத்துடன் பார்க்காதது வேதனைக்குரியது. பஸ் பயணம் செய்யும் அரசு ஊழியர்களுக்கு பல்லவன் போக்கு வரத்துக் கழகப் பேருந்துகளில் மாணவர்களுக்களிப்பது போல கட்டண சலுகை தருவது மிகமிக இன்றியமையா தது ஆகும். போக்குவரத்துக் கழகத்திற்கு இதில் ஏதாவது இழப்பு ஏற்படுமானுல்கூட மாநில அரசு அதை ஈடுசெய்ய நிதியளித்து இந்த கோரிக்கையை நிறைவேற்றிவைக்க வேண்டுகிறேன்,

ஊதிய மாற்றம்

இதைத்தவிர இலாக்கா ரீதியிலான பல்வேறு கோரிக்கை கள் இந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன. அரசு ஊழியர் சமுதாயத்தில் கணிசமான பிரிவினராகிய அமைச் சுப்பணியாளர் (Common Catagory) என்று கூறப்படும் பதிவறை எழுத்தர், இளநிலை உதவியாளர் கண்காணிப்

பாளர் ஆகியோருடைய ஊதிய விகிதங்கள் சரியான முறையில் திருத்தியமைக்கப்படவில்லை என்ற குறை உள்ளது. இதை உயர்த்தவேண்டும்.

அதேபோல நில அளவுத்துறையில் உள்ள இளநிலை வரைவாளர், முதுநிலை வரைவாளர்; டைபோகிராப்பர்கள் கிங் இன்ஸ்டிடியூட்டிலுள்ள Assistant Overseer, Junior Chemical Assistant; Junior Watter analysit புள்ளிவிவரத் துறையில் உள்ள வரைவாளர்கள், உதவிப் புள்ளியியல் ஆய்வாளர், —வேதியல் ஆய்வகத்தில் உள்ள தொழில் நுட்ப ஊழியர்கள், மீன் வளத்துறையில் உள்ள உதவி ஆய்வாளர்கள், Dental Mechanic, மருத்துவத்துறையில் உள்ள செவிலிய உதவியாளர்கள், துணைச் செவிலியர், மகப்பேறு உதவியாளர்கள், மீன் பணியாளர்கள், தொழு நோய்த் தடுப்புப் பணியாளர்கள்—டெலிபோன் ஆப்ரேட்டேர்கள் ஆகியோருடைய ஊதிய விகிதங்களையும் திருத்தி அமைத்து உயர்த்தவேண்டியது அரசின் நியாயமான கடமையாகும்.

சில துறைகளில் பதவி உயர்வு வாய்ப்புகள் அதிகம் இருப்பதும் -பல துறைகளில் நீண்ட நெடுங்காலமாகப் பதவி உயர்வின்றி அல்லல்படுவதும் ஜனநாயக சோஷலிச சமுதாய அமைப்பில் சரியானதல்ல. அதனையும் நிவர்த்திப்பது அரசின் கடமை. நிர்வாக சீர்திருத்தம் என்ற பெயரில் வேளாண்துறை போன்றவற்றில் அமைச்சுப் பணியாளர்களுக்கோ வேளாண் உதவியாளர்களுக்கோ பாதகம் ஏற்படுத்தக்கூடாது. ஒரு பதவியில் பத்தாண்டுகள் பணியாற்றிடும் ஊழியருக்கு நிச்சயம் - அடுத்த பதவி உயர்வை அளித்திடல் வேண்டும் என்ற முறைமையை எல்லாத் துறைகளிலும், எல்லாப் பிரிவுகளிலும் கொண்டு வருவதுதான் ஏற்புடைமையாகும்.

எங்களுடைய இந்த நியாயமான கோரிக்கைகளை யெல்லாம் ஏற்று செயற்படுமாறு அரசைக் கேட்டுக் கொள்கிறோம். அரசு ஊழியர்கள் நிம்மதியாக செயலாற்றினால் தான் அரசு கொண்டு வருகிற திட்டங்கள் வெற்றி பெற வாய்ப்புண்டு எந்த அரசும் தன்னுடைய ஊழியர்களை செழிப்பாக, திருப்தியோடு வைத்திருந்தால் தான் அரசு இயந்திரம் பழுதில்லாமல் நடைபெறும்.

கம்பெனிகளிலே இருக்கிற ஊழியர்களுக்கு போனஸ் கொடுக்கச் சொல்கிற அரசு, தொழிற்சாலைகளிலே பணியாற்றுகிற ஊழியர்கட்கு மலிவு விலையில் உணவு தரச் சொல்கிற அரசு ஏன் தன்னுடைய ஊழியர்களுக்கு அந்த வசதிகளை முதலில் தரக்கூடாது.

அசோக் லேலண்ட் தொழிலாளர்கட்குக் குறைந்த விலையில் அரிசி தருவதைப் பார்க்கிறோம். ரப்பர் தொழிற்சாலை ஊழியர்களுக்கு இலவச போக்குவரத்து வசதி தரப்படுவதைக் காண்கிறோம். அந்த சலுகைகளை அரசு ஊழியர்கள் எதிர்ப்பது பாபமா?

எனவே இந்த மாநாட்டின் மூலம் அரசு ஊழியர் சமுதாயம் மேலும் மேலும் நன்மைகள் பெறுமென்ற நம்பிக்கையில் தான் இங்கே கூடியுள்ளோம் 'நம்பினோர் கெடுவதில்லை' என்ற நான்மறைத் தீர்ப்புக்கு விடை காணக் கூடியுள்ளோம்.

கேள்; கொடுக்கப்படும்

தட்டு; திறக்கப்படும்

பேசு; தீர்க்கப்படும்

—என்ற தத்துவங்களைக் காலம் காலமாக நம்பி கேட்டவர்கள், பேசியவர்கள் தான் இங்கே கூடியுள்ளோம்.

ஒன்றுபட்டு, உயர்வு கோரினல் எந்தக்கோரிக்கையும் வீண் போனதில்லை.

கட்டப்பாடோடு வாதாடினல் எந்தத் தீர்மானங்களுக்கும் வெற்றி கிடைக்காமல் போனதில்லை.

“அடிமேல் அடி அடி அடித்தால் அம்மியே நகரு போது இந்த அரசா நகராது?” என்று முதல்வர் கலைஞர் முன்னொரு நாள் தஞ்சை விழாவில் (1968-ல்) பேசியதை நினைவில் கொண்டு—

ஒன்றுபவோம்! வெற்றி காண்போம்!


(தமிழ்நாடு என் ஜி ஓ யூனியன் சென்னை மாவட்ட எட்டாவது மாநாடு 31-12-74ல் நடைபெற்ற போது ஆற்றிய தலைமை உரை)



மனோகரன்

தமிழ்நாடு பத்திரப் பதிவுத் துறை சப்ரிஜிஸ்ட்ரார்கள் சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலாளரான இவர் புன்சிரிப்பும், பொறுமையும் நிறைந்தவர். என். ஜி ஓ இயக்கத்துக்கு 1973ம் ஆண்டில் சென்னையில் அதிக அளவுக்கு உறுப்பினர் சேர்க்கத் துணை நின்றவர் இவரே.

## இணைப்பு சங்கப் பொறுப்பாளர்கள் :



உமாமகேசுவரன்

தஞ்சைக் கரந்தையில் தான் தமிழவேள் உமாமகேசுவரன் இருந்து தமிழ்ப் பணியாற்றி தமிழ்ச்சங்கம் அமைத்து செயல்பட்டார். அதே கரந்தையில் இருக்கும் காசாளர் உமாமகேசுவரன்—இன்று தமிழ்நாடு கருவூலத்துறை காசாளர் சங்கத்தின் தலைவராகசிறப்புற செயலாற்றி வருகிருர்

12—12—1929ல் பிறந்த இவர் 7—5—50ல் உத்தியோக நியமனம் செய்யப்பட்டார். ஒரத்த நாட்டில் பல்வேறு பொது அமைப்புகளுடன் தொடர்பு கொண்ட இவர் 1956ல் திரு. ராமசாமிப்பிள்ளை காசாளர் சங்கத்தினை நிறுவிய போது அதன் பொதுச் செயலாளராகப் பணியாற்றினுர்

பின்னர் 16-2-1974ல் காசாளர் சங்கத்தைப் புத்துயிர் கொடுத்துப் புதுப்பித்து நாடு முழுதும் சூருவளிப் பிரச்சாரத்தை செய்து இன்று கட்டுப்பாடான முறையில் அச் சங்கத்தை வளர்த்திருக்கிருர். சங்கத்திற்கு புத்துயிர் கொடுத்த ஓராண்டிலேயே காசாளர்களுக்குத் தேர்வு நிலை பெற்ருர்

தாய்ச் சங்கத்திட்டம் நன்றி உணர்வோடு நடந்துக் கொள்ளும் இணைப்பு சங்கத் தலைவர்களில் இவரும் ஒருவர் மத்தியசங்கத்திற்கு இவர்சங்க சங்க சார்பில் சுவர்க் கடிகாரம், நாற்காலி ஆகிய பொருள்களை அன்பளிப்பாக வழங்க ஏற்பாடு செய்தவர்.



## தி. ந. சீனி வெங்கோபராவ்

**பிறந்தநாள்** 8-8-41 **வேலைக்கு வந்தநாள்** 14-11-59

**திரு**. வெங்கோபவராவ் காசாளர் **சங்கத்தின் தஞ்சை மாவட்டத் தலைவராகவும்**, மாநில ஒன்றியத்தின் துணைத் தலைவராகவும் (புறநகர்) பொறுப்பேற்றுள்ளார். இவரது இடைவிடா முயற்சியால் சங்கம் நல்லமுறையில் வளர்ச்சிப் பெற்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மிக்க ஆர்வமுள்ள இளைஞர். பொதுப் பணிக்ககக அரும்பாடுபடக் கூடியவர்.

தஞ்சை மாவட்ட மாநில அரசு ஊழியர் நுகர்வோர் பண்டக சாலையின் இயக்குனராகவும் 1968 முதல் பொறுப் பேற்றுள்ளார். இவரது சீரிய முயற்சியால் பண்டக சாலக்கு வருமானமும். என். ஜி ஓக்களுக்கு சாமான்கள் மலிவு விலையிலும் கிடைக்கவும் செய்கிறது.

கருவூலக் கணக்குத் துறைச் சங்கத்தில் தஞ்சை மாவட்டத்தின் துணைத் தலைவராக (புறநகர்) 1970 முதல் 1972 வரை பணியாற்றியுள்ளார் சங்க வளர்ச்சிக்காக அரும்பாடு பட்டார்.

1962—1963ம் ஆண்டு நன்னிலம் என். ஜி ஓ. கிளை மையத்தில் இணைச் செயலாளராக பணிபுரிந்து நன்னிலத்தில் சங்கத்திற்கு ஒரு கட்டிடம் கட்ட சீரிய முயற்சி எடுத்து பின்னர் கட்டிடம் ஒன்று கட்டப்பட்டது.




தீ. ந. சண்முகசுந்தரம்

பிறந்த தேதி 25-2-1925 வேலைக்கு வந்தநாள் 12-2-1944

தமிழ்நாடு கருவூலத்துறை காசாளர் ஒன்றியத்தின் துணைத் தலைவரான தீ. ந சண்முகசுந்தரம் சென்னை வட்ட சார் நிலைக்கருவூலத்தின் தேர்வுநிலைக் காசாளராகப் பணி புரிகிறார்.

---



ஆர்வமும், துடிதுடிப்பும் நிறைந்த இளைஞரான இவர் கருவூலத் துறை காசாளர் ஒன்றியத்தின் மாநில அமைப்புச் செயலர் 30-11-48ல் பிறந்த இவர் 10-7-71ல் உத்தியோகத்திற்கு வந்தார் பச்சையப்பன் கல்லூரியில் பேரவைத் தலைவராக செயலாற்றிய இவர் சிறிய வயதானாலும் பொறுமையோடு இயக்கபணிபுரிகிறார்.

வை. சோமசுந்தரம்



தமிழ்நாடு கூட்டுறவு நடுநிலை அலுவலர் சங்கத்தின் மாநிலத் தலைவரான திரு. சிதம்பரம் சென்னையில் மாநிலப் பதிவாளர் அலுவலகத்தில் பணியாற்றுகிறார்.

அமைதி நிறைந்தவர்; ஆர்வம் கொண்டவர்; வயதானாலும் வாலிபர்களின் உள்ளத்தைப் புரிந்துக் கொண்டு செயலாற்றுபவர். கூட்டுறவுத் துறையில் தேர்வுநிலைப் பதவிகள் எல்லோர்க்கும உரிய முறையில் கிடைக்க தீவிரமாக செயல்படுபவர்.

---



## ஆர். ஆர். பாலகிருஷ்ணன்

கோவை மாவட்ட என். ஜி. ஒ. யூனியன் செயலாளர்; கூட்டுறவுத் துறை நடுநிலை அலுவலர் சங்க மத்திய செயற்குழு உறுப்பினர். கோவை பயிற்சி முகாமில் 'தேவைக்கேற்ற குறைந்த பட்ச ஊதியம்' பற்றி இவர் ஆற்றிய உரை பயன் மிக்கது.



**கு, கா. இராமசாமி**

கூட்டுறவு இலாகா முதுநிலை ஆய்வாளர்

பிறந்த தேதி : 7—1—1938

மாவட்டம் : கோவை

அரசுப்பணியில் சேர்ந்த நாள் : 1—8—1963

கடந்த ஐந்து ஆண்டுகளாக தமிழ்நாடு கூட்டுறவுத் துறை நடுநிலை அலுவலர் சங்க கோவை மாவட்ட செயலாளராகவும், கடந்த ஓராண்டுகட்கு மேலாக மாநில சங்கத்தின் பொருளாளராகவும் பொறுப்பேற்று பணியாற்றிவருகிறார்.

தமிழ்நாடு கூட்டுறவுத் துறை நடுநிலை அலுவலர் சங்க கோவை மாவட்ட கிளைக்கு வீடு வாங்கியதில் இவருக்கும் பெரும் பங்குண்டு.

உணர்ச்சி மயமான பேச்சாளர், பழகுதற்கினிய நண்பர் பாசம் நிறைந்த தொண்டர்; நேசம் நிறைந்த உழைப்பாளி

---



இவர்கடந்த மூன்றாண்டுகளாக தமிழ்நாடு கூட்டுறவுத்துறை நடுநிலை அலுவலர் சங்க கோவை மாவட்டக் கிளையின் தலைவராக பொறுப்பேற்று பணியாற்றி வருகிறார்.

சங்கத்திற்கென சொந்தமான ஒரு கட்டிடம் விலைக்கு வாங்க பெருமுயற்சி எடுத்து, கட்டிடத்தை வாங்கிய பெருமை இவருக்குண்டு.

கோவையில் நடைபெற்ற என். ஜி. ஓ. மாநிலப் பொதுக் குழுவில் 'மாலை முரசு' சிறப்பு மலர் வெளியிடத் துணையாய் இருந்தவர் இவரே.

அ. ராஜாமணி B. com

# அறிஞர் அண்ணாவின் "நீதிதேவன் மயக்கம்"

இப்பொழுது புதிய புதிய திருப்பங்களை எழுத்தோவியங்களாக்கவேண்டும் என்ற எண்ணம் எல்லா எழுத்தாளர்களிடமும் அரும்பியிருக்கிறது. ஒன்றிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஆனந்தவிகடன், "இவர்கள் சந்தித்தால்" என்றதொரு புதுமையான பகுதியைத் தொடங்கியிருந்தது. தனக்கே உரிய சில குறும்புகள் அங்கே மிளிர்ந்திருந்தாலும் சுவை ஓரளவு இருந்தது. அதன்மூலம் சமீப காலமாக இதைப்போல இன்னும் பலப்பல புதுப் பகுதிகள் ஏற்படுத்த வேண்டும், பழைய பாதையிலேயே சென்று கொண்டிருக்கக்கூடாது என்ற கருத்து பத்திரிக்கையாளர்கள் உள்ளத்திலே இருக்கிறது.

இவற்றிற்கெல்லாம் வழிகாட்டியாக, அதுவும் நம்மவர்கள் பத்திரிக்கைத் துறையென்றால் மிரண்டோடிய காலத்தில் புதுமையாக, அறிஞர் அண்ணா அவர்களால் சித்தரிக்கப்பட்ட கருத்தோவியம் "நீதிதேவன் மயக்கம்" ஆகும். அதை அவர் எழுதியபோது (28—10—45) அவருக்கு அறிஞர் என்ற அடைமொழி கிடையாது. ஆனால் நீதிதேவன் மயக்கம் போன்ற எழுத்தோவியங்கள்தான் அவரை அறிஞராக்கின.

"நீதிதேவன் மயக்கம்" ஒரு சிறு நாடகம். சிறு நாடகம் என்றால் சம்பிரதாயத்திற்காக நான் சொல்லவில்லை, "திராவிட நாடு" இதழில் ஐந்து பக்கங்களில்தான் வெளிவந்தது. இது மேடை நாடகமாக எப்படி உருவாக்கப்பட்டதோ, அதை நான் அறியேன். இங்கே நான் உங்களுக்கு அறிமுகப்படுத்த முனைவது அதன் எழுத்து வடிவைத்தான்.

ஐந்து பக்கங்களிலே ஒரு எழுத்தோவியமாம், அதை அறிமுகப்படுத்தப் போகிருயா நீ' என்று நீங்கள் கேட்கலாம் பக்கங்கள் அதிகமாய் இருப்பதைக் கொண்டு இலக்கியத்தைத் தரம் பிரிக்காதீர்கள். ஐந்து பக்கங்களாய் இருந்தாலும் இது வளரும் தமிழிலே குறிப்பிடக் கூடிய ஒன்று என்பதைப் படித்தவர்கள் உணர்வார்கள், இனி படிக்கப் போகிறவர்களும் அறியத்தான் போகிருர்கள்.

இந்த நாடகம் 'ஒரு' கற்பனை நாடகம். இரக்கமில்லா அரக்கன்' என்று இராவணப் பெரு வேந்தனை இழிந்துரைத்தாரல்லவா கம்பர்? அதுசரியா என்று ஆராயப் புகுவது தான் இந்த நாடகத்தின் நோக்கம்,

சீதையை சிறை எடுத்தான் இராவணன். பூங்கொடி துவள்வது போல துவண்டு அலறினுள் அப்போது அந்தப் பொன்னனிர் மேனியாள், இரக்கம் காட்டவில்லை இலங்கை வேந்தன், வயோதிக சடாயு வாய்விட்டு அலறினுன், இதைக் கண்டு, போக்கினுன் அந்தப் புள்ளின் உயிரை...... இதுபோல எண்ணற்ற இரக்கமற்ற செயல்களை செய்தான் இராவணன் என்று கம்பர் தனது காவியத்திலே காட்டியிருந்தார், அறிவோம் நாம்.

அத்தகைய கம்பரை முன் வைத்தே வாதாடச் தொடங்குகிருன் வணங்காமுடியன் அண்ணுவின் நாடகத்தில். ஆரம்பத்திலே நீதிதேவன், கம்பர், இராவணன் மூவர் வாயிலாகவும் இரக்கம் என்ருல் என்ன என்பதற்கு அருமையான தத்துவ விளக்கம் பெறப்படுகிறது. ‘‘பிறருடைய நிலைமைக் கண்டு வேதனை கண்டு பரிதாபப்படுவதும், மனம் இளகுவதும் இளகி அவர்களுக்கு இதம் செய்வதும், இதம் செய்யாவிட்டாலும் இன்னல் செய்யாதிருப்பதும், கூடுமானுல் அவனுக்குள்ள கஷ்டத்தையும் போக்குவதும்தான் இரக்கம் என்று பொருள்படும்,

இந்த மூல தத்துவத்தை முன் வைத்துவிட்டு இராவணன் ஓர் காட்சியைக் காட்டுகிறான். "தாகவிடாயால் தவித்துக்கொண்டு இருக்கிறது ஒரு புள்ளிமான், அடவியிலே நீர் தேடி அலைகிறது. அந்த நேரத்திலே சிறுத்தை ஒன்று மானைக் கண்டுவிடுகிறது. மான் மிரள்கிறது, சிறுத்தை அதன் நிலைகண்டு இளகி பாவம் இந்த மானைக் கொல்லலாகாது என்று தீர்மானித்து இரக்கப்பட்டு. மானை அருகாமையிலுள்ள நீர் நிலையத்துக்கு அழைத்துச் சென்று, அது நீர் பருகும்போது, வேறு துஷ்ட மிருகத்தால் ஒரு தீங்கும் நேரிடாதபடி காத்துக் கொண்டு இருக்கவேண்டும்" நாம் முன்னே கூறிய மூல தத்துவத்துக்கேற்ற நடைமுறை இதுவாகத்தான் இருக்கவேண்டும், ஆனால் இது சாத்தியமா?

புராணிகர்கள் கொஞ்சம் சிந்தியுங்கள்! பாரம்பரியமான பழம் பெருமையைக் காப்பாற்றப்போவதாகத் தம்பட்டமடிக்கும் பக்தர்களே! கொஞ்சம் சிந்தியுங்கள். புதுமைப் பாதையிலே நாம் தவருகத்தான் காலடி எடுத்து வைத்துவிட்டோமோ என்று ஆசைக்கும் அச்சத்துக்குமிடையே ஊசலாடும் அருமை இளைஞர்களே! நீங்களும் கொஞ்சம் சிந்தியுங்கள்.

அண்ணா எவ்வளவு அழகாக தத்துவத்தையும் அது தவிடு பொடியாவதையும் சித்தரித்திருக்கிறார் என்பதைப் பாருங்கள். கொள்கையும், கோட்பாடும் உயர்வாக இருந்துவிட்டால் மட்டும் போதாது. அது தொல்லைப்பட்டாலாவது சாத்தியமாக்கிக் கொள்ளக் கூடியதா என்பதை ஆராய வேண்டும். தொழிற்சாலையினுடைய ஷோரூம் நன்றாக இருப்பதால் மட்டும் பலன் கிடையாது. அந்த ஷோரூமில் இருக்கிற பொருளெல்லாம் அதே தொழிற்சாலையில் தயாரிக்கப்படுகின்றனவா என்பதையும் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும்.

இந்தகைய அரிய சிந்தனைகள் தான் பதினைந்து ஆண்டு களுக்குப்பிறகு 'நீதிதேவன்' மயக்கத்தைப் புரட்டுகிறபோது எனக்கு ஏற்படுகிறது. மேலோட்டமாகப் பார்க்கப் போனால் தத்துவமும் விதண்டாவாதமும் இருப்பது போல தென்பட் டாலும் இது ஒரு அருமையான பிரச்சாரக் காவியம்.

'ஒருவனுடைய சிந்தனையும், செயலும் அவனவனுடைய தொழில், வாழ்க்கை முறை, லட்சியம் என்பனவற்றைப் பொறுத்திருக்கிறது. அந்த நிலையிலே கருணாகரன் என்று புகழப்படுபவர்களும்கூட பல சமயங்களில் இரக்கமற்று இருக் கிறார்கள். இரக்கம் இல்லாதார் அரக்கர் என்றால் ஆண்டவன் உட்பட அனைவரும் அரக்கரே" என்ற அடிப்படையை அண் ணாவின் இராவணன் கூறுகிறான்.

ஆசிரமங்களிலே உள்ள மான்தோல் ஆசனங்கள் இரக் கத்தின் அடையாளச் சீட்டுகளா?. பசுக்களை சித்தரவதை செய்து வேதமோதிகள் நடத்தும் விதவிதமான யாகங்களில இரக்கம் தென் படுகிறதா ? தாய் பிடிக்கத் தந்தை அறுக்க சீராளனைக் கறியாக்கும்படி தயாபரன் சோதித்தது இரக்க முள்ளசெயலா? இதையெல்லாம் இராவணன் கேட்கும்போது நமக்கு கம்பர் மேல் வெறுப்புத்தான் ஏற்படுகிறது. ஏன்? கம்பர் உருவாக்கிய பாத்திரங்களாம்கைகேயியும்,இராமலட்சு மணர்களையுமே எடுத்துக் கொள்ளுங்கள். மன்னர்கள் பல மனைவியரை மணம் செய்வது அந்தக் கால முறை; இரா மனின் தந்தை தசரதனும் இப்படித்தான் இருந்திருக்கிறான். சூர்ப்பணகை இராமனைக் காணும் முன்பு வலியச் சென்று காதலை வெளியிடும் வடிவழகியல்ல. அவள் இராமனைக் காண்கிறாள். அவன் அழகு அவள் உள்ளத்தைக் கவருகிறது. விருப்பத்தை வெளியிடுகிறாள், மறுப்பைப் கூறுவதோடு விடுத்திருக்கலாம், அவர்கள் மான பங்கப்படுத்தி அனுப் பினார்கள். அவர்களை அழைத்தாரா இரக்கமற்றவர்கள் என்று கம்பர்? இல்லை. இராவணனுக்குத்தான் அந்தப்பட்டம்!

இது தருமமா? முறையா? காப்பியம் உருவாக்கப்பட்டவர் தன்னுடைய கடைமையிலிருந்து நழுவி விட்டதனைத் தானே காட்டுகிறது?

அடுத்து கைகேயியைப் பார்ப்போம், பஞ்சணையிலே துயிலும் இராமன் பசும் புல் தரையிலேதான் படுப்பான், கனகமணி அணிந்தவன் மரஉரிதான் தரிப்பான் என்று தெரிந்தும், அயோத்தி மக்கள் ஆற்ருெணுத் துயரமடைந்ததைப் பார்த்தும் ராமனைக் காட்டுக்கனுப்பும் கைங்கர்யத்தை மேற்கொண்டாரே அவரையும் 'இரக்கமற்றவர்' என்று கூற வில்லை கம்பர்?

இதையெல்லாம் அண்ணு எடுத்து விளக்குகிருர் 'நீதி தேவன் மயக்'கத்தில், நீதிதேவன் இதையெல்லாம் கேட்ட பிறகு மயங்கி விழாமலா இருப்பான்? இந்தச் சிறு நாடகம் உயர்ந்த திறனாய் வுக்கருத்தைக் பிரதிபலிக்கிறது. அண்ணு கம்பரசத்தில் காமத்தை மட்டும்தான் எடுத்து சுவைக்கிருர் என்று கூறும் "ஜந்து"க்கள் நீதிதேவன் மயக்கத்தைப் படித்துவிட்டுப் பதில் சொல்லட்டும்,

அறிஞர் அண்ணு செக்குமாட்டுப் போக்கிலே சென்றுக் கொண்டிருந்த தமிழ் எழுத்தாளர் சமுதாயத்தை சீர்திருத்த வந்த புதுமைச் செம்மல்; புதிய வழியிலே—மாறுபட்ட கோணத்தில் இலக்கியங்களைத் திறனாய்வு செய்யப் புதிய பாதை வகுத்துத் தந்த வழிகாட்டி; எப்படிப்பட்ட பெரிய மேதைகளானுலும் அவர்களின் அணுகும் முறையை அணு அணுவாகப் பகுத்துப் பார்க்கும் நுண்மான் நுழைபுலம் மிக்கது என்பது இந்தப் படைப்பின் மூலம் உணரப்படுகிறது,

"நீதிதேவன் மயக்கம்" – பிரச்சாரமும், தத்துவமும், திறனாய்வும் நிறைந்த நல்லதோர் நாடகம், புதுப்பாதை வகுத்த உயர்ந்த நாடகம்.

(20—5—60 தாய்நாடு இதழில் வெளியான கட்டுரை)

# கவிஞர் கண்ணதாசனின் ராஜ தண்டனை.

தென்மொழியில் இன்று ஏராளமான நாடகநூற்கள் எழுதப்பட்டு வருகின்றன, இவற்றில் மேடை நாடகங்களாக நடிப்பதற்கென்று எழுதப்படுகின்றவை பெரும்பாலானவை. இப்படிப்பட்ட மேடை நாடகங்கள் எழுத்துருவிலே வரும் போது அவையனைத்தும் மிகப்பல, படிக்க சுவையற்றவையாய் வந்து நிற்கின்றன. அதேபோல படிக்க என்று எழுதப்படும் நாடகங்களிலும் இலக்கியத்தரம் உடையன ஒருசிலவே. அப் படிப்பட்ட நாடகங்களைப் பார்க்கும்போது கவிஞர் கண்ண தாசன் அவர்கள் எழுதிய "ராஜதண்டனை" இலக்கியத்தர முடைய - சுவை நிறைந்த நாடகம்; அமைப்பு முறையில் சிறிய மாற்றங்கள் இருப்பின் மேடையிலும் நல்ல வெற்றி காணக்கூடிய நாடகம் என்று கருத்து உறுதிப்படுகிறது.

'ராஜதண்டனை' கதை நமக்கு மிகமிகப் பழக்கமான கதைதான். ஆமாம்! அம்பிகாபதி-அமராவதி காதலர் களின் கதைதான். சரியோ, தவறோ, இது ஏறக்குறைய ஒரு வரலாற்று நாடகத்தை ஒத்தது, சரியோ, தவறோ என்று ஏன் கூறுகிறேனென்றால் அம்பிகாபதி என்று ஒருவன் இருந் தானா, அவன் கம்பனின் மகன் தானா என்பதே பிரச்சனைக் குரிய பொருளாகத்தான் இருந்துவருகிறது, கவிஞர் அவர்கள் கூட இந்த நாடகத்திற்கு எழுதிய முன்னுரையில் என்னென் னமோ ஆதாரங்களை அள்ளி வீசி நம்முடைய உள்ளத்தையும் குழப்பத்தில் ஆழ்த்துகிறார்.

எது எப்படியிருந்தாலும் ஒன்றை நாம் நன்றாக உணர வேண்டும். உலகில் லைலா-மஜ்னு போல, ரோமியோ-ஜூலி

யத்போல, அம்பிகாபதியும்—அமராவதியும் காதலர்களுக்கெல்லாம் ஓர் வழிகாட்டிகளாக இருந்துவருகிறார்கள். நமது தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் அந்த இரு புகழ் பெற்ற பாத்திரங்களும் என்பதை எண்ணும்போது கர்ணபரம்பரைக் கதையாக இருந்தாலும் அதனை அங்கீகரித்து அதற்கு வரலாற்று முலாம் பூசுவது அவசியமானதாகும். அந்த வகையில் இதே கதை எத்தனை முறை கதையாக வந்தாலும், காவியமாக உருவாக்கப்பட்டாலும், நாடகமாக நடிக்கப்பட்டாலும், திரைப்படமாக எடுக்கப்பட்டாலும் மகிழ்ச்சியுறுபவர்கள் நாம்.

அந்த மகிழ்ச்சி கண்ணதாசன் அவர்களின் மூலமாகக் கிடைத்திருக்கிறது ராஜதண்டனையில். "ராஜ தண்டனை" நாடகத்தின் தொடக்கமே அலாதியானதாக இருக்கிறது. அதாவது நம்முடைய திரைப்படங்களில் நல்ல வெற்றி காணமுடியாத Flash Back முறையைக் கொண்டு இந்த நாடகத்தை தொடங்குகிறார். காதலின் முடிவாக அம்பிகாபதியும்—அமராவதியும் இறந்துபடுகின்றனர். பெரும்புலவன் ஒருவனுக்கு சித்தம் குழம்புகிறது. வீதிக்கு வருகிறான். இளங் காதலர்கள் இன்ப உலகின் எல்லையை எட்டிப் பிடிக்க எண்ணி நிற்கும் நிகழ்ச்சிகள் அவர் கண்களுக்குப் படுகின்றன, அவர்களை எச்சரிக்கிறார் அந்தப் புலவர். "நடக்கட்டும் உங்கள் காதல் நாடகம்! பஞ்சணையிலே நெஞ்சை கலந்து கொஞ்சி விளையாடுங்கள்! பட்டுச் சேலையைத் தொட்டுச் செல்லும் தென்றலுக்கு இடந்தராதீர்கள்!...கண்டு களித்து கலந்திருங்கள்! உண்டுகளிந்து உறங்குங்கள்! இரவு போனால் உறவு போய்விடும்! பொழுது விடிந்தால் அழுது விடுவீர்கள்!. ஏன் புலவர் இவ்வாறு எச்சரிக்கிறார் என்பது உங்களுக்குப் புரிகிறதா? "குலோத்துங்கச் சோழன் இன்னும் சாகவில்லை, ஆளுவது அவன்தான்!" என்று அதையும் கூறி விடுகிறார் அவர்! ஆமாம்! காதலுக்கு மரணதண்டனை விதித்

தவன் தென்னகத்து வரலாற்றிலேயே அவன் ஒருவன் தானே!

அந்த மன்னன் என்ன நிலையில் இருக்கிறான். அடுத்த காட்சியில் அவனுடைய மனச்சான்றின் உருவிலே கவிஞர் மிக அழகாக விளக்குகிறார். "நீரோடி, விழியிரண்டும் ஆறாகக் கண்டாய்! நேரிழையாள் முகமலரை இருள் சூழக்கண்டாய்! சீராளன்முகம் பார்த்து தேம்பியழக் கண்டாய்; சிரித் தவிழ்த்த பூங்கொடியாள் வாடி விழக்கண்டாய்! கல்லேனும் மனதிரங்கும் காட்சியதைக் கண்டு. காணுதார் கேட்டாலும் கவலையுறல் உ ்டு. ஊராரின் மனநிலையே இதுவாகும் போது ஊட்டி வளர்த்தவனே! உனது நிலையாது?"—இந்த வாக்கியங்களைத் திரும்பத்திரும்ப படித்துக்கொண்டு இருக்க லாம் போல தோன்றுகிறது அல்லவா? சீர், தளை, யாப்பு எதைப்பற்றியுமே அறியாத பாமரனுக்குக்கூட கவிதை நய மிக்கதாக, கவர்ச்சியூட்ட வல்லதாக விளங்குகின்றன இந்த உரையாடல். "ராஜதண்டனை" வெறும் நாடகம் மாத்திர மல்ல, நாடகக் காப்பியம் என்பதனை இந்த ஓரிடமே நன்கு புலப்படுத்தும்.

கண்ணதாசன் அவர்கள் இலக்கியத்திலும், வரலாற்றி லும் தன்னை நன்கு ஈடுபடுத்திக்கொண்ட பிறகு இந்த நாட கத்தை எழுதியிருக்கிறார், என்பது அவர் அமைத்திருக்கும் பாத்திரங்களைக் கொண்டே தெளிவாகிறது, பவணந்தி, அரும்பாக்கத்து அருணிலை விசாகர், ஆங்கூர்க்கிழத்தி ஆய் தேவி, விருத்த காப்பியர், முதுகூர் மோனமாக்கவி, ஒட்டக் கூத்தர், புகழேந்தி, கம்பர் முதலிய பழந்தமிழ்ப் புலவர்களை ஒரே நாடகத்தில் ஒன்று சேர்ப்பதெனில் அது எவ்வளவு பொறுப்புள்ள வேலை என்பது வரலாற்று நாடகம் எழுதிய வர்களுக்குத்தான் தெரியும். மேலே குறிப்பிட்ட பெரும்புல வர் ஒவ்வொருவரும், தமிழகத்திற்கு நன்கு அறிமுகமானவர்

கள் தங்களுடைய பாடல்களினால். அத்தகையோரை வாழ்க்கையில் காட்டும்போது அவர்களுடைய குண நலன்களை பிரதிபலிக்கச் செய்வதற்கு தனிச் சாமர்த்தியம் இருக்கவேண்டும், அந்த தனித் திறமை அழகுறக் கையாளப் பட்டிருக்கிறது, நாடகம் முழுவதும்.

எடுத்துக்காட்டாகப் புகழேந்தியைப் பார்ப்போம்: ஆழங்காண முடியாத அமைதிக்குப் பெயர் பெற்றவர் அவர் என்பதை அவருடைய எழுத்தோவியங்களைக் கொண்டு உணரலாம். மகனை இழந்து புலம்பும் கம்பரிடம் அவர் வருகிறார். 'அவனிக்கெல்லாம் ஆறுதல் சொல்வாயே கவி மன்னா! அமைதி கொள்!'' என்கிறார், ஒரே மகன் பிரிந்தால் உலகிலே எந்த உள்ளமும் சுக்கலாகித்தான்விடும் என்கிறார் கம்பர். ''அது சாதாரண மனிதர்களுக்கு. மகா கவி கம்பனுக்கல்ல, அலை சுருட்டும் கடல் குமுறி அருகில் வந்தாலும் நிலை குலையாத உள்ளம், அசைவுறாத உடல்—நடுங்காத கரம்—நழுவாத எழுத்தாணி கவிமன்னனின் தனிப் பெருமை. கொலைக்களத்திலே நீ குமுறி அழுதபோது இயற்கையென்று உலகம் சம்மதித்தது இன்னும் உன் நிலை அது தான் என்றால் ஆண்மையற்ற கோழையென்று உலகம் தூற்றும். கவலையை விடு! கண்ணீரைத் துடை! ஏட்டைப்பிடி! எழுத்தாணியை எடு!''—இங்கே புகழேந்தியின் அமைதி கம்பீரமான தோற்றத்தில் காணப்படுகிறதல்லவா? இப்படி பண்புக்கேற்றபடி அவரவர் பாத்திரங்களை உருவாக்கியிருப்பது பாராட்டத்தக்கது.

இப்பொழுதெல்லாம் நாடகத்தில் நகைச்சுவை முதலிடம் பெறத்தொடங்கியிருக்கிறது. நகைச்சுவை வேண்டியது தான். ஆனால் அது நாடகத்தின் வேகத்தை தடைப் படுத்தாததாக இருக்கவேண்டும். உணர்ச்சிக்குத் திரையிட்டு மறைப்பதாக இருக்கக்கூடாது. உடல் குலுங்க வைப்பது

தான் நகைச்சுவை என்ற எண்ணம் தவறே. உள்ளம் சிலிர்க்கச் செய்யும் சிரிப்பும் நகைச்சுவைதான்.

நகைச்சுவை என்பது இருமுனைக் கத்தி போன்றது, அதை மிகக் திறமையோடு கையாளவேண்டும். கதையோடு ஒட்டிய நகைச்சுவைதான் இன்றியமையாதது. அண்மையில் பிரபல 'புரட்சி எழுத்தாளர்' ஒருவரின் நாடக அரங்கேற்றத்திற்குச் சென்றிருந்தேன். அந்த நாடகம் தெளிவற்ற ஒரு வரலாற்று நாடகம். அந்த நாடகத்தின் மற்றப் பகுதிகளைப் பற்றி இங்கே நான் விமர்சிக்காவிட்டாலும், 'குண்டு' நடிகர் ஒருவரை வைத்து வெறும் உடல் அசைவுகளை மாத்திரம் கொண்டு நகைச்சுவைக் காட்சிகளைப் பின்னியிருந்தார், பாவம்! இப்போது அவருக்கு ஒரு சீசன். 'பதினேழு பத்திரிக்கைகளில் பதினெட்டு தொடர்கதைகளை எழுதிக்கொண்டு' (இது அவருடைய பேச்சுத்தான்) இந்த நாடகத்தை எழுதியிருக்கிறார், இவ்வளவு சிரமத்திற்கிடையே, இப்படியொரு படைப்பை உருவாக்கி அவருக்கும், தமிழ்நாடக வளர்ச்சிக்கும் கெட்டபெயரை ஏற்படுத்தியிருக்க வேண்டாம். ஏனெனில் வரலாறு என்ற பெயரில் உயிரற்ற நிகழ்ச்சிகளைப் படைத்து அங்கே கொஞ்சம் திறமையாக நகைச்சுவையைக் கையாண்டிருந்தால் கூட நாடகம் ஓரளவு புகழ் பெற்றிருக்கும், அதையும் கூட இழந்துவிட்டார்.

ஆனால் 'ராஜதண்டனையில்', கண்ணதாசன் தரமுள்ள நகைச்சுவையைப் படைத்திருக்கிறார். புலவர் குழு கூடியிருக்கிறது. கூத்தனின்மேல் (அதாவது ஒட்டக்கூத்தன்) கோபம் கொண்டோர்தான் அங்கே அதிகம். அங்கே ஒரு புலவர் மற்றொருவரிடம் கேட்கிறார். 'நாளை முழுநிலா! கூத்து உண்டா? பார்க்கப்போகலாமா?'' என்று.

மற்றவர் கூறுகிறார்; 'கூத்தனுக்குப் பித்தமாம்; கூத்து நாளைக்குக் கிடையாது,''

முதல்வர்; பித்தமா? வெறியா? வெறி என்றால் கூண்டிலே அடைக்கப்பட்டிருக்கவேண்டுமே?

இரண்டாமவர். பித்தம் வெறியாகும் என்பது மருத்துவர் கருத்து.''

இது கேலி கலந்த நகைச்சுவை. தரம் குறையாத நகைச்சுவை, இதுபோல இன்னும் உண்டு எண்ணற்றவை.

மொத்தத்தில் இந்த நாடகம் ஒன்பான் சுவையும் ஒரு சேர அமையப்பெற்றது. தலைப்பு தனித் தமிழில் இல்லையெனினும் நாடகம் முழுவதும் நல்ல தமிழ் மணம் வீசுகிறது. காதல் உணர்ச்சி சில இடங்களில் அளவு மீறி இருப்பதாலும் கவிதைகள் இடையிடையே தடைபோடுவதாலும் தான் இது மேடையில் நடத்த ஓரளவு சிரமம் தரும் என்று ஆரம்பத்திலேயே குறிப்பிட்டேன்,

எனினும் பயில்முறை நடிகர்களும், நடிகர்களாகவேண்டும் என்று ஆசைப்படும் மற்றையோரும் இந்நாடகத்தை அவசியம் அடிக்கடி படித்துப் பழகவேண்டும். ஏனெனில் சொற்பயிற்சிக்கு இந்த நாடகம் மெத்தத் துணைபுரியும் சொற்களை ஏற்றி-இறக்கவேண்டிய முறை இதன் மூலம் தெளிவாகும். தமிழிலே இருக்கிற வேகம், தமிழிலே இருக்கிற இனிமை, தமிழிலே இருக்கிற எளிமை-இவையெல்லாம் 'ராஜதண்டனை'யிலே உண்டு.

குறிப்பாக அம்பிகாபதி அரச அவையில் தமிழ்ப் பண்பு குறித்து வாதாடுவதும், பிறகு அது குறித்து அமராவதிக்கு விளக்கம் தருவதும் நல்ல கொள்கை விளக்கம். ஒரே பொருளைக் குறித்து இரு வேறுவிதமாக வாதிப்பது எப்படி என்பதை உணர்த்தும் சொல்லோவியம்,

நாடகத்தில் நறுக்குத் தெறித்தாற் போன்ற வார்த்தைகள் பல இடங்களில் நமக்குக் கவர்ச்சியூட்டுகின்றன. பொதுவாக இந்த நாடகம் ஒரு சிறந்த எழுத்தோவியம். பெயரைப் பார்த்து பின்னல் செல்லத் தேவையில்லை.

(13—5—60 இதழ் 'தாய்நாட்'டில் வெளிவந்தது)

---

# ரசவாதியின் "தோழர் கஜபதி"

ஒரே நிகழ்ச்சி, அதை ஒட்டிய விளைவுகள் பல. ஆனல் அத்தனையிலும் உயிர் உள. இதுதான் 'சிறு கதைக்கேற்ற கரு என திறனய்வாளர் பலர் தெளிவுபடுத்தியுள்ளனர். இதனை உறுதிப்படுத்தும் கதைகளுள் ஒன்று 'ரசவாதி' எழுதிய "தோழர் கஜபதி" என்பதாகும், 1960-ம் ஆண்டு "கலைமகள்" தீபாவளி மலரில்தான் இக்கதை வெளிவந்தது. எனவே உங்கள் நெஞ்சிலிருக்கும் என்று நினைக்கிறேன். இருந்தாலும் கதைச் சுருக்கத்தைச் சொல்கிறேன்.

ஒல்லியாகக் கோட்டு போட்டுக்கொண்டு பைல்கட்டும், பழைய குடையுமாக பத்தாம் நெ. பஸ்ஸுக்குப் பாரீஸ் கார்னரில் காத்திருப்பாரே அவர்தாம் தோழர் கஜபதி. கிட்டத்தட்ட இருபத்தாறு ஆண்டுகள் அரசியலாருக்கென்றே உழைத்து ஓடாகிப் போன தேகம் அது. திடீரென்று ஒரு நாள் அவருடைய காரியாலயத்தில் வேலை நிறுத்தம் நடத்துவதென்று ஊழியர் சங்கம் தீர்மானித்து விட்டது கஜபதிக்கோ இந்த விவகாரமெல்லாம் பிடிக்கலில்லை. தொண்டர்கள் வேண்டுகோள் விடுத்தனர், துண்டறிக்கைகள் ஏராளம் வந்தன. சங்கத் தலைவரே நேரில் கஜபதியிடம் வந்து வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ளுமாறு வேண்டினர், ஆனல்

இத்தனையையும் மீறி அலுவலகம் செல்வதென்று கஜபதி தீர்மானித்தார்.

வழக்கம்போல வேலை நிறுத்த நாளன்றும் அலுவலகத்துக்குப் புறப்பட்டார், கொஞ்சம் முன்னதாகவே கூடப் புறப்பட்டார் என்றும் கூறலாம். ஏனெனில் வேலைக்கு வருகிற விசுவாசமுள்ள ஊழியர்கள் கண்டிப்பாக பத்து மணிக்குள் வந்துவிட வேண்டும் என்றும், அதற்குப் பிறகு அட்டண்டன்ஸ் மூடப்படும் என்றும் ஒரு தீர்மான உத்தரவை முதல் நாளே சர்க்கார் அறிவித்திருந்தது.

ஆனால் நமது தோழர் கஜபதி பாரிஸ் கார்னருக்கு வந்த போது வழக்கமாக அவர் போகும் பஸ் புறப்பட்டுவிட்டது. ஆட்டோவிலோ, டாக்ஸியிலோ போக அன்று அவருக்கு தெம்பு இல்லை, எனவே ஒரு மணி கழித்துதான் அவருக்கு பஸ் கிடைத்தது. புறப்பட்ட பஸ்ஸும் பாதி வழியிலேயே ரிப்பேராகி நின்று விட்டது. ஓட்டமும் நடையுமாக மீதி தூரத்தைக் கடந்தார். ஆனால் காலம் கடந்து விட்ட காரணத்தாலும், மறியல் விளைவால் ஏற்பட்ட குழப்பத்தாலும் போலீசார் அவரை உள்ளே புக அனுமதிக்கவில்லை. உண்மையாக வேலைக்குச் செல்ல விரும்பும் விசுவாசமுள்ள ஊழியர் அவர் என்பதை அவர்கள் நம்ப மறுத்தனர். சூழ்நிலை தந்த நிர்ப்பந்தத்தின் விளைவால் வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ள அவர் விரும்பாமலிருந்தும், அவரால் வேலைக்குச் செல்ல முடியவில்லை.

மறுநாள் அலுவலகம் சென்றபோது 'சஸ்பென்ஷன்' ஆர்டர் அவரை வரவேற்றது, 'ஐயோ' நான் நிரபராதி என்று அவருடைய உள்ளம் கதறியது, ஆனால் சந்தர்ப்பம்...?

வெளியே மரத்தடியில் காத்துக்கிடந்த அவரைப்போல் 'சஸ்பெண்ட்' செய்யப்பட்ட கும்பல் கஜபதியை ஒரேயடியாகத் தூக்கினர்கள்; தலைவருக்குப் பக்கத்தில் அமர்த்

தினர்கள்; மாலை அணிவித்தார்கள். கஜபதியைப் போன்ற வயதான ஒருவர்—பழம்பெரு ஊழியர் வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்டது அவர்களுக்கெல்லாம் பெரு வெற்றியா யிருந்தது. அதுவரையில் வெறும் கஜபதியாய் இருந்தவர் தோழர் கஜபதியானார் "தோழர் கஜபதி! வாழ்க!! என்று வானதிர முழக்கினார்கள். ஆனால் அவரோ—அந்தப் பரம விசுவாசியோ திருகத்திருக விழித்துக்கொண்டிருந்தார்; அவருடைய உள்ளம்தானே அறியும் முதல்நாள் நடவடிக்கைகளை!

எழுத்தாளர் 'ரசவாதி' அறிமுகப்படுத்திய தோழர் கஜபதி இவர்தான். சமீபத்திலே நடைபெற்ற தபால், ரயில்வே ஊழியர்களின் வேலை நிறுத்தத்தை மனதில் கொண்டு பார்த்தால் இக்கதை மிக உயர்ந்த கடைச் சித்திரங்களுள் ஒன்றாக எனக்குப் படுகிறது. ஒருவேளை ரசவாதியும் இந்த வேலை நிறுத்தக்காரர்களில் ஒருவராக இருப்பாரோ என்ற எண்ணமும் உண்டாகிறது ஏனெனில் அவ்வளவு அனுபவபூர்வமாகவும்—தத்ரூபமாகவும் இருக்கிறது கதை.

கஜபதி வேலைக்கு வரவேண்டுமென்று ஆசைப்படுகிறார்—துடிக்கிறார்—சர்க்காருக்கு துரோகம் செய்யக்கூடாதென்று பாடுபடுகிறார், ஆனால் சந்தர்ப்பங்கள் சதி செய்கின்றன. எந்த அரசாங்கத்திற்கு நல்ல பிள்ளையாக நடந்துகொள்ள வேண்டுமென்று நினைக்கிறாரோ அந்த அரசாங்கமே அவரைத் தண்டிக்கிறது. அவருடைய குற்றமற்ற தன்மையை உணர்வதற்கு அதற்கு வலியில்லை, ஆனாலும் அவர் சக ஊழியர்களின் மதிப்புக்காளாகிறார்; தோழர் கஜபதியாகிறார், தலைவர் நிலைக்கு உயர்த்தப்படுகிறார்,

எத்தகைய விசித்திரமான வேறுபாடு? நாட்டிலே நடமாடும் எண்ணற்ற முதியவர்களின் உள்ளத்தை—நெருக்கடியான நேரங்களில் அவர்கள் அனுபவிக்கிற வேதனையை

'தோழர் கஜபதி' அப்படியே பிரதிபலிக்கிறார், நிம்மதியான வாழ்வு இல்லையென்றாலும், இந்த நாட்டிலே பலர் குறைந்த சம்பளம் கிடைத்தாலும் அதைக்கொண்டு அரை வயிற்றுக்குச் சாப்பிடுவோம் என்று எண்ணுகிறார்களே தவிர, அதிக சம்பளம் பெறுவதற்காகப் போராடி இருப்பதையும் இழக்கத் தயாராக இல்லை இந்தப் பெரிய உண்மையைப் புடம் போட்டு எடுத்துக் காட்டும் கதைதான் தோழர் கஜபதி, நடுத்தர வர்க்கத்தவரின் போராட்டங்களெல்லாம் ஒடுக்கப்படுவதற்கான உள்ளார்ந்த தத்துவம் இந்தக் கதையிலே அழகாகப் படம் பிடித்துக் காட்டப்படுகிறது.

இத்தகைய சிறுகதைகள் தமிழ் இலக்கிய உலகில் புதுமையான முயற்சிகளாகும், வாழ்த்தி, வரவேற்கப்பட வேண்டிய முயற்சியாகும், இலக்கியத் தரம் மிக்க இந்த சிறுகதை சிறந்ததோர் பெருமை மிக்கது என்பதை எல்லோரும் உணர்வர்,

(4—11—61 'இமயம்' இதழில் வெளிவந்தது)

---

# 'ஜமீலா'வின் சிறுகதைகள்

மக்கள் சமுதாயத்தில் வாழும் பலதரப்பட்டவர்களையும் நாம் நன்கறிந்து கொள்வதற்கு வரலாற்றுக் கட்டுரைகளை விட சிறுகதைகளும், பெருங்கதைகளும் நன்கு பயன்படும், ஆனால் இதுவரையிலும் இனத்தாலும், மொழியாலும், மதத்தாலும் வேறுபட்டவர்களைப்பற்றி புரிந்துகொள்ள மொழிபெயர்ப்புக் கதைகள்தான் துணையாயிருந்து வந்தன; வருகின்றன, அத்தகைய கதைகளில் சுவையையும், நடையையும் நாம் சரிவரப் புரிந்துகொள்ள முடியாது, மெல்லிய

வேறுபாட்டு இழை ஆங்காங்கே நிலவி வேகத்தைத் தடுத்து விடும், அதற்கு மாருக தமிழ் மொழியில் நயத்தையும், தமிழ்ப் பண்பாட்டையும் நன்கு அறிந்த ஒருவரால் நம் நாட்டில் வாழும் முஸ்லீம் கலாச்சாரத்தை ஒட்டி எழுதப்பட்ட பதி ஞன்கு கதைகள் அடங்கிய நூல்தான் 'பெருநாள் பரிசு'.

ஐமீலா எழுதிய இந்த பதிஞன்கு கதைகளிலும் ஒன்பது கதைகள் நல்ல பொறுக்கு மணிகளாக நம் இதயத்தை நிறைவு செய்கின்றன, இத்தனைக்கும் கதையாசிரியர் பல இடங்களில் தன்னை ஓர் அழுத்தமான பழமைவாதி என்பதை வலியுறுத்திஞலும்கூட, அவருடைய படைப்புகளிலே இருக் கிற துள்ளலையும், பாத்திர அமைப்பிலே இருக்கின்ற முழுமை யையும் எண்ணி அதை மறக்க வேண்டியவர்களாக இருக் கிருேம்,

"குழி தோண்டிக் காசீம்' என்று ஊரெல்லாம் அவனை அழைத்தார்கள். இயற்கை முடிவெய்திய ஏராளமானவர்க ளைப் புதைக்க, புதை குழிகள் பலவற்றை அவன் வெட்டி யிருக்கிருன், உற்ருர் உறவினரெல்லாம் கதறிக்கதறி அழுத காட்சிகள் பலவற்றை அவன் கண்டிருக்கிருன், அப்போதெல் லாம் அவன் கண் கலங்கியதில்லை, ஆஞல் அவனும் ஒருநாள் புதை குழி வெட்டும்போது கண்ணீர் வடிக்கக்கூடிய சந்தர்ப்பம் வந்தது, அவனுடைய ஆசை மனைவிக்காக புதை குழி தோண்டிய கொடுமை—அதை ஆழம் நிறைந்த பின்னணியோடு வெளியாக்கியிருக்கிருர் 'அழாத கண்கள்' என்ற கதையில்,

'சாதிகள் இல்லையடி பாப்பா, குலத் தாழ்ச்சி உயர்வு சொலல் பாபம்' என்று கவிஞர்கள் முரசு கொட்டியும் சாதிக் கொடுமை இன்னும் ஒழிந்தபாடில்லை. முஸ்லீம்களைக்கூட இந்தப் பெருநெருப்பு எவ்வாறு பற்றியிருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுகிறது "பல்கீசின் பதற்றம்", என்ற கதை.

இந்தக் கதையிலே வருகிற டிப்டி கலெக்டர் ஷேக் பஷீர் சாகேப், சிறந்த குணச்சித்திரப் படைப்பு. நிதானம் தவருத அவருடைய போக்கு பல நேரங்களிலே சஞ்சலத்தையும், சங்கடத்தையும் ஏற்படுத்திஞலும்கூட இறுதியில் நல்ல முடிவையே தருகிறது. அந்த நல்ல முடிவை உண்டாக்குவதற்காகத் தன்னுடைய வாழ்க்கையிலும் ஒரு களங்கத்தை ஏற்படுத்திக் கொள்கிருர் அவர். இத்தகைய தியாக உள்ளம் படைத்தவர்கள் நூற்றிலே ஒருவர் வந்தால்கூட சாதிச் சனியன் மிகமிக விரைவில் அழிந்துவிடும் என்பது உறுதி,

'காதலும் போட்டியும்' என்ற கதை ஆசிரியரின் நுண்மாண் நுழைபுலத்திற்கு அருமையானதோர் எடுத்துக்காட்டு, இரண்டு குத்துச் சண்டைக்காரர்கள்—இருவரும் நல்ல திறமைசாலிகள்—இருவருக்கும் போட்டி நிச்சயமாகிறது. இருவரில் யார் வென்ருலும், யார் தோற்ருலும் ஒரு கன்னிப் பெண்ணின் காதல் வாழ்வு தோல்வியுறக்கூடிய நெருக்கடியான நிலை, இந்த நிலேயிலே ஆட்டம் நடக்கும்போது மேடையிலே வெடிக்கப்படும் வெங்காய வெடியொன்று ஆட்டத்தை வெற்றி தோல்வியில்லாது ஆக்குகிறது. காதல் உள்ளங்கள் இன்பச் சிந்து பாடுகின்றன, இந்தக் கதையிலே இருக்கிற நயத்தைவிட கதையின் இடையிலே குத்துச் சண்டையைப்பற்றி விளக்கம் தரும் இடம் மிகச் சுவையாயிருக்கிறது.

'அகலமான ஜரிகை பார்டர் போட்ட சிவப்பு நிற மதுரைச்சிந்தோடி தாவணியை தன் துணேவிக்குப் பொறுக்கியெடுத்தபோது அப்துல் காதரின் முகமெல்லாம் மலர்ந்தது' என் பெருநாள் பரிசு என்ற கதை தொடங்கும்போது இந்தக் கதையிலே என்ன இருக்கப் போகிறது என்றுதான் பெரும்பாலோர் நினேக்கலாம், மேலும் தொடர்கிருர் ஆசிரியர். "அதற்காக அறுபது ரூபாயை வீசியெறிந்துவிட்டு அதன் சரிபாதி விலேயில் ஜிமிக்கி போட்ட நாகூர்ப் புடவையை

தன் தங்கைக்காகப் பேரம் செய்தபோது அவன் முகம் ஏனோ சுளித்துவிட்டது, மீதியிருந்த பணத்தில் தன்னைப் பெற்றெடுத்தவள் என்ற தோஷத்திற்காக ஒரு சாதாரண வாயில் புடவையை தன் தாய்க்காக அலுப்புடன் வாங்கிக் கொண்டான்",

எத்தகைய நன்றி மறவா(!)த் தன்மை இவனுக்கு. ஆனால் ஜவுளிக் கடையிலிருந்து வீட்டிற்குள் வருவதற்குள் மூட்டை பறிபோய் விடுகிறது சொல்ல முடியாத வேதனையோடு, சோகப் பிம்பமாய் வீட்டிற்கு வருகிறான். எந்த மனைவிக்கு முதலிடம் அளித்து அவளை திருப்திப்படுத்த அதிக பணத்தைப் போட்டுப் புடவை வாங்கினானோ, அவள் ஆறுதல் கூறுவதற்காக அங்கே வரவில்லை. அவனால் ஒதுக்கப் பட்ட தாய் விஷயத்தை யார் மூலமாகவோ கேள்விப்பட்டு சிட்டுக் குருவிபோல் தான் சேர்த்துவைத்த பணத்தைக் கொண்டுவந்து தன் மகனிடம் கொடுத்து, எது போனாலும் பரவாயில்லை, இதைக்கொண்டு உன் மனைவிக்கு ஏதாவது வாங்கிக் கொடு என்று கூறும்போதுதான் பெற்ற மனத்தின் பெருமையை அவன் அறிகிறான்.

இவ்வாறு ஒவ்வொரு கதையும் மனித இதயத்தில் நிழலாடும் உணர்ச்சிகளைப் பிரதிபலிப்பதாகத்தான் உள்ளது. கொலைவாள் ஏந்தும் போக்கிரியின் உள்ளத்திலும் இரக்க சுபாவம் மேலிடும், ஊருக்கு உபதேசம் செய்யும் மௌல்வியின் பின்னால் மறைந்திருந்த மர்ம வாழ்க்கையும் அவரால் அவதிக்குள்ளாக்கப்பட்ட அபலையின் கண்ணீரும் உலகைப் பல கோணங்களில் ஆசிரியர் படம் பிடித்திருப்பதைக் காட்டுகிறது.

கொஞ்சம்கூட தடையில்லாமல் தெளிவான நடையோடு கதைகள் ஓடுகின்றன, உருதுச் சொற்கள் ஏராளமாக இருப்பினும் அவையெல்லாம்—முஸ்லீம்களின் வழக்கிலுள்ள அன்றாடச் சொற்கள் என்பதை அறியமுடிகிறது. ஆறுமாத

காலம் உருதுபடிக்க முயற்சியெடுத்துக்கொண்டு ஏற்படும் பலனைவிட அதிகமான பலனையே இக்கதைகள் தருமென்று நம்பலாம்.

பொதுவாகத் தமிழ் சிறுகதை உலகில் ஜமிலாவின் கதைகள் ஒரு புதிய திருப்பத்தை உண்டாக்கியிருக்கின்றன. அதற்கு முன்பெல்லாம் தமிழ்ச் சிறுகதைகளின் ஆரம்ப காலத்தில் மேட்டுக் குடியினரின் வாழ்வையும்; அவர் தம் மொழி நடையையுமே தமிழ் மக்கள் படிக்க வேண்டிய கட்டாய நிலை இருந்தது. அதற்குப் பிறகு புதுமைப் பித்தன் போன்றோர் சில பல திருப்பங்களை உண்டாக்க முனைந்தனர். அவைதான் முதலும், முடிவும் என்று கூறத்தக்க வகையில் இல்லாவிட்டாலும் மாற்றாரும் மனமிசைந்து ஒப்புக்கொள்ளும் புது வழியை சிறுகதைத் துறையில் புதுமைப்பித்தன் உருவாக்கினார். அந்த வரிசையிலே ஜமிலா ஒரு நட்சத்திரம், ஆனால் அவர் தன்னுடைய பழமைக்கு வக்காலத்து வாங்கும் 'பாணி'யை மாற்றிக்கொண்டாரானால் நிரந்தரமாக ஒளிவீச முடியும். இல்லையேல் கூண்டுக் கிளியாகத்தான் அவருடைய சிறுகதைகள் ஆகிவிடும்.

('தாய்நாடு' 15—4—60 இதழில் வெளிவந்தது)

பல்லவர்கள் வரலாற்றைப் படித்தார் கல்கி, 'சிவகாமி' உருவானாள்—'சபதம்' பிறந்தது. பாண்டவர்கள் புராணத்தைப் படித்தார் பி. எஸ். ராமையா, காஞ்சனமாலை பிறந்தாள். 'தேரோட்டி மகன்' உருவாயிற்று. இரண்டு நூற்களுக்கும் அளவிலும், தரத்திலும், விற்பனையிலும்; புகழிலும் வித்தியாசமிருக்கலாம். ஆனால் இருவருடைய கற்பனையிலும் ஒருவனு—அது பழைய கற்பனையின் சாயலிலே பிறந்தாலும் பாராட்டுதற்குரியது.

(மாதவி' - இதழில் 3—6—62ல் வெளிவந்தது)

# பூவை ஆறுமுகத்தின் இரண்டாவது கண்ணகி.

அறந்தாங்கி தஞ்சை மாவட்டத்தின் எல்லே, பஞ்சாப் பிரதேசம் என்று கூறப்படும் இராமநாதபுரத்தையும் நெற் கொழிக்கும் சோழவள நாட்டையும் இணைக்குமிடம். சிலர் கூட சொல்வார்கள். சிதம்பரம் வட்டத்தை தஞ்சையோடு இணைக்காமல் அதைத் தென் ஆற்காட்டிற்கு கொடுத்து, தவறிப் போய் அறந்தாங்கியை தஞ்சை மாவட்டத்தோடு இணைத்துவிட்டாரீர்கள் என்று; அந்த அளவுக்கு 'வரண்ட' புகழ் வாய்ந்த இடம் அறந்தாங்கி: அரசாங்க அலுவலிலே வேலே பார்ப்போரையெல்லாம் கூட அந்தக் காலத்திலே மிரட்ட வேண்டுமென்று கருதுகிற மேலதிகாரிகள், 'உன்னே அறந்தாங்கிக்கு மர்ற்றிவிடுவேன் தெரியுமா என்று கூறி பய முறுத்துவார்களாம். அப்படிப்பட்டதோர் 'அழகிய பிர தேசத்தை' வைத்துக்கொண்டே இதுவரை ஐந்நூறுக்கு மேற் பட்ட சிறு தைகளே எழுதியிருப்பவர் திரு. பூவை திரு எஸ். ஆறுமுகமென்ருல் உங்களுக்கெல்வாம் வியப்பாக இருக்கும். அவரிடம் இருக்கும் கற்பனே வளம் அத்தயைதோர் பெரும் சுரங்கம்.

இன்றைய தினம் "பூவை" என்ற பெயர் எழுத்தாளர் களுக்கிடையே ஒரு இணைப்புச் சொல்லாகப் பரிமளித்து வருகிறது. குறுகிய மனேபாவமும், இறுகிய எண்ணங்களு கொண்ட திறனுய்வாளர்கள் இருந்துவரும் தமிழ்ப்பேருலகில் திரு. பூவை நம்பிக்கையூட்டும் விண்மீனுக தமக்குக் காட்சி யளிக்கிருர். அவருடைய அண்மைக் காலப் பெரும் கதைதான் 'இரண்டாவது கண்ணகி'.

திரு. ஆறுமுகம் அவர்களை ஒருநல்ல எழுத்தாளர் என்று கூறுவதைவிட சிறந்த இதழாசிரிய என்ற முறையிலேயே நாம் இதுவரை மதிப்பிட்டு வருவது வழக்கம். அதற்காக அவருடைய எழுத்துக்களை விரும்பிப் படிக்காதவனல்ல. ஆனல் அவருடைய பத்திரிக்கைப் படைப்பு (Magazine getup) என்னை மிகவும் கவர்ந்தது. அந்த எண்ணத்திலேயே இருந்த எனக்கு இரண்டாவது கண்ணகி ஒரு புதிய சுவையை தரக்கூடிய விதத்திலே அமைந்திருப்பதைக் காணும் பேறு கிடைத்தது.

கலை என்ருல், 'அது வாழ்க்கைக்கு மெருகூட்டும் ஒன்று என்ற பொருள்தான் பெரும்பாலும் இருந்து வருகிறது. திரைக் கலையாளுலும் சரி. நாடகக்கலையாளுலும் சரி, எழுத்துக்கலை யாளுலும் சரி. எங்கினும் இந்த மெருகு இருந்துதான் தீர வேண்டும் என்று வலியுறுத்துவோர் பலர் உண்டு. வாழ்க்கை யின் வெறும் கண்கண்ட உண்மைகள், நடப்புகள் மாத்திரம் கலைச் சிறப்புள்ளவை ஆகிவிட முடியாது அதற்கு உயிரூட்ட மெருகும் அவசியம்தான், ஆனல் மெருகற்றதனுலேயே ஒரு பொருள் மேம்பட்டதல்ல என்றும் கூறிவிட முடியாது. இந்த சிந்தனைதான் உறுதிப்படுகிறது, 'இரண்டாவது கண்ணகி' யைப் படிக்கும்போது. வாழ்க்கையின் மிகச் சாதாரண சம்பவங்கள் — சிக்கலோ, எதிர்பாராத நிகழ்ச்சிகளோ அதிகம் இல்லாமல் ஒரு பெருங்கதை இயங்குவதென்பது வளரும் யுகத்தில் ஒரு விந்தைதான், அந்த விந்தையை வெகு அற்புத மாக செய்து முடித்திருக்கிருர் பூவை.

ஒரு அச்சக முதலாளி. அவருக்கு இரண்டு மனைவிகள். இளையவளை மணந்தது முதல்வருக்குத் தெரியாது. இளையவள் தளிர் ஒன்றைத் தந்துவிட்டு மறைகிருள். அந்தத் தளிரினு டைய வாழ் தழைக்க வேண்டுமென்பதற்சுரக தந்தை என் னும்போது மூத்தவளுடைய மகள் அங்கே குறுக்கிடுகிருள்,

இரண்டு பெண்களும் ஒருவனையே காதலிக்கின்றனர்-உண்மையை அறியும்போது மூத்தப் பெண் இளையவளுக்கு விட்டுக் கொடுத்து தன் காதலை தியாகம் செய்து விடுகிறாள்.

இதுதான் கதை. மிகச் சிறிய , ஆனால் நுணுக்கமான வாழ்வுப்பிரச்சனைகளை இதன் மையமாகக் கொண்டு இருநூறு பக்கங்கள் அளவில் இந்தக் கதை செல்கிறதென்றால் அது ஒரு தனிச் சிறப்புத்தானே. வர்ணனைகள் அதிகம் இல்லை, நிகழ்ச்சிகள் அப்படி ஒன்றும் நிறைய இல்லை-என்றாலும் நாவல் நம் உள்ளத்தைத் தொடுகிறது என்றால் அதுதான் பூவையாரின் தனிச் சிறப்பு.

திராவிட இயக்கத்தைச் சாராத தமிழ் எழுத்தாளர்களிடையே (இப்படிக் கூறுவதனால் நணபர் ஆறுமுகத்தைத் தனியாக ஒதுக்குகிறேன் என்று நினைக்க வேண்டாம்; அவர் நம்மிடையே இருந்தவர், நமது பாசறையில் உலவியவர், பொன்னியில் பன்மொழிப் புலவர் ஆசிரியப் பொறுப்பேற்றபோது அவருக்கு அருகிருந்து துணைபுரிந்தவர், இப்போது இன்னும் கொஞ்சம் விரிவாகப் பெயர் விளங்க அங்கு சென்றிருக்கிறார்-அவ்வளவுதான். அதாவது வாசனும், ஏவிஎம்மும் இந்திப்படத் தயாரிப்பில் அதிக கவனம் செலுத்துவதைப்போல என்று வைத்துக்கொள்ளுங்களேன்) நல்ல தமிழை-மனம் வீசக் கூடிய தமிழை-தனித் தமிழை ஒரு சிலரிடையேதான் பார்க்கலாம், அப்படிப்பட்ட விரல்விட்டு எண்ணத் தக்கவர்களில் பூவை திரு ஆறுமுகம் ஒருவர் என்பது இக்கதையின் மூலம் நமக்குத் தெரிகிறது அவருடைய உரையாடல்களும்-நடையும் தனித்தன்மை வாய்ந்தவை. அந்த உலகத்திலே பூந்தமல்லி சாலையிலே நடப்பது போல வேகவேகமாக நடக்க முடியாது. மவுண்ட்ரோடு பகுதியில் நடப்பதுபோல் நின்று-நிதானித்து ஒருமுறைக்கு இருமுறை திரும்பிப்பார்த்து பிறகுதான் நடக்க முடியும், வாக்கியங்களை துப்பறியும் நாவல்போல மளமள வென்று படித்துக்கொண்டு செல்ல முடியாது. நன்னுலையும்,

குறளையும் படிப்பது போல படிக்கவேண்டும். அதை சொல்லுவதிலும், படிப்பதிலும் ஒரு புதுமை இருக்கும். 'போட்டோ பிடித்தா ' என்று சொல்லுவதை விட 'நிழற்படக் கருவி ஒளியெழுப்பியது' என்றே எழுதுவார். இந்த மாறுதலை நான் மனமகிழ்வோடு வரவேற்கிறேன். தமிழ் வளர்ச்சியில் இது ஒரு புதுக் கட்டம் என்பதையும் உணர்கிறேன்,

(4—9—60 'தாய்நாடு' இதழில் வெளிவந்த கட்டுரை)

---

# சேதுப்பிள்ளையின் "கடற்கரையிலே"

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் திரு. ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் சிறந்த தமிழ் ஆராய்ச்சி அறிஞர். தமிழகம் பெருமைப்படும் தமிழ் நாவலர். தமிழ் மொழியை அழிக்க எண்ணிய ஆணவக் கூட்டத்தின் அருகிருந்தே அவர் தம் திட்டத்தைக் கருக்கிய மதி நுட்பம் வாய்ந்தவர். ஏராளமான இலக்கியக் களுலங்களை அவர் தமிழுக்குத் தந்திருக்கிறார், அவற்றுள் 'தமிழ் இன்பம்' என்ற நூல் நடுவரின் பாராட்டையும், பத்தாயிரம் ரூபாய் பரிசையும் பெற்றிருக்கிறது.

எனிலும் அவற்றையெல்லாம் விட ரா. பி. சே எழுதிய கடற்கரையில் மிகச் சிறந்த எழுத்தோவியம் என்று கருதுகிறேன். மிக எளிய நடை, நல்ல ஆழமான கருத்துக்கள், அதைப் படைத்திருக்கும் முறை, அதிலே தென்படும் தமிழ் இலக்கியப் பரப்பின் அகலம் — இவையெல்லாம் தான் அதற்கு காரணம்.

செல்வருக்கும், வறிஞ்சருக்கும் ஒருங்கே சுகம் தருவதும் கடற்கரை. இளைஞருக்கும் முதியவருக்கும் இன்பம் பயப்பது கடற்கரை. நல்லார்க்கும் பொல்லார்க்கும் நலம் புரிவது கடற்கரை. மெத்தச் சலித்தவருக்கு புத்துயிர ளிக்கும்; கலந்து பேச விரும்புவார்க்கு களிப்பருளும், தனி மையை நாடுவார்க்கும் இனிமை தரும், அத்தகைய அருஞ் சிறப்புகள் அமையப் பெற்ற கடற்கரையிலே நின்று வல்ல தமிழறிஞர் இருபதின்மர் தம் எண்ணங்களை கற்பனையாக வெளியிடுது போல எழுதியிருப்பது தான் இந்நூல்.

திருவள்ளுவர் பேசுகிறார். இளங்கோ உரை நிகழ்த்து கிறார். நக்கீரர் நாவன்மைத் தெரிகிறது. பரிதிமாக் கலைஞரின் சொல்லாற்றல் புலப்படுகிறது. சிதம்பரனாரும் பாரதியாரும் சிந்தனை விருந்து படைக்கிறார்கள். அருமையான கற்பனை. ஆனால் நிகழ்ச்சி கற்பனையே தவிர உரையிலே வரும் ஒவ் வொரு சொல்லும், கருத்தும் பரணர் இருந்தால் கம்பர் இருந்தால் அவர்கள் எப்படிப் பேசியிருப்பார்களோ அப்ப டியே எழுதி யிருக்கிறார்.

இந்த நூலின் மூலம் தமிழ்நாட்டு வளத்தைப் பார்க்க வாய்ப்பேற்படுகிறது. தமிழ் மொழி வளத்தைக் கேட்க வாய்ப்பேற்படுகிறது. தமிழிலக்கிய இன்பத்தைப் பருக வாய்ப்பேற்ப்படுகிறது; தமிழ் மண்ணிலே வாழ்ந்த வீரர் தம் வரலாற்றை அறிய வாய்ப்பு ஏற்படுகிறது; தமிழ்நாட்டு சமய வாழ்க்கையை உணர வாய்ப்பு ஏற்படுகிறது.

இந்நூலின் மற்றொரு சிறப்பு ஒவ்வொருவரும் எந்தெந்த கடற்கரையிலே நின்று பேசுகிறார்கள் என்பது தான், திரு வள்ளுவர் திருமயிலைக் கடற்கரையிலே நின்று பேசுகிறார். இளங் கோவடிகள் குமரிக் கடற்கரையிலும், நக்கீரர் செந்தில் கடற்கரையிலும், பரணர் முசிறியிலும், சாத்தனார் காவிரிப் பூம்பட்டிணத்திலும், புனிதவதியார் காரைக்காலிலும்,

திருநாவுக்கரசர் இராமேஸ்வரத்திலுல், திருமங்கை மன்னன் மாமல்லேயிலும், பட்டிணத்தார் திருவொற்றியூரிலும், பண்டித சோழன் நாகையிலும், கம்பர் தருப்பாசயனத்திலும், ஆனந்த ரங்கர் புதுவையிலும், உமறுப்புலவர் கீழ்க்கரையிலும், வ. உ. சிதம்பரனார் தூத்துக்குடியிலும், பாரதியார் திருவல்லிக்கேணியிலும் பேசுகிறார்களாம். வரலாற்றையும் அறிஞர்களின் வாழ்க்கை ஏட்டையும் எவ்வளவு சிறப்புடன் ஆசிரியர் ஆராய்ந்து பார்த்திருக்கிறார்? இத்தகைய கடற்கரைகளைக் காணும் போது நமது தென்னகத்திற்கு அமைந்திருப்பது போன்ற இவ்வளவு நீண்ட பெருங் கடற்கரை உலகில் வேறு எந்த நாட்டுக்குமே அமைந்திருக்காது என்று பூரிப்பு நமக்கு ஏற்படுகிறதல்லவா?

வள்ளுவருடைய உரையைப் படிக்கும் போது அவரிடமிருக்கும் ஆழங்காண முடியாத அமைதியை உணரமுடிகிறது. "கைம்மாறு வேண்டாக் கருமுகிலே! உனக்கு மனமுவந்து தண்ணீர் அளித்தால் தனக்கும் நலமுண்டு என்பதை அறியாது போயிற்றே கடல்! நீ மழை பெய்யாவிட்டால் இந்நெடுங்கடலும் தண்ணீர்மைக் குன்றுமே; நீ ஆற்று நீராக வந்து கடலைப் பெருகின்றாய்; ஊற்று நீராகப் பொங்கிக் கடலே ஊட்டுகின்றாய்! மழை நீராகப் பொழிந்து கடலை நிறைக்கின்றாய் ஒருவழியாகக் கொடுத்துப் பலவழியாக வாங்குகின்ற உபாயமும் இக்கடல் அறியாதொழிந்ததே!" என்று படிக்கும் போது இதை சேதுப்பிள்ளையின் கரம் தான் எழுதியிருக்கும், ஆனாலும் வள்ளுவரின் உள்ளம் பிரதிபலிக்கிறது என்றுதான் நாம் முடிவு கட்டுவோம்.

அதேபோல புரட்சிப் புலவன் இளங்கோ பேசும்போது இங்கே குமுறலைப் பார்க்கிறோம், 'கருமை வாய்ந்த கருங்கடலே, தென்னவருக்குரிய எத்தனை ஊர்களை நீ தின்றுவிட்டாய்;'? என்று கேட்கும்போது கடலால் மறைந்த லெமுரி

யாக் கண்டமும், கபாடபுரமும், சங்கம் பிறந்த மதுரையும் நமக்குக் கண்ணீர்த் துளிகளை வரவழைக்கின்றன.

நக்கீரன் உரை படிக்கும்போது அங்கே முருக பத்தியைப் பார்க்கிறோம், பாரிதிமாற் கலைஞர் வந்தவுடன் மொழிப் பற்றுத்தான் முன்னே வந்து நிற்கிறது, "இதோ, உயர்ந்து எழும்பி நின்று தரையிலும், தண்ணீரிலும் ஒளி வீசுகிறது! இதை 'தீபஸ்தம்பம்' என்று எவரோ சொல்லி விட்டார், அப்பெயர் இந்நாட்டுப் பள்ளிகளிலும் பரவத் தொடங்கிவிட்டது, அந்தோ! இவ்வொளியைக் குறிப்பதற்கு நல்ல தமிழ்ச் சொல் இல்லையா? நம் முன்னோர்கள் இதற்கு அழகிய பெயரிட்டுள்ளார்களே! அப்பெயர் மண்ணுள் மூழ்கி மறைந்தொழியலாகுமா? 'கலங்கரை விளக்கம்' என்ற அச் சொல் இன்று நேற்று எழுந்ததா? சிலப்பதிகாரத்தில் வழங்கும் செந்தமிழ்ச் சொல்லன்றோ?" என்று வி, கே, சூ, சேட்கும்பொழுது ரா, ஸ்ரீ, தேசிகர்களும் சி, சு, செல்லப்பாக்களும் சு, நா, சு, களும் தலை குனியத்தான் வேண்டும்.

சேதுப்பிள்ளை என்றால் அவர் நமக்கெல்லாம் எட்டாத உயரத்திலிருப்பவர். படித்த பண்டிதர்கள் உணரக் கூடியவற்றையே எழுதுவர் அவர் என்று யாராவது தவறான கருத்துக் கொண்டிருந்தால் அதனை மாற்றிக் கொள்ளலாம் 'கடற்கரையிலே' என்ற இந்தச் சிறு நூலை படிப்பதன் மூலம், மிக எளிய இனிய வாக்கியங்கள்! கொஞ்சம்கூட பிற மொழிச் சொல் கலவாத தனித் தமிழ் நடை! படிக்கும்போது இனிமையும் எழுச்சியும் தரத்தக்க வகையில் சொல்லோட்டம் இவையெல்லாம் இயல்பாகவே இந்நூலில் அமைந்திருக்கின்றன, இலக்கியம், சமயம், வரலாறு, அரசியல், பண்பாடு அத்தனையையும் இழைத்துத் தந்திருக்கிறார் இதனில்.

தமிழ் பேராசிரியர்கள், தமிழ்ப் பட்டதாரிகள், தமிழ்ப் புலவர்கள் இவர்களையெல்லாம் நான் ஒன்று கேட்டுக் கொள்

வேன். நீங்கள் எல்லாம் ஆராய்ச்சித் துறையில் அரிய பல சாதனைகளை செய்யலாம். காலம் காலமாகக் கட்டிக் காத்து வரக்கூடிய காவியங்கள் பலற்றைப் பாடலாம். தாராளமாகச் செய்யுங்கள். நாங்கள் விரும்பி வரவேற்கிறோம். ஆனால் அத்துடன் நீங்கள் ஒவ்வொருவரும் தமிழ் இலக்கியத்தின் அடித்தளத்திலே இருக்கும் பாமர மக்களுக்கென்ற ஒரு படைப்பை உண்டாக்குங்கள். அது 'கடற்கரையிலே'போல இருக்கட்டும்.

('தாய்நாடு' வார இதழில் 12–6–60-ல் வெளியான கட்டுரை)

---

# கவிஞர் ஆனந்தத்தின் அண்ணா காவியம்

கவிதை எழுதுபவர்கட்கும், காவியம் சமைப்பவர்கட்கும் ஜப்பானியக் கவிஞன் நாகனெசிகெரு என்பவன் சில வார்த்தைகளைக் கூறியிருக்கிறான்:

"உண்மையையே பாடு',
அடிப்படையானதைப் பாடு:
தைரியம் தருவதைப் பாடு:
தாளக்கட்டையால் அடித்தால்
எதிரொலி தருவதைப்பாடு:

—என்பதுபோல எழுதி கவிஞர்களின் பாதையை சுட்டிக்காட்டியிருக்கிறான் அந்த ஜப்பானியக் கவிஞன்.

ஏறக்குறைய 35 ஆண்டுகளாக சுயமரியாதை இயக்கத்தோடு தொடர்புகொண்ட கவிஞர் ஆனந்தம் எழுதிய 'அண்ணாகாவியம்' என்ற நூலைப் படித்தால் வரிக்குவரி

அந்த ஜப்பானியக் கவிஞனின் உணர்வுகள் பிரதிபலிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்,

1974ல் தான் இதன் முதல் பதிப்பு வெளியிடப்பெற்ற தென்றாலும் 15—12—72ல் தந்தை பெரியார் அவர்கள் இந்த நூலுக்குப் பாராட்டுரை அளித்திருக்கிறார்கள். "மிக எளிய நடையில் வசனம் போல் படித்து உணரும் தன்மை"யில் இக்காவியம் எழுதப்பட்டிருப்பதாக அந்தப் பாராட்டுரையில் பெரியார் கூறியிருக்கிறார். பெரியார் ஒரு காவியம் எப்படி இருக்கு வேண்டுமென்று விரும்புகிறார் என்பதை அதன் மூலம் உணர்கிறோம்.

—எளியநடை வேண்டும்:

—படித்துணரும் தன்மை வேண்டும்,

இதற்கு முன்பெல்லாம் காவியங்கள் என்றால் அதை சாதாரண மக்கள் படிக்க முடியாத—படிக்கக் கூடாத ஒன்று; அதற்குப் பொழிப்புரை சொல்ல புலவரும், தெளிவுரை கூற ஒரு வித்வானும் தேவை என்ற நிலை நாட்டிலே இருந்தது, அதை மாற்றி 'அண்ணா காவியம்' எளிமையாக-இனிமையாக இருக்கிறது என்பதை ஐயா' கோடிட்டுக் காட்டியிருக்கிறார்.

"சிந்துபாடும் சிற்றாறு" என முதல்வர் கலைஞரால் உருவகப்படுத்தப்பட்டுள்ள இந்நூல் அண்ணாவின் வரலாற்றைச் சொல்வதாக மாத்திரம் அமையாமல் அறிவியக்கவரலாற்றில் தமிழ்நாட்டின் 35 ஆண்டுகால சரித்திரத்தைச் சொல்லும் குறிப்பேடாகவும் திகழ்கிறது.

அண்ணா பிறந்த காஞ்சிமா நகரைப்பற்றி எழுதும்போது

'வெற்றிகள் குவித்த வீரன்
விளையாடி நின்ற பேரூர்!
பொற்றொடி மாதர் நல்லார்
புறவெழில் மின்னநெய்து

சுற்றிடும் பட்டுச் சேலை
சுழன்றிடுந் தறிகள் ஓட்டம்
அற்றிடா ஆடை நல்கி
அன்று தொட்டின்றும் மேவும்"

எனக்கூறும் கவிஞரின் வார்த்தை வளம் காவியம் முழுதும் நீக்கமற நிறைந்திருக்கிறது,

"கூட்டத்தைக் கண்டாலே ஒதுங்கிச்செல்லும்
கூச்சமிகும் இயல்புகளைப்பெற்ற அண்ணா
நாட்டத்தைக் கற்பதிலே பதித்தார்! ஆசான்
நவில்வதனைக் கவனமுடன் செவிமடுத்துக்
கேட்டாலே போதும்! பின்வீட்டிற்சென்று
கிடுகிடுக்கப் படிப்பதெல்லாந் தேவையில்லை.

—அண்ணாவின் இளம் பருவத்தைப் பற்றிக்கூறும் இந்த வரிகளிலேயே அண்ணாவின் நான்கு குண இயல்புகளை நல்ல முறையில் நம் இதயத்தில் பதியம் போட்டுவிட்டார் கவிஞர்!

"இறுதி நிலை வகுப்பு தன்னைக் கட்பதற்கே
இருமுறைகள் தவறிவிட்ட அண்ணா........"(பக்.20)

என்பதை காவிய ஆசிரியர் சுட்டிக்காட்டுவதன் நோக்கமே பள்ளியிறுதி வகுப்பில் மூன்றாவது முறைதான் தேர்வுபெற முடிந்த அண்ணா-பின்னர் எம்:ஏ. பட்டதாரியானார் என்பதை எடுத்துக்காட்டி இளைஞர்களை உற்சாகப்படுத்தத்தான் என்று நம்புகிறோம்.

"பள்ளியிலே தனித்திறமை காட்டாவண்ணம்
பயின்றுவிட்டார் காஞ்சியிலே எனினும் அண்ணா
கள்ளமிலாக் கல்லூரி நுழைவின் பின்னர்க்
கங்குகரை காணாது கற்கலானார்!

வெள்ளமிக அணையிடைத்தே விரைந்தாற்போல
வேகமுடன் அறிவாற்றல் உணர்த்திவந்தார்!
எள்ளளவும் நேரத்தை வீணாக்காமல்
ஏடுகளை இதயத்தால் விழுங்கலுற்றார்!"

—அண்ணாவின் திறமையை மாத்திரம் இந்த வரிகளில் கவிஞர் ஆனந்தம் கூறவில்லை, ஒவ்வொரு தமிழ் மாணவனும் எப்படி இருக்கவேண்டும் என்ற தன்னுடைய கனவையும் இணைத்துக் கவி பாடியுள்ளதாகவே நாம் கருதுகிறோம். தஞ்சாவூரின் 'மாப்பிள்ளை'யாக அண்ணா ஆனதையும், வாசுதேவரின் தலைமையில் தொழிற்சங்க அரங்கில் ஈடுபட்டதையும், "காசின்றி அரசியலில் காலை வைத்"ததையும், கூறிவிட்டு ஆட்கொண்டார், அய்யா என்பதையும் தெளிவாக்கிவிட்டு இந்தி எதிர்ப்புப் போரைப் பற்றி எழுதுகிறபோது "உடைதரியாத் தளபதியாய் ஆனார் அண்ணா" என்று சிறப்போடு வர்ணிக்கிறார் !

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு உரையாற்றச் செல்கிறார் அண்ணா, எழுதுகிறார் கவிஞர் ஆனந்தம்,

"கண்ணான அண்ணாவையே மொய்த்துக்கொண்டார்!
காலத்தை சரியாகக் கணித்தார் அண்ணா!"

—இரண்டே வரிகள் தான் இவை; ஆனால் இவற்றைக் கொண்டு இருநூறு பக்க வரலாறல்லவா எழுதலாம்!

அண்ணாவால் இயக்கத்துக்கு ஈர்க்கப்பட்ட மாணவர் தலைவர்களைப்பற்றி ஆனந்தம் அவர்களின் வர்ணனையைப் படிக்கும்போது ஆனந்தமாக இருக்கிறது.

"நெடுஞ்செழியன்—பெயர்க்கேற்ற உயர்ந்த தோற்றம்
நீண்டதொரு கருந்தாடி; நெடிய சட்டை
கடுமையுடன் அன்பழகன் பேச்சிருக்கும்
காற்றடித்தால் பறக்கின்ற மெலிந்தமேனி!

கொடுமைதான்- மதியழகன் உருவம் குள்ளம்!
கோடையிடி போற்குமுறும் குரலோ ஓங்கும்!
தொடு முன்னர் ஓட்டுகின்ற கரிய தேகம்
துணிச்சலுள்ள இளம்வழுதி!......''

சுருங்கக்கூறி விளங்கவைக்கும் இந்த வீரர் பட்டியலே அறிமுகப்படுத்துவதன் மூலம் 1945-49ம் ஆண்டுகளுக்கே நம்மை அழைத்துச் செல்கிறார் ஆனந்தம்.

பெரியாருடைய பாராட்டுரையை இந்நூலுக்குப் பெற்ற தனுல்-பெரியாருடைய திருமணத்தைப் பற்றி சொல்ல வேண்டியதை சொல்லாமல் விட்டுவிடுவாரோ ஆசிரியர் என்று எந்த நண்பர்கள் ஐயுற்றாலும் அதனை நீக்கும் வண்ணம் அண்ணா வாழ்க்கையில் பெரும் திருப்பு முனையாய் அமைந்த அய்யாவின் இரண்டாம் திருமணத்தைப் பற்றி வேறுபாடு, கண்ணீர்த்துளிகள் முன்னேற்றம் என்ற மூன்று தலைப்புகளிலும் சிறப்பாக எழுதியுள்ளார் காவிய ஆசிரியர். மூவலூர் மூதாட்டியின் வாதம், கே.கே-என். தலைமையில் கூடிய அணி பற்றியெல்லாம் சிறப்பாகக் கவிதை புனையப் பட்டுள்ளது,

அய்யாவை விட்டு அண்ணாபிரிந்த பின்னரும், திருச்சி சிறையில் சில நாட்கள் இருவரும் ஒன்ருய் இருந்ததும் விடு தலையானபோது ''சிறையினின்று வெளிவந்த அண்ணா செல் லத்தக்கவாறு வண்டிதர மறந்தார் தோழர்!, தந்தைக் கு வந்ததொரு ஊர்தி ஏறி......'' சென்ற கதை நன்று! நன்று! என நயமிக்க முறையில் கூறப்பட்டுள்ளது (பக்.85).

அண்ணா நோய் வாய்ப்பட்டதை எழுதும்போது மிக உருக்கமாக எழுதப்பட்டுள்ளது,

''ஊழியராய் அரசுதனில் பணிபுரிந்தால்
ஒய்வுபெறும் வயதினிலே ஆட்சி ஏறிக்
கோழியும் தன் குஞ்சுகளைப் பேணுதல்போல
குறைவின்றி தம்பியரைப் பாதுகாத்து

வாழியென வாழ்த்துவோரும், ஒழிக என்று
வைவோரும் உடன்பிறப்பே எனமதித்துப்
பாழுடலின் நோய் பற்றிக் கவலையின்றிப்
பாரத்தை சுமந்ததனால் நைந்தார் அண்ணன்''

எழில் மிக்க, சுவை ததும்பிய, பொருள் பொதிந்த வரிகள் இவை! 55 வயதுக்குப்பின் ஆட்சிக்கட்டிலைப் பிடிப்பதைவிட இன்னும் கொஞ்சம் இளமையிலேயே அந்த வாய்ப்புகள் எல்லாம் வரவேண்டும் வல்லவர்க்கு என்ற விருப்பம்-போற்றுதலையும், தூற்றுதலையும் ஒருசேர மதித்த அண்ணாவின் பண்பினை உணர்ந்த தன்மை இவை நன்கு புலப்படுத்தப் பட்டுள்ளது,

காவியநாயகனை அகலாது-அணுகாது-அவருடைய அரசியலில் பட்டும் படாமல் வாழ்ந்த பாவலன் ஒருவரால் அமைக்கப்படும் காவியம் எத்தனைச் சிறப்புடையதாக இருக்குமோ அத்தனைச்சிறப்புகள் கொண்ட காவியம் தான் 'அண்ணா காவியம் , இந்தக் காவியத்தைப் படைத்த கவிஞர் ஆனந்தத்திடமிருந்து இன்னும் பல எழிலார்த்த-ஏற்ற மிகுந்த இலக்கியங்களை எதிர்பார்ப்போமாக!

---

சிறுகதைகளிலே பலவகை உண்டு படித்தால் பரவசமூட்டுபவை, நெடுங்காலம் ஆகியும் நினைவை விட்டு மறையாதவை என இருபகுதிகளாக அவற்றைப் பிரிக்கலாம், முன்னவை நெடி எனில், பின்னவை மணம் தருபவை எனலாம். நெடி சடுதியில் கிளம்பும்; துளைக்கும்; பரவும்—அதேபோல மிக விரைவில் மடிந்து போகும். மணம் மெள்ளத்தான் கிளம்பும்; வேகமின்றியே பரவும்; ஆனால் நீண்ட நேரம் நிலைத்திருக்கும்.

திரு. தி, ஜானகிராமன் சிறு கதைகளில் மேலே குறிப்பிட்ட மணம் நிறைந்திருக்கும் என்பதை சிறுகதைத் திறனாய்வாளர்கள் அத்தனைபேரும் ஒப்புக் கொள்ளுவார்கள்.

# முன்னணி வீரர்கள்



## திரு. வி. ஆர். கோபாலகிருஷ்ணன்

தமிழ்நாடு என். ஜி. ஓ. யூனியன் மாநிலத் துணைத்தலைவராகக் கடந்த நான்கரை ஆண்டுகளாக என்னுடன் இணைந்து பணியாற்றும் நண்பர் திரு. வி. ஆர். கோபாலகிருஷ்ணனை என். ஜி. ஓ. இயக்கம் என்றும் மறவாது. அழுத்தமான ஆங்கில புலமை, ஆணித்தரமான வாதத் திறமை – இவற்றால் எல்லாம் நூற்றுக்கணக்கான என். ஜி. ஓ. நண்பர்களின் இதயத்தில் தனியிடம் பெற்றிருக்கிறார்.

என். ஜி. ஓ. இயக்கத்தில் மாநிலக் துணைத்தலைவராக வந்த பிறகு தான் வெளியூர்களுக்கு அறிமுகமானவர் அல்ல திரு. வி. ஆர். ஜி. அதற்கு முன்பே முசிறி, மன்னார்குடி, குளித்தலை, கரூர் முதலிய இடங்கட்கு சுற்றுப்பயணம் செய்து இயக்கப் பணி செய்தவர் இவர்.

21—9—1934ல் பிறந்த இவர் பள்ளிக்கூடத்தில் தெலுங்கினையும், ஆங்கிலத்தையும் பயின்றாலும் தமிழ் மொழியில் பற்றும், பாசமும், இலக்கியங்களில் ஈடுபாடும் மிக மிகக் கொண்டவர். 1951 மார்ச்சு மாதத்தில் பள்ளிப்படிப்பை முடித்த பின் 13—3—53ல் அரசாங்க ஊழியரானர். மீன் அளத்துறையில் தேர்வு நிலைக்கண் காணிப்பாளராகப் பணியாற்றும் இவர் ஏழாண்டுகாலம் சென்னை மாவட்ட என். ஜி. ஓ. யூனியன் செயற்குழு உறுப்பினராக இருந்து, பின்னர் 1964—67 ஆம் அண்டுகளில் .சென்னை மாவட்ட என். ஜி. ஓ. யூனியன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படடார், மிக நெருக் கடியான கால கட்டத்தில் அப்போது வி. ஆர். ஜி. ஆற்றிய பணி மகத்தானது, 1965-ல் நடைபெற்ற மாநில என். ஜி. ஓ. யூனியன் நிர்வாகிகள் தேர்தலில் தலைவராக திரு. எஸ். எஸ். ஆழ்வாரப்பனும், துணைத்தலைவர்களாக நானும், தேவநாதனும் தேர்ந்தெடுக்கப் பெற்றாலும் - எங்களைப் பொறுப் பேற்கவிடாமல் அலைக் கழித்தனர் சிலர். ஓராண்டு காலம் நடைபெற்ற அந்தப் போராட்டத்தில் எங்களுக்கு வெற்றி தேடித்தர அரும்பாடுபட்ட தூய மணிகளுள் வி. ஆர். ஜி. குறிப்பிடத்தக்கவர். மத்திய சங்க நிர்வாகக் குழுவின் கன் வீனராக இவர் பட்ட சிரமங்கள் கொஞ்ச நஞ்சமல்ல !

1968 முதல் 1970 வரை தமிழ்நாடு என். ஜி. ஓ. யூனியன் மத்திய செயற்குழு உறுப்பினராக சிறந்த சேவை யாற்றினர் கோபாலகிருஷ்ணன். இரண்டாவது ஊதியக்குழுவின் முன்பு தமிழ்நாடு என். ஜி. ஓ. யூனியன் அளித்த விண்ணப்பத்தை உருவாக்க இவர் எடுத்துக் கொண்ட முயற்சி பெரிது.

1969 தேர்தலில் வெற்றிபெற முடியாத சூழ்நிலை உருவாக்கப்பட்டாலும், 1971 தேர்தலில் பெருவெற்றி பெற்ற இவர் இந்த 4 ஆண்டுகளில் ஆற்றிய பணி அளவிடற்கரியது சட்டதிட்ட விதிகளை சீரமைக்க, தர்மபுரி மாவட்ட என். ஜி. ஓ. யூனியன் தேர்தலை நடத்த, சென்னை மாவட்ட எட்டாவது மாநாட்டினை நடத்த—

இது போன்ற செயல்கட்குத் துணைபுரிந்து, முன்னின்று தீவிம் காட்டியவர் வி. ஆர். ஜி.

இந்தியக் குடியாகத் தலைவரை சந்திக்க டில்லிப்பயணம் நடத்திய இவர் பின்னர் ஜெய்ப்பூரில் நடைபெற்ற அனைத்திந்திய மாநில அரசு ஊழியர் மாநாட்டில் கலந்து கொண்டார்.

கோதண்டராமன் மறைவிற்குப்பின், தியாகராசன் அரசிதழ் பதிவு பெற்றவுடன் தேனாம்பேட்டையில் என். ஜி. ஓ களுக்கு ஒளி விளக்காகத் திகழ்பவர் திரு. வி. ஆர். ஜி. தான். அரசு ஊழியர் கூட்டு ஆலோசனைக் குழு உறுப்பினராகவும் படசெயலாற்றுகிறார்.

1972-ல் சேலத்தில் நடைபெற்ற நமது மாநில மாநாட்டில் முன்னாள் தலைவர் ஜகதீசன் படத்தையும், 1974-ல் தஞ்சையில் நடைபெற்ற மாநில மாநாட்டில், முன்னாள் தலைவர் சேலம் பி. குப்புசாமியின் படத்தையும் திறந்துவைக்கும் பெருமையை வி. ஆர். ஜி. பெற்றார்

பல தனி நபர்கள் பழிவாங்கப்பட்ட போது, பல பிரிவினர் உயர்வு நாடியபோது அவர்களுக் கெல்லாம் துணை செய்த வி. ஆர். ஜி.யின் பெருமை வளர்க! வாழ்க!



திரு. சுப. சீதாராமன்

தமிழ்நாடு என். ஜி. ஓ. யூனியன் அமைப்புச்செயலர் சுப. சீதாராமன் நெல்லை மாவட்டம் தந்த செயல்வீரர், பாளையங்கோட்டை மண் உணர்ச்சிக்கும் உருக்கத்துக்கும் பெயர் பெற்றது அங்கு பிறந்த சீதாராமன் இளம் வயதிலேயே, துடிதுடிப் போடு பொது வாழ்க்கையில் பங்கு கொண்டார்.

தூத் துக்குடி என். ஜி. ஓ. சங்க துணைச்செயலராக சில ஆண்டுகள் நெல்லை மாவட்ட என். ஜி. ஓ. யூனியன் செயலாள ராகவும், மத்திய செயற்குழு உறுப்பினராகவும் ஆருண்டுகள் இவர் ஆற்றிய பணி மகத்தானது, மாசு மருவில்லாதது.

தவறு செய்கிற அதிகாரிகளை தான் தோன்றித்தனமாக நடந்து கொள்கிற பெரியவர்களை எதிர்த்து பல அறப் போரட் டங்கள் நடத்தி வெற்றி பெற்றவர் சீதாராமன், கருவூலத் துறையில் எழுச்சியும், உணர்ச்சியும் வருவதற்குப் பத்தாண்டு கட்கு முன்பே பாடுபட்டவர் சீதாராமன். ஆனாலும் இவர் கூட்டுறவுத் துறையில் முதுநிலை ஆய்வாளர்.

1964-ல் ஆபட்ஸ்பரியில் நடைபெற்ற என். ஜி. ஓ. மாநில மாநாட்டில் மத்திய செயற்குழுவில் நியாயம் நிலைபெற, உணர் வுகள் பாதுகாக்கப்பட உரிமைக்குரல் கொடுத்து அனைவரின் கவனத்தையும் கவர்ந்த சீதாராமன் இன்று உருவு கண்டெள் ளாமை வேண்டும் என்ற இலக்கணத்திற் கேற்ற இலக்கிய மாகத் திகழ்கிறார். நகைச்சுவை உணர்வில் எதிரிகளையும் கவரக் கூடிய ஆற்றல் உண்டு. தலைமைச் செயலாளருக்கு இவர் ஓர் செல்லப்பிள்ளை ஆனாலும் அவரோடு அடிக்கடி மோதுவதில் தனி இன்பம் காண்பவர்.

1971-ல் மாநில ஒன்றிய அமைப்புச் செயலாளராக வந்து உழைக்கிறார்; பெயர் பெற்றுள்ளார் என்றால் அது சாதாரண காரியமல்ல. குமரி முதல் கும்மிடிப்பூண்டி வரை ஓடி ஓடி. ஒவ்வொருவரையும் கண்டு, அவர்தம் மனமறிந்து செயல்பட்ட தன்மை தான் முக்கிய காரணம். ஓராண்டு காலத்துக்கு மேல் ஊதிய மில்லா விடுப்பெடுத்து ஒன்றியத்துக்கு தனிப்

பெருமையை நிலைநாட்ட இவர் உழைத்ததை யார் மறக்க முடியும்? மறக்க முடியும் ?


பட்டதாரி ஆசிரியர் போராட்டம், தொடக்கப் பள்ளி ஆசிரியர் கிளர்ச்சி, தொழிற்பயிற்சி நிலைய ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் இவற்றில் எல்லாம் தலையிட்டு, பலர் வாழ்வு பறி போகாமல் பாதுகாத்த பெருமை சீதாராமனுக்குண்டு சிறு மதியினர் சிலர் இன்று அதை மறந்து பழிமொழி கூறலாம். ஆனால் நள்ளிரவு ஏழு மணிக்கு சிறைச்சாலையின் கதவுகள் திறக்கப் பட்டதெல்லாம், இரவு 11 மணிக்கு முதலமைச்சரிடம் கலை அரங்க வாயிற்படியிலேயே பல்லாயிரம் பொதுமக்கள் முன்னிலையில் அறிக்கை கோரிப் பெற்றதெல்லாம் சாதாரண நிகழ்ச்சிகள் அல்ல.

அரசு ஊழியர் கூட்டு ஆலோசனைக் குழுவில் ஐந்தாண்டு காலமாக கூட்டுறவுத்துறை ஊழியர்களின் பிரதி நிதியாக இவர் செயல்படுகிறார். 1966-ல் அப்போதிருந்த முதல்வர் திரு. பக்தவத்சலத்தை அழைத்து மாவட்ட என். ஜி. ஓ. மாநாட்டை சிறப்புற நடத்தினார்.

ரகசியக் குறிப்பேட்டு முறை பாராட்டு விழாவில் இவர் கூறிய வள்ளி தெய்வயானை உதாரணம் முதலமைச்சர் கலைஞரின் வர்தத்திறமைக்கு வலுவூட்ட வழிகண்டது. தஞ்சை மாநாட்டில் இவர் கூறிய ஜிகினாச் சட்டை உவமை எண்ணற்ற என். ஜி. ஓ.க் களின் விழிகளிலே நீரைச் சுரக்க வைத்தது. சேலம் மாநாட்டில் கவியரங்கத் தலைப்பாக கண்ணீரைந் துடிப்பார் கலைஞர் என்று தேர்தெடுத்தது இவர்தான். அதே தலைப்பில் தொடர் கட்டுரை ஒன்றையும் இதய நிறைவோடு எழுதியிருக்கிறார்.

1971 ஜூன் என். ஜி. ஓ. குரல், இதழில் "வேலியே பயிரை மேய்ந்தால்' என்ற தலைப்பிலும், அதே ஆண்டு அக்டோபரில் மனச்சாட்சியின் குரல், என்ற தலைப்பிலும் இவர் எழுதிய

கட்டுரைகள் கருத்தாழம் மிக்கவை என். ஜி. ஓ. இதழின் தோற்றத்துக்கும், வளர்ச்சிக்கும், அதன் ஆருண்டு கால வாழ்வுககும் தோன்ருத்துணை இவரே.



## திரு. வீரா. பழனியாண்டி

தமிழ்நாடு என். ஜி. ஓ. யூனியன் துணைத்தலைவராகப் பணியாற்றி வரும் நண்பர் வீரா. பழனியாண்டி நில அளவுத் துறையில் நாமக்கல்லில் சர்வேயராகவும் பின்னர் வரை வாள ராக்வும் பணியாற்றக் தொடங்கி அதையும் விடுத்து மருத்து வத்துறையில் சேர்ந்து இன்று சேலம் மாவட்ட மருத்துவ மனையில் உதவியாளராகப் பணிபுரிகிருர்.

1966-ல் சேலம் மாவட்ட என். ஜி. ஓ. யூனியன் செயலாள ராகத் தேர்தெடுக்கப்பட்ட இவர் எட்டாண்டு காலம் தொடர்ந்து மாவட்ட செயலாளராக இருந்து ஆற்றிய பணிகள் பல. மத்திய செயற்குழு உறுப்பினராக அந்த எட்டாண்டு காலமும் திடமாகவும், தீவிரமாகவும் வாதாடும் வன்மை

பெற்ற இவர் நளினமாகப் பேசுவதில் நம்பிக்கையில்லாதவர் தன்னுடைய திட்டங்களிலும், கொள்கைகளிலும் மாறு படுபவர்களை நேருக்கு நேர் சந்திப்பதில் சலிப்புக் காட்டாதவர் ஏற்காட்டு மலைஉச்சியில் என். ஜி. ஓ.க் களுக் கென ஓர் மகிழகம் இருக்கிற தென்றால் அதன் தோற்றததிற்காக அரும் பாடுபட்டவர்களுள், நண்பர் பழனியாண்டியும் ஒருவர் மனோகரின் மாலிக்காபூர் நாடகம் நடத்தி 70 ஆயிரம் ரூபாய் நிதி வசூலாகியிருக்கிற தென்றால் அந்த வெற்றியின் பின்னணியில் வீரா. பழனியாண்டியின் நிழல் நீக் கமற நிறைந் திருப்பதை யாரும் மறுக்க முடியாது.

1972-ல் சேலத்தில் நடைபெற்ற மாபெரும் மாநில மாநாடு வெற்றி பெற இரவு பகலாய்ப் பாடுபட்டவர் இவர். ஐந்தாண்டு காலமாக அரசு ஊழியர் கூட்டு ஆலோசனைக் கவுன்சிலில் மருத்துவத் துறையின் பிரதிநிதியாக இவர் வைத்த கோரிக் கைகள் பெற்றுத் தந்த வெற்றிகள் பலப்பல.

தஞ்சையில் நடைபெற்ற மாநில மாநாட்டில் யூனியன் கொடியை ஏற்றுவித்த இவர் திருச்சியல் 15—6—75-ல் நடை பெற்ற கருத்தரங்கில் ஆற்றிய உரை குறிப்பிட்டுப் பாராட்டத் தகுந்ததாகும்.

மேலூர், வேடசந்தூர் முதலிய இடங்களில் கிளைகளைப் புதுப்பிக்க இவர் எடுத்துக் கொண்ட சிரமங்கள் யூனியன் வரலாற்றில் மறக்க முடியாதவை. உடல் நலக்குறைவோடு எத்தனை இரவுகள் கண் விழித்து, பஸ்ஸிலும், ரயிலும் இடம் கிடைக்காமல் அல்லற் பட்டு இந்த சமுகாயத்தை நன்னிலைப் படுத்த இவரும் இவரைப் போன்ற தொண்டர்களும் பாடு படுகின்றனர் என்பதை எண்ணிப்பார்க்கும் போது பிரமிப்பு ஏற்படுகிறது.

கோவைக்கு மாற்றப்பட்டாலும், மேலதிகாரிகளின் கோபப் பார்வைக்கு ஆளானாலும், உடனிருப்போர் சிலரின் பொரு

மைக்கு ஆட்பட்டாலும் அவற்றையெல்லாம் தாங்கிக் கொண்டு தான் சரியென்று கருதிய பாதையில் தடம்புரளாது சென்றவர் சென்று கொண்டிருப்பவர் பழனியாண்டி.

மருத்துவத்துறை அமைச்சகப் பணியானர் சங்கத்தின் ஒவ்வாரு கட்ட வளர்ச்சியிலும் இவருக்கும் இடம் உண்டு.

இலங்கை நாட்டுக்குப் பல முறை சென்றுள்ள துணைத் தலைவர் இந்திய நாட்டின் தலைநகராம் டில்லியிலும் நமது யூனியன் பிரதி நிதியாக ஒரு கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளார்



திரு. ஜி. எபநேசர்

7—12—1924-ல் மதுரை நகரில் பிறந்த திரு. ஜி. எபநேசருக்கு சொந்தஊர், இராமநாதபுரம் மாவட்டம் ஸ்ரீ வில்லி புத்தூர் ஆகும்.

1942-ல் வெள்ளையனே வெளியேற்றும் இயக்கத்தில் கலந்து கொண்டு தீவிர பங்கேற்று, மாணவர் போராட்டத்திற்குத் தலைமை தாங்கி நடத்தியதற்காக ஆகஸ்டு மாதம் கைது செய்யப்பட்டு, சிறையிலடைக்கப் பட்டார். மாட்சிமை தங்கிய மன்னர் பிரானின் அரசாங்கத்தைக் கவிழ்க்க முயற்சி செய்த தாகக் குற்றம் சாட்டப்பட்டதால், வில்லிபுத்தூர் சப்மேஜிஸட் ரேட்டுக்கு அவரை விசாரிக்க அதிகாரம் இல்லாததால், சிவகாசி சப்கலெக்டரிடம் விசாரணைக்கு அனுப்பப்பட்டார், அங்கு மாணவராக இருந்த காரணத்தால் சப் ஜெயிலில் இருந்த நாட்களையே சிறைத்தண்டனையாகக் கருதி விடுவிக்கப்பட்டார் ஆயினும் பள்ளியிலிருந்து நீக்கப்பட்டார். எனினும் பின்னர் தனி உத்தரவின் மீது எடுத்துக் கொள்ளப்பட்டார்.

1944-47-ல் இராணுவத்தில்: பர்மா, மலேயா, இந்தோ னேஷியா, முதலிய இடங்களில் பணியாற்றிக் திரும்பவந்து, பத்திரப்பதிவுக் துறையில் எழுத்தராகச் சேர்ந்தபோது, என். ஜி. ஒ-க் களின் வேலை நிறுத்தம் வந்தது. 1947 டிசம்பர் மாதம் நடைபெற்ற இந்த மாபெரும் போராட்டத்தில் முன்னணியில் இருந்ததற்காக வேலை நீக்கம் செய்யப்பட்டார்.

எனினும் 1948-ல் நில அளவுத்துறைக்கு சர்விஸ் கமிஷனால் தேர்ந்தெடுக்கப்பட்டு மதுரையில் பணியாற்றிய 5 ஆண்டு காலமும் அப்போது இருந்த சென்னை மாநில அமைச்சுப் பணியாளர் சங்கத்தின், அலுவலகச் செயலாள ராகவும், மத்திய செயற்குழு உறுப்பினராகவும் இருந் திருக்கிறார்.

1953 முதல் புதுக்கோட்டையில் பணி புரிந்த போது என். ஜி. ஒ. சங்கத்தின் தலைவராகவும், செயலாளராக்வும் 1956 முதல் இருந்திருக்கிறார் 1960-ல் மிகவும் பிரபலமாக இருந்த நாட்டிய ராணி பத்மினியின் நாடகத்தைப் போட்டு ஏற்கனவே இருந்த பணத்தையும் சேர்த்து ஒரு கட்டிடத்தை எழுப்பியருக்கிறார் தமிழ்நாடு என். ஜி. ஒ. யூனியன் மத்திய

செயற்குழு உறுப்பினராகவும் இருந்தார்.

பின்னர் இராமநாதபுரத்தில் 1963 முதல் 1967 வரை என். ஜி. ஓ. சங்கத்தின் தலைவராகப் பணியாற்றினர். அதே சமயத்தில் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவராக இருந்து, வரலாறு காணாத அளவில் சீதக்காதிக்கு கீழ்க்கரையில் விழா எடுத்தார். உணவு நெருக்கடியான 1966-ல் இருந்த உணவு விநியோகஅதிகாரி செய்த ஊழல்களை அம்பலம்படுத்தியதன் விளைவாக அவர்மீது பாதிக்கப்பட்டவர் மான நாட்ட வழக்குத் தொடர்ந்தார். அதே ஆண்டில் ஆகஸ்டில் அரசு ஊழியர் களுக்கு ஒரு கூட்டுறவுப் பண்டகசாலையை ஏற்படுத்தி அதன் தலைவராக இருந்தார்.

தமிழிலக்கியத்தல் பற்றுக் கொண்டவர், முகவை மாவட்டத்திலும் சென்னையிலும் பல கவியரங்கங்களில் கலந்து கொண்டிருக்கிறுர்.

தமிழக முதலமைச்சர்களில் அவருக்குப் பிடித்தவர்கள் காமராசரும் கருணாநிதியும்.

தமிழ்நாடு நில அளவைத்துறை அமைச்சுப் பணியாளர் சங்கத்தின் தலைவர். தமிழ்நாடு என். ஜி. ஓ. சங்கத்தின் மத்திய செயற்குழு உறுப்பினராக 1971 முதல் இருந்து, 1974 ஜூலை முதல் பொதுச் செயலாளராக இருந்துவருகிறுர்.

என். ஜி. ஓ. குரல் இதழில்" சிவப்பு நாடா' என்ற தலைப்பில் இவர் எழுதிய தொடர் கட்டுரை சிறப்புடைய ஒன்று அதே போல் பொது ஊழியன், இதழில். கோதண்டராமன் மறை வின் போதும், எஸ். ஆர். துரைராசன் மறைவின்போதும் எபநேசர் எழுதிய அனுதாபக் கவிதைகள் நெகிழ்ச்சி மிக்க கண்ணீர்த்துளிகள் !

ரகசியக் குறிப்பேட்டை ஒழித்தமைக்காக முதலமைச்சர் கலைஞரைப் பாராட்டி ராஜாஜி மண்டபத்தில் நடை பெற்ற விழாவில் வாழ்த்துப்பாடலை எழுதிப்பாடிய எபநேசர்" சரித்

திரத்தை எழுதுவோர் குறித்துக் கொள்ளட்டும் என்று பத்திரிக்கை நிருபர்கள் பக்கம் பார்த்துப் படித்தது சிறப்பாக இருந்தது.




திரு. எம். புண்ணியகோடி

தமிழ்நாடு என். ஜி. ஒ. யூனியன் பொருளாளர் திரு. எம். புண்ணியகோர்டி வந்தவாசி தாலுக்கா மக மாயித் திருமணி யைச் சேர்ந்தவர். 13—10—1929-ல் பிறந்த இவர் 1—11—1952 -ல் அரசுப் பணியில் சேர்ந்து தொழில் வணிகத்துறையில் கண்காணிப் பாளராகப் பணியாற்றி வருகிறுர். இனிமைக்கு, இலக்கணம் இரண்டொரு சொற்கள் என்பதுபோல சுருங்கச் சொல்லி விளக்கவைப்பவர். பேச்சில் திருக்குறள் எடுத்துக் காட்டுகள் நிச்சயம் இருக்கும்.

பட்டணப்பாக்கம் அரசு ஊழியர் கூட்டுறவுப் பண்டக சாலையில் செயலாளர் முதலிய பல பொறுப்புகளை ஏற்றுத்திறம்

பட செயல் பட்டிருக்கிருர்.

பொருளாளர் பொறுப்புக்கு ஏற்ற கண்டிப்புக்காரர். சென்னை மாவட்ட என். ஜி. ஓ. யூனியன் செயற்குழுவில் இரண்டாண்டுகள் செயற்குழு உறுப்பினராகப் பணியாற்றிய இவரின் துணைவியார் பள்ளி ஆசிரியை.



திரு. பி. கண்ணப்பன்

சென்னை மாவட்ட என். ஜி. ஓ. யூனியன் பொருளாளராக 1971 முதல் 73 வரை சிறப்புற செயலாற்றி விட்டு அதன் பின் தொடர்ந்து சென்னை மாவட்ட என். ஜி. ஓ. யூனியன் செயலாள ராகப் பணிபுரியும் பி. கண்ணப்பன் பொதுப் பணித்துறையில் நீர்ப்பாசனப் பிரிவில் பதிவறை எழுத்தராகப் பணிபுரிகிருர். கண்ணப்பனுக்கு மூர்த்தி சிறிதெனனினும் கீர்த்தி மிகப் பெரிது ஒன்றிப்பு உணர்வு மங்கியுள்ளவர்களிடமும், மழுங்கிக்கிடப்

பவர்களிடமும் வாடும் வல்லமை இவருக்குண்டு.

தமிழ்நாடு பதிவறை எழுத்தர் சங்கத்தலைவராக 10-6-75 கோவையில் இவர் தேர்தெடுக்கப்பட்டார். பதிவறை எழுத்தர்களுக்கு தேர்வுநிலை கிடைக்க மாநில என். ஜி. ஓ. யூனியன் நிர்வாகிகளை நாள்தோறும் தூண்டிய பொறுப்பு கண்ணப்பனுடையது தான். அரசு தேர்வு நிலைக்கு ஆணைபோட்டும். அதிகாரிகள் அதனை அமுல் படுத்தாமல் தாமதப் படுத்துவதைக் காணும்போது கண்ணப்பனுக்கு வருகிற அந்த நியாயமான கோபத்தை யாரும் குறை சொல்ல முடியாது.

நல்ல பேச்சாளர் இவர். 1975 ஏப்ரலில் சேலத்தில் நடைபெற்ற பயிற்சி முகாமில் நான் அரைமணி நேரத்தில் ஒரு தலைப்பு கொடுத்தேன்; அற்புத மாக கண்ணப்பன் ‟என். ஜி. ஓ. இயக்கத்தில் பெண்கள்" என்ற தலைப்பில் சொற்பொழி வாற்றினர்.

12—6—1942–ல் சென்னையில் பிறந்த இவர் அரசுப் பணியில் சேர்ந்தது 6—12—1962 சேப்பாக்கம் அரசு ஊழியர் கூட்டுறவுப் பண்டசாலையில் மூன்ருண்டு கட்கு மேல் இயக்குநராகவும், பொருளாளராகவும் இருந்துள்ளார். பொதுப் பணித்துறை அமைச்சுப் பணியாளர் சங்க மத்திய செயற்குழு உறுப்பினர் இவர்.



## திரு. ஏ. எல். நமச்சிவாயம்

1972 முதல் முதல் 1975 வரை தமிழ்நாடு என். ஜி. ஓ. யூனியன் மத்திய செயற்குழு உறுப்பினராக சிறப்புறப் பணி யாற்றி வரும் திரு. ஏ. எல். நமச்சிவாயிம் பொது சுகாதாரத் துறையில் கண்காணிப் பானராகப் பனியாற்றி வருகிறார் 1958 முதல் சென்னை மாவட்ட என். ஜி. ஓ. யூனியன் செயற்குழு உ ப்பினராக இருந்துவரும் நமச்சிவாயம் எழுத்தாளர்; பேச்கப் போட்டியிலும் பரிசு பெற்றிருக்கிறார்.

25—7—1930-ல் பிறந்த இவர் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த தில்லை விளாகத்தைச் சேர்ந்தவர். பச்சையப்பன் கல்லூரியில் சிறிது காலம் பயின்று 1—4—55-ல் அரசுப் பணியில் சேர்ந்தார். டில்லிப் பல்கலைக் கழகத்தில் கடிதப் போக்குவரத்திலேயே கல்வியைத் தொடர்ந்து பி. காம் பட்ட தாரியானார். கடிதப் போக்குவரத்துக் கல்விபயிலும் மாணவர் சங்கத் துணைத்தலைவராக, இலக்கிய மன்றமான அண்ணா அகடமியின் தலைவராக, பசும் பொன்னப்பன் ஆர்ட்ஸ் இணைச் செயலராக, அரசு ஊழியர்களுக்குக் கடன் வழங்கும் கூட்டுறவு சங்கத் துணைத்தலைவராக, பொது சுகாதாரத்

துறை அமைச்சகப் பணியாளர் சங்க மாநிலத் தலைவராக இப்படிப் பல்வேறு பொறுப்புகளை ஏற்றுப் பொது வாழ்க்கையில் ஈடு பட்டுள்ளார்.

இரண்டு பெண்களும், ஒரு பையனும் இவருக்குண்டு.




## திரு. செல்வராஜ்

தமிழ்நாடு குடும்ப நலத்திட்டத் தொகுப்பாளர்கள் சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலாளராக சிறப்போடு சேவையாற்றும் செல்வராஜ் 10—6—48-ல் பிறந்து, 3—11—71-ல் தான் அரசுப் பணியில் சேர்ந்தாலும் உற்சாக மாகப் புதிய தோ சங்கத்தை அமைத்து அதனை என். ஜி. ஓ. யூனியனுடன் இணைத்து நல முறவே அவ்வியக்கத்தை நடத்திச் செல்கிறார்.

பி. எஸ். சி. பட்டதாரியான இவர் 250 தற்காலிக ஊழியர்களையும் நிரந்தரம் செய்ய எடுத்துக் கொண்ட முயற்சிகள் தஞ்சையில் நடந்த என். ஜி. ஓ. மாநாட்டில் முதலமைச்சர் அறிவிப்பினால் வெற்றி பெற்றவுடன் செல்வராஜ் அடைந்த மகிழ்ச்சி.

தமிழ்நாடு என். ஜி. ஓ. யூனியன் சென்னை மாவட்டக் கிளையின் இணைச் செயலாளர்களில் ஒருவராக இப்போது செயல்படுகிறார். செல்வராஜ், 1975-ம் ஆண்டுக்கான என்.ஜி.ஓ கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்றவர் இவர்.



## திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி

தமிழ்நாடு வருவாய்த் துறை அலுவலர் யூனியன் மாநிலப் பொதுச் செயலாளராகப் பணியாற்றும் நண்பர் ஜி. கிருஷ்ணமூர்த்தி பொறுமையும், எளிமையும், இனிமையும் கொண்டவர் புதுக்கோட்டையைச் சேர்ந்த இவர் 15—1—1945ல் பிறந்தவர்.

இப்பொழுது துணைவட்டாட்சியராகப் பணியாற்றும் இவர் 15—5—64-ல் பணியில் சேர்ந்தார். 1970—71-ல் சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலர் சங்கத்தின் பொருளாளர் ஆக செயலாற்றிய இவர் 1972—74-ல் வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் சென்னை மாவட்ட துணைத்தலைவராகப் பணியாற்றினார் 1974—75-ல் தமிழ்நாடு துணைத்தாசில்தார்கள் சங்கத்தின் மாநிலத் துணைதலைவராக இருந்த இவர். சென்னை மாவட்ட என். ஜி. ஓ. யூனியன் செயற்குழு உறுப்பினராகவும் மாநில என். ஜி. ஓ. யூனியன் பொதுக்குழு உறுப்பினராகவும் உள்ளார்.

இந்த ஆண்டு கோவையில் நடைபெற்ற ஊழியர் பயிற்சி முகாமில்" போனஸ்" பற்றி சிறப்புரையாற்றிய கிருஷ்ணமூர்த்தி வருவாய்த்துறை ஊழியர் யூனியனை எல்லா மாவட்டங்களிலும் அமைக்க எடுத்துவரும் பல்வேறு முயற்சிகளும் பாராட்டத் தக்கன.

# காரல் மார்க்ஸ

உலகிலேயே பெரிய இரண்டு நாடுகள் என்று கூறப்படுகிற ருஷ்யாவிலும், சீனவிலும அமுலாக்கப்பட்டிருக்கும் அரசியல் தத்துவத்தின் மூல பிதா கார்ல் மார்க்ஸ் ஆவார். உலகின் பாதிக்கு மேற்பட்ட மக்கள் பின்பற்றும் மார்க்ஸீயம் அவருடைய கொள்கையின் வழி உருவானதேயாகும். மார்ஸீயத்தை முதன் முதல் அமுல்படுத்திய நாடு ரஷ்யா என்ருலும் மார்க்ஸ் பிறந்த தாயகம் ரஷ்யா ஆகாது. அவர் ஒரு ஜெர்மன் யூதர்.

1818-ம் ஆண்டில் அவர் பிறந்தார். சட்டம் ,சரித்திரம், தத்துவம் மூன்றையும் அவர் கசடறக் கற்ருர். பத்திரிகை ஒன்றுக்கு ஆசிரியரானர். அதிலே அவர் வெளியிட்ட புரட்சிக் கருத்துக்கள் ஜெர்மன் அதிகாரிகளுக்குக் கிலியூட்டின. அதனல் பாரிஸ் மாநகரத்துக்குச் சென்ருர். கோலாகலத்திற்கும், குதூகலக் கேளிக்கைகளுக்கும் மட்டுமே பெயர்போன அந்த நகரத்தில் அறிவாளிகள் பலர் அவருக்கு அறிமுகமானர்கள். அவர்களில் ஒருவர்தான் ப்ரெட்ரிக் ஏஞ்சல்ஸ் இருவரும் ஒருவர்க்கொருவர் அறிமுகமான நாளிலிருந்து இணைபிரியா நண்பர்களானர்கள். சாதாரணமாக உலகில் நாம் பார்க்கும் பொழுது பெரிய எழுத்தாளன் ஒருவனுக்கு வேருெரு பெரிய எழுத்தாளன் உயிர் நண்பனுனதில்லை. சிறந்த பத்திரிகை ஆசிரியருக்கு வேருெரு சிறந்த பத்திரிகை ஆசிரியர் உயிர்த் தோழராவதில்லை. உயர்ந்த நடிகனுக்கு மற்ருெர் உயர்ந்த நடிகன் சிநேகிதனவதில்லை. அப்படி ஆனலும் அவர்களுடைய தொடர்பும், தோழமையும் நீண்ட நாட்கள் நீடித்தாலும் உளம் கலந்த உறவு அவர்களுக்குள் ஏற்படுவதில்லை. வாழ்க்கையே சர்வ சாதாரணமாக இந்தத் தத்துவத்தில் இயங்கி வருவதுதான் இயற்கையாயிருந்து வருகிறது. ஆனல் மார்க்ஸூம் ஏஞ்சல்சும் இதற்கு விதிவிலக்காய் அமைந்தவர்கள்.

இருவரும் ஒரே பிரச்சனையைப் பற்றிப் பேசினர்; ஒரே பிரச்னையை எண்ணினார்கள். ஒரே பிரச்சனையை எழுதினார்கள், இன்னும் அதிசயம்-ஒன்றாகவே எழுதினார்கள். காந்தீய தத்துவத்தின் தாயும் தந்தையும் அண்ணல் காந்தியடிகள் அவர்களே. புத்த நெறிக்கு தாயும் தந்தையும் மகான் புத்தர் ஒருவரே. ஆனால் மார்க்ஸீயத்தின் தாய் ஏஞ்சல்ஸ், தந்தை தான் மாாக்ஸ் என்று கூடக் கூறலாம் உவமைக்கு. அந்த அளவுக்கு இருவரின் சக்தியும் சம அளவில் இணைந்த பேரிபக்கம்தான் மார்க்ஸீயம்.

பாரிசில் அவர்கள் இருவரும் சோஷலிசம், கம்யூனிசம் ஆகிய கொள்கைகளை தீவிரமாக ஆராய முற்பட்டார்கள். தொழிற்சங்க இயக்கத்தின் மூலபிதாக்களில் ஒருவனாகிய ராப்ர்ட்ஓவன் என்பான் தோற்றுவித்த அபேதவாதக் கொள் கைகளில் மார்க்ஸின் கவனம் அதிகமாகச் சென்றது. அப்பொழுது பிரான்சை ஆண்டுவந்த லூயி பிலிப்பின் அரசாங்கமும் மார்க்ஸின் எண்ணங்களுக்குத் தடை போட முற்பட்டது. எனவே அவர் பாரிஸை விட்டு வெளியேறி லண்டனுக்குச் சென்றார். அங்கே பல ஆண்டுகள் வரை "பிரிட்டிஷ் மியூசிய"த்திலே உள்ள புத்தகங்களைப் படிப்பதி லேயே ஆழ்ந்து கிடந்தார். படிக்கப்படிக்க அவர் சிந்தனை வளர்ந்தது. சிந்தனை பெரிய சித்தாந்தங்களை உருவாக்கியது. ஆயினும் மார்க்ஸ் வெறும் வாய்ப்பந்தல் போடும் வரட்டு மேதை அல்ல.

அதற்கு முன்பு இயங்கிவந்த அபேதவாத இயக்கத்தின் தத்துவங்களிலே இருந்த சிக்கல்களை அவிழ்த்தார் மார்க்ஸ். அவற்றிலே ஒரு தெளிவை ஏற்படுத்தினார். அவற்றைப் பரப்புவதிலும் கவனம் கொண்டார். ஐரோப்பாவின் புரட்சி ஆண்டாகிய 1848-ம் ஆண்டின் சம்பவங்கள் மார்க்சுக்குப் புதிய போக்கைக் காட்ட உதவிற்று. அதே ஆண்டில் அவரும் ஏஞ்சல்சும் சேர்ந்து கூட்டாகப்'பொது உடைமைக் கொள்கை அறிக்கை ஒன்றை வெளியிட்டார்கள். அது சரித்திரத்தில் குறிப்பிடக்கூடிய புகழ்பெற்ற அறிக்கையாகும். அவ்வறிக்

கையில் பிரெஞ்சுப் புரட்சி போன்றவற்றுக்கு ஆதாரமாயிருந்த கருத்துக்களை எடுத்து விளக்கினர். அவை எவ்வாறு அக்கால நிலைக்குப் பொருந்தியதாய் இருக்கிறது என்பதை விவாதித்தனர். ரூஸோ வால்டேர் ஆகியோரின் அடிப்படைக் குரலான சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பனவற்றை அவர்கள் குறை கூறினர். "உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்" என்ற வேண்டுகோளுடன் அந்த அறிக்கை முடிவுற்றது,

இந்த வேண்டுகோள் தொழிலாளரை செயலில் இறங்க அழைக்கும் சங்கநாதமாயிருந்தது. அதைத் தொடர்ந்து காரல் மார்க்ஸ் பத்திரிக்கைகள் மூலமாகவும், துண்டுப்பிரசுரங்கள் மூலமாகவும் இடைவிடாது பிரச்சாரம் செய்துவந்தார். 1864-ல் லண்டனில் மார்க்சுக்கு ஆதரவாகப் பத்துப் பேர் சேர்ந்தார்கள். அந்தப் பத்துப்பேரும்கூட பத்துவிதமாயிருந்தார்கள். அவர்கள் அனைவரும் தங்களை அபேதவாதிகள் என்று அழைத்துக்கொண்டாலும் அவர்கள் வெவ்வேறான குழுக் (கோஷ்டி)களைச் சேர்ந்தவர்களாயிருந்தார்கள். தேசியவாதிகளும் இருந்தார்கள். அவர்கள் அன்னிய ஆட்சிக்குட்பட்ட ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்தவர்கள். அபேதவாதம் என்பதெல்லாம் அவர்களுக்கு வெகு தூரததிலுள்ள ஒரு லட்சியமாகவே இருந்தது. தங்களுடைய நாட்டுக்கு சுதந்திரம் பெறுவதில்தான் அவர்கள் அதிக அக்கறை கொண்டிருந்தார்கள். இன்னொரு பக்கம் பயங்கரவாதிகள். அவர்கள் உடனே போர் தொடக்க வேண்டுமென்று துடித்துக் கொண்டிருந்தார்கள். இத்தகையவர் மத்தியில் பகுனின் என்பான் செல்வாக்கு பெற்றான். அவன் பல வருஷங்கள் சைபீரியாவில் சிறைவாசம் அனுபவித்த பிறகு தப்பி வந்தவன். மார்க்சுக்கும், பகுனினுக்கும் போட்டி எற்பட்டது. வளர்ந்து வருகிற, கட்டுப்பாடான சற்று நல்ல நிலையிலுள்ள தொழிலாளர் வர்க்கத்தின் பிரதிநிதியாக மார்க்சும், கட்டுப்பாடற்ற ஏழைத் தொழிலாளருக்கும், அறிவாளிகளுக்கும், அதிருப்தியுற்றோருக்கும் தலைவனாக பகுனினும் விளங்கினர். இந்தப்

பலப் பரீட்சையில் பொதுவாக மார்க்ஸே வெற்றி பெற்ருர். அதன் அறிகுறியாக 'சர்வதேச தொழிலாளர் சங்கம்' உருவாகியது. (International working Man's association)

1867-ல் தன்னுடைய பல்லாண்டு கால உழைப்பின் விளைவாக மூலதனம், (Dascapital Cpital) என்ற புத்தகத்தை வெளியிட்டார் மார்க்ஸ். அக்காலத்தில் வழங்கிய பொருளியல் முடிபுகளை விஞ்ஞான ரீதியில் அதில் ஆராய்ந்திருந்தார். மயக்கமோ, திரிபோ இல்லாதிருந்தது அவற்றில். யந்திரத் தொழில் நாகரீகம் அதனில் அலசப்பட்டிருந்தது,

1883-ல் காரல் மார்க்ஸ் இறந்தார். ஆனல் அதற்குள் அவருடைய கொள்கை கொஞ்சம் கொஞ்சமாக வலுவடைய ஆரம்பித்தது. தன் காலத்திலேயே தன்னுடைய தத்துவம் உலகின் பெரும் பகுதியில் வேரூன்றப்பட்டுவிடும் என்ற நம்பிக்கையோடுதான் மார்க்ஸ் காலமாகியிருக்கவேண்டும்.

இப்பொழுது மார்க்ஸைப் பின்பற்றுவோர் இரண்டு வழிகளில் இயங்கி வருகிருர்கள். மார்க்ஸ் இறந்த ஆறு ஆணடுகளில் உண்டான இரண்டாவது இண்டர் நேஷனல் ஸ்தாபனம் ஒன்று• 1919-ல் லெனினல் மாஸகோவில் உருவாக்கப்பட்ட முன்ருவது இண்டர் நேஷனல் மற்ருென்று.

உலகுக்கெல்லாம் உயர்ந்தவராக விளங்கும் மார்க்ஸின் தனி வாழ்க்கை மிக மிக சோகமயமானது. அவருடைய குடும்பம் வறுமைத் தீயில் வாடி வதங்கியது. பல முறை குழந்தைகள் பல அந்தத் தீயில் மடிந்தன. ஒரு முறை இறந்த தன் குழந்தைக்கு இறுதிக்கடன் செய்வதற்குப் பண மின்றி தன்னுடைய மேல் உடையை (கோட்) விற்றிருக்கிருர் மார்க்ஸ். அவருடைய மனைவி ஜென்னி ஓர் இலட்சிய வாழ்க்கைத் துணைவி. அவருடைய பொறுமையும், சகிப்புத் தன்மையும் தான் மார்க்சீயத்தை உலகுக்குத் தந்தது.

(புதுமைக்குரல் 1-9-60 இதழில் வெளியான கட்டுரை)

# பேரறிஞர் பெர்னுட்ஷா

இருபதாம் நூற்ருண்டு இலக்கிய மேதைகள் பலரைச் சந்தித்திருக்கிறது. அவர்களெல்லாம் தங்கள் வாழ்வை வீணை வாழ்வாகப் பயன்படுத்தவில்லை. உலகிற்கு மகிழ்வூட்டக் கூடிய உன்னதக் கருவலங்களைத் தந்தனர். சாகாதஇலக்கியங் களை உண்டாக்கினர்கள்; சத்துள்ள படைப்புகளாக, சமுதா யத்தின் படப் பிடிப்புகளாக அவை ஒளி விடுகின்றன. அத் தகைய "ஜீவ" இலக்கியங்களைப் படைத்தோரில் பேரறிஞர் பெர்னுட்ஷாவும் ஒருவர்.

பெர்னுட்ஷா உலகப் புகழ்பெற்ற நாட்காசிரியர் மட்டு மல்ல, தத்துவ ஞானிகளுக்குள்ளே தலை சிறந்தவர். இத்தகைய பேரறிஞரான இவர் பல்கலைக் கழக பட்டங்கள் பெற்றவ ரல்லர். இன்னும் சொல்லப்போனல் உயர்நிலைப் பள்ளியையே பாதியில் விட்டுவந்தவர்தாம். ஆனல் பள்ளிகளையும் கல்லூரி களையும் இவர் விரும்பாவிட்டாலும் இன்றையதினம் அவை யனைத்தும் இவருடைய எழுத்தோவியங்களைப் பாடப் புத்த கங்களாக்கி மகிழ்வுற்றிருக்கின்றன.

ஆரம்பத்தில் இவரது அறிவூட்டும் கருத்துக்கள்கொண்ட படைப்புகளை விரும்பாத மக்கள் தங்கள் அறியாமையை வெளிப்படுத்திய கேலிச் சித்திரங்களைக் கண்டு பாராட்டினர். 1890-ல் இவர் எழுதிய "மனைவி இழந்தவரின் மனைகள்" (Wido Wer's House) அடுத்து வந்த வாரன் அம்மையா ரின் தொழில் ஆகியவை அத்தகைய நாடகங்களே, அவை யெல்லாம் பெர்னுட்ஷாவைப் புகழ் ஏணிக்குக் கொண்டு சென்றன்.

ஷா சமதர்ம எண்ணம் கொண்டவர். ஆனல் காரல் மார்க்சின் கருத்துக்கும் இவருடைய கருத்துக்கும் நிறைய

வேறுபாடுண்டு. 1856ல் பிறந்த இவர் 1948ல் காலமானர். உலகத்திலேயே தன்னுடைய எழுத்துக்களுக்கு அதிகமாகப் பணம் சம்பாதித்தவர் பெர்னட்ஷாதான். அந்தப் பணத்தை யெல்லாம் ஆங்கில எழுத்துச் சீர்திருத்தத்திற்குப் பயன் படுத்தவேண்டும் என்று உயில் எழுதி வைத்துவிட்டுச் சென் றுள்ளார்.

கிண்டலுக்கும், கேலிக்கும் பெயர் பெற்றவர் பெர்னட்ஷா கலை கலைக்காக என்பது வரட்டுத் தத்துவம்; கலை—வாழ்வுக்காக என்று கூறியவர் இவர். இவருடைய இலக்கியங்களும் அத் தகையதே. பல்வகையாலும் பேராற்றல் பெற்ற பெர்னட்ஷா இருபதாம் நூற்றுண்டின் இலக்கிய வரலாற்றில் ஓர் பெரிய மேதை என்பதை எவரும் மறுக்க முடியாது.

**(1-7-60 "புதுமைக்குரல்" இதழில் வெளியான கட்டுரை)**

---

**திரு: ஏ. கோதண்டராமன்**

'செத்தும் கொடுத்தான் சீதக்காதி' என்பார்கள். சென்னை மாவட்ட என். ஜி. ஓ. சங்கத்தலைவராகவும், மாநில என். ஜி. ஓ. யூனியன் பொதுச்செயலாளராக வும், அரசு ஊழியர் கூட்டு ஆலோசனைக்குழு உறுப்பினராகவும் என். ஜி. ஓ. இயக்கத்தோடு 15 ஆண்டு தொடர்பு கொண்டிருந்த கோதண்டராமன் 1973ல் மறைந்தாலும், அவருடைய குடும்பத்திற்கு ரூ. 18 ஆயிரம் நிதி அளிப்பு விழா 6-4-73ல் சென்னை ராஜாஜிம்ண்டபத்தில் நடைபெற்றபோதுதான் ரூபாய் பத்தாயிரம் குடும்பப் பாதுகாப்புத் திட்ட வேண்டு கோளை கொள்கை அளவில் முதல்வர் கலைஞர் ஏற்றுக்கொண்டார்.

வாழ்விலும் என். ஜி. ஓ. சமுதாயத்தை நினைத்தார் கோதண்டராமன் சாவிலும் நம்மவர் நல்வாழ்வுக்குக் காரணமாயிருந்தார்.

வாழ்க அவர் புகழ் !

# அண்ணவை மறவோம்!

என். ஜி. ஓ. இயக்கம் எத்தனையோ முதலமைச்சர்களைக் கண்டிருக்கிறது. "ஆகட்டும் பார்க்கலாம்" என்று அலட்சிய மாகக் கூறியவர்களையும், 'வேறு வேலை இல்லையா உங்களுக்கு' என்று ஆணவத்தோடு கேட்டவர்களையும் சந்தித்திருக்கிறோம்.

அப்படிப்பட்டவர்கள் அண்ணவை முதலமைச்சராக சந்தித்தபோது சொல்லொணா மகிழ்ச்சியடைந்தோம். அவர் முதல்வராக பணியாற்றிய நாட்கள் குறைவாக இருக்கலாம். ஆனல் குறைந்த காலத்திலும் குளிர்ந்த மனதோடு எங்கள் இதயத்தை நிறைவு செய்தார். இனிமையான நினைவுகளைக் ாணர்ந்து தந்தார் என்பதை மறுக்க முடியாது.

"நீடு துயில் நீக்கப் பாடி வந்த நிலா" என்றுரைர கவி யரசர் அது அண்ணா அவர்களுக்கு முற்றிலும் பொருந்தும். என், ஜி. ஓக்கள் மாநாடுகளில் 1954-க்கு முன்னல் ஆங்கிலப் பேச்சாளர்கள்தான் அதிகம் உண்டு. ஆனல் தூய தமிழில் அண்ணா பாணியில் அழகு தமிழ் பேசியோர் பலர், 1954-ல் எங்கள் இயக்கத்தில் வலம் வரத் தொடங்கியபோது பழம் பெருச்சாளிகள் ஓடி மறைந்தனர். அறிமுகமாகிய அத்தனை முன்னணிப் பேச்சாளர்களும் அண்ணவைப் பின்பற்றினர் மேடைப் பேச்சில்.

1957ல் மதுரை தமுக்கம் மைதானத்தில் என், ஜி. ஓ. மாநில மாநாடு கூடியது. தேசத்தியாகி நீண்ட நாள் விடுதலை வீரர் வைத்தியநாதய்யர் புதல்வர் சங்கரன் அங்கே உரை யாற்றினர். பொருளாதார மேதை, தொழிற் சங்க வரலாறு பல கற்றவர் என சிறப்பிக்கப்பட்ட பி. ராமமூர்த்தி அடுக் கடுக்காகப் புள்ளி விவரங்களைக் கூறிப் பேசினர். ஆனல் அங்கே கூடியிருந்த பெருங் கூட்டம் அதிலே கவனம்

செலுத்தவில்லை, என். ஜி. ஓ. இயக்க வரலாற்றிலேயே இல்லாத அளவுக்து திரண்டு இருந்த அரசு ஊழியர் திரள் வேறு யாரையோ எதிர்பார்த்தது. பன்னிரண்டு மணிக்கு மேல் ஒரு குள்ளமான உருவம் அழுக்கு சட்டையோடு (அந்த அழுக்கு சட்டையின் பட்டன்களும் மாறியிருந்தன) அந்த பந்தலுக்குள் வந்தவுடன் வானதிரக் கைபொலியும் வளமான வாழ்த்துக்களும் எழுந்தன. அண்ணவை அந்த கோலத்திலேயே முதன் முறையாக என். ஜி, ஓ. மாநாடு சந்தித்தது.

என், ஜி, ஓக்களின் வறுமையை ஏழ்மையை, இல்லாமையை மிக அழகாக எடுத்துக் கூறினர் அண்ணு. அச்சத்திற்கும் ஆசைக்கும் இடையில் ஊசலாடும் கூட்டம் என்று அழகாக விளக்கம் தந்தார்; இலக்கணம் வகுத்தார். எதிர்க்கட்சி என்பதற்காக என். ஜி. ஓக்களை என்னுடைய அரசியல் சதுரங்கத்தின் பகடைக்காய்களாக ஆக்கமாட்டேன் என்று சூளுரைத்தார். இந்த விஷயத்தில் சொன்னபடியே நடந்துகொண்டார். பலமுறை என். ஜி. ஓக்களை வைத்து அரசியல் லாபம் சம்பாதிக்க வேண்டுமென்ற எண்ணம் அண்ணுவுக்கு இருந்ததில்லை. ஆனல் இன்று....?

முதல்வராகப் பொறுப்பேற்ற முதல் நாள் மாலை அண்ணு சந்தித்தது என். ஜி. ஓக்களைத்தான். கோட்டையில் என். ஜி. ஓக்கள் கூட்டத்தைக் கூட்டி, தோழர்களே... என கணீரென அழைத்து ஒரு புதிய திருப்பு முனையை ஏற்படுத்தினர் 'நாமெல்லாம் ஓர் குடும்பம் அந்த நயமிகுந்த வார்த்தையில் தான் என்னே இன்பம்'' என்று கண்ணதாசன் கூறியது போன்ற பிணைப்பு அன்றே அணணுவுக்கும் எங்களுக்கும் ஏற்பட்டுவிட்டது. 3 ஆண்டுகளாகப் பழைய அரசு தட்டிக் கழித்த நகர ஈட்டுப் படி கோரிக்கை அண்ணு முதலமைச்சரானவுடன் தான் நிறைவேற்றப்பட்டது.

அதுபோல், எத்தனையோ புதிய சலுகைகள் தொடர்ந்து காண வழி வகுக்கப்பட்டன அண்ணு ஆட்சியில். எத்தனை

சட்டமன்ற உறுப்பினர்கள் காத்திருந்தாலும் முதல் பேட்டி என். ஜி. ஓ. யூனியன் நிர்வாகிகளுக்கு என்பதை அண்ணு வழக்கமாகக்கொண்டிருந்தார்.

முருகேச முதலியார் அறிக்கையின்படி மூவாயிரம் பேர் வீட்டுக்குப் போகும் நிலை ஏற்பட்டபோது நாங்கள் முறையிட்டதும் அதை ரத்து செய்த பெருந்தன்மை அண்ணுவுடையது.

எட்டை மாத்திரம் படிப்பதில்லை; எல்லார் உள்ளங்களையும் அவர்தம் இல்லங்களையும் நன்கறிந்தவர். தமிழ் பேசும் இதயங்களில் எல்லாம் குடியிருக்கும் அந்த தானைத் தலைவர் என். ஜி. ஒக்களின் இதயங்களில் என்றும் நீங்கா இடம் பெற்றவர். அவரை ஆசின் தலைவராக, ஆற்றல்மிக்க அமைச்சராக, திட்டங்களை நிறைவேற்றிடும் வித்தகராக, திறமைமிக்க நிர்வாகியாக சந்தித்திருக்கிருேம்.

அந்த இனிய நினைவுகள் வாழ்க!
அண்ணுவின் நாமம வாழ்க!

( கட்டுப்பாடு 15-10-74 இதழில் வெளிவந்தது )

## திரு. எஸ். ஏ. நாயகம்

தொழில் வணிகத்துறையில் கண்காணிப்பாளருகப் பணியாற்றிய திரு. எஸ். ஏ. நாயகம் அவர்கள் என். ஜி. ஓ. சங்கத்தின் பொதுச் செயலாளராகப் பணியாற்றிய காலம் கண்ணியம் நிறைந்தது; கம்பீரம் மிகுந்தது. புகார் சொல்பவர்களை 1956 ஜனவரியில் அருப்புக்கோட்டை மாநாட்டில் அவர் சாடிய விதம் புல்லரிக்கும் தன்மை வாய்ந்தது. நாயகம் இன்று நம்மிடையே இல்லை. ஆனல் அவர் நினைவுகள் மறக்க முடியாதவை!

# அரசு ஊழியர்களின் பொற்காலம்



பொங்கல் திருநாளாம் இந் நன்னாளில் சத்திய தீபத்தின் சந்நிதி கூட்டிடும் சரித்திர வெளிச்சத்தில் தமிழ்நாட்டின் முதல்வர் கலைஞர் மகோன்னதமான ராஜ கம்பீரத்துடன் பவனி வருகிறார் என்பது நடு நிலைமிக்க விமர்சகர்களின் பார்வையில் நூற்றுக்கு நூறு உண்மையாய் உள்ளது.

அதுவும் இந்த மாநில அரசு ஊழியர்கள் பொட்டுப் பூச்சிகளாய்—புன்மைத் தேரைகளாய் இருந்த காலம் ஒன்றுண்டு. அச்சத்திற்கும் ஆசைக்கும் இடையிலே ஊசலாடிக்கொண்டிருந்த அந்த வர்க்கம்—பீடு நடைபோட முடியாதவாறு கூனிக் குறுகி காட்சி யளித்த நாட்கள் எல்லாம் நம் மனக்கண் முன்னால் நிழலாடுகின்றன. 'அந்த நாட்களின்' ஆணவத்திற்கு சாவு மணி அடிக்கப்பட்டுவிட்டது. அவையெல்லாம் பழங்கதையாய்ப் போய்விட்டன. அவற்றை அசை போடுவதற்குக்கூட ஆட்கள் இல்லை.

ஆனால் இன்று அரசு ஊழியர்கள் நிமிர்ந்த பார்வையுடன் நேர்கொண்ட நடையுடன் பவனி வருகிறார்கள். ஆம். அரசு ஊழியர்கட்கு இது ஓர் பொற்காலம்! கேட்டதைப் பெறுகிறார்கள்—கேளாததையும் கொடுக்கிறார் கலைஞர்! எதிர்பார்க்காத அரசு ஆணைகள் வாரத்திற்கொன்றாக வந்துகொண்டேயிருக்கின்றன. சிக்கல்கள் களையப்படுகின்றன! நம்பிக்கை ஒளி நல்லோர் இதயங்களில் எல்லாம் நிறைந்திருக்கிறது. இதைப் பொற்காலம் என்று கூற யார்தான் மறுப்பர்?

ஆந்திராவைப் போல் இங்கே 108 நாள் வேலை நிறுத்தம் நடத்தவில்லை அரசு ஊழியர்கள் கேரளாவைப்போல் உயிர்களைப் பலி கொடுத்து மறியல் நடத்தவில்லை. ராஜஸ்தானத்தைப்போல் காராக்கிரக சிறைச்சாலைகளில் அவதிப்படவில்லை. பீகாரைப் போல் தடியடி தர்பாரை சந்திக்கவில்லை. மேற்கு வங்கத்தைப்போல் ஊழியர் தலைவர்கள் டிஸ்மிஸ் செய்யப்பட்ட அவலமும் இங்கே இல்லை. கேள் கொடுக்கப்படும்—தட்டு திறக்கப்படும் என்றார் இயேசு. இங்கே தட்டக்கூட வேண்டிய நிலையில்லை. "பேசுங்கள்—தீர்க்கப்படும்" என்ற புதிய தத்துவத்தையே அல்லவா தமிழக அரசில் கண்டு வருகிறோம்? 'நம்பினோர் கெடுவதில்லை'- இது நான்மறைத் தீர்ப்பு. நாடாளும் நாயகர்களை நம்பிக்கையோடு அணுகிய அரசு ஊழியர் இயக்கம் எந்த நேரத்திலும் தளர்ச்சி பெற்றதில்லை.

"இதற்கு முன்னால் நம் நாட்டில் அரசு நடத்தி வந்தவர்கள் கிராமத்தில் கெடுபிடியோடு வாழ்ந்து வரும் ஒரு நாட்டாண்மைக்காரனைப்போலவே அரசை நடத்திவந்தார்கள் அது முறையல்ல என்று தீர்மானித்து அரசை மக்களுடன் கை கோர்த்துச் செல்லும் தோழனாக மாற்றியது 1967-க்குப் பின் தான்"

ஒரு கிழமை ஏட்டின் ஆசிரியர் மிகத்தெளிவாக இவ்விதம் கூறியிருக்கிறார். அரசு ஊழியர்களைப் பொறுத்தவரை இது நிதர்சன உண்மையே. 1967-க்கு முன்னால் அரசு ஊழியர்கள் "நாட்டாண்மை"யைத் தான் கண்டு வந்தார்கள். அப்போதெல்லாம் எப்போதாவது சில மாநாடுகளில் வரவேற்புரைகளில் பயந்துகொண்டே ஒன்றிரண்டு கோரிக்கைகளைச் சொல்கின்ற நிலையும், தொடக்க உரையாற்றிவிட்டு அரைமணி நேரத்தில் அமைச்சர்கள் மாநாட்டைவிட்டு வெளியேறுகின்ற நிலைமையும் தான் மிகுதி. ஒன்றுக்குப் பத்தாக இப்போது தான் அமைச்சர்கள் அரசு ஊழியர் தம் மாநாடுகளில் கலந்து

கொள்கிறார்கள். இறுதி வரையிலும் இருந்து கோரிக்கைகளைக் கேட்டு, இயன்றவற்றை மாநாட்டு மேடையிலேயே நிறைவேற்றித் தருகிறார்கள்.

'மக்கள் குரலே மகேசன் குரல்' என்ற அண்ணாவின் வழியை இன்றைய ஆட்சியாளர் உணர்ந்திருக்கிற காரணத்தால் தான் சட்ட சபைக்குக் கொடுக்கின்ற மதிப்பை சாமான்யர்கள் நடத்தும் மாநாடுகளுக்கு அளித்து, பொறுமையுடன் கேட்டு புதிய சலுகைகளை அறிவிக்கிறார்கள்; 'உறுதிமொழிக் குழுவை' அமைத்து நினைவுபடுத்த வேண்டிய அவசியமில்லாமலேயே உத்தரவுகள் ஒன்றன்பின் ஒன்றாக வருகின்றன. இதல்லவா எங்கள் பொற்காலம்?

"மக்கள் மீது அளவுகடந்த நம்பிக்கை வைத்து, அரசை அவர்களது தண்ணீர்ப்பந்தல் ஆக்கிவிட்டோமே," என்று ஒரு சமயம் சட்டமன்ற மேலவை உறுப்பினர்-ஏதோ ஒரு சூழ்நிலையினால் வருத்தப்படக்கூடிய அளவுக்கு சலுகைகள் இங்கு தரப்பட்டுள்ளன. அதற்குக் காரணம், "சுடுகின்ற கோடையில் வளைகின்ற ஏழையால் அமைந்ததே இன்பச் சோலை" என்பது போல ஆக்க ரீதியில் அரசின் கொள்கைகளை அமைத்துக் காட்டி நாட்டோர் நலம் பெறச் செய்து வருபவர்கள் அரசு ஊழியர்கள்தாம் என்பதை கலைஞர் அமைச்சரவை ஆய்ந்தோய்ந்து உணர்ந்திருக்கிறது: வாழைமரத்துக்கு நாளுக்குநாள் தண்ணீர் வார்த்த பின்னால், அது பூவையும் பழத்தையும், இலையையும் கொடுப்பதுபோல் அரசு ஊழியர்களுக்கு செய்யும் நல்ல காரியங்கள் வீண் போவதில்லை என்பதை இன்றைய அரசு உணர்ந்திருக்கிறது.

அதனால்தான் அடுக்கடுக்கான நன்மைகள் அரசு ஊழியர்கள் பெற்றார்கள். வெறும் வாக்குச் சீட்டுகளைப் பெறுவதற்காக மட்டுமே அல்ல இந்த நன்மைகள். நாலு கோடி தமிழ் மக்களில் அரசு ஊழியர் ஆறு லட்சம் பேர்தான். வாக்குச்சீட்டுகளை நம்பியிருந்தால் 71-க்குப் பிறகு 75-லே ன்மைகள் செய்தால் போதுமென்று வாளாவிருக்கலாம்.

ஆனால் நிலை அதுவல்ல; 1971-ம் ஆண்டுக்கு முன்பு பெற்ற பலன்களைவிட பின்னால் அரசு ஊழியர் அதிக நன்மைகளைப் பெற்றிருக்கிறார்கள் என்பது மறுக்கமுடியாது.

1. அடிமை விலங்காம் இரகசியக் குறிப்பேடு முறை அடியோடு அகற்றப்பட்டது.

2. இளநிலை உதவியாளர், கிராம நல ஊழியர். தட்டெழுத்தர், டெலிபோன் ஆபரேட்டர்கள் கூட்டுறவு முதுநிலை ஆய்வாளர்கள், செவிலியர்கள், ஊராட்சி நிர்வாக அதிக ரிகள், கால்நடை உதவியாளர்கள், கல்வி விரிவாக்க அலுவலர், வேளாண்மை உதவி யாளர்கள், நில அளவுத் துறை வரைவாளர்கள், சர்வேயர்கள், மருந்தாளுநர்கள், ரேடியோ கிராபர்கள் முதலிய ஏறக்குறைய 60 பிரிவினரின் ஊதிய விகிதங்கள் உயர்த்தப்பட்டன.

3. கூட்டுறவுச் சார்நிலை பதிவாளர், முதுநிலை வரைவாளர், வட்டாட்சியர், வணிக வரி அலுவலர் போன்ற 30க்கு மேற்பட்ட பிரிவினர்க்கு ஆண்டு ஊதிய உயர்வு முறையில் உயர்வு தரப்பட்டது.

4. ஊதியம் கணக்கிடும் முறையில் (வெயிட்டேஜ்) மாற்றம்.

5. வருவாய்த்துறையில் 1,200 கருவூலத் துறையில் 600, நில அளவுத் துறையில் 800, கல்வித் துறையில 1,000, காவல் துறையில் 300 எனவும் இதேபோல் மற்ற மற்ற துறைகளில் கணிசமான பதவி உயர்வுக்குப் புதிய வாய்ப்புகளும் அளிக்கப்பட்டன.

6. கோவை நகருக்கு நகர ஈட்டுப்படியும், வீட்டு வாடகைப்படி உயர்வும் அளிக்கப்பட்டது.

7. பொள்ளாச்சி—கரூர்—மாயவரம் — கூனூர் — பழனி முதலிய 9 நகரங்களுக்கு வீட்டு வாடகைப்படி உயர்வு அளிக்கப்பட்டது.

8. கடையநல்லூர் வழக்கில் இரண்டாண்டு காலம் தற்காலிக வேலை நீக்கத்தில் இருந்து துயருற்ற கூட்டுறவுத்துறை ஊழியர் மீண்டும் பணியிலமர ஆணை பிறப்பிக்கப்பட்டது.

9. நில அளவுத்துறையில் ஊதிய வெட்டுமுறை அகற்றப்பட்டது.

10. பல்வேறு துறைகளில் 3500 தற்காலிக ஊழியர்கள் பணி நிரந்தரப்படுத்தப்பட்டது.

11. என். ஜி. ஓக்களைச் சார்ந்து வாழும் விதவைச் சகோதரிகட்கும் வயது வராத தம்பிகளுக்கும் என். ஜி. ஓ. மருத்துவ சலுகைகள் அளிக்கப்பட்டன.

12. பண்டிகை முன்பணம்—வீடு கட்டித்தரும் கடன் தொகை இரண்டும் உயர்த்தப்பட்டது.

13. அரசு ஊழியர் மரண மடைந்தால் உடலை அவர்தம் குடும்பம் விரும்பும் ஊருக்குக் கொண்டு செல்ல அரசு வாகன வசதி அளிக்கப்பட்டது–மரணமடையும் அரசு ஊழியர் பிள்ளைகட்கு வேலை தேடித்தரும் அலுவலகத்தின் பதிவை எதிர்பார்க்காமலேயே அரசு ஊழியர் வேலை தர ஆணையிடப்பட்டது.

இவை போல பொதுவாகவும், துறைவாரியாகவும் நூற்றுக்கணக்கான நன்மைகள் இந்த மூன்றாண்டுகளிலேயே உருவாக்கப்பட்டுள்ளன.

இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்ததுபோல—உச்சி மீது வைத்து உயர்ந்தோரால் பாராட்டப்பெறும் குடும்பநல நிதித்

திட்டத்தை 1974 ஜனவரி முதல் அமுலாக்க அரசு ஆணை தந்துள்ளது, காலமெல்லாம் எண்ணி எண்ணி போற்றுதற் குரியதாகும், அரசு ஊழியர் ஒருவர் மரணமடைந்தால்தான் அவர் வைத்துவிட்டுப் போயிருக்கிற கடன் தொகையும் காப்பாற்றப்பட்ட வேண்டிய உயிர்களின் பட்டியலும் தெரிய வரும். கலெக்டர் முதல் கடைநிலை ஊழியர் வரை பெரும் பாலோருடைய நிலையும் இப்படித்தான் இருக்கிறது.

சேமிப்பு சிறந்தது என்பது நல்ல தத்துவமே. ஆனால் நல்ல தத்துவங்களை நடைமுறையில் செயற்படுத்துவோர் குறைவுதானே. சராசரி மக்களுக்குள்ள இந்த இயல்பு சர்க்கார் ஊழியர்களுக்கும் உண்டல்லவா? எனவேதான் கலைஞர் அறிவித்த குடும்ப நலநிதித் திட்டத்தை ஆசிரியரும்—அரசு ஊழியரும் 'உற்றுழி உதவி' யென உள நிறைவோடு பாராட்டுகின்றனர்.

"கணவனை இழந்தோர்க்குக் காட்டுவதில்..." என்று பழந்தமிழ் நூல் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டி யுள்ளது. கைம்பெண்களின் கதியைப் பற்றி கலைஞர் 'பராசக்தி'' படத்தில் கூறிய உணர்ச்சிமிக்க கருத்துக்கள் இருபதாண்டுகட்குப் பின்னும் மறக்க முடியாத ஒன்று.

சட்ட மன்ற உறுப்பினர்களாகவும், நாடாளுமன்ற உறுப்பினர்களாகவுமிருந்த திருவாளர்கள், ப. கோபால் இரெ. இளம்வழுதி, உடுமலை நாராயணன் முதலியோர் குடும்பத்திற்குக் காலத்தால் உதவி செய்தார் கட்சித் தலைவரா யிருந்த கலைஞர். நாட்டின் தலைவராக—ஆட்சித்துறையின் அங்கங்களாயிருந்து அகால மரணமடையும் அரசு ஊழியர் குடும்பங்கட்கு பத்தாயிரம் ரூபாய் நிதி தரும் பயன்மிக்க திட்டத்தையும் தந்துள்ளார் முதல்வர் கலைஞர்.

இந்தத் திட்டம் அரசு ஊழியர் மத்தியில் ஒரு உறுதிப் பாட்டையேற்படுத்தியுள்ளது. எத்தனைதான் அகவிலைப்படி உயர்வு கொடுத்தாலும் அதிலே இல்லாத நிம்மதியை இந்தத் திட்டம் தந்துள்ளது.

ஏழைகளுக்கு நிலப்பட்டா.

கண் பார்வையிழந்தோருக்குக் கண்ணொளி.

தீ விபத்தாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டோருக்கு நல்வாழ்வு.

இதே போல எண்ணிறந்த அரசின் கொள்கைகளை ஏற்றமுறச் செயலாக்க இரவும் பகலும் உழைக்கும் அரசு ஊழியர் தம் நிலை உயர்த்திட புதிய திட்டம்—பொலிவுள்ள திட்டம்—தந்திட்ட முதல்வர் கலைஞரின் ஆட்சி பொற்காலமே தான் அரசு ஊழியர்கட்கு.

உண்மை இது.

உச்சிமீது வானிடிந்து வீழ்ந்திடினும் இதனை உரைக்கத் தவறோம்.

(1974 'முரசொலி' பொங்கல் மலரில் வெளியான கட்டுரை.)

## திரு. எஸ். ஆர். துரைராசன்

கடலூர் தந்த கடமை வீரர், பத்திரப்பதிவுத்துறையில் பணியாற்றி பண்பு நலன்களோடு நூற்றுக்கணக்கான நண்பர்களைப்பெற்றிருந்த பெரு வீரர் எஸ்.ஆர். துரைராசன்.

தென் ஆற்காடு வாவட்ட என். ஜி. ஓ. யூனியன் துணைத்தலைவராக (1957) தலைவராக 1958ல் மாநிலத் துணைத்தலைவராக (1959–61) எஸ். ஆர். டி. ஆற்றிய பணி எழுச்சி மிக்க இளைஞர் இதயத்தில் என்றும் பசுமரத்தாணிபோல் இருக்கும்.

ஆற்றொழுக்கு நடையில், அருந்தமிழிப் பேச்சாளராகி விளக்கிய அந்த அடலேறு நம் உள்ளங்களில் நீக்கமற நிறைந்திருக்கும் தியாகச்செம்மல்.

# நாவலர் நெடுஞ்செழியன்

"சொலல்வல்லன் சோர்விலான் அஞ்சான் அவனை
இகல்வெலல் யார்க்கும் அரிது"

என்று குறளுரைத்த இலக்கணத்திற்கோர் இலக்கியமாய்த் திகழ்பவர் மாண்புமிகு கல்வி அமைச்சர், டாக்டர் நாவலர், நெடுஞ்செழியன் என்றால் மிகையாகாது.

தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை, அரசியல், சமுதாய விழிப்புணர்ச்சிக்குப் புகழ்பெற்ற ஊராகும். தமிழர் படை நடத்தி தனிப்பெருமை கொண்ட சுயமரியாதை இயக்கத்தின் முன்னோடி அழகிரிசாமி, வெள்ளிவிழா காணுமளவுக்கு 25 ஆண்டுகாலம் தஞ்சை மாவட்ட நாட்டாண்மைக் கழகத் தலைவராக இருந்த நாடிமுத்துப் பிள்ளை, தொழிலமைச்சராகவும்—நாடாளுமன்ற உறுப்பினராகவும், ஐ. நா. நீதிபதியாகவும் ஓங்கு புகழ் எய்திய ஆர். வெங்கட்ராமன், பட உலகில் பொதுவுடைமைக் கருத்துக்களைப் பசுமரத்தாணி போல் நிலைக்கவைத்த கல்யாணசுந்தரம் முதலியோர் பட்டுக்கோட்டையைச் சார்ந்தவர்களே.

அந்தப் பட்டுக்கோட்டையில் தான் நாடு போற்றும் நாவலரும் பிறந்தார்; வளர்ந்தார், படித்தார். வெறும் ஏட்டுப் படிப்பு மாத்திரமல்ல—அதில் முதலாக நின்றதுமாத்திரமல்ல—காசாங்குளம் வட கரையில் (அங்கேதான் அரசியல் பொது கூட்டங்கள் நடைபெறும்) அரசியல் உணர்வுகளையும் பயின்றார். டாக்டர் நாயரும், வெள்ளுடை வேந்தர் தியாகராயரும், பன்னீர்ச்செல்வமும் எந்த நீதிக் கட்சியின் நெறிமுறைகளைப் பரப்பினரோ—அதையும் அதன்வழி வைக்கம் வீரர் பெரியார் ராமசாமி பரப்பிய சுயமரியாதை இன உணர்வுகளையும் இதயத்தில் ஏந்தினார். அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வந்த பின்னும்—அங்கிருந்த பிரம்மாண்டமான அரங்கங்களைப் பார்த்தபின்னும் தன்னை தன்மான உணர்வுகளிலிருந்து விடுவித்துக்கொள்ளவில்லை.

எம். ஏ. படித்த அவர் விரும்பியிருந்தாராளுல் அரசு வேலைக்குச் சேர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவராகியிருக் கலாம், கல்லூரி முதல்வராக இருக்கலாம். ஏன்? பல்கலைக் கழகத் துணை வேந்தராகியிருக்கலாம். அதற்கான தகுதியும் திறமையும் வாய்ப்பும்—வசதியும் அவருக்கிருந்தது. ஆனால் தன்னுடைய குடும்ப நலனை விட்டு நாட்டு நலனையேப் பெரி தெனக் கருதி இன்பம், கவர்ச்சி, நிம்மதி நிறைந்த பணிகளை விடுத்து சமுதாயத் தொண்டுக்காகத் தமிழ்த் தொண்டுக் காகத் தன்னைத்தானே ஆளாக்கிக் கொண்டார். அதனால் தான் மாவட்ட ஆட்சித் தலைவர்களும், கல்லூரி முதல்வர் களும், பல்கலைக் கழகத் துணை வேந்தர்களும் இன்று அவர் அருகிருந்து ஆலோசனை பெருமளவுக்கு உயர்ந்தார், செயலாற்றுகிறார்.

ஆனால் இந்தநிலை வரும் என்று கனவு கண்டு 1944ல் அரசியலில் அவர் பங்கு பெறவில்லை. சிறைச்சாலைகள் அழைக்கும், தடியடி தர்பாரைத் தாங்கவேண்டியிருக்கும், இழிமொழியையும்—ஏளனத்தையும் சந்திக்க வேண்டியிருக் கும் என்றெல்லாம் தெரிந்துதான் நாவலர் பொதுவாழ்வல் ஈடுபட்டார்.

வெண்தாடி வேந்தரும் (பெரியார்) இளந்தாடி வேந்தரும் (நாவலர்) ஒரு சேர இந்தத் தமிழகத்து மண்ணில் இன உணர்வைத் தூண்டிவிட எத்தனையோ நாள் அலைந்தார்கள். ஒரு நாளுக்கு 5 கூட்டம், 6 கூட்டம்—ஒவ்வொரு கூட்டத் திலும் இரண்டு மணி நேரப் பேச்சு! நாவலர் இந்த சமுதாய விழிப்புணர்ச்சிக்காக—புதுக் கருத்துக்களைப் பரப்புவதற்காக வாழ்வின் பெரும் பகுதியை (வசந்த காலம் என்று கவிஞர் களும் எழுத்தாளர்களும் வர்ணிப்பார்களே அந்தப் பகுதியை) செலவிட்டார்.

'வலிவும் பொலிவும்' நிறைந்த சொல்லடுக்குகள், ஆயிரக் கணக்கான பேச்சாளர்களால் இன்று கையாளப்படுகிற தென்றல் அங்கெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கிறார் நாவலர் என்று பொருள். 'மன்றம்' இதழ் கருத்துடையோரின் லட்சி

யப்பத்திரிக்கையாகப் பீடுநடைபோட்டது. வால்டயரை, இங்கர்சாலே, ரூசோவை, புரட்சிவீரன் லெனினை இலட்சக்கணக் காண இளைஞர்களுக்கு அறிமுகப்படுத்தியது. வறுமையால், இயலாமையால் தொடக்கப்பள்ளிக்கூடத்தைத் தாண்டமுடியாத ஆயிரக்கணக்கானவர்கள் மேலைநாட்டுப் பாவலர்களைப் பற்றி அணுகி அறிய 'மன்றம்' இதழ் மூலம் நாவலர் ஆற்றிய பணி சொல்லத்தரமன்று.

'தேனீயில்' இவரைத் தீர்த்திடத் திட்டம் போட்டவர்கள் குலை நடுங்க வளர்ந்தார், 1956ம் ஆண்டு மாநிலமாநாட்டில் "தம்பி வா தலைமை தாங்கவா! உன் ஆணைக்குக் கட்டுப்பட்டு நானும் நடக்கிறேன்'' என்று அறிஞர் அண்ணா அன்போடு அழைத்து தி. மு. க. பொதுச் செயலாளர் பதவியில் அமர்த்து மளவுக்கு வளர்ந்தார். 1957 தேர்தலில் இருநூறு வாக்குகளில் "வெற்றி வாய்ப்பை இழந்தபோதும் (தமிழ் உலகுக்கு நாவலர் தந்த புதிய சொற்றொடர் இது) வளர்ந்தார். நாணயமுள்ள அரசியல் தலைவர்கள் பலர் நாவலர் தோல்வியைப் பற்றிக் கவலைப்பட்டனர். நாவலர் பம்பரமாகச் சுழன்று பணியாற்றிய தால் 15ஐ 1962ல் 50 ஆக்கி அதிகாரப்பூர்வமான எதிர்கட்சித் தலைவராகச் சட்டமன்றம் சென்றார். எதிர்க்கட்சிக்குரிய கண்ணியம், பெருமை சிறிதளவும் குறையாமல் 5 ஆண்டுகள் பொறுப்போடு பணியாற்றியதை இன்றும் அரிமா நோக்கோடு சொல்லலாம். பத்திரிக்கைத் தலைப்பில் இடம் பெறவேண்டுமே என்ற எண்ணத்தில் ஆசாபாசங்களுக்குட்டுபட்டு தரக் குறைவான பேச்சுக்களிலும், நடவடிக்கைகளிலும் நாவலர் என்றைக்குமே ஈடுபட்டதில்லை.

1967 நாவலர் கல்வி அமைச்சரானார். இந்த ஆறாண்டு களில்—இடையிலே ஒரு ஆறு மாத காலத்தைத் தவிர மற்றெல்லா நேரங்களிலும் உழைப்பால், உணர்வால், செயலால், சீர்மையால்தான் இருக்கும் இடத்திற்கு இழுக்கு ஏற்படுத்தாமல் ஆயிரங் காலத்துப் பயிரான கல்வித் துறையை அவசரமின்றி—சீராக்கி வருகிறார். கடந்த காலத்தைவிட மேலும் மேலும் புதிய கல்லூரிகள்—உயர்

நிலைப்பள்ளிகள் எண்ணற்றவை ஏற்பட்டுள்ளன. ஆசிரியர்களுக்கு ஏராளமான சலுகைகள் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. நூல் நிலைய இயக்கம் புதிய திருப்பு முனையில் பார்வையைச் செலுத்தியுள்ளது.

நாவலர் காணும் பல நல்ல கனவுகள் செயல் முறையில் மிளிருமானால் ...... விரைவில்தென்னகம் பொன்னகமாகுமென்பது உறுதி.

" நிகரிலாத் தமிழைப் போன்ற
நெடியதோர் வடிவும்; ஓங்கும்
புகழ்தரு கல்வி காக்கப்
புரி அறச்செயலும்; வஞ்சம்
அகமிலா நோன்பும்; என்றும்
அதுதரு உண்மைப் பண்பும்
மிகவுடை நாவலர் தான்
மேதினி வியக்க வாழி!
தன்னேரில் லாத வாறு
தமிழ்மொழி வளரச் செய்யும்
நன்னேரம் இந்த நேரம்
நாமெதிர் பார்க்கின்றோமால்
முன்னேற்றம் செழிக்க! எங்கும்
முத்தமிழ் முழங்க! நம்மின்
கன்னல்நேர் நாவலர் தான்
கடுமையாய் உழைப்பார் வாழி!"

எனக் கவிஞர் தம் செஞ்சொலால் 'தமிழ்ப்பணி' யின் சார்பாக வாழ்த்தி வணங்குகிறோம்.

(தமிழ்ப்பணி' 1973 ஆடி இதழில் வெளிவந்தது.)

# பெருமைமிகு பேராசிரியர்

வாழைப்பழத்திற்கும்—பலாப்பழத்திற்கும் உள்ள வேறுபாடுகளைப் பற்றி தத்துவம் படித்தவர்கள் பல விவரங்களைக் கூறலாம். வாழைப்பழம் உண்பதற்கு அதிகச் சிரமங்கள் தேவையில்லை. அதைப்போல அல்ல பலாப்பழம். எளிதில் விரைவில் பலாப்பழத்தை சாப்பிட முடியாது. மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மாண்புமிகு பேராசியர் அன்பழகன் அவர்களை அணுகுவதற்குப் பலபேர் அச்சப்படுவார்கள். எப்படிப்பட்ட பெரிய பதவிகளில் இருப்பவர்களானாலும் சரி தயைதாட்சண்யமின்றி கண்டித்து, விதி முறைகளை எடுத்துக்கூறி அதன்படியே நடக்க வேண்டுமென்று வற்புறுத்துபவர் பேராசிரியர் அவர்களாவார்.

1947 ம் ஆண்டு என்று நினைக்கிறேன். பேராசிரியருக்கு சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றபோது அண்ணாவை ஆசிரியராகக்கொண்ட ''திராவிட நாடு'' பத்திரிகையில் திருமண வாழ்த்து முதல் பக்கத்திலேயே வந்தது. பல இடங்களில் பேராசிரியரையும், அவருடைய துணைவியாரையும் அழைத்து வரவேற்பு விழாக்கள் நடத்தப்பட்டன, அப்போதே ''நாமெல்லாம் ஓர் குடும்பம்-அந்த நயமிகுந்த வார்த்தையில் தான் என்னே இன்பம்'' என்பது நடைமுறை அனுபவமாயிருந்தது. அதற்குப் பிறகு அறிவியக்கக் கொள்கைகளைப் பரப்ப அல்லும் பகலும் அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகளை-தீவிர சுற்றும் பயணத்தை எண்ணிப் பார்க்கும்போது இதயம் பூரிக்கிறது.

அண்ணா சட்ட சபையில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது துணைத் தலைவராக பேராசிரியர் இருந்து நல்ல பார்லிமெண்டேரியன் என்பதை நிரூபித்தார். சட்ட மன்ற நடவடிக்கைகளில் தீவிர கவனம் செலுத்தி எல்லா நாட்களிலும் பங்கு கொண்டார்.

பின்னர் மேலவை உறுப்பினராக செயல்பட்டு ஆசிரியர் களின் கோரிக்கைகளுக்காக வாதாடியதையும் மறக்க முடியாது.

பேராசிரியர் நாடாளு மன்றத்தில் கழகத் தலைவராக இருந்த 4 ஆண்டுகள் சிறந்ததோர் பொற்காலமாகும், எத்தனை அரசியல் மாற்றங்கள் அந்தக் கால கட்டத்தில் நிகழ்ந்திருக்கின்றன.

1971–ம் ஆண்டுக்குப் பிறகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சராக பேராசிரியர் ஆற்றிவரும் பணி புனிதமானது. குடும்பக்கட்டுப்பாட்டு இயக்கத்தைப்பற்றி விரல் நுனியி லயே புள்ளி விவரங்களை அள்ளி வீசும் வித்தகர் ஆவர். ஊதியக் குழுவிலும்—தனி நபர் குழுவிலும் புறக்கணிக்கப் பட்ட

மருந்தாளுநர்கள்

லேபரட்டரி டெக்னீஷியன்கள்

செவிலியர்கள்

ரேடியோ கிராபர்கள்

போன்ற பல பிரிவினருக்கு உயர்வு கிடைக்க பேராசிரியர் தந்த உதவி என்றும் நினைவு கூறத்தக்கது.

குடும்ப நலத் துறையில் இருந்த தொகுப்பாளர்களை நிரந்தரம் செய்ய பேராசிரியர் துணை நின்றதை 300 குடும்பங் கள் நன்றியோடு பாராட்டுகின்றன.

அவர் ஒரு நெருப்பு

ஆனல் ஆக்க வேலைகட்கே துணை செய்யும் சிறப்புடைய வர்.

அவர் ஒரு நேர்மையாளர், தனி நபர் சிபார்சுகளைத் தவிர்க்க விரும்பும் தகைமையாளர்.

அவர் ஒரு எரிமலை

குற்றங்க கண்டவிடத்து குமுறுவதில் மன்னர்.

அவர் ஒரு பேராசிரியர்.

மாணவர்களுக்கு மாத்திரமல்ல. அரசியல் பாடத்தினை அறிய விரும்புவோர் அனைவர்க்குமே அவர் ஒரு பேராசிரியர்.

(19–12–74–ல் வெளியான 'கட்டுப்பாடு' இதழின் சிறப்பு மலரில் வெளியான கட்டுரை).

# நான் கண்ட நல்ல அதிகாரிகள்

நமது அரசாம், தமிழ்நாடு அரசு இன்று ஊழியர்நலம் பேணும் பல நல்ல செயல்களை மேற்கொண்டு வருவதை நாம் மறந்துவிட முடியாது. ஆறு லட்சம் ஊழியர்களுக்கு உள்ள பிரச்சனைகள் ஏராளம் இருக்கலாம். அத்தனையையும் ஒட்டு மொத்தமாகத் தீர்த்துவிடுவது என்பது எளிதல்ல. ஆனால் அவற்றை தீர்க்கும் நல்ல மனம் இந்த அரசுக்கு இருக்கிறது என்பதையும் யாரும் அலட்சியப்படுத்திட முடியாது.

இந்த மாறுதலுக்குக் காரணம் ஆளுகின்ற பொறுப்பை ஏற்றிருக்கிற முதலமைச்சர் கலைஞருடைய, மற்ற அமைச்சர் களுடைய நல்லெண்ணம்தான் என்பது ஒரு புறமிருந்தாலும் அந்த நல்லெண்ணத்தை செயல்படுத்த வேண்டிய பொறுப் புடையவர்கள் உயர் அதிகாரிகளே ஆவார்கள். அதிகாரிகள் சிறப்பாக செயல்பட்டால்தான் அமைச்சரவையின் நோக்கங் கள் உறுதிமொழிகள் நிலைபெறும்; புகழ்பெறும்.

## திரு சி. ஏ. இராமகிருஷ்ணன், ஐ. சி. எஸ்.

என்னுடைய அனுபவத்தில் நான் பழகிய சில அதிகாரிகளைப் பற்றிய நினைவு அலைகளை உங்களுடன் இந்தக் கட்டுரை மூலமாகப் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். அந்த நிலையில் என்னுடைய நினைவில் முதலில் வருபவர் முன்னாள் தலைமைச் செயலாளர் திரு சி. ஏ. இராமகிருஷ்ணன், ஐ.சி.எஸ் அவர்கள் தான் என். ஜி. ஓக்களிடத்தில், என். ஜி. ஓ. இயக்கத்தில் மிகமிகப் பற்றும், பாசமும் கொண்டவர் அவர்

1968–ம் ஆண்டு பெரியார் திடலில் நடைபெற்ற நம்முடைய மாநில மாநாட்டில் கலந்துகொண்டு அவர் ஆற்றிய தொடக்க உரை இன்னமும் நம் காதுகளில் எதிரொலிக்கிறது. இரகசியக் குறிப்பேட்டு முறையினுல், நாம் அடைந்த இன்னல்கள் அனைத்தையும் அறிந்தவர் அவர்தான், இந்திய நிர்வாகக் கழகம் ஒரு கருத்தரங்கை நடத்தியபோது என். ஜி. ஓ. சங்க பிரதிநிதிகள் அதில் பங்குபெற வேண்டும்; நிர்வாக மேதைகள் முன்னிலையில் நம்முடைய கருத்துக்களை எடுத்துரைக்க வேண்டும் என்பதில் நல்லெண்ணம் கொண்டிருந்தவர் அவர்தான். 1972 ஏப்ரலில் ரகசிய குறிப்பேடு ஒழிப்புக்காக என். ஜி. ஓ. சங்கம் வெற்றி விழா நடத்தியபோது அவரை அழைத்து நம்முடைய மகிழ்ச்சியிலே பங்கு கொள்ளச் செய்யவேண்டும் என்ற உணர்வு அதனுல்தான் எங்களுக்கு ஏற்பட்டது. திரு சி. ஏ. இராமகிருஷ்ணன் தலைமைச் செயலாளராக இருந்தபோது மட்டுமல்ல தஞ்சை, மதுரை, மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவராக பணியாற்றிய போதும் என். ஜி. ஓ. இயக்கத்தோடு நல்ல தொடர்பு கொண்டிருந்தார். வருவாய்த்துறையை சீரமைக்கும் குழு (1956-ல் என்று கருதுகிறேன்) அமைக்கப்பட்டபோது இவர் கூறிய பரிந்துரைகள் பயன்மிக்கதாக நல்ல மாற்றங்களை ஏற்படுத்தும் வல்லமை வாய்ந்ததாக இருந்தன. 1957-ல் பண்டித நேரு அவர்களை சந்திக்க தமிழ்நாடு என். ஜி. ஓ. சங்கத் தூதுக் குழு டில்லி சென்றபோது அங்கே இவரை சந்தித்தபோது நல்ல பல ஆலோசனைகளை நமக்கு நல்கியவர்களில் குறிப்பிடத்தக்கவர் சி. ஏ. ஆர். அவர்கள்.

## திரு. பி. சபாநாயகம், ஐ. ஏ. எஸ்.

இந்நாள் தலைமைச் செயலாளர் திரு பி. சபாநாயகம் அவர்களின் அருள் மிளிரும் பார்வை, சீரான நடை இவற்றை இன்று மட்டுமல்ல பதினேழு ஆண்டுகட்கு முன்பு அவர் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவராக இருக்கும்போதே

அறியும் வாய்ப்பு என். ஜி. ஓ. சங்கத் தலைவர்களுக்கு உண்டு சேலம் மாநகரில் திரு. வள்ளுவர் உருவச் சிலைக்கும் பெரியார் உருவச்சிலைக்கும் இடைப்பட்ட பகுதியில் வானளாவ நிற்கும் என். ஜி. ஓ. இயக்கக் கட்டிடம் "சபாநாயகம் இல்லம்" என அவர்களின் பெயர் தாங்கிதான் இயங்குகிறது. ஜாயின்ட் சர்வீஸ் கவுன்சில் அமைக்கப்பட்டு ஏறக்குறைய இருபது ஆண்டுகள் ஆகப்போகின்றன என்றாலும், இவர் தலைமைச் செயலாளராக வந்த பிறகுதான் அதுவும் ஒரு சட்டசபை போல் நடைபெறுகிறது என்பதை மறுக்க முடியாது. இதற்கு முன்னால் எல்லாம், அரசாங்கத் தரப்பில் யாரோ சிலர் சம்பிரதாயத்துக்காக வருவதும் போவதும் வழக்கம் இப்போதோ அத்துறையின் எல்லாச்செயலாளர்களும்துறைத் தலைவர்களும் கலந்துகொள்கிற ஒரு சூழ்நிலை. சிவப்பு நாடா வானது ஓட ஓட விரட்டப்படவும், சில பிரச்னைகளை, மோதல் களைநேருக்கு நேர் சந்திக்கின்ற நல்ல வாய்ப்பினையும் ஏற்படுத் தியுள்ளது. ஊதியக் குழு குறைபாடுகள் போக்கும் குழுவின் தலைவராக திரு சபாநாயகம் அவர்கள் இருந்தபோது எண்ணற்ற சங்கங்களின் கோரிக்கைகளை சமாளித்த விதம் சாதாரணமானதல்ல. சிலரின் கேள்விக்கணைகள், வரம்பு மீறல்கள், உணர்ச்சிக் கொந்தளிப்புகள், ஏமாற்றப் பிரதிபலிப்பு கள், போதாமையினால் வந்த துயர தாபங்கள், இத்தனையை யும் அவருக்குள்ள பிற அரசாங்க அலுவற்சுமையினிடையும், பிற தலைமைப் பொறுப்பினால் உள்ள இடர்ப்பாடுகளுக்கிடை யேயும், அவர் சமாளித்த விதம் எண்ணி எண்ணி வியக்கத் தக்கது. பொறுமையின் உறைவிடமாய் அவர் விளங்கிய அந்தக் கடின நேரங்களை எண்ணிப் பார்க்கிறேன்; என் இதயம் சிலிர்க்கிறது.

## திரு ஹெச். கே. காஜி, ஐ.ஏ.எஸ்.

தலைமைச் செயலாளருக்குத் தோன்றாத் துணையாய் இருக்கின்ற இரண்டு ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் பொதுத்

துறையில் திரு ஹெச். கே. காஜி அவர்களும் திரு டி. டி சுந்தர்ராஜ் அவர்களும் ஆவார்கள். அவருடைய மனமறிந்து செயல்படும் மேன்மையாளர்கள், முன்பெல்லாம் மாநில என். ஜி. ஓ. சங்க மாநாடுகளில் தீர்மானங்களை நிறைவேற்றி, அரசுக்கு அனுப்பினால் பெரும்பாலான பதில்கள் ஏற்றுக் கொள்ள இயலாது என்று ஒரே வரியிலேயே இருக்கும், இன்று விவரமான பதில்கள் தொடர்புடைய பழைய அரசு ஆணை களோடு ஒப்பிட்டுக் காட்டும் விளக்கங்கள் இவை யெல்லாம் திரு காஜி அவர்களிடத்திலேயிருந்து வருகின்றன. அவரைக் காணச் செல்லும்போது தருகிற கனிவான வரவேற்பே "நொந்துபோன உள்ளங்களின் நோய் துடைக் கும் மாமருந்தாக" விளங்கும். மேற்கு வங்க அரசு ஊழியர் களுக்காக அம்மாநில கவர்னரின் போக்கைக் கண்டித்து நாம் போட்ட தீர்மனங்கள் அரசியல் வாதிகளை நம்முடைய மாநாடு களுக்கு அழைத்தல் ஆகிய பிரச்னைகளின்போது நம்மை அழைத்து அரசின் எண்ணத்தை உணர்த்தியபோது, பிரதிபலித்த பெருந்தன்மையும் உரைத்த கண்ணியமிக்க வார்த்தைகளும் சிறந்த ராஜ தந்திரிகளுக்கே உரியதாகும். நம்மை சந்திக்கும் போதெல்லாம், "நலமா?" என அன்புடன் வினவி விட்டுத்தான் மறு பேச்சு பேசும் இவர் நம் நலம் நாடும் நல்லவர்.

## திரு டி. டி. சுந்தரராஜ், ஐ.ஏ.எஸ்.

அதே போலத்தான் டி. டி. சுந்தரராஜ் அவர்கள் விதிவிலக்கு தரப்பெற வேண்டிய பல பிரச்னைகளில் சட்டப் புத்தகத்தின் ஏடுகளை மட்டும் நம்பியிராமல் அரசுக்கு சாதக மான வியாக்கியானங்களைக் கொடுத்து நம்மை சோர்வடையச் செய்யாமல் ஊழியர் தம் நலன் நாடும் கண்ணோட்டத்தில் அவர்களின் உணர்ச்சிக்கு உயிர் கொடுக்கிறார். பேச்சுவார்த் தைகள் மூலமாகப் பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்ளலாமே? கதவுகள் திறந்துள்ளனவே எப்போதும். அப்படியிருக்க

ஆரவார ஆர்ப்பாட்டங்கள், வீண் கிளர்ச்சிகள் ஏன்? என்று உரிமையுடன் வேதனை கொள்பவர்களில் திருச்சி மாவட்ட முன்னாள் ஆட்சித் தலைவர் டி. டி. எஸ். அவர்களும் ஒருவர், பொறுமையும், திறமையும் மிக்கஅதிகாரி.

## பி. எம். பெல்லியப்பா, ஐ.ஏ.எஸ்.

கூட்டுறவுத் துறையினுடைய பதிவாளராக விளங்கும் திரு பி. எம். பெல்லியப்பா ஐ. ஏ. எஸ். அவர்களை "இலாக்கா தலைவர்'' என்ற முறையிலே நாம் பார்ப்பதைவிட "தொழிற் சங்கத் தலைவர்'' என்ற முறையிலேயே என் கண்களுக்கு தென்படுகிறார். ஊதியக் குழு குறைபாட்டு நிவர்த்திப்புக் குழுவிலும், ஜாயிண்ட் சர்வீஸ் குழுவில்வாதாடும்போதும் இவர் அதிகாரிகள் தரப்பா, அல்லது ஊழியர் தரப்பா என்பது பல பேருக்கு சந்தேகமாக இருக்கும். ஊழியர் தரப்பில் தான் பெரும்பாலும் வாதாடுவார். காட்சிக்கு எளியவராக-கடுஞ் சொல்லன் அல்லாதவராக விளங்கும் பெல்லியப்பா பெயரில் அமைந்துள்ள கட்டிடம் வேலூரில் இவர் மாவட்ட ஆட்சித் தலைவராக பணியாற்றியபோது அரசு ஊழியர்கள் பால் கொண்டுள்ள அக்கறையை நன்கு உணர்த்தும். உரக்கப் பேசாமல், மென்மையான ஆனால் வலிவோடு வாதங்களை எடுத்துரைக்கும் நல்லவர்—வல்லவர்.

(1973 ஜனவரி என். ஜி. ஓ. குரலில் வெளிவந்தது).

## அமைச்சர் இராசாராம்

தமிழ் நாட்டு அமைச்சர்களில் மிகமிகக் கலகலப்பாகவும்—உற்சாகமாகவும் எல்லோரிடமும் பழகக்கூடிய அமைச்சர் மான்புமிகு திரு. இராசாராம் அவர்கள். பழகுதற்கெளியவர்; பண்பு நிறைந்தவர்.

சேலம்—தர்மபுரி இந்த இரு மாவட்டங்களும் அமைச்சர் இராசாராம் அவர்களால் பேரும், புகழும் பெற்றுவருது மாத்திரமல்ல—அந்த மாவட்ட மக்களின் தேவைகளைக் குறிப் பறிந்து நிறைவேற்றி வருகிருர். சேலத்திலே செல்வாக்கு மிக்க குடும்பத்திலே பிறந்தவர் இராசாராம். இவருடைய தந்தை கஸ்தூரிப் பிள்ளை நீதிக்கட்சியிலும், சுயமரியாதை இயக்கத்திலும், நீண்ட பல காலமாக ஈடுபாடு கொண்டவர். அது மாத்திரமல்ல. அரசு ஊழியராகவும், ராணுவத்திலும் பணியாற்றியிருக்கிருர். 70 வயதுக்கு மேலாளுலும் இன்ன மும் திட சிந்தையோடு, உடல் நலத்தைப் பேணிக் காக்கும் பெரியவரான அவர் கூட்டுறவு இயக்கங்களில் நல்ல தொடர்பு கொண்டு விளங்குகிருர்.

வாழையடி வாழையாக வந்த அந்தப் பொதுச் சேவை மனுேபாவம் அமைச்சர் இராசாராம் உள்ளத்தில் நீக்கமற நிறைந்திருக்கிறது. 1962ம் ஆண்டில் கிருஷ்ணகிரி நாடாளு மன்றத் தொகுதியில் இராசாசியின் புதல்வர் நரசிம்மனைத் தோற்கடித்து வெற்றி கண்ட இவர் 1967ம் ஆண்டில் சேலத்தில் நின்று நாடாளுமன்ற உறுப்பினர் ஆனுர்.

ஒன்பதாண்டுகளில் டில்லியில் இவர் ஆற்றிய சேவை அப்பழுக்கற்றது. அறிஞரும் கலைஞரும் எண்ணியவற்றை எண்ணியாங்கு டில்லியில் செய்து முடிக்கும் மாபெரும் தள கர்த்தராக இவர் ஒளிவீசித் திகழ்ந்தார். டில்லியில் திருவள் ளுவர் சிலையை அமைப்பதற்கும்—சேலத்தில் அண்ணுசிலை யைக் குடியரசுத் தலைவரைக்கொண்டு திறப்பதற்கும் இவர் மேற்கொண்ட முயற்சிகள் மறக்க முடியாதவை.

காங்கிரஸ்கட்சி இரண்டாகப் பிளவு பட்ட வேளையில்—டில்லிப் பேரரசு கலகலத்து விடுமோ என்று இந்திரா அம்மை யார் கவலைப்பட்டபோது—உற்றுழி உதவித் திராவிட முன்னேற்றக்கழகம் முடிவெடுப்பதில் அமைச்சர் இராசாராம் எடுத்துக்கொண்ட பங்கு சாதாரணமானதல்ல. திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளராக கலைஞருக்கும் நாவலருக்கும் துணை செய்த இவர் செய்த இவர்

அயல்நாட்டு பிரமுகர்களோடு அளவளாவிப் பேசுவதிலும், தமிழகத்தின் பெருமையை அவர்களிடம் எடுத்துரைப்பதிலும் தன்னிகரற்றவர்.

இராசாராம் அமைச்சராக வந்த பிறகுநான் தமிழகத்தில் சுற்றுலாத் துறையில் புதியதோர் வேகம் பிறந்திருக்கிறது என்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டுதான் தீரவேண்டும். மாமல்லபுரமும்—உதகையும் தான்வெளிநாட்டார்கவனத்தைக் கவரும் என்ற நிலை மாற்றி கோடைக்கானல்—ஓகனேக்கல்—ஏற்காடு—வேதாரண்யம்—கோடிக்கரை—ராமேஸ்வரம் ஆகிய இடங்களின் வசதியை அதிகரித்து முக்கியத்துவத்தப் பெருக்கிவருகிறார் நமது சுற்றுலா அமைச்சர்.

அண்ணாவோடு அமெரிக்கா சென்ற அனுபவம் மட்டு மல்ல—நாடாளுமன்றத் தூதுக்குழுவில் ஒருவராய் சியாங்கே ஷேக்கை பார்மோசாவில் சந்தித்த நினைவு மட்டுமல்—மேலை நாடுகளில் பெரும் பகுதியை நேரில் கண்டு பார்த்த இவர் அங்குள்ள நல்ல அம்சங்களையெல்லாம் நம்மிடையே கொண்டுவர எடுத்துக் கொள்ளுகிற ஆர்வத்தையும், அக்கறை யையும் அயல்நாடு செல்ல வாய்ப்பில்லாதவர்கள் எல்லாம் மனம் திறந்து பாராட்டவே செய்வார்கள்.

வீட்டுவசதித் துறையிலும் இவர் காட்டுகிற வேகம் அளப்பரியது. தினம் ஒரு ரூபாய் கட்டிச் சொந்த வீடு பெறுகிற திட்டம்—பதவி ஓய்வு பெறப்போகும் அரசு ஊழியர் கட்கு தனியே ஒரு திட்டம் என்றெல்லாம் புதிய புதிய திட்டங்களை உருவாக்கிக் குடும்பத்திற்கு ஒரு வீடு என்ற நோக்கத்தை அடிப்படையாகக்கொண்டு பீடு நடை போடுகிறார்! பெருவெற்றி கண்டு வருகிறார் அமைச்சர் இராசாராம்!

கொரட்டூர் போன்ற இடங்களில் வசதிகள் மிக்க வீட்டு வசதி வாரிய வீடுகளைப் பார்க்கும்போது அமைச்சர் இராசா ராமின் கைவண்ணம் அங்கெல்லாம் நீக்கமற நிறைந்திருப் பதை உணர முடிகிறது.

ஆற்றெழுக்கு போன்ற நடையில் அழகாகப் பேசி அவையினரைக் கவரும் ஆற்றல் நிறைந்தவர் என்ற புகழோடு அற்புதமான தமிழில் அனைவரையும் தன்பால் ஈர்க்ககூடிய எழுத்தாற்றலும் மிக்கவர் இராசாராம் ஆவார். 'திருவிளக்கு' என்ற கிழமை ஏட்டின் ஆசிரியராகவும் பத்தாண்டுகட்கு மேலாகப் பணிபுரிந்தவர் இராசாராம்.

தமிழ்நாட்டில் — தமிழர் முன்னேற்றமடைய — தமிழர் பெருவாழ்வு வாழ—தமிழ் மணம் கமழக் கூடிய ஆட்சியினை, அமைப்பை நிலைநிறுத்தக் காலமெல்லாம் பாடுபட்டுவரும் அமைச்சர் இராசாராம் அவர்கள் மேலும் மேலும் ஒளிவீசித் திகழ்ந்து என்றும் குன்றாப் புகழினை எய்துவாராக!

('தமிழ்ப்பணி' 1973 ஆனி இதழில் வெளிவந்தது.)

# முதுமையில் இளமையோடிருந்தவர்

"முதியவர்கள் எதையும் தீர்மானிக்க முடியாதவர்கள்; ஒரு காரியத்தில் அளவுக்குக் குறைவான தீவிரத்தைக் காட்டுகிறவர்கள்; எந்த ஒரு விஷயத்தைப்பற்றியும் நிச்சயமாகத் தெரியும் என்று சொல்லாதவர்கள்; எதிலும் ஒருவித வெடுவெடுப்பும் சந்தேகமும் கொள்கிறவர்கள்; சோர்ந்த மனமுடையவர்கள்; இருப்பதை இழந்துவிடக் கூடாதென்று நினைக்கிறவர்கள்; எதிலும் அச்சமுடையவர்கள்; கௌரவத்தைக்காட்டிலும் பணத்தையே பெரிதாகக் கருதுகிறவர்கள் கூச்சமுடையவர்கள்; அதிக நம்பிக்கை இல்லாதவர்கள் பழைய நினைவுகளைப்பற்றித் திரும்பத் திரும்ப பேசிக்கொண்டிருப்பதில் திருப்தியடைகிறவர்கள்; தீவிரமாகக் கோபம் கொள்கிறவர்கள்; ஆனால் அந்த கோபத்தைச் செயலில் காட்டமுடியாதவர்கள்; எதிலும் பற்றுக்கொள்ளாதவர்கள்; எப்போதும் ஏதோ ஒரு குறை சொல்லிக்கொண்டிருப்பவர்கள்.[3]" இந்த சகஸ்ரநாம அர்ச்சனையை சொன்னது நியூ வேவ்' பட்டங்களையே நாள்தோறும் பார்த்துக்கொண்

டிருக்கும் யாரோ ஒரு இளைஞனல்ல. சரித்திர ஏடுகளில் தொடக்ககால முதுமையின் முப்பெரும் பிரதி பிம்பங்களாகக் கூறப்பட்ட சாக்ரடீஸ், பிளேட்டோ, அரிஸ்டாட்டில் கூறிய வார்த்தைகள் தான் இவை. ஆன்றவிடந்தாங்கிய சான்ருன்மையின் அழுத்தமானமுத்திரை பதிந்த அந்த கிரேக்க பெருஞானி கூறிய இந்த முதுமொழியை ஆய்ந்து பார்க்கப்போனுல் உண்மை—உண்மை முக்காலும் உணமை என்றுதான் முழக்கமிடுவார்கள், இன்றைய சமுதாயத்தின் பெரும் பகுதியினர். ஆனுல் அரசியல் ராஜதந்திரியான அரிஸ்டாட்டிலின் கூற்றை பொய்யாக்கிய ஒரு முதியவரை நான் இருபதாண்டுகளாகக் கண்டு வந்தேன். இன்று அந்தப் பெரியவர் நம்மிடையே இல்லை. 1973-ம்ஆண்டு ஏப்ரல் ஆரும்நாள் பிற்பகல் இயற்கை அவரை நம்மிடமிருந்து பிரிந்துவிட்டது. ஆம்! ‘ முதுமையில் இளமை ’’ என்ற இலக்கணத்திற்கோர் இலக்கியமாய் என். ஜி. ஒக்கள்மத்தியில் பீடுநடை போட்டு வந்தப் பெருமகன் வரத ராவ்மறைந்து விட்டார்.

“பாரியொடு கொடைபோகப்
பார்த்தனெடு துணைபோகப்
படர்ந்த வல்வில் ஓரியோடும் அறம்போக
உலகமறை வள்ளுவனேடு உரையும் போக—

என்று கவியரசன் கண்ணதாசன் அடுக்கிக்கொண்டே போவதுபோல வரதராவ் போனபின் என். ஜி. ஓ. இயக்கம் தனது முதியதோர் வழிகாட்டியை இழந்துவிட்டது; புதியதோர் படையமைத்துத் தந்த பெரு வீரனை இழந்துவிட்டது என்றெல்லாம் கண்ணீர்விடும் கணக்கற்ற தொண்டர்களில் நானும் ஒருவனுக உள்ளம் உருகக் கதறவேண்டியவனுய் இருக்கிறேன்.

“ எதையும் தீர்மானிக்க முடியாதவர்கள் முதியவர்கள் ’’ என்ருர் அரிஸ்டாட்டில், ஆனுல், 1962-ம் ஆண்டு ஒரு நாள் நாங்கள் மதுரை சென்றபோது அங்கே கூட்டுறவுத் துணைப் பதிவாளர் ஒருவர் ஊழியர் விரோத போக்கைக் கொண்டிருந்

தார். என். ஜி. ஓ. சங்க முன்னணித் தலைவரையே இழிந்துரைத்தார். மாவட்ட என்.ஜி.ஓ. மாநாட்டிலே கலந்துகொள்ளச் சென்றிருந்த மாவீரர் வரதராவ் அந்த் கூட்டுறவுத் துணைப் பதிவாளர் கொடுங்கோன்மையைக் கண்டிப்பதில் அச்சம்–தயை–தாட்சண்யம் காட்டவில்லை. மாநாடு நடக்கும் இடத்திற்கு மிக அருகாமையில் அந்த ஆணவம் பிடித்த அதிகாரியும் இருந்தார். என்றாலும் இன உணர்வைப் பிரதிபலித்து எரிமலையென முழங்கிய வரதராவை எண்ணிப் பார்க்கும்போது எதையும் தீர்மானிக்க முடியாதவர் என்று யாரும் கூறியிருக்க முடியாது.

டில்லியில் நேருவைச் சந்திக்க 1957ல் சென்றபோது நேரு பெருமான் மாநில அரசு ஊழியர் பிரதிநிதிகளை சந்திக்க முடியாது என்று கூறியபோது அந்த உணர்வைப் பயன்படுத்திக்கொண்டு புதுப் பாதையிலே வீறுநடை போடுவோம் என்று வரதராவ் காட்டிய தீவிரத்தை எண்ணிப் பார்க்கும் போது அவர் முதுமை உணர்வுகட்கு அடிமையாகிப் போனவர் என்று யாரும் நினைக்கவில்லை.

புதிய புதிய இளைஞர்கள் யூனியனுக்கு வரவேண்டும்; பணியாற்றி அனுபவம் பெறவேண்டும் என்பதில் அவர் கொண்டிருந்த ஆர்வம் கட்டுக்கடங்காதது; சிவகங்கை பாலுவையும், கோவை கனகராசையும், நெல்லை சீதாராமனையும், காஞ்சிபுரம் சி. எஸ். நாகராஜனையும், கஸ்தூரி ரங்கத்தையும், என்னையும் தட்டிக்கொடுத்து, அன்போடு உற்சாகம் தந்து வளர வேண்டியவர்கள் நீங்கள் என்று வாஞ்சையோடு வளர்த்துவிட்டவர் வரதராவ் என்பதை மறக்கமுடியாது. எங்களுடைய செயல்களில் வெடு வெடுப்போ–சந்தேகமோ கொள்ளாது கனிவோடு எங்களை அணுகியவர் வரதராவ்.

சோர்ந்த மனதோடு வரதராவை இருபது வருடங்களில் நான் அவரை சந்தித்ததே கிடையாது. பெரிய தலைவர்கள் எனப்படுவோர் சில சமயங்களில் திரு, வரதராவ் அவர்களுக்கு துரோகம் செய்த கட்டங்கள் எல்லாம் உண்டு. அவர் யாரை மதித்தாரோ அவர்களே சில சமயம் அவரை அலட்சியமாக நினைத்து செயல்பட்ட போதெல்லாம் பொது வாழ்க்கையில்

துரோகத்தைத் தாங்கிக்கொள்ளும் பண்பைப் பெற்றிருந் தாரே தவிர சோர்வடையவே இல்லை.

பதவிகளை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை அவர். அதனால் இருப்பதை இழந்துவிடக்கூடாதென்று நினைக்கிற மனோபாவம் அவரிடம் இருந்ததில்லை. அவர் மாநிலத் தலைவ ராக தேர்ந்தெடுக்கப் பட்டபின்னர்—அந்தத் தேர்தல் முறையற் றது—செல்லாதது என்று கூறி ஆர்பாட்டம் நடத்தியவர்கள் பலர் உண்டு. ஆனால், அச்சப்படாமல் செயல்பட்டவர் வாத ராவ்.

பணத்தைப் பெரிதென மதிக்கும் பண்பு அவரிடம் கிடை யாது. அப்படி இருந்திருக்குமானால் யூனியன் நடவடிக் கையை குறைத்துக்கொண்டு சொந்த வாழ்க்கையை சோபித மாக்கியிருகக முடியும். ஆனால் கடைசிவரையிலும் இளநிலை எழுத்தராகவே இருந்தார். மதிப்பிற்குரிய வருவாய்த் துறை யில் இருந்தாலும் வாழ்க்கை வசதிகள் பெற வாய்ப்புகள் ஏற்படுத்த எண்ணுமலேயே செயல்பட்டார்.

அவர் தலைவராக வந்த பிறகு—தலைவராக வருவதற்குத் தடையாக இருந்தவர்களை அலட்சியம் செய்யவில்லை. ஆணவமாகப் பார்க்கவில்லை. அவர்கள் உதாசீனப்படுத்திய கதையை (பழைய நினைவுகளை)க் கூறி அவர்களை சித்ரவதைப் படுத்தவில்லை மாருக அவர்கட்கு செய்யவேண்டிய மரியாதை களை எல்லாம் செய்தார். ஜகதீசன், கண்ணன்குட்டிமேனன், ஆழ்வாரப்பன் ஆகியோருடைய படங்களைத் தலைமை ஒன்றியக் கட்டிடத்தில் திறந்துவைக்க ஏற்பாடு செய்தவர் வரதராவ்தான். ஆனால் தன் படம் திறக்கவிருக்கும்போது அக்காட்சியை காணுமலே போய்விட்டது அடக்கத்தின் காரணமாகவோ? என்னவோ?

முதியவர்களைத் தீவிரமாகக் கோபம் கொள்பவர்கள் என்று வர்ணித்திருக்கிறுர் அரிஸ்டாட்டில், ஆனால் வரதரா வக்குக் கோபம் வந்து யாருமே பார்த்திருக்க முடியதா. ஒரே ஒரு முறை கோபம் வந்தபோது . . . யூனியனில் ஊதியத்திற

குப பணியாற்றிய ஒரு நபர் உள விவகாரங்களில் ஈடுபட்ட போது, அந்தக் கோபத்தை செயலிலேகாட்டிய தீவிரம் மறக்க முடியாது.

கபாலியினுடைய திறமைக்கு மேலும் மேலும் படித்துப் பட்டம் பெறவேண்டும். ராமமூர்த்தியின் உற்சாகத்துக்கு அவர் மிக உயர்ந்த பதவிகளை அடையவேண்டும்; என், ஜி. ஓ. இயக்கத் தொண்டர்கள் முன்னுக்கு வரவேண்டும் என்றெல்லாம் கனவு கண்டவர் வரதராவ், அந்தக் கனவு நனவானதை எண்ணித் தன் ஆயுள் காலத்திலேயே மகிழ்ந்த வர் வரதராவ்.

(என். ஜி. ஓ. குரல் 1973 ஏப்ரல் இதழில் வெளியான கட்டுரை)

அரசு ஊழியர் நலன் நாடும் அலுவலர்

## கே. திரவியம் ஐ.ஏ.எஸ்.

கல்வித்துறைச் செயலாளர் திரு. கே. திரவியம் அவர் களிடம் நாம கோரிக்கைகளைக் கொண்டு செல்லும்போது, ஆணித்தரமான முறையிலே அரசுத் தரப்புக் கருத்துக்களைக் கூறுகின்ற நயம் நம்மை சிந்திக்கத் தூண்டும், திரு, திரவியம் அவர்கள் தேர்ச்சி பெற்ற நிர்வாகியாக இன்று இருந்தாலும் தியாகத்தழும்புகள் பெற்ற தேசியப் போராட்ட வீரர் என்ப தையும், புதுமைக் கருத்துகளுக்குத் தன்னுடைய வாழ்க் கையில் இடம் கொடுத்து கலப்பு மணம் செய்துகொண்ட பகுத்தறிவாளர் என்பதையும் உணர்கிறபோது அவருடைய அனுபவங்கள் சமுதாய முன்னேற்றத்திற்கு நல்ல துணையா யிருக்கும் என்பதைக் கண்டு வருகிறோம். அரசு ஊழியர்கள் கூட்டு ஆலோசனைக் குழுவில் கல்வித் துறை தொடர்பாக எழும் பிரச்சனைகளில் மட்டுமல்ல, பொதுவான ஊழியர் பிரச்னைகளில் இவர் கூறும் ஆலோசனைகள் இருதரப்பிற்கும் ஏற்புடையதாக இருக்கும்- சில துறைகளில் ஊழியர்களுக்

குள்ளேயே இருவேறுபட்ட கருத்துக்கள் இருப்பதை தெளி வாகப் புரிந்துகொண்டு—துலாக்கோல்போல் அவர் தம் கோரிக்கைகளை அணுகும்பான்மை வியக்கத்தக்கது. சென்ற ஆண்டு மதுரைப் பல்கலைக் கழகத்தில் பாரதிதாசன் பற்றி இவர் ஆற்றிய திறனாய்வுச்சொற்பொழிவும், திரு. சண்முக சிகாமணி, ஐ.ஏ.எஸ்., திரு. டி. பி. பாரதி போன்றோர் பட்டம் பெற்றபோது அந்தப் பாராட்டு விழாவில் ஆற்றிய சொற் பொழிவும் இதயத்தை நடுங்கவைக்கும் தன்மை வாய்ந்தவை. அரசாங்க பாலிடெக்னிக் ஒன்றில் சில ஊழியர்கள் தவருக வேலையிலிருந்து அங்குள்ள அதிகாரிகளால் நீக்கப்பட்ட போது—கீழே உள்ளே அதிகாரிகளிடம் முறையிட்டோம். நீதி கிடைக்கவில்லை என்றபோது திரு திரவியம் அவர்களிடம் சொன்னபோது மூன்றே நாட்களில் நீதி கிடைக்க வழி செய்தார்.

## எஸ், வெங்கிடரமணன், ஐ.ஏ.எஸ்.

நிதித்துறைச் செயலாளா திரு. எஸ். வெங்கட்ரமணன், ஐ.ஏ.எஸ். அவர்கள் மிகச் சிறந்த நிதித்துறை நிபுணர் மட்டு மல்ல மனித உள்ளங்களை எடைபோடும் மனோதத்துவமும் தெரிந்தவர். நாம் நேரிடையாக எல்லாப் பிரச்னைகளுக்கும் மோதவேண்டிய முக்கிய இடம் இவரிடம்தான். எத்தனையா முறை கோபமாகச்சாடியிருக்கிறோம். வேகமாகக் குற்றம் சாட்டியிருக்கிறோம். அத்தனையும் பொறுமையாக ஏற்றுக் கொண்டு அமைதியாகத் தன்னுடைய (நிதித்துறையின்) இடர்ப்பாடுகளை எடுத்துக்கூறும்போது இப்படிப்பட்டவரிடம் இவ்வாறு வேகமாகப் பேசியிருக்க வேண்டாமே என்றுதான் வருத்தம தோன்றும். நிதித்துறையில் இருக்கும் சில அதிகாரிகள் தவருன போக்கை, நத்தை வேகத்தை, ஊழியர் விரோதப் போக்கை எடுத்துக்கூறினல், அதற்குரிய பொறுப் பினை அவர்கள்மீது மட்டும் சுமத்தாதீர்கள் என்று பெருந் தன்மையோடு தன்னையும் தன் இலாக்காவினரையும பிரித்துப்

பார்க்க இடம் கொடுக்காத பெருந்தன்மையானவர் திரு. எஸ். வெங்கட்ரமணன். வராந்தாக்களில் நம்மை சந்தித்து விட்டாலும்கூட நமது பிரச்சனைகளைப் பேசுவது ஐ.ஏ.எஸ். கௌரவத்துக்கு இழுக்கு என்ற நினைப்பு இவரிடம் இருந்த தில்லை. மனம்விட்டுப் பேசுபவர்; நம் அன்பிற்குரிய இளம் அதிகாரி, முதல்வர் கலைஞரின் பாராட்டிற்குரிய துணைவர்.

## வி. கார்த்திகேயன், ஐ.ஏ.எஸ்.

தொழில் துறைச் செயலாளராக இருந்து இப்போது வருவாய் வாரிய உறுப்பினராகப் பொறுப்பேற்றிருக்கும் திரு. வி. கார்த்திகேயன், ஐ.ஏ.எஸ். அவர்கள் நுண்மாண் நுழைபுலம் மிகுந்தவர்; விரல் நுனியிலே புள்ளிவிவரங்கள் விளையாடும் என்று சொல்வார்களே அத்தகு தனித்தன்மை பெற்றவர். தொழில் வணிகத் துறையில் இருந்து "டான்சி" நிறுவனத்துக்குச் சென்றவர்கள் பிரச்சனையைப்பற்றி இரு மாநாடுகளில் கலந்துகொண்டு பேசும்போதும் நமது பிரச்சி னைகளை அணுகி அறிவார்ந்த தன்மையின் ஆழத்தை நன்கு புலப்படுத்தினர். விவேகமும செயல் திறனும் கொண்ட வல்லவர்.

## டாக்டர் ஜீ. வெங்கடாசலம்

கால்நடைத்துறை இயக்குநர் திரு. ஜி. வெங்கடாசலம் அவர்களைப்பற்றி எண்ணும்போது தெளிந்த நீரோடையின் களங்கமற்ற தன்மைதான் நினைவுக்கு வரும். அரசியலிலே சர்தார் படேல்போல அலுவலகத்திலே இரும்பு மனிதனைக் காட்சியளித்தாலும் ஊழியர்களுடைய நலன் நாடுவதில் இவருக்கு நிகர் இவரேதான். இவருடைய அலுவலகத்தில் பணியாற்றிய கோதண்டராமன் மறைந்தபோது மூன்று

நாட்கள் மருத்துவமனையினும், வீட்டிலும், இடுகாட்டிலும் கூடவே இருந்து உதவி பல புரிந்த உள்ளன்பை யாரும் மறக்க முடியாது. இவர் அக்கறை யெடுத்த தன் விளைவாகத் தான் அவருடைய துறை ஊழியர்களிடமிருந்து கோதண்ட ராமன் குடும்ப உதவி நிதிக்கு ரூ. 9000 வசூலாகியுள்ளது. கொள்கைகளை உருவாக்குவதிலும், நடைமுறைகளைக் கடைப் பிடிப்பதிலும் தனக்கென்று சில லட்சியங்களை உருவாக்கிக் கொண்டிருக்கும் கால்நடைத்துறை இயக்குநர், எத்தனை பெரிய மனிதர்கள் இவருடைய லட்சியப் பாதையிலே குறுக் கிட்டாலும் அதற்காக அஞ்சமாட்டார் என்பதை இவர் வாழ்க்கை நிகழ்ச்சிகள் நிரூபித்துக் காட்டுகின்றன. மிகவும் பின் தங்கிய சமுதாயத்திலே பிறந்து மனித உடல் கூறுகளை ஆராயும் கல்லூரியிலே (எம் பி.பி.எஸ் ] படிக்க வாய்ப்பு கிடைத்தும்—அதை உதறி எறிந்து விட்டு இத்துறைக்கு வந்த துணிவு கால்நூற்றாண்டு கடந்த பின்னும் இன்னும் இருக் கிறது. இந்த துணிவைப் புரிந்து கொள்கின்ற பக்குவம் சிலருக்கு இல்லை யென்பதற்காக விட்டுக் கொடுக்கும் தன்மையை இவர் விவேகமாக எடுத்துக்கொள்வதில்லை.

சுயமரியாதைக் கொள்கைக்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்ட இவர், தான் படித்துக்கொண்டிருந்த போது தனக்கு உயர்சாதி ஆசிரியர்களால் ஏற்பட்ட கொடுமையைத் தாங்காமல் அவர்களுக்கு அறைகூவல் விடுத்து, மேனுடு சென்று கல்வி பயின்று கால்நடைத்துறைக் கல்வியில் ஆராய்ச்சி செய்து "டாக்டர்" பட்டம் பெற்றுத் திரும்பினர். டாக்டர் வெங்கடாசலம் திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்தவர். இவருடை துணைவியாரும் ஒரு மனிதவியல் (எம். பி. பி. எஸ்.) டாக்டர் ஆவார். அப்போது தமிழ்நாட்டில் இவரது வகுப்பில் இந்து சமயத்தைச் சார்ந்த முதல் பெண் டாக்டர் இவர்தான். பெயர் டாக்டர் ஜெயலட்சுமி. தூத்துக்குடியில் பணியாற்றுகிருர். கணடிப்பு அதே நேரத்தில் கனிவு—தனது துறைக்கும் அதனுல் தமிழக அரசுக்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்ற ஆர்வத்தில்

அயராது உழைப்பு, உடன் பணியாற்றும் ஊழியர்களை அணைத்துச் செல்லும் அரவணைப்பு இவை கால்நடைத்துறை இயக்குநர் டாக்டர் வெங்கடாசலம் அவர்களின் பண்புநலன்கள்—இவரால் கால்நடை வளர்ச்சித் துறை வளர்ச்சியுறுகிறது. பெருமையடைகிறது.

## டாக்டர் பி. ஆர். பாலகிருஷ்ணன்

மருத்துவத் துறையினுடைய இயக்குநர் டாக்டர் திரு பி. ஆர். பாலகிருஷ்ணன் அவர்கள் வெட்டு ஒன்று—துண்டு இரண்டாகப் பேசும் கடமைச் சித்தர். ஜாயிண்ட் சர்வீஸ் கவுன்சில் கூட்ட விவாதங்களில் இவர் அதிகப்பங்கு கொள்வதில்லை என்ற வருத்தம் நமக்கிருந்தது. ஒரு முறை இவரிடம் அதைச் சொனனபோது ''எந்தப் பிரச்னையானாலும் என்னிடம் வாருங்கள்; என்னால் தீர்க்கக்கூடியதை எல்லாம் நானே தீர்த்து வைக்கிறேன்'' என்று கூறினார். மகிழ்வோடு அதையே செய்து வருகிறார். மத்திய அரசில் பல ஆண்டுகள் வேலை பார்த்த காரணத்தினால் தொழிலாளர் பிரச்னைகளை மிகத் தெளிவாக உணர்ந்திருக்கிறார். காஞ்சிபுரத்தில் ஒரு என், ஜி. ஓ. விதி முறைகளுக்கு மாறாக சஸ்பென்ஷன் செய்யப்பட்டிருப்பதை எடுத்துக்கூறிய 2 மணி நேரத்திற்குள் சஸ்பென்ஷன் உத்தரவு ரத்து செய்யப்பட்டது. மேனாடு சென்று பட்டங்கள் பல பெற்றவர். உயர்நீதிமன்ற நீதிபதி பி. ஆர். கோகுல கிருஷ்ணன் அவர்களின் தமையனார். பேராசிரியர் க. அன்பழகனின் சம்பந்தி. பழகுவதற்கு இனியவர். பண்புநலன் மிக்கவர்.

## உழைப்பால் உயர்ந்த தொண்டர்கள்



## திரு. சி. எம். மாணிக்கம்

கோவை நகரில் 7—5—1936 ஆம் ஆண்டு பிறந்தார்.

16—10—1958 ஆம் ஆண்டு கோவை நகரசபை துவக்கப் பள்ளியில் ஆசிரியரானார். நகராட்சி துவக்கப்பள்ளி ஆசிரியர் சங்க கூட்டுச் செயலராக இருந்தார்.

2—9—1960 ஆம் ஆண்டு துவக்கப்பள்ளி தலைமை ஆசிரியரானார்.

1963 முதல் 1966 முடிய நகராட்சி செவிடு ஊமைப்பள்ளி ஆசிரியராகபணி புரிந்தார். அகில இந்திய செவிடு ஊமைப் பள்ளி ஆசிரியர் சங்க கூட்டுச் செயலராக இருந்தார்.

1967 முதல் 1972 வரை தலைமை ஆசிரியராக பணிபுரிந்தார். மாவட்ட தலைமை ஆசிரியர்சங்கசெயலராகவும் ஆசிரியர் சங்க செயலராகவும் இருந்தார்.

1969 ஆம் ஆண்டு இலங்கை முழுவதும் 15 நாட்கள் கல்விப் பயணம் சென்று வந்துள்ளார்

கோவை நகரில் பல்வேறு சமூக சேவாசங்கங்களில் தலைவராகவும், செயலராகவும் உள்ளார்,

17—11—1972 முதல் நகராட்சிபள்ளி மேற்பார்வையாள ராக பணிபுரிகிருர். 1973 ஆம் ஆண்டு முதல் தமிழ் நாடு நகரசபை பள்ளிமேற்பார் வையாளர். சங்கமாநில தலைவராக பணிபுரிந்து வருகிருர்.

தமிழ் நாடு என். ஜி. ஜி. ஒ. சங்கத்திற்கு உறுதுணையாக இருந்து வரும் திரு சி. எம். மாணிக்கம் என்னுடைய வாழ்க்கை வரலாற்றை தமிழிலும், ஆங்கிலத்திலும் புத்தகமாக எழுதி வெளியிட்டுள்ளார்.


தமிழ்நாடு அரசு ஊழியர் - ஆசிரியர் - மற்றும் ஊராட்சித் துறை ஊழியர் சங்கங்களின் கூட்டமைப்பில் இணைக்கப்பெற்ற நகராட்சி பள்ளி மேற் பார்வையாளர் சங்கத்தின் மாநிலத் தலைவரான திரு. சி. எம். மாணிக்கம் மக்கள் தலைவர்களோடு நல்ல தொடர்புகொண்டவர்.

என். ஜி. ஒ. இயக்கத்தோடு தொடர்பு கொண்டு இரு ஆண்டுகளே ஆனுலும் மாணிக்கத்தை தெரியாதவர் மாநிலத் தில் இல்லை என்று கூறத்தக்க விதத்தில் தன்னுடைய தொடர் பால் அறிமுகமாகியிருக்கிருர்,


கோவையில் நடைபெற்ற என்.ஜி.ஒ. மத்திய செயற்குழு, பொதுக்குழுக் கூட்டங்களில் உச்சாகமாகப் பிரதிநிதிகளை வரவேற்று, உருவான முறையிலே மாநிலப் பொதுக் குழு செயற் குழு நடவடிக்கைகள் பிரபல மடையப் பாடுபட்டவர் மாணிக்கம். அரசு ஊழியர் — ஆசிரியர் கூட்டமைப்பு பலம் பெறவேண்டும் என்பதற்காக அரும்பாடுபட்டு வருபவர் இவர்.

## திரு. எஸ். நாகனுதன்

குடந்தை வட்ட மையத்தின் தலைவர் திரு. கே. எஸ். நாகனுதன் 9—9—1930-ல் நாகப்பட்டிணத்தில் பிறந்தவர்.




தேசீய உயர்நிலை பள்ளியில் கல்வி புகன்றவர். 25—2—1953 முதல் வேளாண்மைத் துறையில் பணி யாற்றுகிருர். தற்போது அலுவலகக் கண்காணிப்பாளராக குடந்தை உதவி வேளாண்மை பொறியாளர் அலுவலகத்தில் பணி புரிகிருர் இவர், 1962 முதல்1964வரை மாயவரம் மையத்தில் என். ஜி. ஒ. யூனியன் செயலாளராக பணிபுரிந்துள்ளார். அவர் காலத்தில் சங்க கட்டிடம் மீது தனியார் வழக்கு தொடுத்து ஜப்தி செய்ய இருந்த நிலையில் திறம்படவழக்கினை பல இன்னலுக்கிடையேநடத்திசங்கக் கட்டிடம் கை விட்டுபோகா வண்ணம் பாதுகாத்தார். குடந்தை வட்ட மையத்தின் தலைவராக 1967 முதல் தொடர்ந்து இருந்துவருகிருர். ஏறத்தாழ, 1000க்கு மேற்பட்ட இந்தவட்ட மையத்தில் உள்ள அனைத்து என். ஜி. ஒக்களின் அன்புக்கும், அபிமானத்திற்கும் பாத்திரமானவர். ஏராளமான வட்ட மையத்தில் உள்ள என், ஜி. ஒக்களின் பிரச்னைகளை அமைதியாகவும் அதே சமயம் உறுதியாகவும் நின்று நல்ல முறையில் தீர்த்து அனைவரின் பாராட்டுதலையும் பெற்றவர். 1974 மே திங்களில் தஞ்சையில் நடைபெற்ற 46வது மாநில மகாநாட்டிற்கு சுமார் ரூ. 16,000/- அளவில் விளம்பரங்கள் சேகரித்துக் கொடுத்து மாநில அளவில் ஒரு சாதனையை புரிந்துள்ளார்.



## திரு. கே. ராயப்பா

தென் ஆற்காடு மாவட்ட என்.ஜி ஓ. யூனியன் பொருளாள ராக 1974ல் நடைபெற்ற தேர்தலில் பெரும் போட்டியில் வெற்றி பெற்றவர் ராயப்பா. நில அளவுத் துறையைச் சேர்ந்த இவர் இதற்கு முன் இரண்டாண்டு காலம் மாவட்ட என்.ஜி.ஓ. யூனியன் இணைச் செயலாளராகவும் இருந்திருக்கிறார்.


22—7—74ல் பிறந்த இவர் 1—12—64-ல் உத்தியோக நியமனம் பெற்றார். வரைவாளர் சங்கத்தில் பொருளாளராகவும், தலைவராகவும் பணியாற்றி எண்ணற்ற நண்பர்களின் ஆதரவையும், அன்பையும் பெற்றுள்ளார்.



## திரு. என். எஸ். மணி

திருவள்ளூர் என். ஜி. ஓ. யூனியன் பொருளாளராகவும், மாநில என். ஜி. ஒ யூனியன் பொதுக் குழு உறுப்பினராகவும் செயல்படும் நண்பர் என். எஸ். மணி மருத்துவத் துறையைச் சேர்ந்தவர்.

அமைதியோடு, ஆனால் ஆர்வத்தோடு பணியாற்றும் செயல்வீரர்;




## திரு. வி சுப்பிரமண்யம்

சென்னையில் ஆவணக் காப்பகத்தில் பணியாற்றும் வி. சுப்பிரமண்யம் சிறந்த பேச்சாளர்; ஆருண்டுகளுக்குமேல் சென்னை மாவட்ட என்.ஜி.ஓ. யூனியன் செயற்குழு உறுப்பின ராகப் பணியாற்றிவிட்டு, கடந்த ஓராண்டாக மத்திய செயற் குழு உறுப்பினராக சிறப்புடன் செயலாற்றிவருகிருர்.

பேச்சுப் போட்டியில் பரிசு பெற்றுள்ள இவர் — சைக்கிளி லேயே எல்லா அலுவலகங்கட்கும் சென்று இயக்கப் பணி யாற்றுவதில் குறிப்பிடத்தக்கவர்.

குழந்தை இறந்தபோதும் யூனியன் நினைவையே மனத்தி லிருத்தி செயற்படுபவர்.



## டி. எஸ். தியாகராஜன்

**மாநில தலைவர் :—தமிழ்நாடு சுகாதார ஆய்வாளர் சங்கம்.**

1933–ம் ஆண்டு மே மாதம் 29–ம் தேதி தஞ்சையில் பிறந்தவர். பள்ளி இறுதி வகுப்பினை முடித்து, சுகாதார ஆய்வாளர் பயிற்சியை சென்னை ஸ்டான்லி மருத்துவ கல்லூரியில் பயின்றவர்.

**மாணவப்பருவத்தில் :—**

பள்ளியின் தமிழ் மன்ற செயலாளராக இருந்தவர். சிறந்த விளையாட்டு வீரர். வகுப்புவாரி பிரதி நித்துவ கொள்கையை எதிர்த்து அனைத்துப்பள்ளி மாணவர்களைக்கொண்டு மாபெரும் கண்டன ஊர்வலம் நடத்தியவர், திருவிடை மருதூரில் 'ஆதீனம்' உயர்நிலைப்பள்ளியில் படிக்கும் போது அப்பள்ளியில் பணியாற்றுவோர் நிலையினை எடுத்துக்காட்ட 'கல்வி

ஓடையில் முதலைகள்' என்ற தலைப்பில் 'விடுதலை' பத்திரிகையில் வந்த பகுதிக்கு செய்தி வெளியிட உதவியமைக்காக பல இன்னல்களைப் பெற்றவர். இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் நேரடியாக பங்கேற்று இந்தி புத்தகங்களை பள்ளி வாயிலில் மக்கள் ஆரவாரத்திற்கிடையே தீக்கிரையாற்றியவர். அதே ஊரிலும், சுற்றுபுற கிராமத்திலும் பகுத்தறிவு இயக்கத்தைப் பரப்ப '6' வால்ட் மின்கலப் பெட்டியை தோளில் சுமந்து ஒலி பெருக்கியை கையில் ஏந்தி பிரசாரம் செய்தவர் இப்போதைய மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களை கொண்டு அப்பகுதியில் பல சீர்திருத்த திருமணங்களை நடத்தி காட்டியவர்.

அரசு ஊழியரானதும் :—

அரசு பணியேற்றதும் பூவிருந்தவல்லி அரசிதழ் பதிவுருகிளைச்சங்கத்தின் செயலாளராக இருந்து தீவிரப்பணியாற்றியவர். பல பொதுநல சங்கங்களிலும் அங்கம் வகித்தவர். தமிழ் நாடு சுகாதார ஆய்வாளர் சங்கத்தின் செங்கை மாவட்ட தலைவராக இருந்துதற்போது தமிழ்நாடு சுகாதார ஆய்வாளர் சங்கத்தின் மாநில தலைராக இருப்பவர். அண்மையில் என். ஜி. ஓ. சங்கத்தலைவர் திரு. சிவ. இளங்கோ அவர்கள் தலைமையில் நடைபெற்ற அகவிலைப்படி உயர்வு போராட்டத்திலும் தலைமைச் செயலக சங்க அங்கீகாரரத்தை எதிர்த்து தோளோடு தோள் நின்று போராடியவர்.

நடிப்பு, பேச்சு, செயல் திறன் கொண்டவர். எளிமையானவர். இனிய சுபாவம் கொண்டவர். தியாக உள்ளம் படைத்தவர்.


சுகாதார ஆய்வாலர் சங்கம் என். ஜி. ஓ. யூனியனின் தோழமைச்சங்கமாக இருந்து வரக்காரணமானவர். விரைவில் தனதுசங்கத்திற்கான பொன்விழாவை சிறப்பாகக்கொண்டாட இருக்கிறார்.



## திரு. எஸ். மாரியப்பன்

திரு. ச. மாரியப்பன் 1933–ல் தஞ்சை மாவட்டம் மன்னார்குடியில் பிறந்தார். கணபதி விலாஸ் மற்றும் பின்லே உயர்நிலைப் பள்ளிகளில் கல்வி பயின்று 1953-ல் தமிழ்நாடு விவசாய இலாகாவில் எழுத்தராகப் பணியில் சேர்ந்து 1958-ல் உதவியாளராக பதவி உயர்வு பெற்றும், மேலும் 1969-ல் கண்காணிப்பாளராக பதவி உயர்வு பெற்று தஞ்சை மாவட்டத்தில் மன்னார்குடி தாலுக்காவில் பணியாற்றி வருகிறார்.

தொடர்ந்து என். ஜி. ஜி. ஓ. ஒன்றிப்பின் உறுப்பினராகவும், செயற்குழு உறுப்பினராகவும், 1971 முதல் தஞ்சை மாவட்டம் மன்னார்குடி கிளைத்தலைவராகவும் இருந்து வருகிறார்



## திரு. கே. அறிஞன்

செயலாளர் என். ஜி. ஓ. யூனியன் மன்னார்குடி வட்ட மையம்

இவர் 1—1—1950 அன்று மன்னார்குடியில் பிறந்தவர். மன்னை தேசிய உயர்நிப்பள்ளியிலும் குடந்தை அரசினர் கலைக்கல்லூரியிலும் கல்வி பயின்றார். தனது 19-வது வயதில் 1–8–69 அன்று தஞ்சை மாவட்ட வருவாய்த்துறை இலாக்காவில் இளநிலை உதவியாளராக பணி துவங்கினார். 1970-ம் ஆண்டிலிருந்து வருவாய்த்துறை யூனியனிலும், என். ஜி. ஓ. யூனியலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டுள்ளார். 1972 முதல் வருவாய்த்துறையிலும என். ஜி. ஜி ஓ. யூனியனிலும் கிளை மைய நிர்வாகியாக பண்புரிந்து வருகிறார். 1975–ம் ஆண்டு ஜூன் திங்கள் முதல் மன்னை கிளைமைய செயலாளராக பொறுப்பு வகித்து வருகிறார். இன்னும் திருணமாகாத இளைஞர். மதுரை பல்கலைக் கழகத்தில் (தபால் மூலம்) இளங்கலை இரண்டாம் ஆண்டு (B. A.) படித்துக்கொண்டிருக்கிறார்.

பொது வாழ்க்கையில் துடிப்புடன் செயலாற்றுபவர்.



திரு. ஏ முருகேசன்

1959ம் ஆண்டு கோவையிலே என்.ஜி.ஓ. யூனியன் மாநில மாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது இடியும் மின்னலும் கலந்த மழை பலத்த வேகத்தோடு அடிக்க ஆரம்பித்து விட்டது. மாநாட்டுக்கு வரும் பிரதிநிதிகளுக்கு உணவு படைப்பதற்காக இருந்த பொருட்கள் எல்லாம் நாசமாகி விடுமோ என்ற நிலைவந்தது. ஒரு தொண்டர் அந்த மழையையும் பொருட்படுத்தாமல் அரிசி மூட்டையைத் தூக்கிச்சென்று பத்திரமான இடத்திலே வைத்தார் தொண்டுள்ளம். படைத்த அந்த நண்பர்தான் கோவைமாவட்ட என்.ஜி.ஓ. யூனியன் தலைவராக உள்ள திரு.ஏ முருகேசன்.

நெடுஞ்சாலைத் துறையில் மேலாளர், அளவுக்குமீறிய வேலைப்பளு, ஐம்பதை நெருங்கிக்கொண்டிருக்கும் வயது என்றாலும் யூனியன் வேலைஎன்றால் முப்பதுவயது இளைஞரைப் போல ஓடிவரும் உள்ளம். 1960ம் ஆண்டுமுதல் மாவட்ட என்.ஜி.ஓ. யூனியனில் பொருளாளராகவும், துணைத்தலைவராக

வும் இருந்தார். ஐந்தாண்டு காலமாகத் தொடர்ந்து மத்திய செயற்குழு உறுப்பினர்.


ஆன்றவிந்தடங்கிய சான்ருண்மை மிக்க முருகேசன் எல்லோர்க்கும் இனியராய், எளியராய்ப்பழகுகின்ற சுபாவம் பெற்றவர். என்.சி.சி. ஊழியர்கள் வேலை நீக்கமானலும், என்.எம் இ.பி. ஊழியர்கள் சஸ்பென்ஷன் ஆனலும், இஞ்சினீயரிங் கல்லூரி இணை விரிவுரையாளர்க்கு இங்கீரமெண்ட் இல்லை யென்ருலும் குறைகளைய, கொடுமை நீங்க பாடுபடுபவர் முருகேசன்.

ஜாயிண்ட் சர்வீஸ் கவுன்சில் உறுப்பினராக நான்காண்டுகளாக செயற்படுகிருர். 13—1—1925ல் பிறந்த இவர் 5-5-43ல் உத்தியோக நியமனம் பெற்ருர். கோவை மாவட்டத்தில் மிக மிக செல்வாக்குடன் இருந்து மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர் நாராயணன்—சட்டமன்ற உறுப்பினர் ப கோபால் ஆகியோர்க்கு இவர் மிகமிக நெருங்கிய நண்பர். மத்திய சங்கத்தை எதிர்த்து கெடுமதியினர் சிலர் கோவையில் நடத்திய வழக்கில் வெற்றிதேடித் தந்ததற்கு முழுப்பொறுப்பும் இவரே என்.ஜி.ஓ. யூனியனில் மிகநீண்ட அனுபவமும், முதிய உறுப்பினருமான இவர் மத்திய சங்க நிர்வாகிகளுக்கு உரிய மரியாதையும், மதிப்பும் அளித்து வருபவர் நான் பலமுறை மறுத்தும் என்னுடைய நாற்பதாவது பிறந்தநாள் விழாவை 18—7—75ல் நடத்தி, வாழ்க்கைக் குறிப்பேடும் வெளியிடப்பெற காரணமாக இருந்தவர் இவரே.

---

**திரு ஆர். வி. பதி**

12—6—1925-ல் கிருஷ்ணகிரியில் பிறந்து, 1943–ல் இரண்டாவது உலக மகா யுத்தத்தின்போது ராணுவத்தில் சேர்ந்து 1—2—48 ல் அரசுப் பணியில் சேலத்தில் சேர்ந்தார். நாமக்கல், ஓசூர் ஆகிய இடங்களில் பணியாற்றிவிட்டு கிருஷ்ணகிரி வந்தார். 1967ல் கிருஷ்ணகிரி அமீன சங்கத் தலைவரானர், 1968 ல் அமீனக்கள் மாநில மாநாட்டை சிறப்புற



திரு. ஆர். வி. பதி

நடத்தினர். 1970முதல் 75வரை நீதித்துறை அமைச்சுப் பணியாளர் சங்கத்தின் மத்திய செயற்குழு உறுப்பினராக இருந்தார். 1971முதல் இன்றுவரை கிருஷ்ணகிரி என். ஜி. ஓ. யூனியன் பொருளாளராக செயலாற்றும் இவர் 72-ல் அமீனு சங்கத்தின் மாநில அமைப்புச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.


கோட்டைமுன் அகவிலைப்படி உயர்வு கேட்டுப் பேரணி நடைபெற்றபோது 16—10—74ல் என் ஜி ஓ யூனியன் கொடியேந்தி வீறுநடை போட்ட பெரியவர் இவர். மகள் திருமணம் அடுத்தவாரம் என்றாலும் கவலைப்படாமல் என் ஜி ஓ போராட்டத்தில் கலந்துகொண்டு சிறைசெல்ல சென்னை ஓடி வந்த மாவீரர் இவர்.

பத்திரிக்கைளுக்கு செய்தி கொடுப்பதில் சுறுசுறுப்பானவர். டெங்கணிக் கோட்டை முதலிய இடங்களில் கிளைகளை அமைப்பதற்கு அரும்பாடு பட்டவர் இவர். பிளேக் பணியாளர்கள் சங்கம்போன்ற பல்வேறு அமைப்புகளை உற்சாகப் படுத்தி, ஊக்குவிப்பதில் மிக கெட்டிக்காரர்.

எல்லா சங்கங்களும் வளரவேண்டும், வாழவேண்டும், பொதுக் கோரிக்கைகளில் ஒன்றுபட வேண்டும் என்ற பேருள் ளம் கொண்டவர் பதி. கிடைக்கின்ற ஓய்வையெல்லாம் ஒன்றிப்பின் பணிகளுக்குப் பயன்படுத்தும் மனவளமுள்ளவர். பொது மக்களிடத்தில் நெருங்கிப் பழகி நம் நிலையைத் தெளி வாக உணர்த்தும் ஆற்றல் வீரர்.

оОо

திரு தானிப்பாடி வே. நடராசன்



திருவண்ணுமலை அருகில் பணியாற்றும் வே: நடராசன் இரண்டாண்டு காலம் தொழுநோய்த் தடுப்புப் பணியாளர் சங்கப் பொதுச் செயலாளராகப் பணியாற்றினர். தமிழ்நாடு என் ஜி ஓ யூனியனுடன் இச்சங்கம் இணைய இவர் எடுத்துத் கொண்ட முயற்சிகள் மிகப்பெரிது.


1974 ஜனவரியில் திருச்சியில் ஒரு கூட்டம் ஏற்பாடு செய்து என்னையும். வி ஆர் ஜியையும் அழைத்து ஊழியர் களின் பல்வேறு பிரச்சனைகளை முறைப்படுத்தியும், வகைப்

படுத்தியும் விளக்கங்கள் உரைக்க இவர் ஏற்பாடு செய்திருந்த நேர்த்தியான கருத்தரங்கு சிறந்த முயற்சி. தொடர்ந்து பன்ருட்டி, சேலம்போன்ற இடங்களில் ஆர்வமுடன் இவர் நடத்திய கூட்டங்கள், இறுதியில் 9—6—75ல் மதுரையில் பேராசிரியர் அன்பழகனை அழைத்து நடத்திய மாநில மாநாடு எல்லாம் இவர்தம் செயல் திறமைகளுக்கு நல்ல எடுத்துக் காட்டுகள்.

எதற்கும் கோபம் வராமல், எல்லோரோடும் புன்சிரிப் போடு பழகி, பொறுமையாய் நடந்துகொள்ளும் சுபாவம் பொது வாழ்வுக்குத் தேவையானது, அதை நடராசன் பெற்றிருக்கிறார்.

—:o:—

திரு கே கருப்பையா



மதுரை மாவட்டத்தில் துணை வட்டாட்சியராகப் பணி யாற்றும் திரு. கே. கருப்பையா சிறந்த எழுத்தாளர். அழகான

உவமைகளுடன் நீண்டநேரம் பேசக்கூடிய பேச்சாளர். எழுத்திலும்—பேச்சிலும் தொய்விருக்காது. புள்ளிவிவரங்கள், வர்ணனைகள், எடுத்துக்காட்டுக்கள் நிறைந்திருக்கும்.

மதுரை நகர என் ஜி ஓ யூனியன் செயலாளராக இரண்டாண்டுகளாக சிறப்புடன் செயல்பட்டுவரும் இவர் காஞ்சிபுரத்திலும், மதுரையிலும் நடைபெற்ற ஊழியர் பயிற்சி முகாம்களில் ''வருவாய்த் துறையினரின் நிலையும்; நினைப்பும்'' என்ற தலைப்பில் அற்புதமாகச் சொற்பொழிவாற்றிப் பலரின் பாராட்டைப் பெற்றார்.

மலேயா—சிங்கப்பூர் நாடுகளுக்கு அடிக்கடி சுற்றுப் பயணம் சென்றவர். இந்தமுறை (1975 ஜூன்-ஜூலை) அங்கு சென்றபோது அரசு ஊழியர் இயக்கங்கள்பற்றி நன்கு அறிந்துகொண்டதோடு, அங்குள்ள தலைவர்களைச் சந்தித்துப் பேசியதோடு—தமிழ்நாடு என் ஜி ஓ யூனியன் பற்றியும் அங்கு உரையாற்றியுள்ளார்.

—v—

திரு ஆர் நாராயண ராவ்

கிருஷ்ணகிரி என். ஜி. ஓ யூனியன் தலைவராக 1968-ம் ஆண்டுமுதல் ஒளிவீசித் திகழ்பவர் நாராயணராவ். 15—6—1934ல் பிறந்த இவர் 1—6—56 முதல் 31—12—57வரை கிராம சேவக் பயிற்சி பெற்று 1—1—58ல் உத்தியோக நியமனம் பெற்றார். கிருஷ்ணகிரியில் கிராமீய விரிவாக்கப் பயிற்சிப் பள்ளியில் இப்போது சமூகக் கல்வி ஆசிரியராகப் பணியாற்றும் இவர் ஒரு உதாரண வட்டத் தலைவராக விளங்குகிறார், கிருஷ்ணகிரியைப்போல எல்லா என். ஜி. ஓ. கிளைகளும் இருந்துவிட்டால் எத்தனையோ வெற்றிகளை எளிதில் பெறலாமே என்று மாநில என் ஜீ ஓ யூனியன் தலைவர்களால் அடிக்கடிப் பாராட்டப் பெற்றவர் நாராயணராவ்



திரு ஆர். நாராயணராவ்

1973ல் சட்டதிட்ட விதிகள் திருத்தப்பெற்று தஞ்சைக் கடுத்து மாநிலப் பொதுக் குழுவைக் கிருஷ்ணகிரியில் நடத்த வும், குடும்பநலக் கருத்தரங்கை நடத்தவும்—இவர் எடுத்துக் துக்கொண்ட முயற்சி மனம்விட்டுப் பாராட்டக்கூடியது.

---

திரு. எம். கிருஷ்ணமூர்த்தி

விடாமுயற்சியோடு, நம்பிக்கையோடு யூனியனில் செயல் பட்டுவரும் நண்பர்களில் ஒருவர் புவனகிரி கிருஷ்ணமூர்த்தி. சிதம்பரம் என் ஜி ஓ யூனியன் வட்டச் செயலாளராகவும், தமிழ் நாடு பத்திரப் பதிவுத்துறை எழுத்தர் சங்கத்தின் பொதுச் செயலாளராகவும் இவர் மூன்றுண்டுகளாக ஆற்றிவரும் பணி பாராட்டத்தக்கது. என் ஜி ஓ யூனியனின் ஆயுள் உறுப்பின ரான இவர் என் ஜி ஓ யூனியனின் அத்தனை அறப்போராட்ட நடவடிக்கைகளிலும் ஆர்வத்துடன் கலந்து கொண்டிருக் கிறார். போராட்ட நிதிக்கு வசூல் செய்வதிலும், 'பொது ஊழியன்' சந்தாதாரர்களை அதிகப்படுத்துவதிலும் ஆர்வம் கொண்டவர்.




புவனகிரி கிருஷ்ணமூர்த்தி

சிதம்பரத்தில் மாண்புமிகு அமைச்சர் என் வி நடராசன் அவர்களை அழைத்துப் பத்திரப் பதிவுத்துறை ஊழியர்கள் மாநாட்டை இவர் நடத்தியதன் விளைவாகத்தான் சில பதவி உயர்வு வாய்ப்புகளை அத்துறை அண்மையில் பெற முடிந்தது. இவருடைய பிறந்த தேதி 26—4—1938. பத்திரப் பதிவுத் துறை சங்கங்களின் கூட்டமைப்பிற்கும் இவர் பொதுச் செயலாளர்.

—o—

திரு. பி. கே. நாராயணன்

உடுமலைப்பேட்டை என் ஜி ஒ யூனியன் பொருளாளராக துடிப்புடன் செயல்படும் பி கே நாராயணன் நில அளவுத் துறையைச் சேர்ந்த வரைவாளர். கிளையினுடைய பல்வேறு பொறுப்புகளில் செயலாற்றியிருக்கிறார்: ராமஜெயம், யு ஆர்




பி. கே நாராயணன்

சுப்பிரமண்யம் போன்ருேருடைய துணையுடன் உடுமலைப் பேட்டையில் கட்டிடம் கட்டுவதற்கான நிலம் ஒன்றையும், கணிசமானதோர் நிதியினையும் சேகரித்து வைத்துள்ளார்.

நான் தமிழ்நாடு கணிகவரைவாளர் சங்கத்தின் தலைவராக 1965-66ம் ஆண்டுகளில் இருந்தபோது பி கே நாராயணனைத் தான் பொதுச் செயலாளராக நியமித்தேன். சிலசமயங்களில் எங்களுக்குள் கடுமையான மோதல் ஏற்பட்டாலும்—அதை இருவருமே மறப்போம் பின்னுல்.

படபடப்பான சுபாவம்—ஆனுல் உயிர் கொடுத்துப் பணி யாற்றும் ஆர்வம்; துடிப்பின் சின்னம்—அதே நேரத்தில் தோழமைக்கோர் எடுத்துக்காட்டு. இவர்தான் நமது உடுமலை நாராயணன்.




H. M. S. பீரான்

கோவை மாவட்ட என் ஜி ஓ யூனியன் தலைவராக சிறப் புறச் செயலாற்றும் இவர் எட்டாயிரம் உறுப்பினர்களை உடைய தனி அங்கீகாரம் பெற்ற கல்வித்துறை சார்நிலைப் பணியாளர் கழகத்தின் மாநிலத் தலைவராகவும் இவர் பணியாற்றுகிருர். பள்ளித்துணை ஆய்வாளரான இவர் தமிழ் இலக்கியங்களில் நல்ல பற்றுள்ளவர்; புலமை மிக்கவர். மதத்தால் மாறுபட்ட வராயினும் இந்துமத இதிகாசங்களில் ஈடுபாடுள்ளவர்; புராண உதாரணங்களையெல்லாம் காண்பித்து நகைச்சுவையோடு பேசுவதில் வல்லவர்.

கோவை காந்திபுரம் வீட்டுவசதி வாரியக் குடியிருப்போர் சங்கத்தின் தலைவராகவும் இவர் ஆற்றியபணி மறக்க முடியாதது. சகநிர்வாகிகளை அணைத்துக்கொண்டு செல்வ திலும், மேலதிகாரிகளைப் பகைத்துக் கொள்ளாது பழகு வதிலும், வல்லவர்.

இவருடைய சகோதரர் பட்டுக்கோட்டை பீரானும் இவரைப்போலவே பொதுவாழ்க்கையில் ஈடுபாடுள்ளவர்.




திரு கே. நடேசன்

கோவை மாவட்ட என் ஜி ஓ யூனியன் செயலாளராகவும் தமிழ்நாடு வேளாண் துறை அமைச்சுப் பணியாளர் சங்கத்தின் மாநிலத்துணைத் தலைவராகவும் பணியாற்றும் திரு. கே. நடேசன் என் ஜி ஓ யூனியனுக்குக் கிடைத்த அருமையான தொண்டர்களில் ஒருவர்.

1963ம் ஆண்டு முதல் கோவை மாவட்ட என் ஜி ஓ யூனியன் செயற்குழு உறுப்பினராக சேவையாற்றிவரும் இவருடைய பிறந்த தேதி 1—6—1938 22—5—63ல் அரசுப் பணியில் ஈடுபட்ட இவர் 1965ல் நடைபெற்ற சேவை வார விழாவில் 'பொது ஊழியன்' இதழுக்கு அதிக சந்தாதாரர் களை சேர்த்தமைக்கும் மலருக்கு அதிக விளம்பரங்கள் பெற்றமைக்கும் பரிசுகள் பெற்ருர். இரண்டாண்டுகளாக மாவட்ட அரசு ஊழியர் கூட்டு ஆலோசனைக் குழு உறுப்பின ராக செயல்படுகிருர்

1970-71ல் கோவை மாவட்ட என் ஜி ஓ யூனியன் கூட்டு செயலாளராகவும், 1969 முதல் 1971 வரை வேளாண்துறை அமைச்சுப் பணியாளர் சங்க மாவட்டத் தலைவராகவும் பணியாற்றினர். 1969ல் கோவையில் அந்நாள் அமைச்சர்கள் மதியழகன், சத்தியவாணிமுத்து ஆகியோர் கலந்துகொண்ட வேளாண்துறை அமைச்சுப் பணியாளர் சங்க மாநில மாநாட்டைப் பொறுப்பேற்று நடத்திய இவர் - அதற்குப் பிறகு இரண்டு மாவட்ட மாநாடுகளையும் முன்னின்று நடத்தினர்.

—v—



திரு சி. சுப்பிரமண்யம்

உணர்ச்சிப் பிழம்பாய்—உழைப்பின் உருவாய் நடமாடுபவர் திருவள்ளூர் என் ஜி ஓ யூனியன் தலைவர் சி சுப்பிரமண்யம் தேவிப்பட்டணத்தைச் சொந்த ஊராகக் கொண்ட இவர் 8—10—41ல் பிறந்தவர். 1—12—1960ல் அரசாங்க வேலைக்கு வந்தவர் புதுக்கோட்டையில் நில அளவுக் கணிக வரைவாளர் சங்கத்தில் துணைத் தலைவராகவும், செயலாளராக

வும் பொது வாழ்க்கையைத் தொடங்கினர். பின்னர் சென்னையில் பணியாற்றிவிட்டு, காஞ்சிபுரம் சென்றபோது அங்கு மாவட்ட என் ஜி ஒ யூனியன் இணைச் செயலாளராகவும், 1968முதல் 70வரை பணியாற்றினர்.

1971முதல் திருவள்ளூர் என் ஜீ ஒ யூனியன் தலைவராகத் தொடர்ந்து உற்சாகமான பணிகளில் ஈடுபட்டுவரும் இவர் சோம்பலை புறமுதுகு காட்டுபவர். மாவட்ட மாநாட்டொன்றினை அமைச்சர் மாதவனையும், ம பொ சியையும் அழைத்து சிறப்பாக நடத்தியவர், வீடுகட்டும் திட்டம் போன்ற ஆக்கரீதியான காரியங்களில் பம்பரம்போல் சுழன்று பணியாற்றி வெற்றி பெற்றவர். நான் எப்படி நண்பர்களால் சூழப்பட்டு—உயர்த்தப்படுகிறேனே—அதேபோல திருவள்ளூரில் சி எஸ்க்கும் அருமையான நண்பர் பட்டாளம் இருக்கிறது.




திரு. S. பழனி B. A.

தொழுநோய் தடுப்புப் பணியாளர்கள் சங்கத்தின் தலைவராக 1973–75-ம் ஆண்டுகளில் சிறப்புறப் பணியாற்றியவர் திரு எஸ். பழனி. ஈரோட்டில் பணிபுரியும் இவர் அமைதி

யும் பொறுமையும் நிரம்பியவர். "Non Medical Supervisors" என்ற பிரிவினருக்கு தனிநபர் கமிஷன்மூலம் விடுபட்டுப்போன ஊதிய உயர்வுக் கோரிக்கையை என் ஜி ஓ யூனியன் துணை யுடன் 1—9—72முதல் மாற்றியமைக்க இவர் எடுத்துக் கொண்ட முயற்சி பாராட்டத்தக்கது.

—○—



திரு உ வே நவநீதகிருஷ்ணன்

தமிழ்நாடு நில அளவுத்துறைக் கணிக வரைவாளர் சங்கத்தின் மாநிலத் துணைத்தலைவராகப் பணியாற்றும் உ வே நவநீத கிருஷ்ணன் – சென்னை மத்திய நில அளவை அலுவலகத்தில் வரைவாளராகப் பணியாற்றுகிறார். தஞ்சை மாவட்டம் திருவாரூரைச் சேர்ந்த இவருடைய பிறந்த தேதி 15—7—1938 ஆகும். 28—12—1964ல் உத்தி யோக நியமனம்பெற்ற இவர் பொறுமையோடு பிரச்சினை களை அணுகுவதில் வல்லவர். அமைதியான தொண்டர்களில் ஒருவர்.



திரு கே. ஆர். சுப்பிரமண்யம்

கோவை மாவட்ட என் ஜீ ஒ யூனியன் பொருளாளராக வும், தமிழ்நாடு கணிகஉரைவாளர் ஒன்றிப்பின் தலைவராகவும் பணியாற்றும் கே ஆர் எஸ் 15—7—1930ல் மதுரை மாவட்டம் ஜெயமங்கலத்தில் பிறந்தார். கோவை நில அளவு அலுவல கத்தில் வரைவாளராகப் பணியாற்றும் இவர் பணியில் சேர்ந்த நாள் 17—9—57 அதற்குமுன் 4 ஆண்டுக்காலம் சர்வேயராக இருந்திருக்கிறார்.

1969-71ல் கோவை மாவட்ட என். ஜீ. ஒ. யூனியன் துணைத் தலைவராக இருந்துள்ளார். பின்னர் பல பொறுப்புகளை ஏற்று இன்று கோவை மாவட்ட என். ஜி. ஒ யூனியன் பொரு ளாளராகத் திறம்படப் பணியாற்றி வருகிறார். அன்றாடம் எல்லா அலுவலகங்களுக்கும் சென்று நூற்றுக்கணக்கான என்,

ஜி ஓக்களைத் தினந்தோறும் சந்தித்து அவர் தம் குறை களைய வழி காண்பவர் இவர். மாநாடுகளை நடத்துவதிலும், ஊர் வலங்களுக்கு எழுச்சி யூட்டுவதிலும், போராட்டங்களை வெற்றிகரமாக நடத்தத் துணைபுரிவதிலும் இரவு பகல் பாராது பாடுபடுபவர்.

தலைவர்களை உருவாக்கும் தொண்டர் வரிசையில் இடம் பெறும் இவரே தலைவராகும் சந்தர்ப்பங்கள் வந்தாலும் பழையநிலை மாருமல், தொண்டுணர்ச்சி குறையாமல் செயலாற் றும் முன்னணி வீரர் கே ஆர் எஸ் 1961ல் ஆட்குறைப்பு ஏற்பட்டபோதும் சரி 1975ல் வேலையிழப்பு நேரிட்டபோதும் சரி சென்னையில் தங்கி என் ஜி ஓ யூனியன் தலைவர்களோடு இருந்து பாதிப்பு ஏற்படாமல் பாதுகாப்பான ஆணைகளைப் பெற்றுச் சென்ற பெருமைக்குரியவர்.

V2l1, 8
N75
4716